உ

சிவமயம்.

குஹப்பிரஹ்மணே நம:

நாலாயிரப் பிரபந்த விசாரம்

திருத்தேவையெனுந் திருவிராமேச்வரத்தைச் சார்ந்த
பாம்பன்:
அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகளால்
அருளிச்செய்யப்பட்டது

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜ வெளியீடு
(ஷை சுவாமிகள் நிறுவியுள்ள மகா தேஜோமண்டல சபையினர்
அனுமதிபெற்றது)

பொருளுதவி: ஷை சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர்
"குமாரச்சிவம்" எனப் பெயரிய
தா. வேங்கடாசல முதலியார் அவர்களால்.

இரண்டாம் பதிப்பு—500-பிரதிகள்.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை சென்னை—14.

உரிமை பதிவுசெய்யப்பட்டது.

1956

உ

சிவமயம்.

குஹப்பிரஹ்மணே நம:

லாயிரப்பிரபந்தவிசாரம்

நத்தேவையெனுந் திருவிராமேச்வரத்தைச் சார்ந்த
பாம்பன்:
அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகளால்
அருளிச்செய்யப்பட்டது

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜ வெளியீடு
(சுவாமிகள் நிறுவியுள்ள மகா தேஜோமண்டல சபையினர்
அனுமதிபெற்றது.)

பொருளுதவி: ஷை சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர்
“ குமாரச்சிவம் ” எனப் பெயரிய
தா. வேங்கடாசல முதலியார் அவர்களால்.

இரண்டாம் பதிப்பு—500 பிரதிகள்.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை சென்னை—14.

உரிமை பதிவுசெய்யப்பட்டது.

1956

சிவமயம்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

"நாலாயிரப் பிரபந்த விசாரம்" என்னும் இந்நூல் ஸ்ரீமத். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்களால் இயற்றப்பட்டு 1905-ல் முதற் பதிப்பாக வெளியிடப் பட்டது. இந்நூல் வெளியிடவேண்டி யிருந்த காரணம் இதன் முதற் பதிப்பின் முன்னுரையில் விளக்கப்பட்டிருக் கிறது. சிவபெருமானையும், உமா பிராட்டியையும், சிவ குமாரர்களையும், சிவனடியவர்களையும், சிவ சின்னங்க ளாகிய விபூதி உருத்திராக்கங்களையும் ஆபாச மொழிகளால் தூஷித்து வரையப்பட்டுள்ள பல நூல்களைத் தக்க நியாயங் காட்டி கண்டித்தல் நறுநூ லாராய்ந்த சைவர்கள் கடமை என்னும் உணர்ச்சியால் இந்நூல் வெளியிடப்பட்டது.

வித்தை பதினென்கென்னும் சுருதியாதி நூல்களே பிரமாண நூல்களென ஆன்றோர்களால் நிருணயிக்கப் பட்டுள்ளதால் அவைகளிலிருந்தே மேற்கோள் வாக்கி யங்கள் இந்நூலில் பெரிதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூற்கு கண்டன நூலெனவொன்று இந்நூலாசிரியர் காலத்திலேயே சிவதூஷண வைணவர்களால் வெளியிடப் பட்டது. அக்கண்டன நூற்கு மேற்கோள்கள் "திரு முட்டப் புராணம்" முதலிய நவீன கற்பனைத் தலபுராணங் களிலிருந்தே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன வாகலின் அந்த அப்பிரமாண வாக்கியங்களாலாய அந்நூலைக் கண்டித்து வேறு நூலொன்று வெளியிட இந்நூலாசிரியர் விரும்பின ரல்லர். சுருதியாதி வாக்கியங்களை நவீன கற்பனைத் தல புராண வாக்கியங்களைக்கொண்டு கண்டிக்க முயல்வது இரும்பை எறும்பரிக்க முயல்வதொக்குமென இந்நூலா சிரியர் வேறிடத்தும் வரைந்துள்ளார். இவ்விரு நூல்களின்

முறையே பெருமையும் சிறுமையும், வாய்மையும் வாய்மை யின்மையும்-தூய உள்ளம் படைத்தவரும், மனச்சான்று கொல்லாது நடுநிலை நிற்கும் ஆற்றல் பெற்றோரும், நறு நூலாராய்ச்சி வன்மையுடையாரும், மதவெறியற்றவருமா யுள்ளார்க்கே நன்கு புலனுகும். இந்நூலுள் சிவ பரத்துவ பிரமாணங்கள் பல நிரம்பியுள்ளன. ஆகலின் இது சைவர் களுக்கு மிகச் சிறந்ததோர் தற்காப்பு ஆயுதம்போன்றது. ஒவ்வொரு சைவரிடத்தும் அத்தியாவசியமாக இருத்தற் குரியது.

சென்னை 25—6—1956	ம. பாலசுப்பிரமணிப முதலியார், பி.ஏ., பி.எல். சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

முதற்பதிப்பின் அறிவிப்பு

இந்நூற்கட் காட்டப்பட்ட பல புத்தகங்களில் :—

நாலாயிரப் பிரபந்தம்—வியாக்யானங்கட் கிணங்கச் சித்திரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரியரைக்கொண்டு பரிசோதிப்பித்த முதலாயிரமும், இயற்பாவும், வியாக்கியானங்கட்கியையப் பரிசோதிக்கப்பட்ட பெரிய திருமொழியும், திருவாய்மொழியும் சென்னை ஊ. புஷ்பரத செட்டியாரால் கலா ரத்நாகர அச்சுக்கூடத்தில் 1876-ம் வருஷத்திலும் 1885-ம் வருஷத்திலுமாகப் பதிக்கப்பட்டு ஒன்ருக்க் கட்டப்பட்டது.—1. புரசப்பாக்கம் ஏழுமலைப் பிள்ளையின் விவேக விளக்க அச்சுக்கூடத்தில் 1883-ம் ஹுல் பதிக்கப்பட்டது—1. கொண்ணூர் மாணிக்க முதலியாரது மனோன்மணி விலாச அக்சுக்கூடத்தில் ஸ்ரீமுகஹு ஆவணிமீ பதிக்கப்பட்டது.—1.

குருபரம்பராப் பிரபாவம் — சித்திரகூடம் கந்தாடை-திருவேங்கடாசாரியரால் பரிசோதிக்கப்பட்டுச் சென்னை மிமோரியல் அச்சுக்கூடத்தில் 234 பக்கங்களில் 1892-ம் ஹு பதிக்கப்பட்டது.

கூரேச விஜயம்—திருவஹீந்திரபுரம் வீரராகவாசாரியரால் பரிசோதிக்கப்பட்டு மை. ராமாநுஜாசாரியரது ராமப் பிரசங்நோதய அச்சுக்கூடத்தில் 382 பக்கங்களில் கரஹு சைத்ரமீ பதிக்கப்பட்டது.

விஷ்ணு புராணம்—திருவல்லிக்கேணி திருமலை ஈச்சம் பாடி ஸ்ரீநிவாசராகவாச்சாரியரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஊ. புஷ்பரத செட்டியாரால் கலா ரத்நாகர அச்சுக்கூடத்தில் 438 பக்கங்களில் பார்த்திபஹு தைமீ பதிப்பிக்கப்பட்டது.

வைணவர் பாகவதம்—புலியூர் இராமாநுஜ பிள்ளை மணிப்பிரவாளமாக மொழிபெயர்த்த தசமஸ்கந்தமும், கோமளபுரம் வேணுகோபாலாசாரியர் சம்ஸ்கிருதத்திற் கிணங்கப் பரிசோதித்த மற்ற ஸ்கந்தங்களு மொன்ருகச் சூளை எதிராஜ முதலியாரது பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அச்சுக் கூடத்தில் 1891-ம் வருஷம் பதிக்கப்பட்டது.

மேற்படி பாகவதம் வடமொழி—பம்பாய், கோபால நாராயண கம்பெனியாரால் ஷை அச்சுக்கூடத்தில் நாகர எழுத்தில் 1892-ம் வருஷம் பதிப்பிக்கப்ப்ட்டது.

சித்திரகூட புராணம்—சென்னை ஸ்ரீ நிகேதந முத்ராக்ஷர சாலையில் 241 பக்கங்களில் 1891-ம் வருஷம் பதிக்கப்பட்டது.

பாஷண்டமத சபேடிகை—க. நாராயணசாமி நாயுடென்பாரால் இயற்றப்பட்டுச் சென்னை செங்கல்வராய செட்டியாரது ஸ்ரீ நிலய முத்ராக்ஷர சாலையில் பராங்குசர் அவதாரவருஷம் 4981-ல் அச்சிடப்பட்டது.

ஆறுமுக நாவலரவர்களது வித்யாநுபாலன அச்சுக் கூடத்திற் பதிக்கப்பட்டும் வேறு சில அச்சுக்கூடங்களிற் பதிக்கப்பட்டுமுள்ள வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில் "ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப்-போரேனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான் புனங்களெல்லாஞ்-சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாங் குழவியையுஞ் செங்கையேந்திப்-பாரேனை யுலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத்தன் பதிபின் வந்தாள்" எனும் அருச்சுனன் தவநிலைச் சருக்கச் செய்யுள் நவீன வைணவர் கொள்கைக்கு விரோதமாதல் கண்டு கோ. இராஜகோபால பிள்ளை யென்பார் வித்யாகலாநிதி அச்சுக்கூடத்தில் துன்மதி வருஷம் மார்கழிமீ பதித்த பிரதியிலில்லாதொழியுமாறு அதனை யெடுத்துவிட்டுப் பதித்திருத்தலானும் திருவாய் மொழியில் "செக்கர்வானச் சடையோன் சேவடிக்கீழந் நாளில்—மெய்க்கணிட்டுச் சக்கரநீ பெற்றவிளை யாட்டே

போல்" எனு மடிகளைக்கொண்ட செய்யுள் இக்காலத்துப் பிரதிகளி லில்லாதொழியுமாறு அந்தாதி பொருந்தத் திருத்திப் பிறிதொரு செய்யுட் சேர்த்துப் பிரசுரித்திருக்கின்றன ரெனப் பல்லோரும் பகர்தலானும் கம்பராமாயணத்தில் வைணவ சாதக மாகாதவற்றை மாற்றியும் ஒழித்தும் புதுக்கியும் பதிப்பித்தமை உலகறிந்த தாகலானும், இந்த "நாலாயிரப் பிரபந்த விசாரத்தை" நோக்கும் வைணவர் ஈண்டுக் காட்டுற்ற புத்தகங்களிலும் அப்படிப்பட்டவை களை இனி மாற்றுதல் முதலியன செய்தல் கூடுமாகலானும் வைதிகச் சைவாபிமானிகளா யுள்ளோர் தங்கள் நறுநூல்களை நறும்பெட்டியில் வைத்துப் பேணிக் கோடல்போல இந்த வைணவப் புத்தகங்களையும் ஒரு மூலையில் வைத்துப் பேணிக்கொள்வாராக. இராமாயணத்தைச் சிவனடியவர் சரித்திரமாகவே யெண்ணுவாராக.

இங்ஙனம்

நூலாசிரியர்

சிவமயம்

முதற்பதிப்பின் பதிப்புரை

அனதி முத்தபதியாகிய சிவபெருமான் அனதி பெத்த ராகிய ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்பொருட்டு அனேக க்ஷேத்திரங்களில் திருவருட்டிருமேனி கொண் டெழுந்தருளியபடி இப் பின்னத்தூரிலும் எழுந்தருளிய திருக்கோயில் மாணிக்கவாசகேச்வரமாம். இது சீரணித் துப் போய்விட்டது. இதனைக் கட்டி முடிக்கும் பொருட்டு யான் முயலுநாளில் இந்நூல் முகவுரையில் விவரிக்கப்பட்ட படி சில வைணவர்கள் சிவநிந்தை முதலியன செய்து வரு தற்கு ஆற்ருத நான் முதலிய வைதிகசைவ மரபினர் பலரும் பெருந்துயருற்ற வமயம் ஸ்ரீ மணிவாசகப் பெருமானுர் கிருபா னுக்கிரகத்தால் என்னுள்ளிட்டார் குறைதீரும் பொருட் டுத் தசரத ராமசந்திரர் இராவணனைக் கொன்றதனு லுற்ற பிரமஹத்தி நீங்கி யுய்யுமாறு சிவபூஜை செய்த திருவிராமேச் சுரத்தில் ஜனனமாகி அதைச் சேர்ந்த பாம்பனெனும் பதியிற் பன்னுள் நின்மல நிஜாநந்த ஏகபரிபூரண வியாபகப் பொருளாய்த் தகராகாச வஸ்துவா யிராநின்ற இறைவனும் ஸ்ரீ சுப்பிரமணிய பரமாத்துமாவினது பெருங்கருணையின் சிறுவயது முதல் அந்தப் பரமாத்மாவின் பேரிலேயே பாடு நியமங்கொண்டு வைதிக சைவ சித்தாந்த பாநுவா யெழுந் தருளியிருந்து இராமநாதபுரந் தாலூக்கா—பிரப்பன் வலசை யெனும் பெயரிய ஒரூரின் ஒருசார் நடு-நாள் சிவநிஷ்டையி லிருந்தெழுந்தபின்பு அத்தியாச்சிரமமெனுந் துறவு பூண்ட வரும், இயலிசைத் தமிழ்க் கட்டுரைச் சுவைகிளர் பெருந் தோத்திர வடிவாகவுந் தத்துவப் பெருவிளக்கான சாத்திர வடிவாகவும் பரமதகண்டனமுஞ் சுவமதஸ்தாபனமுமான நூல் பலவற்றுள்ளுந் தலைநின்றுத் தரிப்பனவாகவும் ஐய

மறுக்கும் ஆற்றலுடை வைதிக சைவசித்தாந்த வேதாகம பாஷிய மெனவு மிளிர்ந்து சொன்னயமும் பொருணயமுந் தொனிநயமுந் துறுமி விளங்குவனவாகவும் யாப்பிலக்கண இலக்கியங்களாகவும் அதி விசித்திரச் செய்யுள் பல வுட் கொண்டுள்ளனவாகவும் விளங்கா நின்ற கஉஅக-திருச் செய்யுளுள்ள குமரகுருதாச சுவாமிகள் பாடல், ககஙடு திருச்செய்யுளுள்ள திருவலங்கற்றிரட்டு, கக0க-திருச் செய்யுளுள்ள திருப்பா, சு0அ-திருச்செய்யுளுள்ள காசி யாத்திரை யெனும் பெருநூல்களையும்; பரிபூரணாநந்த போதம், தகராலய ரகசியம், குமரவேள் பதிற்றுப் பத்தந் தாதி, செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர்வே ளிறுமாப்பு, ஜிவயாதனையைக் குறித்த வியாசமெனு நறுநூல்களையும்; ஷண்முக கவசம், பஞ்சாமிர்த வண்ணம், திருத்தொடை யல், கந்தரொலியலந்தாதி, குகப்பிரமவருட் பத்து, ஞான வாக்கியம், கந்தகோட்ட மும்மணிக் கோவை, வடதிரு முல்லைவாயிற் குகபரர் வண்ணம், நவவீரர் நவரத்தினக் கலிவிருத்த மெனும் கூ-நூலடங்கிய சிறு நூற்றிரட்டினையும்; திருத்தல தரிசன காலங்களிற் பாடியருளிய கட்டளைக் கலித்துறைகள், அஷ்டாஷ்ட விக்கிரகலீலை விருத்தம், வட சொற் புகாது பாடிய அமைதியைம்பதெனுஞ் சேந்தன் செந்தமிழ், ஐந்தந்தாதி யெனும் பகுபடுபஞ்சகம், சஷ்டி வகுப்பு, பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம், பிறிதுபடுதுவிதபங்கி, திரிபங்கி, சஸ்திர பந்தம், சதாக்கர மயூரபந்தம், அந்தாதித் தொடைக் கமலபந்தப் பலபங்கி, தங்க ஆநந்தக்களிப்பு முதலிய பன்னூல்களையும்; சிவஞான தேசிகத்திற் குரு சீட சம்வாதக் கடாவிடைகளாய் நஉ-வியாசங்களாய் விளங்கு பெருநூன் முதலிய பல வசனநூல்களையும் அரு ளிச்செய்த ஆசிரியருமான ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது சிவநிஷ்டையில் ஆண்டவனர் இவ்வூர் இன்னதல மென்று குறித்தருளியபடி இத்தலத்தின்கண் நிட்டை சாதிப்பா னெழுந்தருளினர்கள். அஞ்ஞான்று சுவாமிகளை

யானடைந்து இந்நூன் முகவுரையிலுள்ளபடி யென்னால் வேண்டுகோள் செய்யப்பட்டது. அதனை யங்கீகரித்த சுவாமிகள் உரிய நியாயங்களை எனக்கும் ஏனையோர்க்கும் போதிக்கும்போது இவ்வூர் வைணவர் சிலரும் வேற்றூர் வைணவர் சிலரும் 1904-ம௵ டிசம்பர்மீ 23உ முதல் மும்முறை கலாய்த்து வாதிக்கத் துணிந்தனர். அஞ்ஞான்று நானும் என்னைச் சேர்ந்தாரும் வெற்றி தோல்வி விஷயமாக யாதோருடன்படிக்கை யெழுதி ரிஜிஸ்தர் செய்துகொண்டு தான் வாதத்திற் பிரவேசிக்க வேண்டுமென்று அதற்குரிய இலிகிதமொன்றெழுதி அவ்வாதிகட்குக் காட்டினோம். அதனைப் படித்துப் பார்த்த அன்னவர் யாது கருதியோ இவ்விஷயத்தில் எங்களுக்கு வாதமில்லை யென்று கூறி வாளாவிருந்துவிட்டனர். அந்த இலிகிதம் இதனடியிற் சேர்க்கப்பட்டது காண்க. மேல், சுவாமிகள் போதித்த வழியே யிந்நூலை யருளிச் செய்து எனக்களித்தார்கள். இது, பரமசிவ அருளவாம் பரிவுடையாரனைவர்க்கும் பயன் படுமாறு சிவ தொண்டர்க்குத் தொண்டனும் யான் இதனை யச்சிற் பதிப்பித்தேன். சுருதிகளையே மிகவும் உதகரிக்கப்பெற்ற இவ்வரிய நூல் வைதிக சைவத் திருக்கூட்டத்தினர் யாவருக்குஞ் சமைத்ததொரு பெருவிருந்தாயிருத்தலால், இஃதொவ்வொரு சைவ சமயிகளிடத்தும் இருத்தற் குரியதே.

........................**ரூபாய் முத்திரைக் காகிதம்**

....................ம்..............ம் செய்து கொண்ட உடன்

படிக்கை.

சைவர்கள் தங்களவயவங்களிற் பஸ்மங்கொண்டு தரித்து வருகிற இவ்வித புண்டரம் வேதத்திலுண்டென்பதை அந்த வேத வாயிலாகச் சைவருளொருவனாகிய நான் ஒப்புவிக்கத் தவறினால், அவ்வித புண்டரத்தை நானும் இவ்

வாதத்திற்கு ஏற்படுஞ் சபையில் வாதிக்க நிற்பவர்களும் மறுபடியும் அணியாமல் இழந்துவிடக் கடவோமாக. வைணவர் வணங்குந் தெய்வத்திற்குப் பதினான்கு வித்தையிற் சேர்ந்த வேதமுதலிய நூல்களிற் பஸ்மதாரண முண்டென்று காட்டும்படி செய்வேனாக. சிவம், பிரம விஷ்ணு ருத்திரர்களின் மேம்பட்ட “சதுர்த்தம்” அதாவது நான்காவது தெய்வமென்று வேதத்திற் பலவாக்கியங்களெடுத்துக் காட்டி அந்தச் சிவத்திற்குப் பரத்துவம் ஸ்தாபிக்கும்படி செய்வேனாக: வைணவர்கள் தங்களவயவங்களில் வெள்ளை

மண்ணும் மஞ்சட் பொடியுங் கொண்டு தரித்துவருகிற இவ்வித புண்டரம் வேதத்திலுண்டென்பதை அந்த வேதவாயிலாக வைணவரு ளொருவனாகிய நான் ஒப்புவிக்கத் தவறினால் அவ்வித புண்டரத்தை நானும் இவ்வாதத்திற்கேற்படுஞ் சபையில் வாதிக்க நிற்பவர்களும் மறுபடியும் அணியாமல் இழந்துவிடக் கடவோமாக. சைவர்கள் வணங்குஞ் சிவனுக்கு மேற்படி வேத முதலிய வித்தைகளில் இங்குக் காட்டிய ஊர்த்துவ புண்டரதாரண முண்டென்று காட்டும்படி செய்வேனாக. விஷ்ணு, பிரமவிஷ்ணு ருத்திரர்களின் மேம்பட்ட “சதுர்த்தம்” **அதாவது நான்**காவது தெய்வமென்று வேதத்திற் பல **வாக்கியங்க**ளெடுத்துக் காட்டி விஷ்ணுவுக்குப் பரத்துவம் **ஸ்தாபிக்கும்**படி செய்வேனாக. இவ்வித ஏற்பாட்டில் யார் **தவறி**னாலும் (நிபந்தனை)—...........இவ்விஷய வாதத்திற்குச் சிதம்பர க்ஷேத்திரத்திலாவது சென்னையிலாவது நிகழுங் குரோதி வருஷம் தைமீ—௨ கூட்டப்படுஞ் சபைக்கு இருதிறத்துக்கு முரிய வடமொழி தென்மொழி வித்துவான்களை ஆஜர் செய்துகொள்ள எவ்வித காரணத்தால் யார் தவறினாலும் அவர், ஆஜரான வித்துவான்களில் அக்கிராசனாதிபதியாயிருக்கு மொருவர் தீர்மானப்படி நடக்க வேண்டும். நடவாவிடின், அங்ஙனமே நம்மில் அனுகூல தீர்மானம்

பெற்றவர்க்கு அவ்வித தீர்மானம் பெருதவர் நூறு ரூபாய் உடனே செலுத்தி யிரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

30—12—1901 { சைவருளொருவனுகிய ....
வைணவருளொருவனுகிய......................

பதிப்புரை முற்றிற்று

பின்னத்தூர்
விசுவாவசு ஹு
புரட்டாசி மீ ௳1௳

இங்ஙனம்
பி. வ. இரத்தினசாமிப் பிள்ளை

சிவமயம்

குமாரகுருப்யோநம:

முதற்பதிப்பின் முகவுரை

கடவுள் வணக்கம்

தும்பி யந்திருச் செம்முகத் தூயவன்
றம்பி யென்பாற் ருழ்ந்திது சாற்றுவாம்.

நூலருளிச் செய்த காரணமுதலியன.

நிலவள நீர்வள முதலிய நெடுவளமெல்லா நிரப்பற வோங்கி விளங்கா நின்ற சோழநாட்டின் கண்ணதாய் "மன்றுடையான் றிருவாக்கான் மிகுந்த நேயங்—கொண்டு போய்க் குணதிசையிலிருந்தவர் வாழ் தபோவனத்தைக் குறுகியங்கண்" "பானிற வெண்ணீற்றன்ப ரசைவின்றிச் சிவயோகம் பயிலு நாளில்" என்று மண்சுமந்த படலமும் "பன்னசாலை-யொண்ணகர்ப் புறம்பு செய்தங் கிருந்தன ருண்மை மிக்கார்" "இத்திற மையர் தில்லை யெல்லையில் வைக" என்று திருவாதவூரர் புராணமுமியம்பும் ஆற்ருன், ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திர எல்லைப்பாட்டில் குணதிசையெனும் கீழ்த்திசையில் திருவாதவூரரெனும் ஸ்ரீமந். மாணிக்கவாசக சுவாமிகள் சிவயோகஞ்சாதித்திருந்த பன்னசாலை வனமாய் "ஈழநாட னிறைந்திடுஞ் சிவஞானநா - லெஞ்சலின்றிய செல்வர் பாதமிறைஞ்சி நின்றிது கூறுவான்" "வல்லி யென் புதல்விக்கு மூகை மறைந்து நல்லுரை கூடினல்" என்று மேலைப்புராணம் விளம்பும் ஆற்ருன் அந்தச் சுவாமி கள் ஈழதேயத்து இராஜபுத்திரியினது பிறவியூமைத் தன்மையை பின்னஞ்சேய்து அவள் திருவாயால் சிவோத்கர் ஷத்தைப் பேசும்படி செய்வித்தருளிய மஹாத்மியங் காரண மாகப் பின்னத்தூர் எனும் பெயர் பெற்றதாய் விளங்குஞ்

சிவக்ஷேத்திரத்தினே முன்னிருந்து சீரணமாகிவிட்ட மாணிக்கவாசகேச்சுரமெனுந் திவ்ய சிவாலயத்தை இஞ்ஞான்று கட்டி முடிக்கும் முதன்மை பெறீஇயுள்ள வ. இரத்தினசாமிப்பிள்ளையெனும் பெயரிய சிவநேயச் செல்வர் எம்முன்னரெய்திச் சிலவைணவர்கள் எம்மரபினராய சைவர்களிற் சிலர்க்கும் வேறு சிலர்க்குஞ், சிவபெருமானையுஞ் சிவனடியவரையுஞ் சிவசின்னங்களையுஞ் சிவாலயத்தையும் நாளடைவில் இழித்துக்கூறு மாற்றானே தஞ்சமயமே சிறந்ததெனப் போதித்து அவர்களை வைணவ மதத்துட்படுத்தி வருகின்றார்கள்; அவ்விடயத்திற்கு ஆழ்வார் பாடலாகிய நாலாயிரப் பிரபந்தத்தையும் வைணவருண்டுசெய்த அன்னவர் சரித்திர முதலிய புத்தகங்களையுமே ஆதரவாகக்கொண்டுளா ராகலின், சுவாமிகள் அந்தப் பிரபந்தத்தே சிவபரமாக வமைந்துள்ள தருமங்களையும் அவைபற்றி யெழுஞ் சங்கை நிவர்த்தி வாயிலாக நிறுவுஞ் சைவஸ்தாபனத்தையும் போதிக்கும் வழியே ஒரு நூல் வசனவடிவிற் சுருங்க வமைத்தருளினல் என்போன்ற சைவர்கட்கும் ஏனையோர்க்கும் பேருபகாரமாக யிருக்குமென்ற வேண்டுகோள் இனிதாமென வங்கீகரித்து அந்நாலாயிரப்பிரபந்தத்தி லாய்ந்தெடுத்தவற்றை எட்டதிகாரமாக வைத்துறுதிப்படுத்துமாற்றால் இந்நூலிற்கு நாலாயிரப் பிரபந்தவிசாரம் எனும் பெயர் சூட்டினம். இதனை முற்றும் வாசித்துணரு நடுநிலை யுடையார்க்கு இந்நூற்பயன் தெற்றெனப் புலப்படுமாகலின் அதுபற்றி யீண்டேதும் விளக்காமே விட்டனம்.

சிலர், அத்தியாச்சிரமமுடையோர் மதஸ்தாபனஞ் செய்யொண்ணாதென்ப. அவரெல்லாம், திருவாதவூரடிகள் புத்தரைவாதில் வென்றதும், அரதத்தாச்சாரிய சுவாமிகள் வைணவத்தைக் கண்டித்துச் சைவஸ்தாபனஞ் செய்ததும், அத்தியாச்சிரமத்தார் பலரும் அவ்வாறு செய்ததும், மாமுனிவர் பலர் உபநிடத வாயிலாகச் சமயஸ்தாபனஞ்

செய்திருப்பதும், கல்விச் செல்வத்தோடுங் கூடிய சுவாநு பவஞான மேதாவியரே உலோகோபகார நூலாசிரியராவ ரென்பது மறியாத மந்தமதியரே யாவர். காஷாயதாரியா யிருந்த இராமானுஜரும் வைணவ மத தாபகராகவே யிருந் தாரென்பதைக் காட்டும் அவரது சரிதை. "நிறுத்திட வலானமல நூனெறியையென்றும் - மறுத்திடவலானமல மார்க்கமய லுற்றே - நிறுத்திலன் மறுத்திலனெனிற் கரிசனேச - மறுத்தவனை மாய்க்கைகரி சல்லவற மாமே" என்ற சிவதருமோத்தரச் செய்யுள் "பரமேசுரனருளிச் செய்த வேத சிவாகமங்களா னுணர்த்தப்படு மெய்ச் சமயத்தை ஸ்தாபனஞ் செய்யவும் அந்நிய சமயங்களை நிராகரணஞ் செய்யவும் வல்லுநன் தன்முன்னர் அச்சம யிகள் தஞ்சமய நூல்களை ஸ்தாபிக்க வந்துழி அவர்கட் கஞ்சுதலினாலேனும், நட்பிற் பொருள்கோடல் நீங்குமென் பதனாலேனும் சோர்வுற்றுத் தனது சமயத்தை ஸ்தாபியா திருப்பனேல் அவன் குற்ற முடையோனாவன் : ஆகலி னவ் வாதியிடத்து வைத்த நேசமொழித்து அவனை வெறுத்தல் குற்றமன்று, அதுவே தருமம்" என்று பொருளாதலும் ஈண்டுணர்ந்து கோடற்பாலதன்றே. தக்ஷயாகத்திற் சிவ நிந்தை கேட்டிருந்த விஷ்ணு முதலாயினர் துன்புற்றதும் இங்ஙனம் கருதத்தக்கதே.

முகவுரை முற்றிற்று

இங்ஙனம்

நூலாசிரியர்

உ

திருச்சிற்றம்பலம்.

ஓம் குமரகுருதாச குரப்யோ நம:

"மௌனமோலி, அயர்வறக்கென்யில் வைத்தி ராசாங்கத்தின் அமர்ந்தத்துவைதிகசைவம் அழகி தந்தோ" என்பது வேதாந்த சித்தாந்த சமரசமெய்ந்நிலை கண்ட தாயுமான அடிகளாரின் அருள்மொழி அவ்வைதிக சைவர் மறவியால் சூழப்பட்டுத் தந்நிலை திரிந்து சிறு தெய்வவழிபாட்டையும் மேற்கொண்டு அவைதிகசைவராயினர் சமயக்கல்வியும் இவர்பால் குறைவுற்று நாளடைவில் இல்லையாய் ஒழிந்தது. முகத்துக்கண் கொண்டிருந்து அகத்துக் கண்ணிழந்துநிலை கொள்ளும் வழித்துறை ஒன்றறியா இவர் தமைநணுகிப்பொய்யும் புளுகுமான கதைகளால் அவர் அறிவை வேறுபடுத்தித் தம் மதத்துக்கு ஈர்க்கும் தொழிலுடையாராயினர் சிலர் அவர் கூறுவனயாவும் மறை மொழிகளே என பயலுஞ்சைவரும் சைவமாம் சமயம் சார்ந்த நல்லூழைப்புறந்தள்ளிச் செத்துப் பிறக்கும் தெய்வத்தைக்கொண்டாடும் தீயூழ்வயப்பட்டனர்.

அன்னகாலையில் அறுமுகப்பரமன் ஆணையிருந்த வண்ணம் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசசுவாமிகள் தோன்றிச் சைவரைச் செவ்வழிப்படுத்தும் இருநூல்கள் அருளினர். அவற்றுள் ஒன்று நாலாயிரப்பிரபந்த விசாரம் மற்றொன்று சைவசமய சாபம். சைவ சமய சாபம் நன்கு ஆண்டுகட்டுமுன் மூன்றும் பதிப்பாக வெளியிடப்பட்டது. இந்நூலுக்கு முன்தோன்றிய நாலாயிரப் பிரபந்த விசாரம் இன்று கிடைத்தற்கரிதாயுள்ளமை கருதி இக் காலை மூன்றும் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

இந்நூல் வைணவரது நாலாயிரப்பிரபந்தத்தின் உண்மை விளக்குமாற்றுன் வேதத்தின் மிக்க அறமில்லை என்பது

தோன்ற வேதம், வீட்டுணுபுராணம், மற்றும் வைணவர் சார்பில் எழுந்த வைணவ நூல்கள் இவற்றையே ஆதாரமாகக் கொண்டு நடை தருவதாகலின் யாவராலும் அசைக்க முடியாதபடி வச்சிரத்தம்பமாக நின்று விளங்குகின்றது. இதன்கண் நாலாயிரப்பிரபந்தத்தைக்கொண்டே சிவபரத்துவம் நிறுவும் ஸ்ரீமத் சுவாமிகளின் திறம் போற்றி வணங்குவதற்கு உரியதாகும். இந்நூலைக்கற்போர் சைவசமயத்தின் மாட்சியைத் தெளிந்து சிவபெருமானின் செங்கமலப்பொற்பாதம் தொழுது மாயனும் வேதனும் போற்றும் பெருநிலை கூடுவர். ஐயமின்று எம்பால் அன்பு நிறைந்தவரும். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாதசேகரரும் பழநி ஸ்ரீலஸ்ரீசாதுதங்கவேல்சாமி அவர்களின் திருவுள்ளத்துக்கினியருமான இராம நாதபுரம் செ. வேலுசாமி அவர்கள் இந்நூலை மூன்றும் பதிப்பாக அச்சிட்டு வெளியிடமுன்வந்துள்ளார்கள். இப்பெரியாருக்குச் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு அருளி இம்மையில் புரந்தும் இவர் வழியினர்க்கு வளமார்வாழ்வளித்துத்துணைசெய்தும் அம்மையில் உலவாஇன்பம் உதவிய ருளவும்திருவுள்ளம் கொள்ளுமாறு ஏரகம் இடைக்கழி சிராமலை திருப்பழநி எரளிதிருத்தணியில் வாசக காரனும் வாதனை தவிர்த்த குருநாதனும் ஆன குமரகுருபரன் திருவடிகளைப் பழிச்சிப் பணிகின்றேன்.

அன்பன்,

27.12.1992.

பி.மா.சோமசுந்தரம்,
இராணிப்பேட்டை.

உ.

குமார ஜெயம்!

அணிந்துரை

சைவசமய மேசமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலுஞ் சமய நெறி புகுத வேண்டா முத்தி தரும்
தெய்வச் சபையைக் காண்பதற்குச் சேரவாரும் சகத்தீரே.
-- ஸ்ரீ தாயுமானவர்.

சமயம் மக்கள் வாழ்வுக்கு உயிராம் சமயச் சார்பு இல்லாத மனிதன் உயிர் நீங்கிய உடல் போன்றவன். மனிதனைச் செம்மைப் படுத்தி உண்மையில் நிறுத்துவது சமய நடையேயாகும். சமய வாழ்வுடைய மனிதன் நடமாடுங்கோயில் ஆகின்றான். மனிதன் உணர்வில் உறைந்து நின்று கடந்த காலத்தையும் நிகழ் காலத்தின்று எதிர்காலமான்மையும் உணர பொய்ச் சமயம் இது விதுவெனக் காட்டி உண்மைச்சமயத்தில் நிலை கொள்ளுமாறு அறை கவி யமைக்கிறது சைவசமயம், அரியா நலன் களை நிறைத்து மனி தனைப்பூரணமாக்குவதும் விபூதி உருத்திராக்கங்களோடு விளங்கா நின்ற சைவ சமயம் ஒன்றே யாகும். அதனுல் தான் "வாழ்வெனுமையல் விட்டுவறுமையாம் சிறுமைதப்பி, தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ்சமயஞ்சாரும் ஊழ்பெறல் அரிது" என்றார் அருணந்தி சிவாச்சாரியார்" சைவ சமயமே சமயம் என்றும், மற்றைச் சமயங்கள் பொய்யில் உழலுஞ் சமய மென்றும் தாயுமான சுவாமிகள் அருளிச் செய்தார். "சைவ சமயம்" என்பது தவிர்த்துப் புத்தக் காய்க்கு மொரு தருவை நிகர்க்கும்" சமயாதீதம்" என்பது

அத்தருவில் பழுக்கும் பழம் கொம்பை விட்டு நீங்கி அநுபவிப்பார்க்கு அநுபவப் பொருளாதலொக்கும்" பேசா மோனம்வைத்திருந்த மாதவர்க்கும், இந்திராதி போக நலம் துய்த்த பேர்க்கும் இதுவன்றித் தாயகம் வேறில்லையென்றும், சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத் தக்க நெறி இந்நெறியே தான் சந் மார்க்கம்" என்றருளிச் செய்ததும் சைவ சமயத்தின் மாட்சியையும் உயர்வையும் காட்டுவதாகும்.

இந்நூல் முகப்பில், பின்னத்தூர் சைவத்திருவினர் பி.வ. இரத்தினசாமி பிள்ளை 5 பக்கங்களில் எழுதியுள்ள "முதற்பதிப்பின் பதிப்புரையை முதற்கண் படித்து இந்நூல் எழுதுவதற்குரிய காரணத்தைத் தெரிந்து கொண்டு, படிக்கத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சிவ பிரானையும் சிவ சத்தியையும், சிவ குமாரர்களாகிய விநாயகர் முருகபிரானையும், சிவனடியார்களையும் சிவ சின்னங்களான விபூதி உருத்திராக்கங்களையும் ஆபாசமொழிகளால் தூஉடித்து வரையப் பட்டுள்ள பல வைணவ நூல்களைத் தக்க காரணங்காட்டிக் கண்டித்தல் நூலாராய்ந்த சைவர்கள் கடமையென்னும் உணர்ச்சியால் வாய்மையும், தூய உள்ளம் படைத்தவரும் மனச் சான்று கொல்லாத நடுநிலை நிற்கும் ஆற்றல் பெற்றோரும், நூலாராய்ச்சி வன்மையுடையோரும் மதவெறியற்றவருமாயுள்ளவர்க்கே நாலாயிரப் பிரபந்த

விசாரமெனுமிந்நூல் நன்கு விளக்கமுறும்.

வாரணசி(காசி)யில் இறப்பவர்களுக்கு தசரத குமாரரது 'ராம' நாமத்தைவலது காதில் உபதேசிக்குங்குரு சிவனென இகழுங்குதர்க்க வைணவர் கூற்றை மறுத்து ஐந்தெழுத்து மந்திரத்தில் 'சி' ஆகிய சிவனும் 'வ' ஆகிய சிவசக்தியும் எய்ந்து சிவ' என நிற்றல் போல 'ஹரா' வெனுஞ்சிவ நாமத்தின் ஈற்றெழுத்தும் 'உமா' எனுஞ்சிவசக்தி நாமத்தின் ஈற்றெழுத்தும் எய்ந்து 'ராமா' வென நிற்கின்றனவெனவும், இவ்விராமநாமம் சிவ நாம மேயெனவும் இதுவே காசியிலிறப்பவர்களுக்குச் சிவபிரானல் உபதேசிக்கப்படுகின்றது என இராமதாபிநி உபநிஷத்," "பஸ்ப ஜாபால உபநிஷத்" "பராசர புரான" மாகியவை விளம்புவதையும் இந்நூற்கண் விளக்கி யிருப்பது சைவரனைவரும் படித்துணரவேண்டியதே.

பொய்க்கதை படிக்கும் வைணவர், சிவனுக்குக் கைலாச வாழ்வு கொடுத்தவர் விட்டுணு வென்றும், இராமர் இராமேசுவரத்தில் சிவலிங்க பூஜை செய்யவில்லையென்றும், சிவனையு மற்று அயன் முதலிய அனைவரையும் ஏனை அசேதனப் பொருள்களையும் பிரளய காலத்தில் விழுங்கும் பெரியோன் விட்டுணு வென்றும், சிவனணிந்துள்ள கங்கை திரிவிக்கிரமன் (விசுவரூபம்) கால் கழுவிய நீரென்றும், விட்டுணுவின் மகன் பிரமன் பிரமனுடைய மகன் சிவனென்றும், பிரமனது தலையைக் கிள்ளிய சிவன் பிரமஹத்தியால் பீடிக்கப்பட்டுக் கபால மேந்தித்

திரிந்தானென்றும் அக் கபாலம் கைவிட்டு அகலும்படி அநுக்கிரகித்தவன் விட்டுணுவேயென்றும், கிருஷ்ணன் காலில் அருச்சுனன் சார்த்திய பூமாதல கைலாயத்தில் சிவன் சிரசிலிருந்தமையின் கிருஷ்ணனேயுயர்ந்தவனென்றும், கல்லாலின் கீழிருந்த சிவன் சனகாதி முனிவர்க்கு விஷ்ணுவை வணங்கு ஞானமே போதித்தானென்றும், கிருட்டினன் தொடுத்த சண்டையில் வாணசுரனைக் காக்கவென்று வந்த சிவனும் சிவபுத்திரர்களும் மற்றவரும் வலியிழந்தோடிவிட்டனரென்றும், சிவன் முதலாயினர் விட்டுணுவை வணங்குநரென்றும், அற்பர்கள் சிவவழிபாடுடைய வராயினரென்றும் பொருள்பொருந்தச் "சிறியார் சிவப்பட்டார்" என்றும் பலவாறு தூஷித்துள்ள தூஷணங்களையும் நியாயவாயி லாகத் துவை துவையென்று துவைத்து ஆழ்வார் குழறுபாடுகளையும் வெளிப்படுத்திச் சிவபரத்துவம் நாட்டியிருத்தலை இந்நூற்கண் காணலாம்.

"நாலாயிரப்பிரபந்த விசார" மெனுமிந்நூல், காமினி காஞ்சனக் கட்டறுத்து, போஜன விருப்பம் அறுசுவை வேட்கை வீட்டு இடம் பொருளேவல் மூன்றும் உலகந்திருவருளடியார் எனக் கொண்டு விருப்புவெறுப்பு மற்ற இன்பமுந்துன்பமும் கடந்த நேரிய தூய துறவற வாழ்வில் நின்ற அத்தியாச்சிரம சுத்தாத் வைத வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச

சுவாமிகளால் இயற்றப்பெற்று 1905-ல் முதற்பதிப்பு வெளிவந்தது. பின், 1956ல் சென்னை-சைவ சித்தாந்தப் பெருமன்றம் (மகா சமாஜம்) இரண்டாம் பதிப்பு வெளியிட்டார்கள். இப்பொழுது இவ்வரிய நூல் கிடைப்பதரிதாகிவிட்டபடியால் சைவ சமயக் கொள்கை (நெறி)யாகிய "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் ஏக தெய்வ வழிபாட்டில் நின்று சிறு தெய்வ வழிபாடுகளைக் கண்டித்தும், வ்வொரு தெய்வமும் கலியுகத்தும் வரதன் அன்பர் கண்கண்ட தெய்வம் குமாரச் சிவமாம் கந்தக் கடவுளே எனத் தெளிந்து அவன் திருவடிக்கே மாறாப் பத்திமை கொண்டவருமாகிய முகவைப் பேரன்பர் இசு. வேலுசாமி அவர்கள் மூன்றும் பதிப்பாக அச்சிட்டு வெளியிடுகிறார்கள். இவருக்கு அழியா இன்பம் அருளிப்புரக்க துதிபணி படிப்போர் விதிதலைக்கிழிப்போன் சுபகரச் செருக்கினைத் தருவோன், மேலுலாந்தேவர் குலமுழுதாளுங்குமரவேள் பழநி ஸ்ரீ ஞான தண்டாயுதபாணிப் பெருமான் தாளிணைப்போதில் தாழ்ந்து வேண்டுவோம்.

" வெண்ணீறு - அணிகிலாதவரைக் கண்டால்
அம்ம! நாம் அஞ்சுமாறே.
-- திருவாசகம்.

மண்டபம்,
ஆங்கிரஸ-மார்கழி-1.

குகேசனடிமை,
பழநி தங்கவேல்சாமி,
16.12.92.

நாலாயிரப்பிரபந்த விசாரம்

நூல்

வாரீர் வைதிக சைவ மரபிற்றோன்றிய மாண்புடையோரே! நீவிரும் ஏனைய நடுநிலை நிற்பாரும், வைணவர் திராவிட வேதமெனு நாலாயிரப் பிரபந்தம் எத்தன்மைத் தென்பதை அதனானும், பண்டையார் வழக்கிற் பிரமாணமாகவுள்ள இருக்கு - யஜுர் - சாமம்- அதர்வணம்-சிக்ஷை-கற்பம் - வியாகரணம் - நிருத்தம்-சந்தோபிசிதம்-ஜோதிடம்-புராணம் - நியாயம் - மீமாஞ்சை - ஸ்மிருதியெனும் வித்தை பதினான்கனில் ஈண்டுக்கொள்ளப் படுவனவற்றானும், வேறு சில புத்தகங்களானும், யுக்தி அநுபவங்களானு முணர்ந்து, உண்மை கடைப்பிடிக்கும் ஆறு, யாம் அதிகாரமுறையாகக் கூறுதலைக் கேண்மின்!

(க) பரமசிவனது திருவுரு வலப்பாகமும், விஷ்ணுமூர்த்தியினது திருவுரு இடப்பாகமுமாகவுள்ள கேசவார்த்த மூர்த்தியை ஆழ்வார் துதித்தாரென்பது.

திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழி - பெரும் புற வென்றற்றொடக்கத்துப் பத்தின் ௭—வது பாட்டில், (1644)*

" கண்ணுதல்கூடிய - அருத்தனை யரியை * * * *
கண்ண மங்கையுட் கண்டுகொண்டேனே "

எனவரூஉம் இதில், கண்ணுதல் கூடிய அருத்தனை யென்றது நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனதுருவில் இயைந்திருக்கும் பாதியுருவுடைய விஷ்ணு மூர்த்தியை எனவும், வியமுடை யென்றற்றொடக்கத்துப் பத்தின் கூ-வது பாட்டில், (1713)

" மழுவியல் படையுடை யவனிட மழைமுகில்
தழுவிய வுருவினர் * * * * கணபுரமடிகட மிடமே "

என்றது, மழுப்படையுடைய பரமசிவனது இடப்பக்கத்திற் பொருந்திய கார்மேகம் போன்ற மேனியுடைய விஷ்ணு மூர்த்தியானவர் எனவும், நண்ணாத வெனுந் தொடக்கத்து கூ-வது பாட்டில், (1106)

---

*இம்மாதிரி தரப்பட்டுள்ள எண்கள், மயிலை மாதவதாஸன் பதிப்பிலுள்ள பாட்டெண்கள்.

" பிணங்களிடு காடதனு ணடமாடு பிஞ்ஞகனே
டிணங்கு திருச்சக்கரத்தெம் பெருமானார்க்கு"

எனவருஉம் இதில், பிஞ்ஞக னெனப்பட்டவர் சிவபராக் கிரம மூர்த்திகளிலொருவர். பிணங்களிடு காடென்றது (ஸ்காந்தத்தில் தக்ஷப்பிரஜாபதி கடாவுக்குத் ததீசி முனிவ ரருளிச் செய்த விடையின்படி) சருவ சங்கார கோர தாண்டவ காலத்திற் பிரம விஷ்ணுக்களுடைய வுடம்புகளை யுந் தகிக்கும் மாயா பந்தநாசலிலாட நேத்ரஞானுக்கினி மயானமாம். அங்ஙனம் (மும்மூர்த்திகளிலொருவரான காலாக்கினிருத்திரர் வாயிலாகக் கருணையாலே அந்தப்பிரம விஷ்ணுக்களாவியைத் தன்னக மடக்கியபடி, யவர்களுடம் பையு மடக்கவென்று அவ்வுடற் சாம்பரைத் தன்னுரு விற்றிமிர்ந்து எஞ்சிய வெண்டலைகளை மாலையாக வணிபரன் பிஞ்ஞகனுவான்) அவனுருவிற் பொருந்தியிருக்கும் விஷ்ணு மூர்த்திக்கு எனவும் பொருளாகும் வழியே பரமசிவனாது திருவுருவி னிடப்பக்கத்தில் விஷ்ணு மூர்த்தியினுருவுள தென்றறியுலாவதே. இதனை பின்வரு செய்யுள்களு முறுதிப் படுத்தும். அவை பேயாழ்வார் இயற்பா சுரு-வது தூக்கு (2344)

" தாழ்சடையு நீண்முடியுமொண் மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னுணுந் தோன்றுமால் - சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்ரு யிசைந்து"

எனவும், நம்மாழ்வார் திருவாய்மொழி ஏருளுமெனுந் தொடக்கத்துப் பத்தின் கo-வது பாட்டில், (3093)

"தடம்புனல் சேர்சடை முடியன்றனி யொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத வுயிரினற் குறைவிலமே"

எனவும், பொய்கையாழ்வார் இயற்பா உஅ - ல், (2109)

" மாமதிண் மூன்றெய்த - இறையானின் னுகத்திறை"

எனவும் வருமாறு காண்க.

இவ்வாறியை புற்றிருக்கு மூர்த்தமானது ஸ்காந்தத்தின் சங்கர சங்கிதையிலுள்ள உபதேச காண்டத்து கூo-வது

அத்தியாயத்திலே கைலாயம் சிவலோக முதலிய ஸ்தானங்களிற் காரியார்த்தமாக அனாதியாயுள்ள ‘இலிங்கோற்பவ’ முதற் ‘கங்காதரம்’ ஈருகக் கூறப்பட்ட (உடு—) மஹேசுவர மூர்த்தங்களில் ஒன்பதாவதான ‘கேசவார்த்த’ மூர்த்தமாகும். அன்றியும், அஷ்டாஷ்ட விக்கிரகமெனும் சுசு சிவமூர்த்தங்களில் ஒன்றுமாகும். இதனையே சங்கர நாராயணமூர்த்தமென்றும் கூறுப. ஆன்மாக்களுக்கு முத்தியேதுவான இருவினையொப்பாஞ் சத்திநிபாதத்தை யுண்டு செய்வான் பரமேசுவரன், இவ்வுருவாக வெழுந்தருளி யுள்ளானென்பதை யடியிற் காட்டுங் காந்த வாக்கியத்தானும் அறிக.

“ புண்யபாபேச மீக்ருத்யசாத்ம நாமீச்வ ரேச்வர :
ப்ரயச்சதி ஸ்வாத்மசக்தி பாதம் ஹரிஹராத்மநா ”

சங்கை நிவர்த்தி :—குருபரம்பரை கூறுமாறு, நாலாயிரப்பிரபந்தம் பாடிய அந்த ஆழ்வார்கள் சென்ற நெடுங்காலத்திற்குப்பின், அதாவது இற்றைக்கு அஅஅ-வருடங்களுக்குட்பட்ட சகவருஷம் கூகூ-சென்ற வர்த்தமான பிங்கள வருஷம் சித்திரைமாதத்திற் பெரும்பூதூரில் ஆசூரி கேசவப் பெருமாளென்னுஞ் சர்வக்கிரது தீக்ஷிதர்க்கும் பூமிப்பிராட்டியெனும் பெயரிய அவர் மனைவிக்கும் புத்திரனாகப் பிறந்து, யாதவப் பிரகாசரிடம் வேதாந்தம் படித்துப் பெரியநம்பி திருக்கோட்டியூர் நம்பியென்பாரிடம் வைணவ தீக்ஷை அஷ்டாக்ஷரோபதேசம் முறையே பெற்றுத், தங் காலத்தே பன்முறை நோவுசாத்திக் காலஞ்சென்று விட்ட யமுனைத்துறைவராகிய ஆளவந்தாரைப்பேராசிரியராக நினைத்திருந்த இளையாழ்வாரெனும் இராமானுஜர்செய்தஅநுஞ்ஞை கடைப்பிடித்துத் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிள்ளானென்பாரெழுதிய ஆறாயிரப்படியெனும் வியாக்கியானமும், அதனை யதிகரித்துக் கூரத்தாழ்வார் மகன் பட்டருத்தரவுப்படி நஞ்சீயரும் நம்பிள்ளையுஞ் செய்த ஒன்பதினாயிரப்படியெனும் வியாக்கியானமும், அதனை யதிகரித்தபடியாக இந்த நம்பிள்ளை சொற்படி வடக்குத் திருவீதிப் பிள்ளை யெழுதின முப்பத்தாறாயிரப்படி யெனும் வியாக்கி

யானமு* முண்டாய பின்பு ' பின்பழகிய பெருமாள் ஜீயர் என்பாரியற்றிய ஆருயிரப்படிக் குருபரம் பராப்பிர பாவத்தி லுள்ள மதுரகவி யாழ்வார் வைபவத்தில், பிரமருத்திரர்கள் விஷ்ணு மூர்த்தியின் திருமேனியைப்பற்றி யிராதபோது, அவர்களுக்குச் சத்தை குலையுமென்றும், பற்றியிருக்கும் போது அவர்கள் பகவத் ஸ்தோத்திராதிகளுக்கு யோக்கிய ராயிருப்பார்க ளென்றும், வேறுபட்டபோது அவ்வித யோக்கியராயிரார்க ளென்றும், இக்காரணங்களால் ஹரியும் ஹரனுமாயுள்ள மூர்த்தியை ஆழ்வார்கள் துதித்தார்களென் றும் பொருளாம்படி யெழுதியிருக்கக் கண்டோம். இவ் வெழுத்து, யாதாமென்பதை விசாரிப்போம். அவ்வைணவர் கருத்தின்படியே, அசுத்த குணமுள்ள பிரமருத்திரர்கள், சுத்த குணமுள்ள ஹரியையடைவரெனக் கொள்ளினும், அஞ்ஞான்று கழிமலத்தை யடைந்த நறிய சந்தனமுந் தன் மணங்குன்றி யொழிவதுபோல, அந்த ஹரியின் சுத்தகுண முங் குன்றிக் கெடுமன்றே. அற்றன்று, உப்புநீரி லுறையு மீனுக்கு அவ்வுப் பேறுததுபோல, ஹரிக்கும் அசுத்த மேறு தென்னின், அம்மீனில் உப்பின்மையான நற்குணமிருந்தும் அஃதுறை நீரிலுள்ள உப்பை மாற்றுந் தன்மைத் தாகா வாறே, ஹரியின் சுத்தகுணமும் பிரமருத்திரர்கள் அசுத்த குணத்தை அகற்றுந்தன்மைத் தாகாதென்றல் தேற்றமாம். அற்றன்று, சேற்றுநீரைத் தேற்றுங்கொட்டை தெளிவித் தாற் போல அக்காரியமு மாமென்னின், அப்படித் தெளிந்த நீரினின்றும் பிரிவுற்ற சேற்றோடு அக்கொட்டையுஞ் சேர்ந் தொழிவதுபோல, அவ்விருவரசுத்தத்தோடு விஷ்ணு சுத்த முஞ் சேர்ந்தொழிவதுமன்றி, அத் தெளிநீர்போல அவ்விரு வருமே சிரேஷ்ட வஸ்துவாவார்கள். அன்றியும் தெளிவுற்ற நீர் முன்போலச் சேற்றோடு கூடாதவாறே அவ்விருவரும் பின்றை அசுத்த மடையவு மாட்டார்கள். ஆவதேல் ஹரியை நீங்கி வேறுபட்டபோது இருவரும் அசுத்தராவ ரென்பது ஈண்டைக்கியையாது. அற்றன்று, கண்ணனது

*பன்னீராயிரப்படி யென்பதொன்றுண்டு. அது முப்பத் தாறுயிரப்படியி லடங்கற்பாற்றென்ப.

கதிரவனொளியிற் கூடியபோது, பார்க்க யோக்கியமுள்ள தாயுங், கூடாதபோது அவ்யோக்கியமற்றதாயு மிருப்பது போல, அவ்விடய மென்னின், வியாத்தியிலுள்ள கண்ணுனது சிறிதும், வியாபகத்திலுள்ள கதிரவனொளி பெரிது மாகலின், அக்காரிய மியையும். "வலத்தனன்றிரி புரமெரித் தவன்" எனும் நம்மாழ்வார் திருவாய் மொழியானும், (2705) மேலே காட்டப்பட்ட திருமங்கை யாழ்வார் செய்யு ளானும், ஹரிபாகம் இடப்பக்கமான சிறிதென்பதும் ஹரன் பாகம் வலப்பக்கமான பெரிதென்பதும் வெளிப்படையாக லின், வியாத்தியிலுள்ள ஹரிகுணம் வியாபகத்திலுள்ள ஹரன் குணத்தைச் சேராதபோது செயலற்றதாகுமென்றும். ஆகவே வைணவ ரபிப்பிராயத்திற்கு நேர்விரோதமே, செய்யத்தக்க இவ்வுவமானமு மியையாது. இவையன்றி எவ்வித வுவமானத்தை யெடுத்தாலும் அது இங்குக் காட்டிய வுவமானங்களின்கட்பட்டு, இயைபின்மை யுறுமல்லாமல், இயைபுண்மை யுருது. இங்ஙனம் உவமானம் வேண்டர், ஹரிகருத்தின்படி ஹரியை யிருவருங் கூடும்போது சுத்தருங் கூடாதபோது அசுத்தருமாவரெனக் கொள்ளினென் கொலெனின், அளவை நூலாகிய நியாய சாஸ்திர விரோத மும், ஹரியினது கருத்தே யசுத்தமெனுந் தீர்வையுமுண்டா கும். அன்றியும், கூடிற் சுத்தமுங் கூடாவிடின் அசுத்தமும் அரன் அயனென்பார்க் குண்டாமெனற்கு, ஆழ்வார்கள் பாடல் வாக்கியங்களும் பிரபல சுருதி வாக்கியங்களு மில் லாமையால் அப்பேச்சு பிரமாண விரோதமுமாம்.

இனி, இருவரும் ஹரியைச் சேர்வது சுத்தத்தின் பொருட்டென்பாரை யொருவனேக்கி இலக்குமி ஹரியினது மார்பைச் சேர்வதும் அப்பொருட்டுத்தானே? ஹரிக்கு அவ் விருவரும் இருபக்க வுடம்பாய்விட்டால் இலக்குமியிருக் குமிடம் ஹரியுடம்பு எங்ஙன மிருக்குமோ? இல்லாதொழியுமோ? அஞ்ஞான்று இலக்குமிதான் நீங்கியிட லுண்டோ? ஹரனு ருவிலொன்று பட்டதுபோல அயனுருவினு மொன்று பட்டதுண்டோ? அவ்வுருவின் பெயரென்னே? அது குறிக் குஞ் சுருதி யாது? ஆழ்வார் பாடல்களிலேனு முண்டா?

விஷ்ணுவானவர் அசுரர் அரக்கர் முதலினோரைக் கொல்லுங் குணந் தாமத மாகாதோ? அக்குணந்தான் சுத்தமோ? "உருவமெரிகார் மேனியொன்று" எனும் பொய்கை யாழ்வார் வாக்கின்படி, அக்கினிமேனி யரனுக்குங், கறுப்புமேனி யரிக்குமுண் மையாயின் அக்கினியின் அசுத்தத்தைக் கறுப்புத்தானே நீக்குந்தகைத்து? சாத்துவிக குணங்கறுப்புத் தானே? நுங்கூற்று வழியே கறுப்பாகிய களங்கம் களங்க நீக்கத்தின் பொருட்டே அக்கினியைச் சேர்ந்திருக்கிறதென்னின் நீரென் செய்வீர்? என்று கடாயினால் அவர் குன்றுமுட்டிய குரீஇ போலாகி மௌனமே சாதிப்பார் போலும். அந்தோ! அந்தோ!!

ஈண்டு,—"ஈசற்கிசைந் துடம்பிலோர்—கூறுதான் கொடுத்தான் திருக்கோட்டி யூரானே" என்று பெரிய திருமொழி 'எங்கள்' எனுந் தொடக்கத்துப் பத்தின் ௬-ம் பாட்டில் (1841) திருமங்கை யாழ்வார் வெளியிட்டபடி அரிதான் அரனுக்கு உடம்பிலொரு கூறு கொடுத்ததாக ஏற்படுமாறு ஆழ்வார் பாட்டுக்களிற் பலவிடங்களினு மேற்படும். ஆயின் அரன்றான் அரிக்கு அக்கூறு கொடுப்பவனாவானென்னுங் கூற்று இயைபுடைமை யாமோவென்னின், கூறுதும் "பிஞ்ஞகனோ டிணங்கு திருச்சக்கரத்தெம் பெருமான்" எனும் அவ்வாழ்வார் (1106) கூற்றாலேயே அஃதினிதியையும். இயைந்தானும் இயையாவிடினும், அரி வலப்புறத்தை யரனுக்கும், அரன் இடப்புறத்தை யரிக்குங் கொடுத்தாற்றான் இருவர் முழுவுருவு மொன்றோடொன்று ஏய்ந்து இருதிற ஒருமூர்த்த மாகுமாதலால் விரோதமேது மில்லை.

உலகழிவாம் பிரளய காலத்தில் பிரமதேவர் விஷ்ணு மூர்த்தியிலொடுங்குவார்: பின்னர்த் தோன்றுவார்: அவ்வொடுக்க தோற்றங்களையே அம்மூர்த்தியைப் "பற்றியிருக்கும்போது" என்றதென்னின், அதுவும் பொருந்தாது. என்னை? அவ்வித பிரளய மேற்படாத இக்கலி காலத்திற் பிறந்திருந்த நம்மாழ்வார் "கங்குலு" மென்றெழும் பத்தின் ௧௦-ல் (3257) "நான்முகக் கடவுளேயென்னும்—வடிவுடை

வானோர் தலைவனே யென்னும்" என்று துதித்தமை காணப் படுகின்றது. இது வைணவர் தீர்மானப்படி அரியைப் பற்றியிராத அசுத்தப் பிரமாவைத் துதித்த தாகுமாகலின். வானோர் தலைவனே என்றது இந்திரனை. இவ்விந்திரனோடு அரி அயன் அரனென்னு மூவருமொன்றுபட்ட மூர்த்தம் எந்நூற் கண்ணுங் கூறப்பட வில்லையாகலின், அந் நால் வரையுந் தனித்தனி வழுத்தியதெனல் ஏற்புடைத்தாம்.

ஈண்டுக் கூறிப்போந்த அசுத்த சுத்த விவகாரத்திற்கு ஏது :—பிரம்மாவுக்கு இராஜதகுணமும் உருத்திரனுக்குத் தாமதகுணமும் விஷ்ணுவுக்குச் சாத்துவிககுணமு முண்டெனக் கொண்டதேயாம். இவ்வாறு கொண்ட அவ் வைணவரும் பிறரு முணருமாறு இம்பர் விளக்குதலென்னை யெனின்,

> கவலெது மிலாதசுக சத்வபிர வர்த்த
> கன்சிவ னெனத் தெளிவுசொல்லிடு சுவேதா
> சுவதர மொழிக்கிசையவே யிறுதி நாளிற்
> சோர்வற வுஞற்றுதொழி லின்றுணை மையாலே
> கவுரவ தமோகுணமு நாளுமதி சுத்தங்
> காணுமுழு ஞானமய முஞ்சிவனுக் குண்டென்
> றவமில்பிர மாண்டமு மரற்றுமிதை யாய்ந்தோ
> ரண்ணலர னைத்தமச னென்னவிசை வாரோ.

என்னுந் திருப்பாவின்படி சத்துவகுண பிரவர்த்தகன் சிவனென்று யஜுர் வேதத்துச் சுவேதாசுவதரோப நிடதஞ் சொல்லுமாற்றானே, எஞ்ஞான்றும் அதிசுத்த குணமுஞ் சங்கார காலத்தில் கௌரவமான தமோகுணமும், அந்த அரனுக்குண்டெனப் பிரமாண்ட புராண மத்தியபாக இளோபாக்கியானமுங் கூறும். அன்றியும், பதினெண் புராணங்களிலொன்றாய சைவ புராணத்து ஞானசங்கிதை (உ-வது) அத்தியாயம் உருத்திரனுக்கு உள்ளே சாத்துவிக மும் வெளியே தாமதமும் விஷ்ணுவுக்கு உள்ளே தாமதமும், வெளியே சாத்துவிகமும், பிரமாவுக்கு உள்ளும் புறமும் இராஜதமு முண்டென்றுரைக்கும். விவரித்த வெளிக்குணம் நோக்கியே பிரமவிஷ்ணு ருத்திரர்கட்கு முறையே இராஜதம், சாத்துவிகம், தாமத முண்டென்று சுருதிகள் சில விடங்

களிற் சொல்லும். இம்மூவரிலும் உள்ளே சத்துவ குண மூள்ள உருத்திரனே மற்றை யிருவரையு முடிக்குஞ் சங்கார கர்த்தாவாகலின் அவனே மேலானவனென அறிவதற்கு.

"திரிமூர்த்திகளி லுருத்திரனே திகழ்சத்துவ நற்குணதேக
மறியதிறத்தோ னுதலினல் விசேடனுவான் மாதவத்தீர்"

"எல்லா வற்றினும் பிரமமென்னு மதியேவிசேடமா
கல்லார்புகழு முருத்திரற்கு நகுமுள்ளே சத்துவகுணமும்
மல்லார்வெளியே தமோகுணமு மாயற்குள்ளே தமோகுணமும்
வில்லார்வெளிச்சத்து வகுணமுமுள்ளவென்பார்மெய்யுணர்ந்
"உள்ளும் புறமுமிராசதமே யுளதுமலர் மேயவற்கு" [தோர்"

என்பனவும் போதுமானவைகளே. இச் செய்யுள்களைத் தரும் காந்தத்துச் சூதசங்கிதையின் பரம விஞ்ஞானமுரைத்த அத்தியாயமானது இவ்விடயத்தை மிகவும் வலியுறுத்திக் கூறுதலினல் அதுகுறித்து ஈண்டு அதிகம் விளக்கவில்லை. ஆண்டுப் பரக்கக் காண்க. இத்துணைப் பெருமைவாய்ந்த உருத்திர மூர்த்திக்கும் மேலாயுள்ள சிவபெருமான் நான்காவது மூர்த்தியாகலின், அவர் முக்குணரகித நிர்க்குணரும், மிக்க பொறுமையெனுஞ் சாந்த பிரசாந்த சீலருமாயுள்ளா ரென்பது :—

"ப்ரத்யய ஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம்சிவ
மத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே"

எனும் அதர்வணவேத மாண்டூக்கியோபநிஷத் வாக்கியத்தானும்,

"பஞ்சவக்த்ர முமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்த
மந்தர் லக்ஷ்ய மிதிகேசித்"

எனும் யஜுர் வேத மண்டலப் பிராம்மணோபநிஷத் வாக்கியத்தானும்,

"உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம்
நீலகண்டம் ப்ரசாந்தம்"

எனுமேற்படி வேத, கைவல்யோபநிஷத் வாக்கியத்தானும்,

" தங்கள் விபூதியினுமும்மூர்த்திக ளதிகர்சாற்ற வருட்
பொங்குமுருத் திரனதிகன் பொலிதரு வவ்வுருத்திரனிற்
சிங்கலின்மாயாவி சிட்டமான சருவக்கிய சிவன்
துங்கமிகு பெருந்தவந்தீர திகனெனச் சொல்லுவரால் "

எனுமேற்படி சூதசங்கிதை மேற்படி யத்தியாயச் செய்யுளானும்,

" முத்தன் பூரணனனந்தரூபன் பர்க்கன்முழுச் சருவாதார
னித்தியன் வரப்பிரதனி ராமயனிர்க்குணன் வேதாந்தன் "

என வருமேற்படி சங்கிதை பரமசிவ நாமவைபவ அத்தியாயச் செய்யுளானும், பின்னர்க் காட்டப்படு பிரமாணங்களானும் வலியுறுத்தப்படும். "பொன்றி கழுமேனிப் புரிசடையம் புண்ணியனும்" எனும் பொய்கையாழ்வார் வாக்கிலுள்ள (2179) புண்ணியனு மென்சொல்லும், பரமசிவனது தூய தன்மையையே குறிக்கின்றது. இவையிற்றையெல்லா மறியாத் தாழ்வினலோ? பொல்லா வூழின் பயனலோ? சிவ தூஷணஞ் செய்ய வேண்டுமெனும் பேராசையினலோ? மற்றெதனலோ மேற்காட்டிய குருபரம்பரா ப்பிரபாவ மெழுதினவர், சிவனுக் கசுத்தங் கற்பித்தனர். இதுவொன்றே, மேற்படி பிரபாவம் நம்பிள்ளை வைபவத்தில் "சிவபஞ்சாக்ஷர முதலான க்ஷுத்ரமந்திரங்கள்" எனவும், இளையாழ்வார் வைபவத்தில் "வேதவிருத்தமான கள்ளப் பொய்ந் நூலாகிய சைவாகமத்தை எனவுந் தூஷித்தவாறு தூஷித்துள்ளன பலவென்க, அன்றியும், திருமழிசையாழ்வார் வைபவத்தில் அவ்வாழ்வாரைச் சுட்டுமிடங்களில் மரியாதைப் பன்மை பொருந்த "இவர்" எனவும் சிவபிரானைச் சுட்டுமிடங்களில் அப்பன்மையின்மையாக "அவன்" எனவும், திருமங்கையாழ்வார் வைபவத்தில் அவ்வாழ்வாரையுந் திருஞானசம்பந்தசுவாமிகளையுஞ் சுட்டுமிடங்களில் அவ்விதமே இவரெனவும், அவனெனவும், ஆழ்வாரெனவும், சம்பந்தனெனவு மெழுதிவைத்தார். இச்செய்கைதான் சாத்துவிககுண விஷ்ணுமூர்த்தியினது தன்மையை யடைந்தவரிவரென்று தம்மைக் காட்டுமென்பது அவர் கருத்துப்

போலும். "அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர் பக்க நிற்க நின்ற பண்பரூர்" என்று திருமங்கையாழ்வார் செய்யுளகத்தும் (1798) பன்மையாகவே கூறினர். அவரினும் வசனக்குழுவில் ஒருமையினுரைத்த விவரூயர்ந்தவர் கண்டீர்!

மேற்கண்டபடி சைவாகமத்தைத் தூஷித்த அவர், தமது மதபாஞ்சராத்திராகமங் குறித்துப் பதினெண் புராணங்களிலொன்றாய கூர்மபுராணத்தின் திருக்கலியாண அத்தியாயத்தில்,

"சாறுவாகங்காபாலஞ் சாற்றும் பாஞ்சராத்திரநூல்
மாறு செய்யும் வாமமுள்ள மயங்கச்செய்த நூலாகுந்
தேறுயிங் நூற்படிநின் றோரிவற்றை யுலகிற்செப்பிடுவோர்
பாறுதொடரு நரகத்தினளப் பில்காலம் படிந்திடுவார்"

எனவரூஉஞ் செய்யுட் செய்திக்கென் செய்வார்! சூதசங்கிதை ஞானோற்பத்தியில்லாமைக்கேது நவின்றவத்தியாயத்தில், "பாமரரே கொளும் பாஞ்சராத்திரம்" என வருதற்கென் செய்வார்! மேற்படி மோசகனே யுரைத்த அத்தியாயத்தில், "மறைமூலகமாகாதுலகின் மருவு பாஞ்சராத்திர நூற்றுறை போமவர்கள் யாரேனுந் தொலையாப் பாவத்துறை சென்றோர்—கறையார் மலினசித்தரே கைக்கொள்வார்க ளந்நூலை—யரைகோடிகற்பமாயிடினு மன்னூர் முத்தியடைவரிதே" என வருதற்கென் செய்வார்! வாசுதேவாதி வியூகங்கூறும் அப்பாஞ்சராத்திரம், சுருதிக்கு முரணுமென்று பிரம சூத்திரம் (உ-வது) அத்தியாயம் உ-ம் பாதம் "உத்பத்யஸம்பவாத்" எனுஞ் சூத்திரத்தின் மறுக்கப்பட்டுளதே அதற்கென் செய்வார்! சைவாகமங்கட்கு இழிவேற்றுவார் கூற்றனைத்தும் பிரமவித்யாவிலாசநிரசனமெனும் பழநூலொன்றனில் றாமசத்துவநிராகரண மெனும் அதிகாரத்துழை மேற்கோள் வாயிலாகப் பெரிதுங் கண்டிக்கப்பட்டனவாகலின் அங்குக்கண்டு தெளிக. எம்முடைய கத்தியபத்திய நூல்களானுந் தெளிக.

தெளிந்தவாறு, சிவனுர் சூத்தராயின் அவரைப் பித்தன் என நிகண்டு முதலிய நூல்கள் நிகழ்த்துதலென் கொலென்னின், தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை ௳-ம் பாட்டில் (875) "நம்மரங்கனுய—பித்தனைப் பெற்றுமந்தோ பிறவியுட் பிணங்குமாறே" என்று கூறியபடி, அரங்கநாதராகிய நாராயணரும் பித்தனுகின்ருர். வைணவர் அச் சொற் பொருட் சால்பு உணர்வாராயின், இக்கேள்வி கேட்க இடமின்றென்க.

இனி, மும்மூர்த்திகளும் வழிபடத்தக்க அந்தப் பரம சிவத்தின் ஒவ்வோரமிசமே ஒவ்வொரு மூர்த்தமாகி, அவை நித்தியமாய்ச் சிவலோகத்திலுள்ளமைபோல மேல் விளக்கப் பட்ட கேசவார்த்த மூர்த்தமுஞ் சிவலோகத்திலுள்ள தென்றறியற்பாற்றே. அது சிவாமிசமுங் கேசவாமிசமு நீக்கமறக் கூடியுள்ள நித்திய மூர்த்தமென்பதை,

"பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனு
நின்றுலகந் தாயநெடுமாலும் என்றும்
இருவரங்கத் தாற்றிரிவரேலு மொருவ
னொருவனங்கத் தென்றுமுளன்"

என்னும் பொய்கையாழ்வார் செய்யுளில், (2179) எப்போதும் அரன் அரியெனுமிருவரும் வேறு வேறு மூர்த்திகளாயிருப்பினும் ஒருவருருவிலொருவர் எக்காலு நீங்காதிருப்பரெனவாம் பொருளில் "என்றுமுளன்" என்பது இனிது விளக்கி நின்றமை காண்க. அன்றியும் (2086).

"அரனு ரணனுமமான் விடைபுள்ளூர்தி
யுரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேனேமி
யுருவமெரிகார்மேனி யொன்று"

என்னும் அவரது செய்யுள்—பெயர் அரனும் நாரணனும், வாகனம் ஏறுங் கருடப் புள்ளும், உரை செய்த நூல் வேதம், திருக்கோயில் திருக்கைலை மலையுந் திருப்பாற்கடலும், தொழில் அழிப்புங்காப்பும், கையாயுதம் சூலமுஞ் சக்கரமும், உருவம்

அக்கினி மேனியுங் கறுப்பு மேனியுமென்றும், இவையொன்றென்றும், பொருளாதலுங் காண்க.

இங்கே, கருடனெடு கூடாத எற்றையும், திருப்பாற் கடலொடு கூடாத திருக்கைலாய மலையையும் ஆழ்வார் வழுத்தினமை கொண்டு, இருவர் உருவையுந் தனித்தனி துதித்தலுமவர்க்குச் சம்மதமென்பதூஉம், இருவருடைய உருநாமம் உடைமைகளையும் வேறுபடுத்தலொண்ணதென்பதூஉம் அறியப்படுதலினுலும், இவ்விடயம்பற்றி, மேலே யாங்காட்டிய நியாயங்கள் தெள்ளிதினுறுதிப்படுதலினுலும், அரனுக்கு அரியைப்பற்றியிருக்கும்போது சுத்தமும் பற்றுதிருக்கும்போது அசுத்தமுங் கற்பிக்கு நிமித்தங் கேசவார்த்த மூர்த்தங்கூடிப் பிரியுமென்பார் கூற்று ஒரு சிறிதும் பயன்படாதொழிந்தமை கூர்த்தபுத்தியுடையார்க்கு எளிதிற் புலப்படும். இன்னுமுரிய பிரமாணங்களை வந்துழி வந்துழிக் காண்க.

(முதலாவது அதிகார முற்றிற்று)

(உ) சிவசக்தி மூர்த்தம் நான்கனில் விஷ்ணு மூர்த்தமு மொன்றேன்பது.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி ஒரு குறளாயென்றற் றெடக்கத்துப் பத்தின் கூ-வது பாட்டில் "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்துக்—கறைதங்கு வேற்றடங்கண் திருவை மார்பிற் கலந்தவன்" (1186)—என்றபடி இளஞ் சந்திரனது விளங்கிக்கொண்டிருக்கும் ஜடாமண்டல மஸ்தகனுகிய பரமசிவனை நாயகனுக வலப்புறத்தில் வைத்துக்கொண்டு பிரமதேவனுகிய பிள்ளையை உந்தியாகிய கமல யோனி வழியாகத் தந்தவர் விஷ்ணுமூர்த்தியெனவாதலினுல், அம்மூர்த்தி சிவசக்தியாயினமை ஈண்டு உணரற்பாலதே. அற்றுகலினன்றே—"கமலயோனி" மெனுமொரு பெயரையும் பிரமன் பெயரில் நிகண்டு நிகழ்த்துகின்றது.

மேற்படி பெரிய திருமொழி—பெரும்புறவென்றற் றொடக்கத்துப்பத்தின் ௩-ம் பாட்டில் (1640) "வாசவார் குழலாண்மலை மங்கை தன்—பங்கனைப் பங்கில் வைத்து கந்தான்றனை *** கண்ணமங்கையுட் கண்டுகொண் டேனே" எனவும், நம்மாழ்வார் திருவாய்மொழி—சார்வே யென்றற்றொடக்கத்துப்பத்தின் (3705) ௬-ம் பாட்டில், "மாகத்திளமதியஞ் சேருஞ் சடையானைப் பாகத்து வைத் தான்றன் பாதம் பணிந்தேனே" எனவும், வருவனவற்றுள் 'பங்கில் வைத்துகந்தான்', 'பாகத்து வைத்தான்' என்பவை களும் மேலைச் செய்யுட் பொருளையே தழுவுகின்றன. இவ் வித அருத்தத்திற்கு மேற்கோளுண்டோ வென்னின் உண்டு. என்னை? பதினெண் புராணங்களிலொன்றான இலிங்க புராணம் பூர்வகாண்டம் (உ௦-வது) அத்தியாயம் ௬௩-வது பாட்டில் "மலைமகள் கொழுநன் பீசிநீபீச மற்றியான் யோனிதன் பீசம்—உலகெலா முன்னந் தோற்றுவிப்பதற் கென்யோனியில் வைத்தனன்" எனவருமுரைகளில் சிவ பெருமான் பீசமுடைய பீசி, பிரமனாகிய நீ அவனது பீசம், ஹரியாகிய நான் யோனி, உலகெலாமுண்டாக்கு நிமித்தம் அவனது பீசத்தை எனது நாபிக்கமல யோனியில் வைத்த னன் எனவும், ஸ்காந்தத்துச் சங்கரசங்கிதை ஆசுரகாண்டம் ௬௩-வது அத்தியாயம் (அ, ௯)-ம் சுலோகங்களில் "நீ நமது நான்கு சத்திகளின் மத்தியிலான புருஷனெனுஞ் சத்தியாத லினால் முன்னமே யுன்னோடு புணர்ந்து பிரமனைப் பிறப்பித் தோம்" எனவும் பொருளாமாறு காண்க. இச்சுலோகங் களிலுள்ள செய்தியானது மோகினியாய் அமரராவார்க்கு அமுதம் பங்கிட்டுக்கொடுத்து நிற்கும் விஷ்ணு மூர்த்திக்குச் சிவபிரான்றெரிவித்தது. கோபத்தினாலாகுங் காரியத்திற்குக் காளி, யுத்தத்தினாலாகுங் காரியத்திற்குத் துர்க்கை, புருஷ ரூபத்தினாலாகுங் காரியத்திற்கு விஷ்ணு, சம்போகத்தினா லாகுங் காரியத்திற்கு உமை யெனப்படு நான்குமே அந்தச் சிவசத்தி மூர்த்தங்களௌனவறிக. மேற்றுலக்கிய ௬௩-வது அத்தியாயம் பகருமாறு ஹரிஹர புத்திரரைத் தருவதற்காகச் சிவபிரான் அந்த மோஹினியைப் புணர்ந்தது போலப்

புருஷரூப சக்தியைப் புல்குவது ஏகதேசமாமென்க. இவ்வித சத்தி நாயகனாகிய சிவபெருமானைச் சுருதி முடிவறியா வைணவர் பலவாறு இகழ்வது அதிபாதகமேயாம். மேலே பீசமென்றது சிவனாது ஊர்த்துவ சுவர்ணரேதசு ஆம்.

சங்கை நிவர்த்தி

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்று ஆழ்வார் கூறியது,—விஷ்ணுமூர்த்தியிடத்தினின்றும் அரனும் அயனுந் தோன்றலால் அதுவேயென்னின், அங்ஙனம் 'வலத்தே தந்து' எனவிருப்பின் அஃதியையும் 'வைத்து' என்றிருத்தலினால் இயையாது. என்னை? தன் காலத்துள்ளானொருவனையே அவ்வாறு வைக்கவேண்டுமாகலின். இதுவேயுமன்றி, ஹரி அயனையுண்டாக்குவார் அவ்வயன் ஹரனையுண்டாக்குவானென்னும் வைணவர் கோட்பாட்டுக்கு ஹரியினிடப்புறத்தும் வலப்புறத்தும் அவ்விருவருமுதிப்பாரென்றல் எட்டுணையும் பொருந்தாது. மேற்காட்டப்பட்ட மேற்கோட் பிரமாணங்களுக்கும் விரோதமாம். இருவர் தோன்று விவரம் பின்னர் விளக்குமிடத்து விளங்குதும்.

இன்னன நியாயங்களானும், பிரமாணங்களானும், வலப்பாகம் ஆண்பாலும் இடப்பாகம் பெண்பாலுமெனும் வழக்கானும், விவாககாலத்தில் வலப்பக்கத்தில் ஆணும் இடப்பக்கத்திற் பெண்ணுமிருக்கும் முறையானும், தாருகாவனத்திருடிகண் மதமொழிப்பான் சிவபெருமான் ஆணுருவிளங்கச் சென்ற காலத்து விஷ்ணுமூர்த்தி பெண்ணுருக்கொண்டு சென்றமையானும், இருவருங்கூடி ஹரிஹரபுத்திரரைத் தந்தமையானும் விஷ்ணு மூர்த்தியின் உந்தியிலுதித்த பிரமதேவர் சிவபெருமானைப் போலச் சுவர்ணநிறமுடையராய் ஐம்முகத்துடன் றோன்றினமையானும், புருடர்கள் இடக்கையைக் கீழ் வைத்தும் பெண்கள் வலக்கையைக் கீழ் வைத்துந் துயில வேண்டுமென்ற முறைப்படி, விஷ்ணுமூர்த்தியும் வலக்கையைக் கீழ் வைத்துச்

சயனிக்கின்றனரென்று "திருவரங் கரிணையிலா வொரு புயங்கவணையிலே திகழ் வலக்கை கீழதாமுகிழ்மலர்க்கண் வளர்வதோர் கருணை" எனப் பிள்ளைப் பெருமாளை யங்கார் கூறுதலினாலும், திருமழிசையாழ்வார் இயற்பா (2446) கூடு-ம் பாட்டில் "மாதாயமாலவனை மாத வனை" என்பதனுள் 'மாதாய' என்பது விஷ்ணு மூர்த்தியி னது பெண் தன்மையைக் குறிக்கின்றமையானும், திரு நாவுக்கரசு சுவாமிகள் தேவாரத் திருமுறை "அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே" என முழங்குகின்றமை யானும் விஷ்ணுமூர்த்தி சிவசத்தியுளொன்றான மாயாசத்தி யென்பது நனிதுணியப்படுதலினால் அவ்வாறன் றென்பார் மாற்றமெல்லாம் பொருந்தாவென மறுக்க.

இங்கே, கூரேசவிஜயம் மோஹினி வடிவக்கட்சி கஎ-ம் பாட்டில் "அங்கேயரனடி மீமிசையையன் பிறவி யதாம்" என வருமாறு சிவனார் அமுதம் பங்கிட்ட மோஹினியைப் புணரவில்லை. அவரது விந்து அவரது பாதத் தில் வீழ்ந்தது. அதினின்றுஞ் சாஸ்தாவெனும் ஐயனார் பிறந்தாரெனக் கோடுமென்னின், அந்தச் சாஸ்தா பெயர் "ஹரிஹரபுத்திரர்" எனவிராது "ஹரபாத புத்திரர்" எனவிருத்தல் வேண்டும். அப்படி இல்லாமையால் அவ்வாறு கொள்ளொண்ணாதென்க. இஃதி ன்யாவிடி னும், ஹரிஹரபுத்திரர் எனக்கொண்டு அதற்கியையச் சிவனாரது விந்துவை மோஹினி தன் கரத்திற்றாங்கிடலும் அச்சாஸ்தா பிறந்தாரெனக் கோடலாம் பிறவென்னின், விந்துவைக் கரத்திற்றாங்கினதெனும் அவ்விடயமுந் தாருகா வனஞ் சென்ற மோஹினிக்குச் சிவனார்மீது மோஹமுண் டானவாறே இம்மோஹினிக்கு முண்டானதையே காட்டு மென்க. முன்மோஹமாகிய 'மால்' என்பதே விஷ்ணுமூர்த் திக்கு அஞ்ஞான்றொரு பெயரா யமைந்ததென்க. இது, "முன்பனதுருவை யெல்லாமுகனுறு விழியான் மாந்தித்— துன்புறு மான்மீக் கொள்ளத் துண்ணென வரியுஞ் சோர்ந்து—மன்புடையருளால் வந்தான் மற்றவன்றனக்கு

மாலோனென்பதோர் பெயருமஞ்ஞான் றெய்தியபோலு மன்றோ" எனுங் கந்தபுராணத் திருவிருத்தத்திற் பெறுதும். அம்மாலான மோஹினியுஞ் சிவனாருஞ் சாலவிருக்ஷத் தடியிற் புணரும்போது அவர்களுடம்பினின்று முண்டான வியர்வையே கண்டகி நதி யானதும், அதனிருமருங்குஞ் சக்கிராகாரமான தாரைகள் விளங்க வச்சிரதந்தி யெனுங் கீடங்கள் நாளுமுண்டாகின்ற மகிமையும், சிவதாதுவாகிய பொன்னோடு உற்பத்தியாகுமவை சாலவிருக்ஷம் சம்பந்தவிடம் பற்றிச் சாலக்கிராம மெனும் பெயரோடு விஷ்ணு பக்தர்கள் விஷ்ணுஸ்வரூபமாகப் பூஜிக்க விளங்குதலும் அப்புணர்க்கையை ஆசங்கையறக் காட்டுதற்கு உரியன வென்பது முணர்க. கூரேச விஜய விருத்தாந்தம் பின்னர்ப் பிரகாசப் படுத்திக் காட்டுமிடத்துக் காட்டுதும். விஷ்ணுவானவரைச் சிவமாயா சக்தியென்பது 'புருஷோத்தமன்' எனுமவர் நாமத்திற்கு மாறுகாதோவெனில் பிரகிருத ரூபிணியெனும் விஷ்ணு மூர்த்தியாகிய தனக்கு, " தமேகம் புருஷம் ருத்ரம்" "சிவ: புருஷ ஈசானோ" "தத்புருஷாய வித்மஹே" எனுஞ் சுருதிவாக்கியங்களின்படி புருஷனுயுள்ள சிவனார்க்கு உத்தமமாக நடக்கும் உத்தமனெனவும், பிரமனாதி தேவர்க்குட் சிறந்தவனெனவும், பொருள்கொள்ளு மாற்றானே மாறுகாதென்க. மயித்திரேயருக்குப் பராசரர் சொன்ன விஷ்ணுபுராணம் க-வது அமிசம் உ-வது அத்தியாயத்தில் "பிரதான சத்தவாச்சியமான மூலப்பிரகிருதியொன்றுமே, சமஷ்டி புருஷ ரூபமாக விருந்தது" "ஸ்ரீ விஷ்ணுவினுடைய சரீரமான பிரகிருதியானது மகத்தத்துவத்தை மூடிக்கொண்டது" எனவருதலும் இதனை யுறுதிப் படுத்தும். இப்படி மூலப் பிரகிருதியெனும் மாயா ரூபிணியாய், விஷ்ணுமூர்த்தியிருத்தலினாலன்றோ, அவரை யொரு ஆனை, ஆபத்துக் காலத்தில் 'ஆதிமூலம்' எனவுங் கூப்பிடலாயிற்று. இங்கே மேலே போந்த பிரதானமெனும் மூலப் பிரகிருதியே ஆதிமூலமென்க.

(இரண்டாவது அதிகார முற்றிற்று)

——

(௩) கேசவார்த்த மூர்த்தியைத் துதித்த ஆழ்வார் அர்த்தநாரீசுவர மூர்த்தி தரிசனத்தையும் விரும்பினு ரேன்பது.

நம்மாழ்வார் திருவாய்மொழி - பாமரு என்றற் ளுடக் கத்துப் பத்தின் எ-வது பாட்டு, (3398)

" என்றிருமார்பன் றன்னை யென்மலைமகள் கூறன் றன்னை
யென்றுமென்னுமகளை யகம்பாற் கொண்ட நான்முகனை
நின்ற சசிபதியை நிலங்கீண் டெயின் மூன்றெரித்து
வென்று புலன்றுறந்த விசும்பாளியைக் காணேனோ."

இதனில் 'என் மலைமகள் கூறன் றன்னை' 'எயின் மூன் றெரித்து வென்று' எனுஞ் சொற்கள் மலைமகளாகிய ஸ்ரீ பார்வதி தேவியாரை அர்த்த பாகமாக இடப்புறத்தில் வைத்துள்ள பரமசிவனை எனவும், வெள்ளிமதில் பொன் மதிள் இரும்பு மதிளென்பவற்ருற் சூழப்பட்ட முப்புரங்களை யெரியும்படி செய்து வென்றவனை எனவும் பொருடரு மாற்ருன் அர்த்தநாரீசுவரராகிய பரமசிவனைக் "காணேனோ" என்று தரிசனம் விரும்பினமை காண்க. இது துதியுமாம்.

" கூற்ளுருபான் மங்கையான் * * * * காப்பு" (2155)

என்று பொய்கையாழ்வாரும் புகன்ருர். "வாம பார்சுவே உமாதேவி" என்று யஜுர்வேதத்து உருத்திர இருதயோப நிஷத்திற் சொல்லப்பட்ட இந்த அர்த்தநாரீசுவர மூர்த்தம் ஸ்காந்தத்துச் சங்கர சங்கிதையிற் சொல்லப்படுகிற உ௫- மாஹேசுவர மூர்த்தங்களில் ௫-வது மூர்த்தமாகும். இஃது ஆண் பெண் ணென்னு மான்மாக்க ளொன்றுபட்டுப் பிரியத்தோடும் வாழ்வதற்காக வேறுபட்ட மூர்த்தமாம். விஷ்ணு மூர்த்தியோ டொன்றுபட்டிராத இம் மூர்த்தியை ஆழ்வார் விரும்பித் துதித்தமையால் விஷ்ணுவைப் பற்றி யிராதபோது பிரமருத்திரர்கள் பகவத்ஸ்தோத்திராதிகளுக்கு யோக்கியரா யிரார்களென்ற வைணவருரை வசையுரை யாயிற்றென்க.

சங்கை நிவர்த்தி

திருவாய்மொழி—"புகழுநல்" என்றெழும்பத்தில் (2931) "குன்றங்களனைத்து மென்கோ-மேவுசீர் மாரியென்கோ விளங்கு தாரகைகளென்கோ" எனவும் ஆழ்வார் கூறும் வழி இங்கே விஷ்ணு விபூதியிற் சிவனையும் வைத்து வழுத்தினு ரென்னின் யாவையும் தெய்வ விபூதியில் வைத்துச் சொல்வது தெய்வத்தைப் புகழ்வதேயாம். மூர்த்தி முறையில் ஒரு மூர்த்தியைச் சுட்டி அவனைக் காணேனே வென்பது அவ் விபூதிப் புகழிற் சேராது. அந்த எ-வது பாட்டில் அவ் விதப் பொருள் கோடற்கு விவரமுமில்லை. "குன்றங்க ளனைத்து மென்கோ" என்ற ஆழ்வார் அங்ஙனங் குன்றங்க ளனைத்தையுங் காணேனே, (மழை) மாரியைக் காணேனே, (நக்ஷத்திரம்) தாரகைகளைக் காணேனே வெனும் பொரு டோன்றக் கூறுராயினுர். அதனுனும், அவ்வாறவர் யாண் டுங் கூறுமையானும் அது வழக்காகாது.

இங்கே, ஆழ்வாருக்கு விஷ்ணுவெனுந் தெய்வமொன் றிருப்ப அவர் வேறு தெய்வமும் விரும்புவாரோ வென்னின், அவ் விஷ்ணு மூர்த்திக்கு வேருயுள்ள அரன் அயனுதி மூர்த்திகளால் தங் கொள்கைக்கேதேனும் இடையூறுண் டாகுமோ வென்றஞ்சி யப்படி விரும்புவரென்க. எல்லா முணர்ந்த ஆழ்வாருக்கு அது கருத்தாகுமோ வென்னின், திருவாய்மொழி "வளவே"ழென் றெழும்பத்தின் எ-ல் (2725) "அடியேன் சிறிய ஞானத்தன்" "திருமாலை அடியேன் காண்பா னலற்றுவன்" (2725) எனவும், "சீலமில்" என்றெழும்பத்தின் ச-ல் (3076) "நாணமிலாச் சிறுதகையேன்" எனவும் கூ-ல் "மடவன் னெஞ்சங் காதல் கூரவல் வினையே னயர்ப்பாய்த் தடவுகின்றேன்" எனவும், (3081) ஆழ்வார் தம்மைச் சொல்லிக்கொண்டமை யால் அவரெல்லா முணரா ராகின்ருராகலின் அவர்க்கது கருத்தாகுமென்க. அஃதாமாயின், அரன் அயனுதியர் தாழ்ந்தவரெனும் பொருள்படத் திருவாய்மொழி— "திண்ண"னென் றெழும்பத்தின் கo-ல் (2805) "வெள் ளேற னுன்முக னிந்திரன் வானவர் - புள்ளூர்தி கழல்

பணிந்தேத்துவரே" என்று ஆழ்வார் கூறுவரோ வென்னின், அவர் பாடலிற் சிற்சில விடங்களிற் சில சுவடித் துணிபுகொண்டு அவ்வாறு கூறுவரென்க. ஐயத்தினுலும் அச்சத்தினுலும் முற்சொற்றபடி சிற்சில விடங்களில் அம் மூர்த்திகளைத் துதித்து விரும்புவரென்க. விரும்புவரென்னின், திருவாசிரியத்தில், (2584) "பெருமாமாயனை யல்லது-ஒருமா தெய்வ மற்றுடையமோ யாமே" என நம்மாழ்வார் நவின்றவா றென்னை யெனின், திருவாய்மொழி முடியானே யென்றெழும்பத்தின் (2975) உ-ல் "குறளாகிய-வஞ்சகனே யென்னு மெப்போது மென் வாசகமே" என்ற அவர் அவ்வளவி னில்லாமற் பின்பு எவ்வளவு வாசகமோ சொல் லினமையானும், சன்மமென் றெழும்பத்தின் க-ல் (2996) "நானேர் குறைவிலேனே" எனவும், (2997) உ-ல் "யானேர் முட்டிலேனே" எனவுங் கூறியவற்றிற்கு மாருகப் பின்பு "நாணமிலாச் சிறுதகையேன்" அயர்ப்பாய்த் தடவுகின்றேன், "காணேனே" என்று குறைவு முட்டுக் கூறிக் கொள்கின்றமையானும் இவற்றின் பின்னே வார்கடா என்றெழும்பத்தின் அ-ல் (3487) "புகழுமா றறியேன்" என்கின்றமையானும், இப்பெற்றி பல செய்யுளகத்துங் காணப்படுகின்றமையானும் அஃதொரு வரம்பு பற்றிச் சொன்ன கட்டுரையன்றென்க. நிற்க, இங்கே அரனுதியரை விஷ்ணுவின் விபூதியில் வைத்து ஆழ்வார் துதித்தாரெனுமிடத்தும் விஷ்ணுவைப் பற்றியிராதபோது பிரம ருத்திராதிகள் பகவத் ஸ்தோத்திராதிகளுக்கு யோக்கியராயிராரென்னும் வைணவர் வாசகம் "சிவனுந் தேவனு" என்ற தீய கிறிஸ்தவர் வாசகத்தோடொன்றி மொழிதல் தப்பாதன்ருே? இது கிடக்க.

மேலே காட்டப்பட்ட எ-வது பாட்டில் (3398) "நின்ற சசிபதியை" 'விசும்பாளியை' என்றெழுந்த வாக்கியங்கள் இந்திரனை விளக்கும். இத்தேவனையும் வழுத்திய ஆழ்வார் விஷ்ணுவின் வியூகமெனப்படும் வாசுதேவ - சங்கர்ஷண - பிரத்தியும்ந - அநிருத்த மென்பவற்றை நிரலே அப்பெயர் கொண்டு யாண்டும் வழுத்தாமை

யாலும், அவ்விதமே மற்றை யாழ்வாரும் வழுத்தாமை யாலும் அவையிற்றை வெளியிடும் பாஞ்சராத்திராகமம் அவர்க் குடம்பாடன்றென்பதும் ஈண்டுணரற் பாலதே.

(மூன்றாவது அதிகார முற்றிற்று)

நான்காவது அதிகாரம்

(ச) அர்த்தநாரீசுவர தரிசனம் விரும்பிய ஆழ்வார் மூர்த்தித் திரயமேனும் திரிமூர்த்தியையுந் துதித்தா ரேன்பது.

நம்மாழ்வார் திருவாய்மொழி முனியே யென்றற் றொடக்கத்துப் பத்தின் க-வது செய்யுளில், (3766)

" முனியே நான்முகனே முக்கண்ணப்பாவென்
பொல்லாக் கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே
யென்கள்வா * * * * ஒன்று மாயஞ்
செய்யே லென்னையே "

என்றது 'நான்முகனே' 'முக்கண்ணப்பா' 'கருமாணிக்கமே' என்பவற்றால் முறையே அயன் அரன் அரி யெனு மூவுருவையும் விளக்கிச் செய்யேல் எனும் ஒருமையால் அவையொரு மூர்த்தியெனும் பொருளுந் தந்தது.

மேற்படி பாமரு என்றற் றொடக்கத்துப் பத்தில், (3394)

" காத்த வெங்கூத்தாவோ மலையேந்திக் கன்மாரிதன்னை
பூத்தண்டுழாய் முடியாய் புனைகொன்றை யஞ்சடையாய்
வாய்த்தவென் னான்முகனே வந்தென் னாருயிர் நீயானால் "

என வருவதும், 'துழாய் முடியாய்' 'கொன்றையஞ் சடையாய்' 'நான்முகனே' என்பவற்றால் முறையே அரி அரன் அயனெனு மூவுருவையும் விளக்கி 'நீயானால்' எனும் ஒருமையால் அப் பொருளையே பயந்தது.

மேற்படி வார்கடா வென்றற் றொடக்கத்துப் பத்தில், (3489) " அமர்ந்ததண் பழனத் திருச்செங்குன்றூரிற் றிருச் சிற்றாற்றங் கரையானை-யமர்ந்த மாயோனை முக்கணம்மானை

நான்முகனை யமர்ந்தேனே" என வருவதும் அப்பொருளையே பயந்தது. "த்ரிவக்த்ரம் திரிகுணம் ஸ்தாநம்" என்று யஜுர் வேதத் தேஜோபிந்தூபநிஷத்திற் சொல்லப்பட்ட இத்த மூர்த்தித்திரயம் வலப்புறத்திற் பிரமனையும் இடப்புறத்தில் விஷ்ணுவையுங் கொண்டு நடுவில் நான்கு தோளும் மூன்று விழியும் விளங்கவுள்ளது. ஆன்மாக்களுக்குச் சாக்கிர சொப்பன சுழுத்தியென்னு மூன்றவஸ்தைகளை யுண்டாக்கவும் ஒழிக்கவுமேற்பட்ட இது (உடு) மஹேசுவர மூர்த்தங்களில் அ-வது மூர்த்தமாம். இம்மூர்த்தி விருத்தாந்தத்தை:—

" த்ரிமூர்த்திமூர்த்திமாதத்தேபகவாநீச்வரோதய:
ஆத்மாநோவிததோமூர்த்தித்ரயம்விந்தந்த்யயத்நச: || "

எனும் ஸ்காந்த வசனத்தானுமறிக. இந்நியாய முணர்ந்தே இம் மூர்த்தியைத் துதித்து நின்ற ஆழ்வார்.—

சங்கை நிவர்த்தி

திருவாய்மொழி—"பத்துடை"யென் றெழும்பத்தில், (2703)

" ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுணின்ற
நன்றெழினாரண னான்முக னரனென்னு மிவரை
யொன்ற நும்மனத்து வைத்துள்ளி நும்மிரு பசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே "

என்றெழுந்தவிதனை எ-வது செய்யுளாக வுரைத்தார். இதில் "இருபசையறுத்து" என்றுள்ள சொற்கு நான்முகன் அரனென்னு மிருவரையு நீக்கியென்று ஒரு வைணவர் அர்த்தஞ் செய்தாரென அறிகின்றேம். அந்த அர்த்த முண்மையாயின் மேலே காட்டப்பட்ட செய்யுளுரைகட்குக் கதியென்னையோ! அன்றியும் இதன் முந்துற்ற அதிகாரத்துழை "நின்ற சசிபதியை" "விசும்பாளியைக் காணேனே" என்று இந்திரனைக் குறித்தெழுந்த ஆழ்வாருரைகட்கு வழியென்னையோ !! அன்றியும் காட்டிய எ-வது செய்யுளை முன்னர்க் கொண்டுள்ள திருவாய்மொழியின் கடைப்பதிகத்து முதற் செய்யுளிலன்றோ " முனியே நான்முகனே முக்கண்

ணப்பா" எனும் விளியுரைகளெழுந்தன. அன்றியும் அக் கடைப் பதிகத்துக் கடைக்கவியி னன்றே, (3776)

" அவாவறச் சூழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவா விலந்தாதிகளா லிவையாயிர முமுடிந்த "

எனும் முடிபுரைகள் பிறந்தன. இவற்றில் நான்முகனை யும் அரனையு நீக்கி நிகழ்த்தியதுண்டா ? இல்லையே. இன் னன ஏதுக்களால் அவ்வைணவர் அர்த்தம் அநர்த்தமா மென்க. அற்றேல், 'இருபசையறுத்து' என்றற்குரிய பொருள்தானென்னை யெனின், உட்பற்று புறப்பற்றெனும் இருவகைப் பற்றையும் ஒழித்தென்பதே பொருளென்க. அரி அயன் அரனென்னு மூவரையுந் தியானித்தாற்றான் அவ் விருபற்று மறுமென் றுணர்ந்துரைத்த ஆழ்வார் தாம் உரைத்த படி முடிவுபெறுங்காறுஞ் சாதித்தா ரென்பதை "அவா வறச் சூழரியை யயனை யரனை" என்றெழும் அவ்வீற்றுப் பாட்டு இனிது காட்டுதலால் யாங்கூறும் பொருளையே அவை பயக்குமென்றல் பசுமரத்தாணியா மென்க. இவ் வுண்மைப் பொருள் சிவத் துவேஷ புத்தியுடைய வைணவ ரெவர்க்கும் நஞ்சுபோலும். அவா, பசை, பற்று என் பவை யொருபொருட் கிளவிகள். அந்த எ-வது செய்பு ளில் உள்ளி என்றது தியானித்தெனும் பொருட்டு. அது 'இவரை யொன்ற நும்மனத்து வைத்துள்ளி' என்பத ஞனே நனியுறுதிப்படும். ஈண்டு, மூவரையுந் துதித்துய்ய வுடம்பட்ட ஆழ்வார் பத்துடை யெனுந் தொடக்கத்துப் பத்தில் (2701) "புறநெறிகளைகட் - டுணக்குமின்" என்று ஏவியதென்னையெனின், சாக்கிய சமணாதிபுறச் சமயங்களை நோக்கியபடி யேயென ரென்க. இவ்வாறு கொளாவிடில், ஆழ்வாரே முன்னுக்குப்பின் முரணிக் கூறுகின்றாரென்பது ஏற்படும். உய்த்துணர்க.

ஈண்டொன்று உணரற்பாலது : என்னை ? திவ்விய சூரி தலைவரெனுஞ் சேனை முதலியாரது அமிசமாகப் பெரிய வண்குருகூரில் தொண்டக் குலத்துக் காரியாருக்கும் அவர் மனைவி உடைய நங்கையார்க்கும் புத்திரனாகப் பிறந்தவ

ரெனப்படுஞ் சடகோபராகிய நம்மாழ்வார் தம் பாடல்களில் ஏதேது கூறியிருப்பினும் அவர் கூறிய முடிவான பதிகத்து முடிவான செய்யுளில் "அரியை யயனை யரனை" என்றெழுந்த தெய்வ மொழிகளில் 'அரன்' என்பதொன்றே முடிவினிற்கின்றது. அது "சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்" எனுஞ் சூத்திரப்படி அரியயனென்னும் இருமொழிக்கும் பின்னே நிறுத்தப்பட்டதாயிற்று.

அதன் பின்னுள்ள சொற்களில் தெய்வமொழியாதொன்றுமில்லாமையானும் இத்திற முடிவு பெற்றுள்ள இதனையறிந்தோர் உயர்ந்தோரெனும் பொருளுற "இப்பத்தறிந்தா ருயர்ந்தே" எனுஞ் சொற்களே யிறுதியி னிற்கின்றமையானும் யாம் துலக்கியதே துணி பொருளாயிற்று. ஈங்கே அரியினுந் தாழ்ந்த அயனை அவ்வரிக்குப் பின்னே ஆழ்வார் நிறுத்தியதும் அச்சூத்திரப்படி சிறப்புடைப் பொருளென்பது கொண்டு தானே வென்னின், ஒருவழியில் முற்படக் கிளத்து பொருளுஞ் சிறப்புடைத்தென்பது கொண்டும் அதனினும் பிற்படக் கிளத்து பொருள் சிறப்புடைத் தென்பது கொண்டும் இதுவே முத்தி நிலைக்குங் கோடற்பாலதென்பது கொண்டும் அரிக்கும் அரனுக்குமிடையில் அவரிற்றாழ்ந்த அயனைவைத்தது பொருத்தமாமென்க. இனி, ஆழ்வார் முடிவுக்கு நாராயண நாம மில்லாமையாலோ அரனெனுஞ் சொல்லைக் கூறிக் கொண்டாரென்னின், அந் நாமத்தால் அவர் அவாவற்று வீடுபெற்றமை அம்முற்றுச் செய்யுளிற் கூறப்படவில்லை யாகலின் அது கேள்வியாகா தென மறுக்க. இனி, அவ்வாழ்வாருக்கு அந்நாமமிருப்பினும் இல்லாவிடினும் அவர் எம் மூர்த்தியை யெவ்வாறு நிறுத்திக் கூறினும் யாதோரான்மா அந்திய காலத்தில் எச்சொல்லைச் சொல்லி யெதனை நினையுமோ அச்சொல்லுக்குரிய அதனை அஃதடையுமெனுஞ் சுருதியாதி தொன்னூல்களின் துணிபின்படி அரனென்னுந் தெய்வமொழியானது அவர் வாக்கினின்றும் முடிபாக வெழுந்ததனாலே அதன் மகிமையே அவர் விரும்பிய வைகுண்டத்தில் அவரை யுய்த்திருக்கும். அதிற் சந்தேக

மில்லே யென்பதூஉம், அவரை அரனடியவராகிய பெரியா ரென்னலா மென்பதூஉம் விவேகிகளுணரத் தக்கனவே. தீத்தொழிற் சிந்தையனுய், பிடுங்கு – அடி – கொல் எனும் அருத்தத்தைப் பயக்கும் ஆகர - பிரகர - சங்கர எனுமொழி களைத் தன்மகனுக்கு அந்தியகாலத்தில் ஓதியிறந்த ஒரு வேடனுக்கும் அச் சொற்களிலுள்ள 'அர'சப்த மகிமை யானது அவனை (இயமலோகஞ் செல்லாது காத்துக்) கைலாய மடையும்படி செய்த வரலாற்றினை ஸ்காந்த உப தேச காண்டத்துச் சிவநாம மான்மியம் அறிவிக்கும் ஆற் ருனே அந்த அரசப்த மகிமையும் அறியலாவதே. நிற்க.

முன்னர் விளக்கிய மூர்த்தித்திரயத்தில் நடுவேயுள்ள அரனுர்க்கு இடப்புறத்தில் நாராயணரும் வலப்புறத்திற் பிரமனுரு மிருத்தலின் நாராயணரைப்பிரமனுர் பற்றியிராதவ ராயினுர். இவரை 'நான்முகனே' என ஆழ்வார் துதித் தமையால், பிரமருத்திரர்கள் நாராயணனைப்பற்றியிராத போது அவர்கள் பகவத் ஸ்தோத்திராதிகளுக்கு யோக்கிய ராயிரார்களென்னும் வைணவர் வார்த்தை இங்குங் கனம் பெற்றிலது. பிரமருத்திரர்கட்கு வேருக நாராயணரை நவிலும் அவ்வார்த்தை நாராயணர் பூரணரல்லரென்பதை யுணர்த்துவதுமாம்.

(நான்காவது அதிகார முற்றிற்று)

(ரு) மூர்த்தித் திரயத்தைத் துதித்த ஆழ்வார் மும்மூர்த்திகளி லொருவரான உருத்திரமூர்த்தியையுந் துதித்தா ரென்பது.

நம்மாழ்வார் திருவாய்மொழி - "கங்குலு"மெனுந் தொடக்கத்துப் பத்தின் - கo-வது பாட்டில், (3357)

"முடிவிடனக் கொன்றறிகிலே னென்னும், மூவுலகாளியே
யென்னுங் - கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னு
நான்முகக் கடவுளே யென்னும் வடிவுடை வானோர்
தலைவனே யென்னும் வண்டிருவரங்கனே யென்னும்"

என்றெழுந்த வாக்கியங்கள் திருவரங்கத்துப் பெருமாள்

மீது மோஹங் கொண்டிருந்த மகன் செய்கைகளைத் தாயானவள் அப்பெருமாளுக் குரைப்பதாக ஆழ்வாராற் சொல்லப்பட்டனவாம். சொல்லியவற்றுள் 'கடிகமழ் கொன்றைச் சடையானே' என்றது நறுமணங் கமழுங் கொன்றைக்காய் போல் நீண்ட சடையுடையானே யென்று உருத்திர மூர்த்தியைத் துதித்தல் காட்டிற்று. சிவபெருமானுக்குச் சென்னியிற் சடையுள்ளதுபோல உருத்திர மூர்த்திக்கும் அஃதுண்டென்பதை ஸ்காந்தத்து உபதேச காண்டம் எச-ம் அத்தியாயம் ருக-ம் சுலோகத்தில் "சிவனுக்குரிய நாமம் சின்னம் செயலென்பன உருத்திரமூர்த்திக்கும் ஏற்பட்டிருக்கின்றன" எனவரு முரைகளானும் அறிக.

சங்கை நிவர்த்தி

கொன்றைச்சடையனே யென்பதுள்ள இச்செய்யுளில் 'மூவுலகாளியே' என்பதும், 'நான்முகக் கடவுளே' என்பதுங் காணப்படுதலினால் முற்போந்த ச-வது அதிகாரத்தில் விளக்குற்ற "மூர்த்தித்திரயத்தை" யே இங்குந் துதித்தாரென்றலாகாதோ வென்னின், அவ்வதிகாரத்திற் காட்டப்பட்ட செய்யுள்களில் ஆழ்வார், மூவுருவையும் விளக்கி அவையொரு மூர்த்தியெனற்கு, ஒருமைச் சொற்களுந் தந்தமைபோல இச்செய்யுளில் தாராமையாலும், நான்முகக் கடவுட்குப் பின்னே 'வானோர் தலைவனே' என இந்திரனை விளித்துத் துதித்தமையாலும், அம்மூவுருவரோடு இந்த இந்திரனுஞ் சேர்ந்துள்ள ஒரு மூர்த்தியில்லாமையாலும், ஆதலால் நால்வரையுந் தனித்தனி துதித்ததென்பதே யேற்படுகின்றமையாலும், அவ்வாறாகா தென்க. இவ்விஷயம் முதலதிகாரத்துஞ் சொல்ல நேரிட்டுச் சொல்லினேம். காட்டிய செய்யுளில், 'திருவரங்கனே' என்பது மூவுருவும் ஒருவனே யென்னு மொருமையைக் காட்டாதோ வென்னின், அம்மொழிக்கு முன்னே 'வானோர் தலைவனே' என்னும் இந்திரசப்த மிருத்தலினாலும், அப்பதிகச் செய்யுடோறும் அத்திருவரங்க னெனுஞ் சொல்வருதலினாலும் அஃதப்படிக் காட்டா தென்க. இங்கே விஷ்ணுமூர்த்தியை நீக்கிப் பிரமருத்திரேந்திரரை ஆழ்வார் யாண்டுந் துதித்தது காணப்பட

வில்லையே அதனால் அவரையவர் தனித்தனி துதித்தாரெனல் ஏற்படுங்கொல்லோ வெனின், மூர்த்தியொழுங்கில் ஒவ்வொருவரையும் விளித்துத் துதித்தல் அவ்வாறு துதித்ததேயாம். துதிக்கும் ஆழ்வார் வைகுண்டாதிக்யமே பெற வேண்டுமெனுஞ் சித்தமுடையராதலின், அதற்குரிய நாராயணஸ்துதியில் மற்றை மூர்த்திகளையும் அவர் ஆங்காங்குத் துதித்துவருவதற்குக் காரணம் ஐயமும் அச்சமுமாமென்று ௩-வது அதிகாரத்துழைச் சால விளக்கினேம். ஆழ்வார்க்குள்ள ஐயத்தைத் திருவாய்மொழி - பத்துடை யெனத் தொடங்கும் பத்தில் (2702) "உணர்ந்துணர்ந் துணரிலு மிறைநிலை யுணர்வரிது" என்பதூஉம் இனிது புலப்படுத்தும். நுனித்தமதி கொண்டுணர்க.

உணர்வதில், இங்கே மூவுலகாளியே யென்று விஷ்ணுமூர்த்தியை முற்படக் கிளத்துதலால் அம்மூர்த்தி மற்றை மூவரினு முயர்ந்தவராவர் கொல்லோ வென்னின், அவ்வாழ்வார் விஷ்ணுமூர்த்திக்கு முன்னே அரனையும் அயனையுங் கிளத்தினமைக்கு "நான்முகனே முக்கண்ணப்பா* * * தாமரைக்கட் கருமாணிக்கமே" என்றதூஉம், விஷ்ணு பிரமர்கட்கு முன்னே அரனைக் கிளத்தினமைக்கு "ஏறுளு மிறையோனு நான்முகனுந் திருமகளுங் - கூறுளுந் தனியுடம்பன்" (3084) என்றதூஉம், நான்முகனுக்கு முன்னே அரனையும் அரியையுங் கிளத்தினமைக்கு மேலே காட்டிய ௧0-வது பாட்டோடு "அமர்ந்தமாயோனை முக்கணம்மானை நான்முகனை" என்றதூஉம் 'அரனாரணன்' என்று பொய்கையாழ்வார் புகன்றதூஉம், பிறவுங் காட்டாக நிற்றலினல் அவ்வாருதற் கிடனில்லை. ஆனல் மூவருக்கும் பின்னே இந்திரனைக் கூறிவரூஉம் வழக்கு மலிந்திருத்தலால் அம்மூர்த்தி அவரிற்றாழ்ந்த மூர்த்தியென்பது அவ்வாழ்வார் கருத்தென்றல் புலப்படுகின்றது.

இனி, ஆழ்வார் அந்நான்கு மூர்த்திகளையும் விஷ்ணுவாக வெண்ணித் துதித்தாரென்று கூறினலோ வென்னின், அப்படிக் கூறுதலாலும் பிரமருத்திரர்கள் நாராயணரைப் பற்றியிராதபோது அவர்கள் பகவத் ஸ்தோத்திராதிகளுக்கு

யோக்கியரா யிரார்களென்னும் வைணவர் வார்த்தை மணம் பெருதொழிதல் வாய்மையன்றே.

(ஐந்தாவது அதிகார முற்றிற்று)

ஆறுவது அதிகாரம்

(சு) விஷ்ணுமூர்த்தியும் அவரடியவரும் சிவசின்ன தாரணர்க ளென்பது

நம்மாழ்வார் "திருவாய்மொழி வீற்றிருந்தே" ழென்றற் றொடக்கத்துப் பத்தின் சு-வது செய்யுளில்,

" கரியமேனி மிசைவெளியநீறு சிறிதேயிடும்
பெரியகோ லத்தடங் கண்ணன் " (3056)

என வரூஉம் இதில், வெள்ளிய திருநீற்றை யணியுந் திருமேனியை யுடையவர் விஷ்ணுமூர்த்தி யென்பது வெளியாயிற்று.

பெரியாழ்வார் திருமொழி காப்பிடற் பதிகத்தில், "காப்பிடவாராய்" "காப்பிடவாராய்" என்று சொல்லிக் கொண்டு வருவனவும் அசோதாதேவி கண்ணபிரானுக்குக் காப்பெனுந் திருநீறணிந்தமையை விளக்குவனவாயின.

நம்மாழ்வார் திருவாய்மொழி—"பயிலுமென்றற்" றொடக்கத்துப்பத்தின் ச-வது செய்யுளில், (2966)

" உடையார்ந்த வாடையன் கண்டிகையனுடைய
நாணிலன் * * * * நடையாவுடைத் திருநாரணன் "

எனவரூஉம் இதில், "கண்டிகையன்" என்பது கண்டிகை யெனப்படும் உருத்திராக்க மாலையைத் தரித்துக்கொண்ட நாராயணமூர்த்தி யென்பதை விளக்கிற்று.

சங்கை நிவர்த்தி

'நீறு' என்றதற்கு அஞ்சனச்சூரணம், கருப்பூரப்பொடி திருமண் என இக்காலத்து வைணவரிற் சிலர் அருத்தம்

பண்ணத் துணிகின்றனர். அவற்றென்றும் பொருந்தாது. ஏனெனின் அவற்றிற்கு நீறு என்று பெயர் வழக்கிலாவது செய்யுள் வழக்கிலாவது வழங்கப்படாமை யாலும், வடமொழிப்படி பஸ்மித்தெடுத்தது பஸ்மம், தென்மொழிப்படி நீற்றியெடுத்தது 'நீறு' எனுமிரண்டும் அந்நீற்றிற் கமையுமேயன்றி அவ்வஞ்சனச் சூரணதிகளுக்கு அமையாமையாலும் ஈண்டு 'நீறு' என்பதற்கு அங்கத்திற் பூசப்படு பொருளெனும் அர்த்தந் தரத்தக்க "அங்கராகம்" என்று வைணவரெழுதிய ஆறாயிரப்படியிலும் பன்னீராயிரப்படியிலு மிருத்தற்குப் "பொங்கராவெயின் மணிப்பூணும் பேணுநீற்றங்கரா கமுமுவந்தணியு மேனியாய்" எனும் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் பதின்மூன்றும் போர்ச் சருக்கச் செய்யுட் கூற்றுற் பரமசிவனைத் துதித்த கிருஷ்ணமூர்த்தி வாக்கினுலேயே திருநீறெனும் பொருளே வெளிப்படுகின்றமையாலுமென்க. நீற்று அங்கராகமென்னும் தொடர் நீறுகிய அங்கராகமென்று பண்புத் தொகையாகக் கொள்ளப்படும்.

'வெளிய நீறு' என்பதனை, வெளியம்நீறு எனப் பிரிக்குமிடத்தும் வெளியம் = அஞ்சனம், கருப்பூரமெனப் பொருளாதற்குப் பூர்வாதார மொன்றுமில்லை. 'கரியமேனி மிசை வெளிய நீறு' என்பதனை கரிஅம்மேனி மிசை வெளிய நீறு எனப் பிரிக்குமிடத்தும் வெளிய என்பது பொருந்த, தாவ எனும் பொருள் தரவுமாட்டாது. அங்ஙனம் நீறு என்பது விபூதி யல்லாத வேறெப் பொருளையு நீற்றுவதாயு நிற்கின்றது. இவ்விளக்கஞ் சைவபூஷண சந்திரிகையினு முண்டு. அறிக.

" பஸ்மதிக்தாங்காருத்ராக்ஷாபரண: தக்ஷிணஸ்யாங்திசி விஷ்ணு" என்று அதர்வண வேத பஸ்ம ஜாபா லோபநிடதத்தும்,

" சுசுபேஸததம்விஷ்ணுர்பஸ்மதிக்தகநூலத ꞉|
த்ரிபுண்ட்ராங்கிதஸர்வாங்கோஜடாமகுடமண்டித ꞉||"

என்று பிரமாண்ட புராணத்தும்,

" நாராயணஸ்தபஸ்தேபேஜடிமுண்டிசமேகலீ ।
பஸ்மோத்தூளிதஸர்வாங்கஸ்த்ரிபுண்ட்ராங்கிதமஸ்தக ஃ॥"

என்று காளிகா கண்டத்தும்,

" மாமங்கை வளர்மார்பன் * * * *
காமங்கைத் துள்ளுருக் நீராடி நீறணிந்து கண்டிபூண்டு "

என்று சூதசங்கிதை திருமாலகம்பாவ நீங்கி யாகந்தடந் தரிசித்த அத்தியாயத்தும் வருவசனங்கள் விஷ்ணுமூர்த்தி விபூதி யணிந்தமையை விளக்கலானும் ;

" ராமந்த்ரிணேத்ரக்ஸோமார்ததாரிணம்சூலிநம்பரம்
பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்கபர்த்திநமுபாஸ்மஹே ॥"

என்று அதர்வணவேத ர்ாமரஹஸ்யோபநிஷத்திலும்,

" த்யாத்வாரகுபதிங்க்ருத்தம்காலாநலமிவாபரம் ।
பீதக்ருஷ்ணஜிநதரம்பஸ்மோத்தூளிதவிக்ரஹம் ॥"

என்று இராமாயணத்திலும்,

" ஸ்வர்ணவர்ணஜடாபாரம்ஸாக்ஷாத்ருத்ரமிவாபரம் ।
பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்த்ருஷ்ட்வாகாமவசம்கதக ॥"

என்று அத்யாத்ம ராமாயணத்திலும் வருவசனங்கள் தசரத ராமமூர்த்தி விபூதி யணிந்தமையை விளக்கலானும் ; அதர்வண வேத பிருகஜ்ஜாபாலோபநிஷத்தில்,

" ஸ்ரீகௌதமவிவாககாலேதாமஹல்யாம்த்ருஷ்ட்
வாஸர்வேதேவா ஃ காமாதுராஅபவந்ததாநஷ்டஜ்ஞாநா "

என்று தொடங்கிச் செல்லும் வசனங்களால் கௌதமருக்கும் அகலிகைக்கும் நடந்த விவாகத்திற் குழுமியிருந்த சர்வ தேவர்க்கும் அந்த அகலிகையின் பேரழகினுல் மோஹ மதிகரித்துத் தாதுகலிதமான பாவ பரிகாரத்திற்கு அவர்கள் துர்வாச முனிவர் கூறியபடி திருநீறணிந்தபோது அவ்விதஞ் செய்துகொள்ளும் வாசுதேவராகிய விஷ்ணுமூர்த்தியும்

"பஸ்மபக்ஷயதச்யுத :" எனும் அந்தச் சுருதிப்படி மருந்து போல உட்கொண்டதும் வெளியாகின்றபடியானும் ;

" தத்தாத்ரேயம்சிவம்சாந்தமிந்த்ரநீலநிபப்ரபம்|
ஆத்மாயாரதம்தேவமவதூதந்திகம்பரம்|
பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்ஜடாஜூடதரம்விபும்||"

எனும் அதர்வணவேத - சாண்டிலியோபநிஷத்து வாக்கியமும்,

" க்ருஷ்ணத்வைபாயகம்வ்யாசம்ஜடாமகுடமண்டிதம்|
பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்பஸ்மதிர்யகத்ரிபுண்ட்ரகம் ||

எனும் ஸ்காந்த புராணவாக்கியமும் விஷ்ணு அவதாரபுருஷர்களாகிய தத்தாத்ரேயரும், வியாசமாமுனிவரும் விபூதியணிந்தமையைத் தெரிவித்தலானும் ; இன்னும் ஸ்காந்தம் சைவம் பாத்மம் கூர்ம முதலிய புராணங்களிலும் சிவரகசியம் பாரத முதலிய இதிகாசங்களிலும் விஷ்ணுமூர்த்தியும் அவரவதார மூர்த்திகளும் விபூதியணிந்து சிவபூஜை செய்த விஷயம், அனேக சரிதங்களாக வெளிப்படுதலானும், ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் " வானவர் மேலது நீறு " என்றருளிச் செய்ததும் அச்செய்தி யாதலானும் மேல்விளக்கிய நியாய வாயிலாக (வேத அங்கீகாரமான) வெண்டிரு நீற்றையே 'வெளிய நீறு' என ஆழ்வார் கூறினரென்றறிக. விஷ்ணு மூர்த்தியும் வானவரிலொருவரே யென்பது பின்வரு பிரமாணங்களால் விளங்கும்.

பெரியாழ்வார் 'காப்பிடவாராய்' என்றதில் காப்பென்பதற்குத் திருமண்காப்பெனக் கூறலமையாதோ வென்னின், மஞ்சட் புண்டரத்தை யிகழ்ந்து சிவப்புப் புண்டரத்தைப் புகழும் வைணவரொருவர் " உடையவர் சூரண விளக்கம்" எனும் புத்தகத்தின் உகூ-வது பக்கத்தில் உகூ-வது வரி தொடங்கி ஸ்ரீ பெரும்பூதூரில் இவ்வருஷத்திற்கு அஎ௦-வருஷமான கலி சக௦அ-க்கு மேல் * * * * " திருவவதரித்தருளிய ஸ்ரீபாஷியக்காரர் காலத்திற்கு முன்பு,

இப்போதுள்ள வைணவர்கள் பஸ்மாதி தாரணராய் க்ஷேத்ர தேவாந்தர பரராய் மந்த்ராந்தர பரராயிருந்தார்கள். பின் நூதனமாக வெளியிட்டு அவைகளைத் திக்விஜயஞ்செய்து தாபித்தார் கிடாய்" என்றெழுதிக் காட்டினமையாலும், இந்நூல் முதலதிகாரத்திற் காட்டிய குருபரம்பராப்பிரபாவம் இளையாழ்வார் வைபவத்தில் இராமாநுஜருடைய சிறிய தாய் மகனுகிக் காளஹஸ்தியிலிருந்த கோவிந்தப்பட்டரை வைணவமதத்திற்றிருப்பச் சென்ற நம்பிக்கும் அப்பட்டருக்கு முண்டான தர்க்கங்க ளெழுதப்பட்ட விடத்தில் 'அவனுங் குறுக்கு நெடுக்காகில் பேத மென்னென்ன, இவருங் செவ்வையிருக்கத்திரியக்கு ஆகையே பேத மென்ன, அவனும் இது புதுவார்த்தைகட்டுகளோவென்ன, இவரும் பழைய வார்த்தைகட்டுகளுமிப்படியே யென்ன, அவனும் இதிலே பூர்வவிசாரம் வேண்டாவோ வென்ன, நம்பியும் பரத்துவத்திலே காண் விசாரமிருப்பதென்ன" என்றுள்ள வசனங்கள் - அவனும் என்பதைக் கோவிந்தப் பட்டரெனவும் இவரும் என்பதை வைணவ நம்பியெனவும் திரியக்கான பஸ்மத்திரி புண்டரத்திற்குப் பின்பு நெடுக்கான மண்புண்டரம் புதுவதாக ஏற்பட்டதெனவும் காட்டுகின்றமையாலும், இராமானுஜராலே சக வருஷம் க000-க்கு மேலே கஉ-சென்ற பகுதானிய ஷூ திருநாராயணபுரத்திலே திருமண் கண்டுபிடிக்கப்பட்டதாக அவரது வைபவத்தில் வெளியாகின்றமையாலும், நாலாயிரப் பிரபந்தத்துள் அந் நெடுக்குப் புண்டரம் யாண்டுஞ் சொல்லப்படாமையாலும், அப்படியே அது வேதத்திற் சொல்லப்படாமையாலும் வெள்ளை மண்ணும் மஞ்சட் பொடியுங் கொண்டிருக்கின்ற அந்நெடுக்கான ஊர்த்துவ புண்டரமானது நூதனமென்றே அசையா முளையடித்துவிடலாம். இப்புண்டரமும் இத் தென்னுடர்க்கன்றி வடநாடர்க்குப் போடப்படவில்லை யென்பதை அங்குளார் முகத்தினே யறியலாம். "மண் போட்டானு?" "நாமம் போட்டானு?" எனுஞ் சொற்கள் இங்குண்டாயிருத்தலேயுஞ் சற்று யோசித்திடுக. இன்ன ஏதுக்களானே அந்தக் காப்பென்பது திருமண்காப் பென

லமையாது. வெண்மண்ணுக்குக் காப்பெனும் பெயரும் நூல்வழக்கிலில்லை. விபூதிக்கே அப்பெயருண் டென்பது "திருநீறே பற்பம் - பொடியொடு விபூதிகாப்பாம்" எனுஞ் சூடாமணி நிகண்டாலுமறியக் கிடக்கின்றது. காப்பென் பதே வடநூல்களில் "ரக்ஷா" என நிற்கின்றது. ஸ்ரீ பாலகிருஷ்ணனுக்குப் பூதப்பிரேதராக்ஷதாதிகளாற் பய முண்டாகாமற் காக்கும் பொருட்டு அசோதா தேவி திரு நீறணிபாக்கு அந்தி நேரத்தி லழைத்து அணிந்தாளென்பதே யப்பதிகத்தின் கருத்து. இக்கருத்து கொண்டே ஆழ்வார் கூறுவதற்கு :—

"உடனே நந்தகோபரும் வந்து அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு கோமய சூர்ணத்தை அதன் சிரசிற் காப்பாக வைத்து" என்று வைணவர்க்குச் சிறப்பு நூலா யுள்ள விஷ்ணுபுராணத்தின் ரு-வது அமிசம் ரு-வது அத்தி யாயத்தில் பூதனையெனும் இராக்ஷசியின் முலைப்பாலுண்ட ஸ்ரீகண்ணன் விஷயமாகச் சொல்லப்பட்ட செய்தியே ஏதுவாயிருந்ததென்க. "கோமயசூரணம் = விபூதி" என்று மேற்படி புராணம் ௩௦௭-வது பக்கக் குறிப்பிலும் விளக் கப்பட்டுள்ளது. "பழைய வார்த்தைக் கட்டுகளுமிப் படியே" என்ற வைணவர் வாசகம் திருநீற்றுத் திரிபுண்ட ரத்தைக் கூறும் வேதத்தைக் குறித்ததாகும். அங்ஙனந் தமது புதுக்கட்டுகள் போல்வதாம் அவ் வேத விஷயமு மென்பது அவர் கருத்துப் போலும்.

"உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி
மணந்தாய் மலர்மகடோண் மாலே" (2229)

எனும் பூதத்தாழ்வார் கூற்றுவழியே வேதங்க ளுணர்ந்து நீதிகளோதிய திருமால் கருத்துக்கும் அவர் கருத்து விரோத மாமே. அந்தோ எந்நூலுக்கும் முன்னூலா இறைவனூலா யுள்ள வேதத்தை இப்படிக் கட்டுப்பாடென இகழ்தலெவர் செய்கை யென்பேம். இது பாதகமாகு மென்று அவரறி யாத அறியாமை கணித்து வேதாபிமானிகள் பெரிதும் வியசனிப்பரன்றே. நிற்க.

திருவாய்மொழி-தீர்ப்பாரை என்றெழும்பத்தின் ரு-ல் (3066) "தவளப்பொடிகொண்டு நீரிட்டிடுமின்" என்பது வெள்ளைமண் புண்டரத்தை விளக்காதோ வென்னின், மண்ணுக்குப் பொடியென்னும் பெயரெந்நூற் கண்ணுமில்லை. திருநீற்றுக்கே அப்பெயருண்டென்பதை மேலே காட்டிய நிகண்டு வாக்கியத்தாலறிவதோடு, திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் (2674.71) "கொன்னவிலு மூவிலைவேற் கூத்தன் பொடியாடி" என்பது சிவபெருமானது திருநீற்றை விளக்கியவழி அது நாலாயிரப்பிரபந்தச் செய்யுள் வழக்காதலுமறிக. அன்றியும் புதுவதாக வுண்டான வெண்மண் விஷயம் பழையதான நாலாயிரப் பிரபந்தத்தில் வரவேதுவில்லை யென்றும், அம்மண்ணோடு மிடப்படுகிற மஞ்சட் பொடியும் இடுவிவரமும் அந்தப் பிரபந்தத்தி லெங்கேனுஞ் சொல்லப்படவில்லை யென்றுந் தெரியுமோர்க்கு அப்பொடி திருமண்புண்டரத்தை விளக்காது திருநீற்றையே விளக்குமென்றல் தெள்ளிதிற் புலப்படும்.

இனி, கண்டிகை யென்பது கண்டத்திற் றரிக்கப்படும் யாதொருபணி யெனவா மாற்ருல், "கண்டிகையன்" என்பதற்கும் துளசிமணி அல்லது உருத்திராக்ஷமல்லாத வேருெரு மணியைத் தரித்தவனெனப் பொருள் கொண்டாலென்னை யெனின், வேதத்திற் பிரதிபாதிக்கப்பட்ட சிவசின்ன விபூதியை யணியும் விஷ்ணுமூர்த்திக்கு அஃதோடியைய உருத்திராக்ஷ மாலையையுமணிதலே சிறப்பாம். அவ்வாறவர் அணிந்ததற்கு மேலே காட்டப்பட்ட பஸ்மஜாபாலோபநிஷத்தும், சூதசங்கிதையும், "நாராயணஸ்தபஸ்தே" என்று தொடங்கிச் செல்லுமிடத்தில் "ருத்ராக்ஷமாலாபரணோருத்ரஜப்ய பராயண:॥." எனுங் காளிகா கண்டமும், இன்னும் பல வைதிக நூல்களும் பிரமாணமாகு மாகலின் அக் கண்டிகையை உருத்திராக்ஷ மாலையெனலே யமைவுடைத்து. சிவரகசியத்துப் பற்மாவதிச் சருக்கத்தில் "நன்னதி மூழ்கிப் பூதிகண்டிகை நயந்தணிந்தே" என்பதில்,

உருத்திராக்கமாலையே கண்டிகை யெனவருதல் போலப் பன்னூற்பாட்டுக்களிலும் பெருவரவாய் வருதலால் அம் மாலை கண்டிகை யென்பது செய்யுள் வழக்குமாயிற்று.

நம்மாழ்வார் திருவாய்மொழி மண்ணை யென்றெழும் பத்தின் எ - ல் (3046) "நீறு செவ்வே யிடக்காணி னெடு மா லடியா ரென்றோடும்" என்பது ஸ்ரீ நாராயணப் பெரு மாளடியவரும் திருநீறணிபவ ரென்பதைக் காட்டிற்று. அதனால் ஆழ்வாரனைவரும் அதனையணிந்தா ரென்பது ஐய மற்ற தீர்வையாம். இப்பாட்டிலே "நீறு" என்ற சொல், ஆறாயிரப்படி ஒன்பதினாயிரப்படி பன்னீராயிரப்படி இரு பத்து நாலாயிரப்படி முப்பத்தாறாயிரப்படி முதலிய வியாக் கியான மனைத்தினும் விபூதியென்றே அருத்தம் பண்ணப் பட்டதெனவும், அதற்குப் "பஸ்மத்தின்மேற் சயனஞ் செய்பவனும் பஸ்மதாரணஞ் செய்பவனும் உருத்திராத்தி யாய பாராயணஞ் செய்பவனும், மதுபானம் - குருபத்தினி புணர்ச்சி - பொன் திருடல் - பிரமஹத்தியாதி மஹாபாதகங் களைச் செய்திருப்பினும், சர்வ பாவங்களினின்றும் விடுதலை யாவார்கள்" எனும் பொருளைத் தரத்தக்க—

"மத்யம்பீத்வாகுருதாராம்ஶ்சகத்வாஸ்வர்ணஸ்தேயம்ப்ரஹ்ம ஹத்யாஞ்சக்ருத்வா! பஸ்மச்சந்நோபஸ்மஶய்யாஶயாநோருத்ராத் யாயீமுச்யதேஸர்வபாபை꞉॥"

எனுஞ் சாதாதபஸ்மிருதி வாக்கியங்களுங் காட்டப்பட்டன வெனவும், நீறென்பதற்கு விபூதியைவிட்டு வேறொன்று கோடலொண்ணாதென மேலே விளக்குற்ற நியாயஞ் சாலு மெனவுந் தெரிவிற்பஙருக்கு ஈண்டுமதுவே பொருளென விளங்குமன்றோ. இங்கே நீறணி சிவனையே நெடுமாலடியா ரென்றதாக அருத்தம் பண்ணச் சிலர் ஆசைப்படுகின்றனர். நெடுமாலே நீறணிபவரா யிருத்தலாலும், நூதனத் திருமண் புண்டரம் அவர்க்கின்மையாலும், சந்தர்ப்ப விரோதமும் வியாக்கியான விரோதமுஞ் சம்பவிக்கின்றமையாலும் அவ்வாசை யவலமா யொழியுமென்றோர்க.

"ஶிவஸ்யவிஷ்ணோர்தேவாநாம்ப்ரஹ்மணஸ்த்ருப்திகாரணம்।
பார்வத்யாஶ்சமஹாலக்ஷ்ம்யா:பாரத்யாஸ்த்ருப்திகாரணம்।
பஸ்மநாவேதமந்த்ரேணத்ரிபுண்ட்ரஸ்யதுதாரணாத்॥"

எனும் பராசரஸ்மிருதி வசனங்கள் "வேத விதிப்படி பஸ்மாவினுல் திரிபுண்டரந் தரித்துக் கொள்வதால் சிவபிரான் விஷ்ணுமூர்த்தி பிரமதேவர் பார்வதிதேவி இலட்சுமிதேவி சரஸ்வதிதேவி யென்பார்கட்குத் திருப்தியுண்டாகும்" எனும் பொருளையும்,

" திக்பஸ்மரகிதம்பாலம்திக்ராமமசிவாலயம்।
திகநீசார்சநம்ஜந்மதிக்வித்யாமசிவாச்ரயாம்॥"

எனுங் கூர்மபுராண வசனங்கள் "பஸ்ம மணியாத நெற்றியைக் கொளுத்து, சிவாலய மில்லாத கிராமத்தைச் சுடு, சிவார்ச்சனை செய்யாதவனது ஜன்மத்தில் தீயை வை, சிவனை யாச்சிரயிக்காத சாஸ்திரத்தை யெரித்துவிடு" எனும் பொருளையுந் தருதலால் விஷ்ணு பக்தர்கட்கும் ஏனையோர்க்குந் திருநீறணிதல் உரியதாமன்றே. இத் திருநீற்றின் பிரபல விஷயம் அனேக பிரமாண நூல்களின் விளக்கப்பட்டிருப்பினும் அதன் மகிமையையும் அதனை யணியாதாரடையுந் தோஷங்களையுஞ் சுருதிவாக்கியம் உபநிஷத்து முதலிய சகல நூல்களாலும் விளக்குதலைப் பஸ்ம மஹாத்மியம் எனும் ஒரு நூலிற் காணலாம். அற்றாகலினன்றே "வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு" எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும் முழங்குகின்றது.

பிரபல சுருதியாகிய ௧0௮ - உபநிஷத்துக்களில் உருத்திராக்ஷ மகிமையை ஆங்காங்குக் கூறத் திரிபுராதபநம் - திரிபுரம் - தக்ஷிணாமூர்த்தி - ஜாபால முதலிய உபநிஷத்துக்களிருப்பினுஞ் சிறப்பாக வுரைக்கச் சாமவேத ருத்ராக்ஷ ஜாபாலம் இருக்கு வேத அக்ஷமாலிகை யெனுமுபநிஷத்துக்களிருக்குமாறு விபூதி மகிமையையும் ஆங்காங்குக் கூறக் காலாக்கினி ருத்திரம் - பாசுபதப்பிரமம் - சாண்டில்யம் - ஜாபாலம் - பிருகஜ்ஜாபாலம் - சுவேதாசுவதரம் - ஜாபாலி-

அதர்வசிரசு - வாசுதேவம் - இராம ரகசியம் - தைத்திரீய மாதி உபநிஷத்துக்க ளிருப்பினும், சிறப்பாக வுரைக்க அதர் வண வேதபஸ்மஜாபாலோபநிஷத்தும் இருக்கின்றது. இப்படித் துளசி மணிக்கும் (மண்ணும் மஞ்சட்பொடியுங் கொண்டிடும்) சித்திரோர்த்த புண்டரத்திற்கும் உபநிஷத் துக்களில்லை. அதனால் உருத்திராக்ஷதாரணமும் பஸ்மதாரண மும் வேதசம்பந்தமெனும் வைதிகமாம். துளசிமணியணி கையும், அந்த ஊர்த்தபுண்டர தாரணமும் அச்சம்பந்த மின் றெனும் அவைதிகமாம். வேதமார்க்கத்திற்குப் புறம்பான கொள்கையை விஷ்ணுபுராணம் நக்கினமென்று கூறுகின் றது. இதனையே பதிதமெனவும், பாஷண்டமெனவும் பகர் வர். இவ்விதக் கொள்கையிலுள்ள வைணவரிற் சிலர், வைதிக சைவ சமயத்தைப் பாஷண்ட மதமெனக் கை கூசாம லெழுதுவதோடு வாய்கூசாமற் சொல்லியுந் திரிகிறார் கள். சைவ நிந்தையாயுஞ் சில வைணவர் அவாவிவாசித்து வருவதாயுமுள்ள "பாஷண்ட மதசபேடிகை" எனு மொரு புத்தகமே யிதற்குச் சாக்ஷியாகும். இதனை யேவர் செய்கை யென்பேம். அஃது அவர்மதச் சபேடிகையே யாகும். அப்புத்தகத்தில் "சாம்பற் பொதிசுமக்குஞ் சைவ கரங்கள்" எனவும், "இச் சைவக் கழுதைகளை யல்லாத நாலுகாற் கழுதைகளைக் காட்டிலும் மேன்மையுடையன வாக" எனவுமெழுதப்பட்டுள்ளன. கரமென்பது கழுதை. இவ்வித தூஷண மெல்லாம் மேல் விளக்கியவாறு சைவ சின்னதாரணராய்ச் சிவபூசை செய்த நாராயண மூர்த்தி யாதி பலரையும் பற்றி நிற்றலிற் பல்லோர்க்கும் வியசனந் தருமூலமேயாம். அன்றியும் பஸ்ம மகிமையைப் பகரும் உபநிடத மெல்லாம் வைணவர் சிறிய திருவடியெனும் ஹனுமருக்கு இரகுராமரா லுபதேசிக்கப்பட்டதும், சதுர் வேதத்து ௧௦அ - உபநிடதத்துக்குமுரிய சாந்தியும் பெயருந் துலக்கி இவை பிரமாணமா மென்பதுமான முக்திகோப நிடதத்திலுள்ளனவாகலின், இந்தப் பஸ்மநிந்தை அந்த ஹனுமரையும் இராமரையுந் தொடர்வதுமாயிற்று. ஈதென் கொலோ! ஈதென்கொலோ!! மறித்தும், அச்சபேடிகையி

ஞெருசார் ஸ்ரீ ஞானசம்பந்தர் முதலிய சைவத் திருமுறை யாளரையுஞ் சைவரையுங் குறித்து, " அவர்கள் பாட்டைக் கள்ளைக் குடித்துச் சுள்ளையிற் புரளும் பண்டாரப் பயல்கள் கொண்டாடுவர் " எனவு மெழுதியுள்ளது. இது, பண்டார மென்பதன் பொருளறியாதார் கூற்றுவதோடு, பெரியாழ் வார் திருமொழி நெய்க்குடத்தை யெஃறெழும்பத்தின் ரு - ல் (447) " மாணிக்கப் பண்டாரங் கண்டீர் வலிவன் " என்றபடி பண்டாரமாயிருக்கின்ற நாராயணமூர்த்தியையும் அவரைப் பாடியுள்ள பண்டாரப் பாட்டுக்களையும் பழிப் பது மாயிற்று. அன்றியும், வைணவர் பாகவதம் க0 - கக-ம் ஸ்கந்தங்களும் பாரதமுங் கூறுமாறு (சைவர் தீண்டாக்) கள்ளைக் குடித்து கலாமும் விளைத்த பலராமர் பிரத்தியும்நர் சாம்பர் அநிருத்தாதியராகிய வைணவமூர்த்திகளை நிந்தித்தது மாயிற்று. அப்பாஷாண்டசபேடிகையின் மற்றொருசாரில் " அதிக்ஷுத்ரர்களான கம்மாளராலே நாட்டப்பட்ட தொரு குழவிக்கல் " என்றெழுதியுள்ளது. இது சிற்ப நூலாரையுஞ் சிவலிங்கத்தையும் இழித்துரைத்ததாகும். இவ் விழிப்புரை வைணவர் கும்பிடும் அர்ச்சாவதாரவிக்கிரகம் ஆழ்வார் விக்கிரகமென்பவற்றை யுண்டு செய்யுங் கம்மியர் களையுங் கல் - மரம் - சுண்ணம்பு முதலியவற்றாற் செய் துள்ள அவ்விக்கிரகங்களையும் பற்றுமேயென்றும், நங் கூற்றுவழியே நஞ்சாளக்கிராமத்தை மற்றவர் தேய்புக் கல் லென்னுரோ வென்று மெண்ணுதா ரெழுதியது அப் பழிமொழி யென்றும். இப் புத்தியினலன்றே காளத் தியில் கோவிந்தப்பட்டர் உருத்திராக்ஷத்தை " இலந்தைக் கொட்டை " எனச் சொன்ன ரென்று மேலைக் குரு பரம் பரைக்காரருங் கூறுவாராயினர். வைதிக ருத்ராக்ஷம் இலந்தைக்கொட்டையாகு மென்பார் துளசிமணி விறகுக் கட்டையாகாதோ வென்பார்க்கு என் சொல்வரோ வென் பதூஉம் விவேகிகளே யுணரத்தக்கது. அங்ஙனந் திருநீற்று நிந்தையாய்ச் சாம்பலெனுஞ் சொல்லெழுந்தாங்கு அச்ச பேடிகையிலும் " பஸ்மோத் தூளநமும், தேவடியா ளுடையகுஹ்யப்ரதேசங்களிலே ரோமோல் லுஞ்சனுர்த்தமா

கச் செய்யப்பட்ட பஸ்மோத் தூளநவேஷத்தாலே யதிலே மறைந்துகொண்டது" எனும் ஆபாச வசனங்க ளெழுந் தன. சில வைணவர் அந்நீற்றைச் சுடுகாட்டுச் சாமப லெனவுஞ் சொல்லித் திரிவர். இங்ஙனஞ் சௌசத்திற் குபயோகமாகு பருமண்ணும் வைணவர் நெற்றியிலிடு திரு மண்ணும் ஒன்ருஞ லல்லவோ, திருநீறும் மற்றைச் சாம்பலு மொன்ருகும். அவ்வாருகாமையால் இவ்விடயத்தில் அவ் வைணவரறிவிருந்தவாறு வியக்கற்பாலதே. நாராயணர்தாம் களவிற்கலந்திருந்த பிருந்தை யுடம்பான பிணச் சாம்பலில் வீழ்ந்து புரண்டழுது கிடந்த விருத்தாந்தத்தை ஸ்காந்தங் கழறுமென்ருய்ந்த அறிவுள்ள வைணவர் "சுள்ளையிற் புரளும் பண்டாரப் பயல்கள்" என்றும், திருநீற்றைச் சுடு காட்டுச் சாம்பலென்றுஞ் சொல்லுவரோ? சொல்லார். மறித்தும், அச்சபேடிகையார் இலக்குமிதேவியைக்குறித்துப் "பிராட்டிக்கும்" என்றெழுதியதற்கு முன்னே உமாதேவி யைக் குறித்துக் "காளிக்கும்" என்றெழுதி வைத்தார். பசிய மேனியுண்மையின் அத்தேவியைக் காளியென்னலா மென் பது அவர் கருத்துப்போலும். அங்ஙனமாயின், அது செவ்வே பொருந்தாது: பொய்கையாழ்வார் "கார்மேனி" என்ற படியாகத்தானே நாராயணரைக் கறுப்பண்ணன் என்பது செவ்வே பொருந்துமென்று மற்றவர் கூறுவரேயென்பதை யும், இலக்குமி அமிசமாகிய ருக்மிணிதேவி ஸ்ரீ கிருஷ்ண ரைப் புருஷஞக அடையு நிமித்தம் உமாமகேசுவரியைப் பூஜித்த செய்தி வைணவர் பாகவதம் ௧௦-வது ஸ்கந்தம் ருஉ-வது அத்தியாயத்து முண்டே யென்பதையும் அவ ரெண்ணாராயினர். பெயர்த்தும், அந்நிந்தைச்சபேடிகை யில் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதராகிய பெரியவரை அபாரநிந்தை செய்கின்றவிடத்தில் "விஷ்ணுத்வேஷிகள் சண்டாளபிந்து வுக்குப் பிறந்தவர்களே தான்" எனத் தீட்டி அதற்குப் புராணவசன முண்டென்றும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒருவாறு அவ்வித வசனமிருந்தாலும் அது - சிவாலயங் களிற் பரிவாரதேவ வகுப்பில் விஷ்ணு விம்பங்களிருத்தலா லும், அவைகளையுஞ் சைவர் கும்பிடலாலும், அவர் சிவ

னடியாராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் முதலினோர் திருப் பெயர்களைத் தம் மகார்க்கு வைத்து வருதல் போலச் சிவனடியாராகிய நாராயணர் பெயர்களையும் அவர்களுக் கிட்டுவரும் வழக்கிருத்தலானும் சைவர்களைத் தொடராது. இவ்வாறு சைவத்தை யநுசரித்த கொள்கை யேதுமில்லாத அவ்வைணவரையே "எந்த மனிதனுக்குப் பஸ்மத்தினிடத் தும், திரிபுண்டரோத்தூளன காரியத்தும் துவேஷமுண்டா கின்றதோ, அவனுடைய உற்பத்தியில் (கலப்பு) சாங்கர்ய முண்டாயிருக்கவேண்டு மென்று பண்டிதனுல் ஊகிக்கத் தகும். வேதப்பிரதிபாதித்னன மகேச்வரனிடத்திலும் திரி புண்டரோத்தூளனுதிகளிலும் மஹாபாவிகளான மனி தர்க்கு மாத்திரந் துவேஷமுண்டாகும்" எனும் அருத்தந் தரத்தக்க—

"யஸ்யஸ்யாத்பஸ்மநித்வேஷஸ்த்ரிபுண்ட்ரோத்தூளநாதிஷு|
உத்பத்தௌதஸ்யஸாங்கர்யமநுமேயம்விபச்சிதா||
மஹாபாபவதாம்ந்ருணும்வேதவித்தமஹேச்வரே|
த்ரிபுண்ட்ரோத்தூளநாதௌசப்ரத்வேஷஸ்சப்ராஜாயதே||

என்ற பராசரவாக்கியந் தடையின்றித் தொடர்வ தாயிற்று. பஸ்மதாரியை நிந்திப்பவர் உற்பத்தியானது சூத்திரசம்பந்தமா யிருக்கவேண்டுமென்று வாசிஷ்டலைங்க மும் "யேபஸ்மதாரிணம்" எனுந் தொடக்கத்து வசனத் தால் வெளியிடுவதாயிற்று. இவ்விதிக்கு யாரென்செய்ய லாம். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலா யிற்றே. பரிதாபம்! பரிதாபம்!! இங்கே, சைவரையே சண்டாள பிந்துவுக்குப் பிறந்தவரென வேண்டுமென்கிற அயோக்கிய ஆசை அவ்வைணவர்க் கிருந்தால் அது, - விவாகமுன்னிலையில் வைணவ வீட்டுப் பெண்ணை சைவ வீட்டுக்குக் கொடுத்திருத்தலும் இவ்வுலகிலுண்டாயிருக்கிற வழி அப்பெண் வயிற்றிற் பிறப்போரும் நாராயணத்வேஷிக ளெனப்பட்டு அவர் ஜன்மமும் அச்சண்டாள ஜன்மமே யெனத் தீர்மானிக்குமல்லவா? உய்த்துணர்க. இன்னன

காரணங்களானே அந்தத் தீக்ஷிதமூர்த்தியை நிந்திக்குமா றெழுதியவனைத்தும் அவலமெனச் சிறுவருமறிவர். இன்னும், அந்நிந்தைச்சபேடிகையில் எவரும் அருவருக்கத்தக்க நிந்தையெண்ணிலவுள. அவையற்றை யிங்குக் காட்ட மனமில்லாதுவிட்டனம். அப்புத்தகத்தின் மறுப்போ சிவாதிக்கிய ரத்நாவளியின் இரண்டாம் பாகமாயுள்ளது.

சிவனால் நாராயணர் தண்டிக்கப்பட்டா ரென்பதும் நாராயணர் தங்கண்ணைப் பிடுங்கிச் சிவார்ச்சனை செய்தா ரென்பதுங் கூறும் பைப்பலாத சுருதியையும், அவர் வராகமாகிச் சிவனடியைத் தேடியது கூறும் அந்தச் சுருதியையும் மற்றைச் சுருதியையும் மறுக்கும் வகையேதுமின்றி அச்சபேடிகைக்காரர் "கண்ணைப்பிடுங்கி நாராயணன் சிவனையர்ச்சனை செய்ததும், பன்றியாய்ப் பூமியைக் கிழித்துச் சென்றதும் ஆகியவெல்லாம் மாயா சீதையைப் போல மாயா நாராயணன் கதை" எனவும், சிவன் "தானே விஷ்ணுவாக வந்து தன் கண்ணைக் கொண்டு தன்னையே பூஜித்து, பின் தன்னைத்தானே சூலத்தாலே குத்தியேந்திக் கொண்டு" எனவும் இரண்டிடத்தில் எழுதிவைத்தார். பிரமாணமில்லாத இவ்விபரீதார்த்தம் அவர் மதத்திற்கே ஹானியாகுமென்பது தெள்ளிது. இம்மட்டோ, "சக்கர நெறி நில்" என்று ஔவையாரருளிச் செய்த ஆத்திச்சூடி வாக்கியத்திற்கு 'அரசனாணை வழிநில்' என்றுலகெலாங் கொள்ளும் அருத்தத்தை மறுத்து வைணவருடம்பிற் பொறிக்கிற சக்கரக்குறியெனத் தாபிக்கும் வழி, "சக்ராங்கநத்தையே சொல்லுகிறது" எனத் தேற்றேகாரங் கொடுத்தும் ஓரிடத்தெழுதிவைத்தார். இவரிப்படிச் செய்தக்கால் சைவர் — சக்கு = கண் அதாவது நெற்றிக்கண்ணையுடைய அரனெறி நில் = அரனாது மார்க்கத்திலேயே நில் என்றருத்தஞ் செயலுமாமே. ஆவதேல், "நெற்றிச்சக்கு" என அதிலிருக்க வேண்டுமே யெனின், பிறிதர்த்தத்திற்குச் 'சக்ராங்கநம்' எனவும் அதிலிருக்கவேண்டுமே. இரண்டுவகையு மில்லையென்க. பிருகஹந் நாரதீயத்தில் "யஸ்துஸந்தப்தசங்காதி—லிங்கசிந்ஹதநுர்நரஃ ஸஸர்வயாதநாபோகி — சண்டாலஃ

கோடிஜந்மபி:" எனவும்,"யோத்விஜஸ்தப்தசங்காதி-லிங்காங்கிததநுர்நர: ஸம்பாஷ்யரௌரவம்யாதி – யாவதாசந்த்ரதாரகம்" எனவும், "ஜபேச்சபௌருஷம்ஸூக்த—மந்யதாரௌரவம்வ்ரஜேத்" எனவும் வருவசனங்கள்சக்ராங்கநம் சண்டாளப்பிராப்தத்தைப் பயக்கும், சங்கசக்ரதாரணங்களையுடையவரோடு சம்பாஷித்தலும் நரகம், சக்ராங்கநமென்னுங் கிரியையாற் சூடுண்டவனைக் கண்ட தோஷநிவாரணமாகச் சூரியஜபமும புருஷசூக்த ஜபமுஞ் செய்யவேண்டும். செய்யாவிடில் ரௌரவநரகமடைவது ஸித்தம் எனும் பொருள்களைத் தரும். இன்னும் பலவுள: விரிவஞ்சிவிட்டாம். இப்படிப்பட்ட சக்ராங்கநத்தையோ அறநெறியோதும் ஔவையார் அங்கீகரிக்கக் கூறுவர். கூறுரென்பது திண்ணம். ஆயின், "திருமாலுக்கடிமை செய்" என்று அவர் கூறியதென்னையெனின், கடவுட் செல்வப் பெருமையுடையார்க்கு அடிமைசெய் என்றதென்க. சிவன்மீது மோகங்கொண்ட விஷ்ணுமூர்த்திக்கு மோகப் பொருளில் மாலென்பது ஆகுபெயராயவாறே அது பெருமைப் பொருளில் அஃதுடையார்க்குமாயிற்று. "அறஞ்செய விரும்பு" என்பதை முதற்கட் கொண்டுள்ள நீதிநூல் அஃதாகலின், ஒரு மதக்கடவுள் வழிபாட்டினையிடையிற் கூறினரென்னின் வழுவாகும். திருமாலுங் கடவுளடியவராகலிற் பொதுவிதியான் அவர்க்கும் அஃதேயுமென்றலுமாம். அந்நூற் கடவுள் வணக்கம் ஆத்தி சூடுஞ் சிவனார் பெயரினிருத்தலும், நல்வழியில் "நீறில்லா நெற்றி பாழ்" என வருதலும் அந்த ஔவை மூதாட்டியைச் சைவமங்கையெனக் காட்டுமென்பதூஉம் ஈண்டுக் கருதிக்கொள்க. இது நிற்க, இரத்தினகேடப தீக்ஷிதர் முதலிய வைதிகசீலர்க்கெல்லாம் அநுக்கிரஹம் புரிந்து விதண்டாவாத சண்டபாஷண்ட சண்டமாருதமாகி அநேகபிரமாணங்களைக்கொண்டு அநேக நூல்களியற்றி அவைகளில் வைஷ்ணவமத கண்டனமுஞ் சைவமத ஸ்தாபனமுஞ் செய்த, அந்த அப்பைய தீக்ஷிதரெனும் பெரியவரைப் பொறாமையால் நிந்தித்துத் திரியும் வைணவரிலொருவராகிய அச்சபேடிகையார், "(அப்பைய

தீக்ஷிதன் அந்திய காலத்தில்) சிவனே பரதத்துவமென்கைக்கு நாராயண சப்தத்திலே 'ணத்வம்' பாதியா நின்றது. ஆகையால் நாராயணனேதான் பரதத்துவமென்று சொல்லிப்போனுனென்னுமிடம் சர்வலோக பிரசித்தமல்லவா?" என்றெழுதினர் கண்டீர். இச்செய்தி:—தன்மகனை அரசனுக்க அவாக்கொண்டு அவனை யரசனென்று சொல்லித் திரிந்த குற்றத்திற்குப் பதிவிரத சீலமுள்ள அரசியால் தண்டிக்கப்பட்ட ஒரு குடியானவன்; "யான் அரசனுக்கு மனைவியாகி யானீன்ற புத்திரன் இன்ன, குடியானவனுக்கே வுற்பத்தியானவன் அதனல் அந்தப் புத்திரன் இவ்வரசுக்கு யோக்கியனுகான். அக் குடியானவனுடைய மனைவியீன்ற மகனே கோடாச்செங்கோலுள்ள என்னரசனுக்கு உற்பத்தி யானவன் அவனே யிவ்வரசுக்கு யோக்கியனுவான்" என்று இவ்வூரரசி அந்திய காலத்தில் ஊரறியச் சொல்லிப்போனுளல்லவா அதனல் என் மனைவி பெற்ற பிள்ளையே அரசனுக் வேண்டுமென்பதற்கே யொப்பிடத்தக்கது. சிவசக்தியாகிய நாராயணி கொண்ட புருஷகோலத்திற்கே "நாராயணன்." எனும் பெயர் சிறந்து நிற்றலால், சிவனே பரதத்துவமென்கைக்கு 'ணத்வம்' பாதிக்குமென்பது பயனில் கூற்றும். நாராயண சப்தம் சிவபரமாமாறு உ௮-வகையாக மல்லிகார்ச்சுநாராத்தியர் சிவபரகேசவாதி நாம நிர்வசநம் எனு நூலில் அருத்தஞ்செய்துளாரே. இவ்வகையை அம் மஹா பண்டிதராகிய தீக்ஷிதரோ அறியாதவராவர்? இப்படியே நம்பத்தகாத செய்திகளும், மேற்கோள்களும் புரட்டருத்தங்களும் அந்நிந்தைச்சபேடிகையில் நிறைந்துள்ளன. இவ்விதமே வைணவ ரெழுதிய புத்தகமெல்லா மெனற்கு ஈண்டு ஸ்தாலீபுலாக நியாயமாக இன்னுஞ் சில வெடுத்துக் காட்டி யுரியநியாயமு முரைப்பாம்.

கூரேச விஜயத்தில், இராவணன் உருத்திரன்மீது வைத்த அபிமானத்தாலே வேதத்தில் நமக சமகங்களைச் செய்தனன்: அவை கொண்டு உருத்திரனுக்குப் பரத்துவம் பகரொண்ணுதென்ப தெழுதப்பட்டது. ஆவதேல், நாராயண விசேடம் விளம்புஞ் சுருதிகளை நாராயண அபிமானிகள் செய்தனர்:

அவை பிரமாணமாகாவென மற்றையருங்கூறல் கூடுமாக லின் அவ்விஜயவெழுத்து வைணவர்க்கு அபஜயவெழுத்தே யாம். மேலும் அந்த நமக சமகங்கள் கடவுளருளிச் செய்த புராதன வேதங்களின் மத்தியில் அதாவது யஜுர் வேதத்து நான்காவது காண்டத்தின் நடுவில் பிரபலமாய்ப் பிரகாசித் துள்ளனவாசலின், அவற்றை அப்பிரமாணப்படுத்தும் வைண வரை அஃது அவைதிக சிரேஷ்டராக்கி நிற்பதுமாயிற்று. அவ்விஜயம் திரிபுர சம்ஹாரகட்சியில் "ஸ்ரீ ராமாயணத்திற் சிவன் அனுமாராயவதரித்தாரென்றதில் கண்டுகொள்வது" என்பதெழுதப்பட்டது. இச்செய்தி "வான்மீகஞ் சொல் லும்" என்று தசாவதாரக்கட்சியிலு மெழுதப்பட்டுள்ளது. இவ்விடயம் வான்மீக ராமாயணத்திலில்லை: அனுமரை வாயு அமிசமென்றே அது கூறுமென அதனை வாசித்த அனைவரு மறிவர். இங்ஙனம், "வாயு மற்றெனதுகூறு மாருதியென லும் * * * * புராரிமற்றியானே வாதசேயெனப் புகன்ருன்" எனக் கம்ப ராமாயணங் கூறுமே யென்னின், வான்மீகத் திற்குப் பலதிற வித்தியாசமுளது அவ்விராமாயணமாகலின் அது பிரமாணமாகமாட்டாது. வேறு வடநூல் கூறுமென் னின், இராமசரிதத்திற்கு அவ்வான்மீகமொன்றே முதனூல்: அதன்வழி வருமெந்நூலும் அதற்கு விரோதங் கூறுதல் பொருந்தாது. அந்நூலார் அனுமரது வீரநோக்கி இவரை யுருத்திராமிச மென்னலாமென அது கற்பித்துக்கூறின ரென்பதே யங்ஙனமமைவுடைத்து. அனுமரைச் சிவனெ னுஞ் செய்தி ஆஞ்சநேய ராம வைபவ பங்கம் எனுமொரு நூலிற் பலவாருகவு மறுக்கப்பட்ட தொன்ரும். அவ்விஜயம் மன்மத தகன கட்சியில், துரோணர் பத்தினிக்கு நிதம்பப் பிரதேசம் அழகாயிருக்குமெனல் கேள்விப்பட்ட சிவன் அவளைப் பார்க்கவந்த காலத்திற் கலிதமான சிவவீரியம் அசுவஉணவில் விழுந்ததாலே அசுவத்தாமா பிறந்தானென்று பாரதஞ் சொல்லுமெனும் விடய மெழுதப்பட்டுள்ளது. வியாச பாரதத்தி லிப்படி யில்லை. சிவானுக்கிரகத்தால் துரோணர் பத்தினி கர்பத்திற் பிறந்த பிள்ளை அசுவம்போல கனைத்தது. அதனல் அது அசுவத்தாமாவெனும் பெயர்பெற்ற

தென்பதே யதிலுள்ளது. அக்கட்சியைத் தழீஇத் தமிழ் பாரதங் கூறுமெனின், அது பிரமாணமாகாது. அவ்விஜயம் சோழன் திக்குவிஜயத்தில் "என்றங்ஙனம்" என்றற்றொடக்கத்துச் செய்யுளில் சோழனழைப்புக்கு அஞ்சி யூர்விட்டோடும் இராமாநுஜர் மேனாட்டுவழிச் செல்லும்போது அவரைத் தொடர்ந்த சோழன் ஆட்களை அங்ஙனம் ஸ்ரீரங்க நாயகர் பாணப்பிரயோகஞ்செய்து கொன்றார் : அச்செய்தியைச் சோழன் கேட்டு மனந்தளர்ந்தானென்பது வெளியாகின்றது. பாணப்பிரயோகச் செய்தி குருபரம்பராப் பிரபாவத்திலில்லை. அதனால் இது மகிமை ஸ்தாபிக்க வரைந்த வன் பொய்யாகும். கூரத்தாழ்வார்க்கும் பெரியநம்பிக்கும் அச் சோழ பூபதியாற் கண்கள் பறிக்கப்பட்டமையும் பறித்த வேதனை பொறாமல் பெரியநம்பி மரணமடைந்ததும் அக்குரு பரம்பரை கூறும். இவ்விஜயத்துக் கூரத்தாழ்வார் வைபவத்திலோ அவைகள் மறைக்கப்பட்டன. அதர்வண சரபோபநிஷத்தில் "யோலீலயைவத்ரிபுரந்ததாஹகாமம்காலம்ஸோமஸூர்யாக்நிநேத்ர :" "விவிக்லபம்பீட்யமாநம்ஜகாநபஸ்மீசகாரமந்மதம" என வருவதற்கும், வைணவர் பாகவதம் தசமஸ்கந்தம் ருரு-வது அத்தியாயத்தில் சிவனாது நெற்றி விழி நெருப்பால் மன்மதனெரிந்தான். அவனே ருக்மிணி தேவி வயிற்றிற் பிரத்யும்நனாகப் பிறந்தா னென்பதற்கும் (திருமால் மகனாகிய மன்மதன்) உடம்பில்லாதவ னென்னும் பொருள் பயக்கும் "அனங்கன்" எனும் பெயரைத் திருமழிசையாழ்வார் தமது இயற்பாவில் வருவித்து "அனங்கவேடாதைக்கு" என பாடினதற்கும், பல புராணேதிகாசங்களுக்கும் கூரத்தாழ்வார் அவனுரு எரிந்ததை யொப்பாமலெழுதிய காமதகனகட்சி விரோதமாகும். வேதவிரோதமான இக்கட்சியை அந்தக் குருபரம்பரை திருமழிசையாழ்வார் வைபவத்தில் "இவரை யநங்கனைப்போலே யாக்கக்கடவேனென்று" சிவனார் வெகுண்டாரென வொத்துக்கொண்டதும் மறுக்கும். அவ்வாறே வில்லிபுத்தூராழ்வார் பாரதம் கரு-ம் போர்ச்சருக்கத்தில் "எண்ணுடைக் காமனை யெரித்த பேரழற் கண்ணுடைக் கடவுளே" என்று கண்ணபிரான்

செய் துதியுரையாக வருவதும் மறுக்கும். மேலைய சரபோபநிஷத்தில் "யோகோரம்வேஷமாஸ்தாயசரபாக்யம்மஹேச்வர: ந்ருஸிம்ஹம்லோகஹந்தாரம்ஸஞ்ஜகாநமஹாபல:" என்னும் வசனத்தால் பயங்கரமான சரபவேஷந்தரித்து, லோகபீடிதமாயிருந்த நரசிங்கத்தை அடித்தவர் எனச் சிவபெருமான் துதிக்கப்பட்டிருக்கின்றார். இந்தப் பிரபல சுருதிக்கும் இதனைத் தழீஇவரு புராணங்களுக்கும் விரோதமாகச் சரபர் நரசிங்கரை வென்றதில்லை யென்றும் அதற்குச் சில புராண வசனங்களுண் டென்றும் அவ்விஜயத்துச் சரபர் நரசிங்கர் கட்சியின் முடிவு செய்ததும் நரசிங்கந்தான் சரபத்தைக் கிழித்தெறிந்ததென்று கருடபுராணஞ் சொல்லுவதாக யமசம்ஹார கட்சியிலெழுதியதும் தகாத காரியமாம். "யோமத்ஸ்யகூர்மவராஹஸிம்ஹாந்விஷ்ணும்க்ரமந்தம்வாமநமாதிதேவ: விவிக்லபம்பீட்யமாநம்" எனும் அவ்வுபநிஷத் வசனத்தால் விஷ்ணு மூர்த்தியையும், அவருடைய அவதாரங்களான மத்ஸ்ய கூர்ம வராக நரசிம்ஹாதிகளையும் வாட்டிப்பீடித்து இரக்ஷிப்பவர் சிவனாரென வியக்தமாகின்றதற்கும் அம்முடிவு முரணும். நரசிங்கஞ் சரபத்தைக் கிழித்தெறிந்தது உண்மையானால் அவ்விவரம் வைணவர் பஞ்சதநமெனக் கொண்டாடும் உபநிஷத்துக்களுளொன்ருய் நரசிங்கத்தின் பெருமை கூறுவதாயுள்ள நரசிம்ஹதாபிநியிலன்றே இருக்கவேண்டும். அப்படி யில்லாமையால் புராண வசனம் பொய்யாயொழியுமன்றே. ஈண்டு திருமால் கண்டபேரண்டமாக அவதரித்துச் சரபத்தைக் கிழித்தெறிந்தாரென்று நாரதீய முதலிய புராணங்களும், சிவனார் சருவதோமுகமென்னு முருக்கொண்டு அக்கண்ட பேரண்டத்தை யழித்தார்; மேல் திருமால் சருவதோபத்திரமாக அவதரித்து அச்சருவதோமுகத்தை யழித்தாரென்று பிரபஞ்சசாரமெனு மந்திர சாஸ்திர முதலியனவும் பேசுமென வைணவர் கூறுவர். அங்ஙனமாயின், நரசிங்கமூர்த்திக்குஞ் சரபமூர்த்திக்குந் தனித்தனி யுபநிஷத்துக்களிருத்தல்போல அக்கண்டபேரண்டாதிகட்கு முபநிஷத்துக்களிருக்கலாமே. அப்படி யில்லாமையாலும் சுருதி கூறுகின்றபடி சிவனார் மத்ஸ்யகூர்ம

வராகாதிகளின் வீறுபாட்டை யடக்கிய காலத்தில் அவற்ருென்றுஞ் சிவனுரை இகலி நில்லா தடங்கினமையாலும், கண்டபேரண்டாதி அவதாரங்கள் கூறுதல் நரசிங்கத்தோடு பத்தவதாரமெனலைக் கடந்து அதிகமாகின்றமையாலும் அக் கண்டபேரண்டாதி விடயங்கூறும் புராணாதி வசனங்கள் உண்மையாக மாட்டா. சுருதி வசனத்தை புராண வசனங் கொண்டு வெல்லத்துணிவார் செய்கை இரும்பை எறும் பரிக்க முயல்வதையேயொக்கும். சுருதியிலில்லாத யாதானுமொரு புது மகிமையை புராணங் கூறுமாயின் அங்ஙனமது பிரமாணமாகும். சுருதியிலிருக்கும் மகிமையை மறுக்கும் புராண வசனங்கள் பிரமாணமாகா. அவற்றை வியாசமா முனிவர் வாக்கியமெனக் கோடலும் வேதபாகியர் செய்கையேயாகும். ஆகலின் அவை மத்திய நுழைப்பு மாச்சரிய விகிதங்களாம். தைத்திரியத்தில் " ஹரிம்ஹரந்தமநுயம்திதேவா: விச்வஸ்யேசாநம்வ்ருஷபம் மதீநாம்" என்று வருதற்குச் சரபமாய் வந்த சிவனைக் கோறல் புரிந்த ஹரியைத் தேவர்கள் பின்ருெடர்ந்தார்களென்று கூரேச விஜயத்தார் பொருள் கூறுவர். அது வெகு சுருதி விரோதமென்றும், " ஹரியெனு நரசிங்கத்தை ஹரித்தவரும் வித்தைகளை ஸ்வரூபமாக்கொண்ட விருஷபதேவரும் ஈசானருமாய் விளங்குஞ் சரபேசுரரைத் தேவர்கள் பின்ருெடர்ந்தார்கள்" என்பதே மேற்சுருதியிற் புகழப்பட்ட ஈசானரைக் குறைவுபடுத்தாது கொள்ளுமேற்புடைப்பொருளென்று முணர்வ ருயர்ந்தோர். சரபத்தை வெல்லக் கண்டபேரண்டம் வந்ததென்னும் அவ் வைணவர் கூற்று வழியேயும் அச்சரபத்தை நரசிங்கம் வெல்லமாட்டா தென்பதூஉம் வியக்தமாயிற்று. அக்கூரேச விஜயம் பூமியிலநேகர் பூஜிக்கிற கட்சியில் கண்ணமூர்த்தி கைலாசம் புக்கபோது அவரைச் சிவன் சிம்மாசனத்திருத்தி அவரீரடியுந் தன் தலையில் வைக்கும்படி பிரார்த்தித்ததைப் பாகவதங் கூறுமெனுஞ் செய்தி யெழுதப்பட்டுளது. பாரதவீர ருற்பத்தியாதிகளும், அப்பாரதப் போர் மூட்டுவித்து முடிக்கவந்த கண்ணமூர்த்தி யுற்பத்தி முதலிய பலவுங் கூறுந் தலைநூல் பாரத மொன்றே

யாம். அந்நூல் துரோண பர்வத்தில் "ததோந்வபச்யத்கிரிசஸ்யவாமே ஸ்வாத்மாநமவ்யக்தமநந்தரூபம் ஸ்துவஸ்தமீசம் பகுபிர்ய சோபிசிஸ்ஸங்காஸி சக்ரார்பித சக்ரஹஸ்தம்" என்றெழும் வசனத்தாற் பரமசிவனுர் ஸ்ரீகண்ணர் செய்த தவங்கண்டெழுந்தருளிய அவதரம் அச்சிவனுரது இடப்பக்கத்தில் சங்கசக்ரதாரராய் அநேக திவ்ய ஸ்தோத்திரங்களால் துதிசெய்துகொண்டிருந்த நாராயணரை அக்கண்ணர் கண்டு களிகூர்ந்தாரென்று பெறப்படுதற்கும், திருக்கைலையில் ஸ்ரீ கண்ணரும் அருச்சுனரும் எண்ணிலாத ஸ்தோத்திரநமஸ்காரங்களாற் சிவனுரை வழிபட்டனரென்று அந்தத் துரோண பர்வந்தானே விளக்குதற்கும், அப்பாகவதக் கூற்று விரோதமாகும். மேலும், அக்கிருஷ்ணர் ஸ்ரீ உபமந்யுமுனிவரிடம் பாசுபததீக்ஷையில் திருவடிசூட்டு தீக்ஷை பெற்றுக் கிருதார்த்தரானதைப் பல் புராணங்கள் பகர்ந்தாங்கு அப்பாரதம் பகர்தற்கும் அக்கூற்று முரணும். இங்கே உமாபதியார் நாராயணரை நோக்குபு "நீர்மநுஷனுக வந்து என்னையாராதித்துச் சர்வதேவ சிரேஷ்டம் பண்ணி நீரு மென்னிடம் வரம்பெறல் வேண்டுமென்று கேட்டபடி நாமெடுக்கும் மநுஷாவதாரங்களில் அப்படிச்செய்குது" மென நாராயணர் நவின்றதாக வராக புராணம் ருத்ரகீதை சொல்லும் ; அவ்வரதானபாலனமாகக் கண்ணமூர்த்தி சிவனைப் பூஜித்து வரமும் பெற்றிருப்பாரெனச் சமாதானங் கூறலாமெனின், அவதார மூர்த்தி வழிபட்ட காலத்திற்றுனே மூலவிஷ்ணுவுஞ் சிவனைவழிபட்ட விஷயம் அத்துரோண பர்வத்திற் கேட்கப்படுதலால் அது பொருந்தாது. அரசனு யிருப்பானுெருவனை அவனிஷ்டப்படி யவனது நாட்டுக் கிராமதேவதைகட் குரிய பறைகொட்டும் பறையனுெருவன் வணங்கி "அரசரேறே! நீர் என்னை வணங்கி என் வீட்டு இருளப்பசாமிக்கு மொருநாள் உரிய பறைகொட்டியென்னை யிராஜ சிரேஷ்டம் பண்ணவேண்டு" மென்று கேட்டால் அதற்கவ் வரசனிணங்கி யக்காரியஞ் செய்வானே? சுவபாவ விருத்தமான விஷயம் நடப்பதில்லையாதலால் அவ்வரதானபாலன வசனமுங் கற்பனையேயாம்.

இங்குச் சிவனை விஷ்ணு பூஜிப்பது நாடகமென்னு மிடத்தும் அத்தானபாலன மழிவதோடு ஏனைத்தேவர் முனிவர் மநுடர் செய்கையும் அவ்வாறு கூறநேரிடுமாகலின் அது சால்பாகாது. ஆகலின் அப்போலிச் சமாதான வழியேயுஞ் சிவனுர்க்குச் சர்வதேவ சிரேஷ்டம் இயற்கையென்பதே சித்தித்தது. பரிக்ஷித்து மன்னனுடைய மகனுய் இராஜ்யபாரம் பண்ணிக்கொண்டிருந்த ஜனமேஜயனுக்கு வைசம்பாயனராற் கூறப்பட்டுப் பின்பு நைமிசாரண்ய முனிவர்கட்குச் சூதமுனிவராற் சொல்லப்பட்ட வியாசபாரதத்திற் பரிக்ஷித்து மரணமுதலியனவும் விளக்கப்பட்டன. இப்பாரதத்தையும் எளியமொழிகள் செறிந்த மற்றைப் புராணங்களையும் அருளிச்செய்த பின்னே ஓவாவுண்மை யுணர்ந்து விஷ்ணுபரமாகச் செவ்வனே செய்யப்பட்டது இப்பாகவதமெனவும், இஃதந்தப் பரிக்ஷித்து மன்னனுக்குச் சுக முனிவராற் சொல்லப்பட்டதெனவும் அவ்வடமொழிப் பாகவதங் கூறுவதா யிருக்கின்றது. அக்கூற்றே பழைய சரிதங்களோடு பலப்பல பொய்களும் புனையப்பட்டுள்ளது இப்பாகவத மென்பதை நிலைபேறு செய்யும் பாரதத்தின் பின்னர்த்தான் பாகவதமுண்டாயதென்பதை “ஜிஜ்ஞாஸிதம் ஸுஸம்பந்நமபிதேமஹதத்புதம்| க்ருதவாந்பாரதம்யஸ்த்வம் ஸர்வார்தபரிப்ரும்ஹிதம்||” எனும் அப்பாகவத ஆரம்ப ந-ம் அத்தியாயம் கூ-ம் ச்லோகத்தினறிக. அருத்தம் - “மகதற்புதமுஞ் சம்பந்நமுமான பரமாத்துமாவை நன்கு விசாரித்து அர்த்தபுஷ்டியோடு பாரதம் உம்மாற் செய்யப்பட்டது” என்றும். இது வியாசரை நோக்கி நாரதர் கூறியதாயுள்ளது. ஈண்டுப் பாரதம் பகருமாறு மரணமாகிவிட்ட பரிக்ஷித்து மன்னனைப், பாகவதம் பகருமாறு பாகவதங் கேட்போனுக் கிக்கொண்டதும், பாகவதத்திற்கு முன்னே பாரத முண்டெனக்கொண்டதும்பொருந்தாதுநிற்றல் காண்க. என்றும் பொய் பொய்யே. இவ்வொன்றினுலேயே பாகவதரென் பார்க்கு இனிப்பாகவதமில்லை யென்பது தெள்ளிதன்றே.

பாரதத்திற்கு முரணுத மொழிதருமிப் பாகவதம் வியாசப் ரோக்தமன்று கஅ000 - கிரந்தமுள்ள தேவி பாகவதமே வியாசப்ரோக்தம். அச் சுகர்பாகவதமெனும் வைணவ லிகிதம் பொப்பதேவரெனும் ஒரு வடமொழிப் பண்டிதாாற் செய்யப்பட்டதா மெனற்காய நியாயங்களை யெமது, வேதத்தைக் குறித்த கூ-வது வியாசம் பிளக்குமாகலின் ஆங்குப் பரக்கக் காண்க. இப்பாகவதத்தில் அரனை யிழித் துக் கூறுஞ் சில கதைகளைபுண்மையென வெண்ணிப்பாடும் ஆழ்வார் பாடல்களிலும் மற்றைப் புராணங்களிலுமில்லாத பஸ்மாசுரனெனும் விருகாசுரன் கதையொன்றுளது. ஈதுள்ள அத்தியாயத்திற்கடுத்த அகூ-வது அத்தியாயத்தில் மும்மூர்த்திகளிற் சத்துவகுண ஈசுரன் இன்னேனெனப் பரீக்ஷை பண்ணி யறியச் சென்ற பிருகு முனிவர் ஏழு நா ளளவும் அரனும் உமையும் புணர்ந்து கொண்டிருத்தலைப் பின்பு ஞானக் கண்ணுலறிந்து அவ்விருவர்க்கும் பகலிங்கங்க ளறும்படி சாபங்கொடுத்துப் பிரமலோகம்புக்குப் பிரம னது செருக்கைக் கண்டிகழ்ந்து வைகுண்டம் போந்து தங்காலால் ஹரிதலையிலுதைத்தபோது கோபியாது புகழ்ந்து நின்ற அந்த ஹரியைச் சாத்துவிக சர்வேசுரனென அவ ரறிந்தாரென்று கூறு கதை யொன்றுளது. இவ்விரண்டு சிவதூஷணக் கதைகளும் கோபிகைகளாகிய பரதாரங்களை யிச்சித்து மானபங்கஞ் செய்து திரிந்த கிருஷ்ணமூர்த்தி சரித்திரங் கூறும் க0-வது ஸ்கந்தத்தில் அவர்க்குச் சம்பந்த மில்லாதனவாகலானும், ஞானக்கண்ணுள்ள முனிவர் அக் கண்ணுலறியாமே பரீக்ஷை பண்ணியறியச் சென்ருரென்றல் இயைபின்மை யாகலானும் அவை அவ் விடைவந்த சுவடியி லிடைநுழைப்பாமென விவேகிகள் ஊகிக்கக்கிடக்கின்றன. மாயையின் குணமான சாத்துவிகத்தால் ஹரிக்குக் கடவுட் டன்மை தாபிக்கைக்கு முனிவரது காலுதையைத் தேடினமை—என் மனைவி விபசாரியானலு மாகட்டும் விவேகமுள்ள பிள்ளை பிறக்கட்டும் என்பான் செய்கைக்கே

யொப்பிடத்தக்கது. ஆகலின் அக்கதைகளை யெழுதினோர் "பொய்யைச் சொல்லினும் பொருந்தச் சொல்லவேண்டும்" என்பதையு முணராராயினர். நிற்க அக்கூரேச விஜயத்தார் இடபமாய்த் தாங்கின கட்சியில் ஹரி இடபமாகி ஹரனைச் சுமந்ததை யொப்புக்கொண்டு அங்ஙனம் ஹரிக்கே மேன்மை கூறுவாராயினர் அவர் கூற்று—குதிரைமேலிருக்கும் பிரபுவை யிழித்துரைத்துக் குதிரைக்கு மேன்மை கூறுநர் கூற்றோ டொப்பிடத்தக்கது. அவ்விஜயத்து இராமலிங்க பூஜைக் கட்சியில் இராமர் அரக்கனாகிய இராவணனைக் கொன்றது பிரமஹத்தியாகாதென வெழுதப்பட்டுளது. அது, பலபுராணாதி நூல்கள் பகருமாறு வைணவர் பாகவதத்தும் சு-வது ஸ்கந்தம் சு-சு-கஈ-ம் அத்தியாயங்களில் பிராமணனான துவஷ்டாவுக்கும் தைத்தியனுடைய தங்கையான இரசனைக்கும் பிறந்த மூன்றுதலை விஸ்வரூபனை இந்திரன் கொன்று பிரமஹத்தியாற் பீடிக்கப்பட்டானென்பதையும், பின்றை அத் துவஷ்டா செய்த வேள்வியிற் றோன்றிய விருத்திராசுரனை அவ்விந்திரன் கொன்று பிரம ஹத்தியாற் பீடிக்கப்பட்டானென்பதையும், அவ்விராவணன் மகரிஷியாகிய விசிரவசு வீரியத்திற் கேகசி வயிற்றிற் பிறந்தவனென்பதையும் அந்தப் பாகவதம் தசமஸ்கந்தம் எஅ-ம் அத்தியாயத்தில் "பிரசன்னமாக எதிர் நிற்கின்ற பிரஹ்மஹத்தி" என்பது காட்டுமிடத்தில் பலராமர் சூத்திர ஜாதியில் வந்த சூத முனிவரைக் கொன்றதனாலுற்ற பிரஹ்ம ஹத்தி நிவாரணமாக ஒரு வருடந் தீர்த்தயாத்திரை செய்தன ரென்பதையும் அறியாதெழுதிய தென்றும். அவ்விஜயத்து வியாசர் புயத்தம்பக் கட்சியில் "அனுமாரானவர் நந்தியைக் கோபித்துத் தம்முடைய இடது திருவடியாலே அவனுடைய முகத்தின் பேரில் உதைக்க அத்தாலே மேல்வாய்ப் பல்லுகளெல்லாம் உதிர்ந்துபோய் விட்டது." "இதற்குப் பிரமாணம் தேடவேண்டாமல் உலகத்தின்கண் பிரத்தியக்ஷமாய்க் காணலாயிருக்கும்" எனுஞ் சொற்களெழுதப்பட்டுள்ளன. இப்படியே, நானே பிரஹ்மமென் றகங்கரித்த விஷ்ணு அவதார புருஷரான குதிரைமுக அயக்கிரீவருடைய தலையின்

மீது அங்கந்திக் கடவுளுதைத்துக் கொம்புகளை வீழ்த்தியது காரணமாகக் குதிரை யெல்லாங் கொம்பிழந்து திரிதல் கண்கூடல்லவா ! அதனலன்ருே "குதிரைக் குணமறிந்து தானே கொம்பு கொடுத்தானில்லை" எனும் பழமொழியு முண்டாயிருக்கின்ற தெனலும் பொருந்துமே யென்பதை அக் கட்சியார் உணராராயினர். இப்படிப் பல்வகையாலும் உறுதியற்ருெழியுமிப் புத்தகத்தைக் குயிற்றிய கூரத்தாழ்வார் கங்கைகொண்ட சோழபுரத்திருந்த திருநீற்றுச் சோழபூபதியின் சமஸ்தான பண்டிதமணியாகிய வாகீசபாதசேகர சிவாசாரிய சுவாமிகளுடன் மதவிஷயமாக வாதித்துத் தோல்வியடைந்துவிழியுமிழந்தவரென்றல் பிரசித்தமாயிருக்க, அவர் புத்தகத்திற்குக் கூரேசவிஜயமெனும் பெயரிட்டது வெள்ளரிப் பழத்திற்கு வெண்கலப்பூண் கட்டியதொக்கும். இதன் மறுப்பாகக் கூரேச விஜயபங்கமெனு நூலொன்றுளது. இருசமய விளக்கமெனுஞ் சிவதூஷணச் சுவடிக்கு இருசமய விளக்கத்தெளிவு, இருசமய விளக்கச் சூருவளி முதலிய கண்டன நூல்களுமுள.

முடிச்சூர் அப்பாவு முதலியாரெனுமொரு வைணவர் சிவலிங்கம் ஆண்குறியும் பெண்குறியுமாமெனற்குப் புராண வசனமுண்டென்றும் இதனைத் தெய்வமாகக்கொண்ட மதம் லிங்கமத மென்றும் எள்ளி, லிங்கமத கண்டன மெனுமொரு புத்தகமெழுதி வெளியிட்டார். இவ்வித நிந்தை கூரேச விஜயத்திலுமுண்டு. இந்நிந்தகர், ருக்வேத சிவஜ்யோதியில் "ஸத்யம்பரம்பரமம்நித்யம்| ஓம்ஸத்யாந்தரிக்ஷம் ஓம்ஸத்யம்| ஓம்ஸத்யேநஜாதம்| ஸச்சிதாநந்தமயைஸ்தாணுரூபம்| ததேகரூபம்பூதோபவத்யாஸ்பதம்| ததைவலிங்காகாரம்ஜகதாதாரமித்வேவம்வேதஃ" எனவரு வசனங்கள் "ஆதியந்தமில்லாத நிச்சயப்பொருளான பரமொன்றிருந்தது. அதற்கிணை அதுவன்றி வேறில்லை. அஃது ஆதியந்த மத்தியரகிதமாம் பரவெளியான சத்தியமென்றும், யாதொரு பற்றுக்கோடு மில்லாத வஸ்துவினிடத்தில் ஆகாரந்தோன்றினது போல, தைவாதீனுஸ்பத மானதற்கு இருப்பிடம் அந்தச் சத்தியத்திலுண்டான சத்தியமே

ஸ்தாணுரூபமென்றும், அந்த ரூபம் ஆதியந்தத்திற் சத்திய முளதென்றும், அதுவே ஒருருவென்றும், பூதங்களுக்கு மாத்ருஸ்தானமாயும் இலிங்காகாரமான சச்சிதாநந்த மய மாயும் ஜகதாதாரபூதமாயு மிருக்கிறதென்றும், பொருளாகு மென்பதையும், இப்படிப் பல பிரமாணங்க ளுண்டென்ப தையும், நாதபிந்த வடிவான ஓங்காரப் பிரகிருதியும் வான மும் பூமியுமாயுள்ள அண்டமும் அதுபோலமைந்த பிண்ட மும் இதயதாமரையில் அங்குஷ்ட அளவாயுள்ள கூடஸ்தனும் அந்தச் சிவலிங்காகாரமென்பதையும், வேதவசனங்களைப் புராணவசன மெவ்வாறு மறுக்குமென்பதையும், அப்புரா ணத்துள் சிவலிங்க நிந்தை லிகிதஞ் சிவத்துவேஷிகள் சிருஷ்டியாமென்பதையும் "தவஸ்ரீயேமருதோமர்ஜயந்தேருத் ரயத்தேஜநிமசாருசித்ரம்| பதம்யத்விஷ்ணோருபமந்யதாயிதே நபாஸிகுஹ்பம்நாமகோநாம்" எனும் அந்த ருக்வேதஸம் ஹிதா வசனப்படி இலட்சுமி சமேதராகிய விஷ்ணு வென்பார் சிவலிங்கபூஜை செய்து பரமபதமெனும் வைகுண் டம் பெற்றுளாரென்பதையும் "தேவதேவஸ்த்யசிந்த்யாத்மா அஜய்யோவிஷ்ணுரவ்யய:| ஸர்வரூபம்பவம்ஜ்ஞாத்வாலிங் கேர்சயதிதம்ப்ரபும்|" எனுந் துரோணபர்வ வசனப்படி தேவர்களுக்குத் தெய்வமாய்ச் சிந்தனைக் கெட்டாத ஆத்ம பாவராய் உயர்வுடையவராய் விளங்கும் விஷ்ணுவாவார் சிவனரைச் சர்வரூபியெனத் தெரிந்து மஹாப்பிரபுவாகிய அவரை இலிங்கத்தின்கட் பூஜிக்கின்றன ரென்பதையும், அப்படியே சைவ ஸ்கந்தாதி புராணங்களுஞ் சாலச்சாற்றுத லாற் சிவலிங்க நிந்தை விஷ்ணு நிந்தையுமாம். அதனைப் பூஜித்துப் பேறுபெற்ற மற்றைத்தேவர் முனிவர் முதலினோர் நிந்தையுமாமென்பதையுஞ் சிறிதுமறியாதவரானர். இந்நிந் தகர் கோபுரமாகிய தூலலிங்கத்தையும் பலிபீடமாகிய பத்திர லிங்கத்தையும், தைத்திரீயாருணசாகையில் "சிவலிங்காய நம:" என்றதன்பின் "ஆத்மாயநம: ஆத்மலிங்காயநம:" என்றதையும் எந்த ஆண்குறி பெண்குறி யெ[illegible]ரா வென்பது தெள்ளியோரே சிந்திக்கத்தக்கது. இவரது லிங்கமத கண்டனமறுப்பே பாஞ்சராத்திரமத சபேடிகை

யாகிய சைவ சூளாமணி யெனுமொரு பெருநூலாயுலகி லுலாவித் திரிகின்றது. எம்முடைய திருப்பா, காசியாத் திரை யெனுஞ் செய்யுள் நூல்களிலுஞ் சிவலிங்க வுண்மை சிவாநந் தாநுபூதியாமென விளக்கப்பட்டுளது. மேற் காட்டியபடி ஆபாசவாக்கியங்கொண்டு, சிவலிங்க நிந்தை செய்து திரியும் வைணவர் சீதாதேவி விடயமாக, " சித்திர கூடத்திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட" என்று பெரியாழ் வார் நெறிந்த கருங்குழற்பத்திற் (323) பகர்ந்துளது யாதா மென்பதையும், "வரிவிற்றடக்கை வயவேடன் - தொய்யின் முலைமேற் புல்லுதற்குத் தொடரத் துஞ்சாவருங் கற்பின் - தையன் முனிந்து நோக்குதலுஞ் சாம்பராயிற்றவனுடலே" என்றபடி தமயந்தியை யொருவேடன் மோகத்தாற்றீண்ட முயன்றபோது அவளது கற்புநோக்குத் தீயால் அவன துடம்பு சாம்பராயெரிந்தபடி அக்காக்கை யசுரனுமேனே வெரியவில்லையென்பதையும் யோசித்தனரா ? அவர் கும்பிடு நாராயணர்க்கும் இலக்குமிக்கும் ஆண்குறியும் பெண்குறியு மிருத்தலால் அவர்களையும் அப்படிப்பட்ட பல வாக்கியங் கொண்டு நிந்திக்குமாறு புராணக்கூட்டங்களிற் பல விடங் களில் தீட்டிவைத்தலும் புராணத்திற்கு உத்தரபாக முண் டாக்கலுஞ் சைவர்க்கு ஏலாதகாரிய மல்லவே. அவ்வா றவர்கள் செய்யாததொன்றே அவர்களுடைய பரமயோக் கியதையைக் காட்டப் போதுமான தென்பதூஉம் ஈண்டுண ரற்பாற்றே. நிற்க.

இராமதத்துவ தீபிகையெனும் புத்தகமெழுதிய ஒரு வைணவர் அப்புத்தகத்தில் இராமேசுவரத்தை உரோமேசு வரமென்றெழுதி அங்குள்ள இலிங்கத்தை உரோமலிங்க மென்று மாற்றிக்கொண்டனர். அங்ஙனம் ஈசுவரமும் இலிங்கமும் மாருமல் இராமசப்தமே உரோமசப்தமாக மாறினமையின் யாதொரு பிரமாணமுமில்லாமல் இப்படி யெழுது நிந்தையாய துர்க்கந்தங்கெட்டுக் கனசைவ மணம் கமகமவெனக் கமழ்கின்றதைக் கருத்துளார் கண்டு மகிழ்வரே. அப்புத்தகமறுப்பாகிய இராமதத்துவ தீபிகை யினது ஆபாச விளக்கமெனும் ஒரு பெருநூலில் மேலே

காட்டுற்ற விடயஞ் செவ்வனே சிங்காரிக்கப்பட்டுளது. அதில் வைணவம் நனி நறுக்கப்பட்டது. திருவரங்கக் கலம் பகம் சுக-வது பாட்டில் "வெற்பாவி * * * * பணிப்பாய் சுமக்கும்" எனுஞ் சொற்க ளுபயோகிக்கப்பட்டன. வெள்ளி(மலை) வெற்பிலிருப்பவரை நாம் வெற்பாவியென்றக் கால் மற்றவர் வைகுண்டமெனு மோரூரிலிருப்பவரை மண்ணுவியென்னரோ வென்பதையும், வேங்கட வெற்புறை நாராயணரும் வெற்பாவியாவரே என்பதையும், பணி யெனும் பாம்பைச் சிவனுரணிதல் கொண்டு அவரை நாராயணர் படுக்கும் பாம்பான பாயைச்சுமக்கும் ஆவி யெனும் பொருடரு சொற்களை நாம் சொன்னல் மற்றவர் கிருஷ்ணர் மண்ணுண்டல் கொண்டு அவரைச் சோமசுந்திரத் தினது மலர்க்கரக்கூடையி லொட்டிய மண்ணைத்தின்னும் ஆவியெனும் பொருடரு சொற்களைச் சொல்லாரோ வென் பதையும், அக்கலம்பகஞ் செய்தார் உணராராயினர். இங்கே வைணவர், கிருஷ்ணருண்ட மண் அக்கூடை மண்தானே வெனக் கடாயின், சைவர் அரனுரணிந்த பாம்பு அப் பாய்ப் பாம்புதானே வெனவுங் கடாவுவார். நிற்க.

பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திர கண்டத்தின் ஓர் பிரிவில் சித்திரகூட மான்மியஞ் சொலப்பட்டதாகவும், அதுவே சித்திரகூட புராணமெனப் பாடப்பட்டதாகவுஞ் சிவதூஷண வைணவர் செப்பி வாசிக்கும் அப்புராணத்து சச-ம் படலத்தில் "மூன்றென்ருேது மாயிரத்தவர்" எனவும், "முத்தர்மா வைணவரவர்" எனவும் வருபவை தில்லை வேதியர் மூவாயிரவரையுங் குறிக்கின்றன. அவர்கள் பரம்பரையில் வருமனைவருஞ் சிவசின்ன தாரணராய்ச் சிவார்ச்சனை செய்யுஞ் சிவோபாசகராய்த் தில்லையிற் செறிந்து வாழ்பவராயுளா ரென்றற்கு இஞ்ஞான்றங்குள் ளாரே சாக்ஷியாவர். இப்படிப்பட்ட அநுபவத்திற்குஞ் சுருதிகட்கும் மாறுகோளாக வேற்பட்ட யாதொரு புத்தகம் நவீனமெனற்கு அவ்வேதியர் "சிறந்த வூர்த்துவ புண்டரஞ் சேர்ந்த பன்னிரண்டார்" என அப்படலத்து வருவதுந் தகு சாக்ஷியாம். இங்கே, முன் வைணவராயிருந்த அம்மூவா

யிரவருமே பின் சைவராய் மாறியிருக்க வேண்டுமென்னின், அங்ஙனம் வைணவத்திற் பசையில்லை யென்றும். அற்றன்று; வைணவர் மூவாயிரவருந் தில்லையைவிட்டு வேற்றிடஞ் சென்றவராக வேண்டுமென்னின், அப்புராணப்படி சுவேதத்தீவிலிருந்து விஷ்ணு மூர்த்தியோடு வந்த அன்னோர் அவ்விஷ்ணு அர்ச்சனைத்தொழில் விட்டேகல் கூடாதென்பதனாலும், சைவ மூவாயிரவர் யாவரோ வென்னுங் கேள்விக்கு விடை யிறுக்கும் வகை ஆண்டில்லாததனாலும் அதுவும் பொருந்தாது. சொற்ற சித்திர கூடமெனும் பெயர் தர்ச நோபநிஷத்து "சிதம்பரந்துஹ்ருந்மத்யே" என்றபடி இருதய சிதாகாசமெனுஞ் சிதம்பரப்பெயரினின்றுஞ் சிறப்புடையதன்று. என்னை? அங்கு வீழ்ந்து விழிமூடித் துயிலும் ஸ்ரீ கோவிந்தராஜரது கோயில் சிறுமையண்டந்திருத்தலே சான்றாகுமாகலின். சிதாகாசத்தின் மிக்க கோயில் விளம்பொண்ணாதாகலின், "சித்ரகூடம் பெரிய கோயில்" என்னாது "திருவரங்கம் பெரிய கோயில்" என வைணவர் சொல்லுதலு மியைபின்மையுற்றுச் சித்திரகூடத்தைச் சிறிதாக்கிற்றென்பதூஉம் ஈண்டுணரற்பாலதே. அரங்கமென்பது நாடகசாலையெனும் பொருள் பயக்கும். அதில் நாராயணர் நட்டுவராகித் திருவாகிய இலக்குமியை ஆட்டுவித்துச் சம்பு கேசுவரரை யுவப்பித்தது காரணமாக அது திருவரங்கமெனும் பெயர்பெற்ற விவரம் பழநூற் பிரசித்தமென்பது (சிவனுங் காளியும் ஆடுகின்ற கூத்தை கோவிந்தராஜர் பார்த்தார் என்று பிதற்றும்) அக்கூடப்புராண வைணவர்க்கு வயிற்றெரிவை யுண்டாக்கும்போலும். ஸ்ரீ கோவிந்தராஜர் ஸ்ரீ சிதம்பரேசுரரைக் கும்பிட்டும் குணப்பட்ட விவரம் எந்தம் பொருளுங் கந்த புராணத்திலெனும் பெருமைவாய்ந்த ஸ்காந்தத்துச் சூதசங்கிதையில் அத்தியாய வொழுங்காக வுண்டு. ஆதிசங்கராச்சாரியர், தங்கருத்திற் கியைந்தவாறு வேதபாஷியஞ் செயற்கு இது வழியாமென்று கஅ முறை படித்துணருமேம்பாடு பெற்று நின்றது அச்சூதசங்கிதையேயாம். சிதம்பரமாஞ் சிதாகாசரகசியஞ் சிவயோகிக ளுணரத்தக்கதென்பது முதலியவற்றை எமது

தகராலய ரகசியச் செய்யுள்களு மினிது விளக்குமல்லவோ? அத்தகைய சிதம்பரமெனுஞ் சொல்லைச் சொல்ல நாணும் வைணவர் சிதம்பரத்திற்கனுப்பவேண்டிய யாதானுமோ ரெழுத்து மடிப்பின் மேலே சித்திரகூடமென வெழுதி அதைத் தபாலிற் சேர்ப்பாரோ? சேர்ப்பினும் அஃதத் தலத்தையடையுமோ? இப்படியே சிவநிலையமாகிய திருவண் ணுமலையைச் சுதரிசனகிரியென்று அவ் வைணவர் சொல்லித் திரிவதுமாம். அன்னணஞ் சொல்லச் சயமுனி பாரதமுண் டெனவுஞ் சாற்றுவர். அதிலவ்வா றிருப்பினும் அது வியாச வசனங்களுக்கு விரோதமாகலின் பிரமாணமாகாது. வேத விரோதமாம். திருவண்ணுமலையைப் பிரமனேடரி தேடி யலுத்த விஷயம் வைணவத்தைப் பாதாளத்தி லமிழ்த்துகின்ற பைப்பலாத சுருதியில் சிவனரது பாத தாமரையை விஷ்ணு வென்பார் தேடுந்தகையினரெனும் பொருளைத்தரூஉம் " யத்பாதாம்போருஹத்வம்த்வம்மருக்யதேவிஷ்ணுநாதுநா " எனும் வசனத்தானும், ருக்வேத ஸம்ஹிதையில் விஷ்ணு வென்பார் வராகமாகிப் பூமியைக் கிழித்துச் செல்லுங்கால் ஆயிரவருடங்களாயின, சிவனரது பாதத்தைத் தேடுவதில் அவாவுடையவவர் தாயுநீர், தந்தையுநீர், உடன்பிறந்தாருநீர், மூத்தாருநீர், உயர்ந்தாரு நீரென்று துதித்தனர்: இம் மகிமையையறிய வல்லானெவனே அவனே காண்கின்றவ னுகின்ருன், அறிந்தவனுகின்ருன், கர்த்தாவாகின்ருன், காரியஞ் செய்கின்றவனுகின்ருன், இவ்விதமறிய வல்லா னெவனே அவன் சிவசாயுஜ்யத்தை யடைகின்ருன் சிவசா யுஜ்யத்தை யடைகின்ருனெனும் பொருளைத் தரூஉம் " விஷ்ணுர்வேவராஹம்ரூபமாஸ்தாயபூமிம்விதாரயந்ஸஹஸ்ரம் ஸமாஆஸந், பாதாந்வேஷணபரோபூத்வா, த்வமேவமா தாஸி, த்வமேவபிதாஸி, த்வமேவப்ராதாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவஸ்ரேஷ்டோஸி, யஏவம்மஹிமாநம், வேதாத்ருஷ்டாபவதி, விஜ்ஞாதாபவதி, கர்தாபவதி, காரயி தாபவதியஏவம்வேதா, சிவஸாயுஜ்யமாப்நோதிசிவஸாயுஜ்ய மாப்நோதி " எனும் வசனத்தானும் இனிது பெறப் படுவதால் மேற்போந்த சபேடிகைக்காரரும் அதனை மறுக்

கும் வழியின்றி மாயாநாராயணன் கதையெனக் கரைந்ததையுமேலே விளக்கினும். நிற்க, சிவனே பரம்பொருளென விஷ்ணுவாவார் பூஜித்துப் புகழ்பெற்ற செய்தி பாத்மத்திற் பெரிதும் பேசப்பட்டுளது. அதற்கு மாருக அந்தச் சிவனை யிழித்துக்கூறும் பாத்மோத்தர மெனுமொரு புத்தகம் வைணவர் வைத்திருக்கின்றனர். பூர்வபாகத்தைச் செய்த வியாசமாமுனிவர் அதற்கு முரணுக உத்தரபாகத்தைச் செய்தாரென்ருல் அம்முனிவரன்ருே முழுமூடராக வேண்டும். அஃதமையாது. பூர்வமில்லாமே உத்தரமென்பதொன்று உறுதியாதற் கேதுவுமில்லை. ஆதலால், அவ்வுத்தரபாகஞ் சிவத்துவேஷிகளா லுண்டாக்கப்பட்ட தென்பதே யமைவுடைத்து. இப்படியே சிவநிந்தை செய்வான் சில புராணங்கட்கு உத்தரபாகங் கற்பிக்கை யுண்டெனற்குச் சிவபரத்துவங் கூறும் இலக்ஷங்கிரந்தங் கொண்ட ஸ்காந்தத்திற்கு முரணுகக் "குத்திரவகலிச் சித்திரகூடக் குவவினைக் காந்தவுத்தரத்தும்" என்று அச்சித்திரகூடப் புராணப் பாயிரத்தில் வருவித்ததே காட்டாகும்.

ஈசாவாஸ்யாதி பத்துபநிஷத்துக்கும் இராமாநுஜர் செய்யும் அருத்தத்தை அவர் சீடர் கூரத்தாழ்வார் எழுதிக்கொண்டு வருகையில் ஆசிரியர் தவருன அருத்தஞ் செய்தலை அச்சீடரறிந்து அப்படி நானெழுதேனென்றவுடன் அவரை முனிந்து தள்ளிய அவ்விராமாநுஜர் பின்பு சீடர் சொன்னதே சரியெனத் தேர்ந்து அவரபிப்பிராயப்படி யெழுதுவித்தாரெனுஞ் செய்தி குருபரம்பராப்பிரபாவம் இளையாழ்வார் வைபவத்திலுண்டு. இவ்வாறு முடிந்த பாஷியம் சிற்றறிவுகொண்டு தெரிந்தமட்டு மெழுதியதென்பதிற் சிறுவரையு மையமில்லை. அன்றியும், கலியுகம் ௩௦௫அ-ல் பிறந்திருந்த ஆதிசங்கராசாரியர் சரித்திரத்திலும் நீலகண்ட சிவாசாரியர் சரித்திரத்திலு முள்ளபடி அச்சங்கராசாரியர் காலத்தில் வயோதிகராயிருந்த அந்த நீலகண்ட சிவாசாரியர் செய்த சைவ பாஷியத்திலுள்ள விசிட்டாத்துவித சப்தத்தையே கலியுகம் ௪௧௧அ-ல் பிறந்திருந்தவரெனப்படும் இந்த இராமாநுஜர் கிரகித்தவராகித் தமது புத்தகம் விசிட்டாத்

துவித பாஷியமெனுமா றெழுதிவைத்ததும், அந்த நீலகண்ட பாஷியப்பொருளை பாஞ்சராத்திரபரமாக அவ்விராமாநுஜ ரெழுதியிருப்பதும் அவ்விரண்டனையும் படித்த பண்டித ரறிந்தவைகளே யாகலின் அவ்விராமாநுஜ பாஷியமொரு தனிபாஷியமாகவுமாட்டாது. இப்படிப்பட்டதையே "ஸ்ரீ பாஷியம், ஸ்ரீ பாஷியம்" என்று சில வைணவர் கொண்டாடு கின்றூர். இவ்வுண்மையுணர்ந்த நல்லூழ் வைணவர் பலரும் இதனை நம்புதல் இருட்டறையில் மலடுகறந்தெய்த்ததாகு மென்று வைதிக சைவம் புகுந்தனரென்றல் இவ்வுலகறிந்த செய்தியே. நிற்க, கச்சி மல்லை மயிலையெனு மூர்களிலுதித்த பொய்கையார், பூதர், பேயாரெனு மூன்றூழ்வாருந் துவாபர யுகம் அ௬0௯00-ல் பொருந்திய சித்தார்த்தி வருஷம் பிறந் தார்களென்று கூரேச விஜயங் கூறுமென்பதைத் "துவாபர மெண்ணூற்றறுபதாயிரத் தொன்பதி னூறெய்து சித்தார்த்தி யில் * * * * உதித்தே" எனும் பாயிரக்கூற்று னறியலாம். இவ்விடயம் மேலைக் குருபரம் பரையினுமுண்டு. மேற் காட்டிய கூரேச விஜயச் செய்யுளுரையில் "அ௬௨௯0௧ என்று குருபரம்பராப்ரபாவ வசநத்திற் காணப்படு கின்றது" எனவு மெழுதப்பட்டுளது. இவ்வுரை குருபரம் பரையை ஓராறு விலக்கிக் கூரேச விஜயத்தையே யுறுதிப் படுத்துவதாகும். ஆயின், அ௬௯000—வருஷங் கொண்ட துவாபரயுகாந்தத்திற் பிறந்து பாரதயுத்த நடாத்தி வெற்றி யடைந்து ௩௫—வருஷஞ் செங்கோல் செலுத்திக் கலியுகாரம் பத்தில் உத்தரதிசை நோக்கிச் சென்று நற்கதியடைந்த தருமபுத்திரர் தம்பியான அருச்சுனராஜனுல் உத்தரகிரியை விதிப்படி தகனஞ்செய்யப்பட்ட சரீர பூதராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி முடிவு காலத்திற்கு ௩0௯௯-வருஷத்திற்கு முற்பட்ட காலத்தே அவ்வாழ்வாருள்ளவராகின்றூர். குரு பரம்பரைப்படியாயின், அவர் ௯0௯அ-வருஷத்திற்கு முற் பட்டவராகின்றூர். இப்படிப் பல்லாயிரக்கணக்கான புரட் டில் எப்படியாயினும், அவ்வாழ்வார் தம் பாடல்களில் அக் கிருஷ்ணமூர்த்தியின் செய்கைகளைச் செப்பித் துதிக்கமாட் டார். துதித்திருத்தலானே அம்மூர்த்தி முடிவுக்குப் பிற்

காலமே அவர் பிறந்தவராகவேண்டும். அன்று, அவ்வாழ்வார் நெடுங்காலமிருந்துளார் : கிருஷ்ணர் காலமு மதனுட்படும் : அதனாலவர் அவ்வாறு துதித்தா ரென்னின், அது பொருந்தாது. ஏனெனின், வைணவர் கூறுமாறு அங்ஙனம் பாஞ்சஜந்ய முதலிய அமிசராக முன்னர்ப் பிறந்துள்ள அந்தவாழ்வார்கள் பின்னர் பிறந்துள்ள தங்கணுயகனை கிருஷ்ணரைக் கண்டு பேசவும் அவருந்தமக்குமுன் அடியவரா யவதரித்த அவர்களைக் கண்டு பேசவும் வியாசரைக்கண்டு பேசவும் நேரிட்டு அவ்விவரம் வியாசரெழுதிய பாரதாதிகளிலும் வந்திருக்கவேண்டும் ; அப்படி வராததனுலும், குருபரம்பரை யவ்வாறு கூருததனுலும் கிருஷ்ணமூர்த்திக்குப் பின்னே திருவல்லிக்கேணியி லேற்பட்ட பார்த்தசாரதி கோவில் குறித்து "ஒரு வல்லித் தாமரையா ளொன்றியசீர் மார்பன் - திருவல்லிக்கேணியான் சென்று" என அப்பேயாழ்வார் பாடியிருப்பதனுலு மென்றேர்க. இன்னகாரணங்களால் கலியுகத்தில் திருவல்லிக்கேணியாலய மேற்பட்ட பின்னே பிறந்த ஆழ்வார், சுகர்பாகவதமென்பதிலுள்ள செய்திகளைக் கிரகித்துப் பாடினுரென்பதும், ஆழ்வார்களைத் தேவார திருவாசகப் பேராசிரியர்க்கு முற்பட்டவராய்த் துவாபர யுகத்தவராய் வைக்கவேண்டுமெனும் பேராசை யுள்ளவரால் அப்பிறப்பு வரையறை கற்பித்தெழுதப்பட்டதென்பதும், அப்படியேயப்புத்தகங்களிற் சில்வேறு சிறப்புக்களுமெழுதப்பட்டன வென்பதும் திறம்பாத்தீர்வையாகும். இதனே, மதுரைச் செந்தமிழ் சங்கத்துச் சோபகிருது வருஷத்துப் பத்திரிகைத் தொகுதி - உ, பகுதி - ௲-ல் "கர்ணபரம்பரைச் செய்திகளைக் கொண்டு எழுதப்பட்ட சில நூல்களில் ஆழ்வார்கட்குப் பின்வருமாறு காலநிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளன." "இங்கே காட்டிய காலவளவுகள், நவீனமுறையிற் சரிதவாராய்ச்சி செய்வார்க்குப் பின்னேர் அதிகமாகப் புனைந்த கற்பனைகளாகத் தோன்றுகின்றன" என்று மு. இராகவையங்கா ரென்பாராலெழுதப்பட்டதும் ஆதரிக்கின்றது. ஈண்டின்னுமொரு விசேஷங் கவனிக்கத்தக்கது. அதாவது:—

"நாமே போய் இவர்களை வாரிப் பிடியாகப் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று ராமக்ருஷ்ணுதி யவதாரமாக அவதரித்துப் ப்டாதனபட்டுத் திருத்தப் பார்த்தவிடத்திலும்" என்று வருகிற விடத்திலே "விஸஜாதியரான நமக்கு இது சாத்தியமன் றென்று * * * * மநுஷ்யஸஜாதியரான ஆழ்வார்களை" நாராயணரனுப்பினரென்றும், அவர்கள் நாராயணருடைய தேவி - ஆயுதம் - வாகனம் - ஆபரணம் முதலியவைகளும் நித்திய சூரிகளுமே யென்றும் அக் குருபரம்பராப்பிரபாவ அவதாரிகையி லெழுதப்பட்டுளதே. இவ்விடயம் :—ஸ்ரீநாராயணருக்குச் சருவஞ்ஞத்துவமுஞ் சருவ வல்லமையும் யாண்டுமில்லையென நனிகாட்டுவதோடு கிருஷ்ணருக்குப் பின்னர்த்தான் எல்லா ஆழ்வாரும் பிறந்தனரென்பதையு நிலைநாட்டுவதாயிற்று. "நாமேபோய்" என்பது முதலிய இவ்வவதாரிகை விடயமும், திருவாய்மொழி ஒன்றெனும்பத்தில் எல்லாரும் வீடுபேற்றை யடைந்துவிட்டால் உலகமில்லாதுபோமென்றே நாராயணவழிபாட்டிற்கு வேருன வழிபாடுகளை யுண்டு செய்தது, அந்நாராயணனுடைய மாயந்தானெனும் பொருள் தரு "போற்றி மற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டும்மையின்னே — தேற்றிவைத்த தெல்லீரும் வீடு பெற்றாலுலகில்லை யென்றே — சேற்றிற் செந்நெல் கமலமோங்குந் திருக்குருகூரதனுள் — ஆற்றவல்லவன் மாயங் கண்டீரதறிந்தறிந்தோடுமினே" (3111) எனுஞ் செய்யுளுமொன்றற்கொன்று நேர்விரோத மாதலுங் காண்க. இச்செய்யுளால் ஆழ்வார்களுலகைத் திருத்தவல்லவராக வந்தவரல்லரெனல் வியக்தம். இவையிற்றையன்றி மற்றொரு கேடும் வைணவத்திற்கு வேண்டுமா? இங்ஙனமாக சன்மார்க்க சைவசமய சாஸ்திரங்களை அக்குருபரம்பரையிற் "கள்ளப் பொய்ந்நூ" லென்றதற் கிணங்க இராமாநுஜ நூற்றந்தாதி ௯௯-ம் பாட்டில் "தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும்" எனுந்துராகிருத வசனமும் பிறநிந்தைகளும் பிறந்தமை பேராச்சரிய மல்லவா? இப்படிச் சைவ சாஸ்திர நிந்தை - ஸைவசமயநிந்தை - சிவசின்ன நிந்தை - சிவாலய

நிந்தை - சிவனடியார் நிந்தை - சிவாசாரிய நிந்தை-சிவசத்தி நிந்தை - சிவநிந்தை யென்பவற்றைச் செய்வனவாயும், முன் பின் முரணிக் கூறுவனவாயும், சொற்குணம் வாளா போமாறெழுதப்பட்டனவாயும், வேத முதலிய பிரமாணங் களை மீறுவனவாயும், உண்மையில்லாதனவாயும், சாதுக்கள் வெறுக்கத்தக்கனவாயு முள்ளவைகளே யைணவர் புத்தகங் களுஞ் செய்கைகளுமென்பதை யிம்மட்டில் விளக்கினோம்.

ஓ சத்திய சைவமரபிற் ரோன்றிய தசையுடையீர்! இனியேனும் அவ்வைணவர் போதகங்களினின்றும் விலகுங் கள். இலிங்க புராண உத்தரகாண்டம் முகடி தோற்ற முரைத்த அத்தியாயத்தில் "என்றனு மிங்கெனை வணங்கி யீர்ஞ்சடை யண்ணலையுமையோ டிகழ்ந்துநாளு-மொன்றி யுறைவோர் பொருள்க ளொன்றறவே வவ்வி யவணுற்றே நின்று - மன்ற வருந்திடுதியான் மற்றவன் றனருளினு லன்றோ வானி - னன்று மிக வாழ்கின்றோ மலரோனும் யானுமென நவின்று போனான்" எனவரு பாட்டில், வாராய் மூதேவி! "என்னை மட்டும் வணங்கிச் சிவபிரானை யும் உமையவளையு மென்று மிகழ்ந்து திரிவோர் பொருள் களை நீ கவர்ந்தனுபவிக்கக் கடவாய்; பிரமனும் நானும் அந்தப் பிரானருளினாலன்றோ விண்ணுலகில் வாழ்கின்றோ மென்று நாராயணப் பெருமாள் நவின்றுசென்றார்" எனப் பொருளாவதையும், இலக்ஷங்கிரந்தங் கொண்ட மஹேதி காசமாகிய சிவரகசியம் ௬-வது அமிசம் மன்மதவதைச் சருக்கத்தில் "பரமனை நிந்தை செய்யும் பாவியைக் கண் ணுற்றாலுந் - திரமுறு பாவஞ் சேரு மதுதீரச் செய்யுஞ் சாந்தி - யுரமுறு நூறுபேதஞ் செய்யினு மொழிவுறாதா - லரனுறு பத்திபெற்றோ ரபராதன்றனைச் சேராரே" என வருவதையும் மார்க்கண்டேய புராணம் தரும பக்ஷி ஜைமினி சம்வாதம் ௧௬-வது அத்தியாயத்தில் "தெய்வநிந்தை" நர கத்தினின்றும் வந்தவர்களுக் கடையாளமாகக் கூறப்பட் டிருக்கிற தென்பதையும், மேற்படி ௪0-வது அத்தியாயத் தில் "கெடுதியானவற்றைப் பிறருக்கு வலிந்து போதிப் போனும், வேதத்தைப் பழுதி கூறுவோனுமாகிய இவ

ரனைவரும் மரணகாலத்தில் மயக்கத்தோடொழிவர் " என வருவதையும், சிவலிங்தகர் அனேக நோய் முதலியவற்றால் வருந்துவ ரென்று வைணவபுராணமாகிய நாரதீயபுராணம் நவில்வதையும், அப்படி வருந்தினவர் பல்லோருள்ளுஞ் சிவாலயத்தைக் கண்டபோதுஞ் சிவனடியாரைக் கண்ட போதுங் கண்களை மூடிக் கண்கெட்டலைந்தவரனேக ரென்பது இக்காலத்தும் பிரத்தியக்ஷ மென்பதையு முணர்மின். வேளாளமரபிற் றோன்றி வைணவராயிருப்பவர்கள் தம்மையறியாதாரிருப்பிட மெய்தித் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டால் அவர் நீயிர் யாவரென்று வினவ நேரிடும். அங்ஙனம் நாங்கள் வைணவர் என்றக்கால், அவர் இவர்கள் வடுகரோ ? இடையரோ ? தாதரோ ? சாத்தானியரோ ? ரெட்டிகளோ ? எதிபிறங்குந் திருமேனிகளோ ? எங்குங் கண்ட திருமேனிகளோ ? தீண்டாத் திருமேனிகளோ ? மற்றெவர்களோ ? என்றையுற்று நிற்க நேரிடுமன்றோ. பின்பு அஃதுணர்ந்து நாங்கள் வேளாள ரென்னினும் பெயர்த்தும் நீவிர் புலாலுண்பவர்களோ ? எனவும் வினவ நேரிடுமன்றோ ? அங்ஙனம் சைவர் என்றக் கால் அம்மட்டில் தொன்றுதொட்டுவரு வழக்குப்படி இவர்கள் வேளாளர் புலாலருந்தாப் புனிதா பரமனடியவரென அவருணர்ந்து கொள்வாரன்றோ ? இவ்வளவு மேன்மைத்தான சைவசப்தந் தாங்கிச் சைவரா யிருக்கத்தக்க நீங்கள் வைணவராக வெண்ணல் இகத்தும் இழிவா மென்பதை யுணர்ந்து, இலிங்கபுராண உத்தரகாண்டம் அ-வது அத்தியாயத்தில் " வைதிக சைவத்தின் வழி நின்ற வல்லோர் " என்றற்கியைய நுங்கள் சொந்த மதமான வைதிக சைவ நெறி நின்றுய்யுங்கள் ! இன்னுமிந்நூற்கண் விளக்குவனவற்றையுங் கவனியுங்கள் !

சிவாகமம் உஅ-இலுஞ்சேராத வேதபாகியமான சோமலாகுள பைரவாதியாகமங்களிற் சொல்லப் படுபவை சவபஸ்ம சாஸ்தி கபாலதாரணமும், கபாலபாத்திரமும், சுராபானாதிகளுமாம். இவைகளிலுள்ள பஸ்மத்தை வைதிகர் தீண்டொண்ணாது அதனையணிபவரைக் காணினுங்

தோஷமென்று தரும சாஸ்திரங்களிற் சாற்றியிருக்க, அச் சொற்களுக்கு வைதிகத் திருநீற்றையே யருத்தம் பண்ணிய சிவத்துவேஷ வைணவரையும் அவர் புத்தகங்களையும் எந்த வைதிகசீலர் நன்கு மதிப்பார்? சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோதமுண்டாகில் ஸ்மிருதியைத் தள்ளிச் சுருதியைக் கொள்ளவேண்டிய தென்று மீமாம்ஸா சாஸ்திரம் விதித் ததை யவரறியாததுதா னென்னே? புண்ணியநதி பலவற் றுள்ளுஞ் சிறந்து விளங்கா நின்ற கங்கையின் மூழ்கும் பாக்கியமிழந்து "சடைச்சாறு" என்று அதனை யிகழ்ந்து திரியும் அன்னவர், உடற்பிணியையும் மலப்பிணியையு நீற்றி யருளு நீற்றையு மிகழ்ந்தழிதல் ஓரதிசயமன்றே. இது கிடக்க. முகம்மதியரும் வேறு சிலரும் பிசா சோட்டவும் பிணி தீர்க்கவும் அத்திருநீற்றினைக் கொள்வதுபோலத் திரு மண்ணைக் கொள்வதுண்டா? இல்லையே. இப்படி யநுபவ சித்தமான அந்நீறணிதல் வேதத்திலுள்ளதாமென வொப் புக்கொண்ட சில வைணவர், அது பிராயச் சித்தாங்கமென் றும், ஓமாங்கமென்றும், சிவனடியாரே யணிவதென்றும் ஒருவகையாகக் கூறுவர். அங்ஙனமாயின், உலகரெவரும் பாவப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டியவர்களே யாத லால் அனைவருமணியலா மென்பதூஉம், விஷ்ணு முதலினோரும் அதுபற்றியே யணிந்தா ரென்பதூஉம், அவரும் சிவனடியா ரென்பதூஉம், ஓமம் அஃ தணியாமற் செய்யொண்ணு தென்பதூஉம் உறுதிப்படு மாலோ. அதனுற் பஸ்மதூஷண வைணவர் வைதிக கர்ம மான ஓமத்தையு மொழித்தவராவரே. இது முதலிய கார ணங்களாலன்றோ வைணவத்தைப் புறச்சமய மென்பதும் பழுதறு வழக்காயிற்று. சாதாதபஸ்மிருதியில் (த்ரிபுண்ட்ரேந விநாஸந்த்யாத்ரிபுண்ட்ரேநவிநாஜப:| த்ரிபுண்ரேநவிநாஸ்ராத் தம்ராக்ஷஸம்பரிகீர்த்திதம்||) "திரிபுண்டரதாரணமின்றிச் செய்யும் ஸந்தியாவந்தனமும், ஜபமும், சிராத்தமும் ஆகிய இவற்றின் பலனை இராக்ஷதர்கள் அபகரிப்பார்கள்" என வருதற்கும், (ஸத்யம்சௌசம்தபோஹோமஸ்தீர்த்தந்தேவாதி பூஜநம்| தஸ்யவ்யர்த்தமிதம்ஸர்வம்யஸ்த்ரிபுண்ட்ரம்நதார

யேத்||) "எவன் திரிபுண்டரமணிபவில்லேயோ அவனுடைய ஆசாரம் சத்தியம் தவம் ஓமம் புண்ணியதீர்த்தஸ்நாநம்தேவ பூஜையெல்லாம் நிஷ்பலமாகமுடியும்" என வருவதற்கும், காத்தியாயநஸ்மிருதியில் (த்ரிபுண்ட்ரம்யத்யத்ருத்வா துகுர் யாத்யத்கர்மதத்வ்ருதா) "திரிபுண்டரந்தரித்துக் கொள்ளாமல் எக்கிரியையையெவர்செய்கின்ருரோ அஃதுசுடேருது" எனவருதற்கும் அவ்விலக்குக் கூறும் வைணவரென்செய்வாரோ? செயற்பாலதில்லையாகலின், விபூதிதாரணம் சுரௌதமார்க்கமுஞ்சிமார்த்த மார்க்கமு மென்றுகொண்டு நித்திய நைமித்திக கர்மங்களில் அநுஷ்டிக்கத்தக்கதேயாகும். இந்தப் பஸ்மதாரணத்தை உலகை வெறுத்து மோக்ஷமேபொருளென நிற்குஞ் சன்னியாசியுந் தள்ளொணுதென்பதற்குப் பஸ்மஜாபாலோபநிஷத்தில் "யதிர்பஸ்மதாரணம் த்யக்த்வாஏகதா உபோஷ்யத்வாதஶஸஹஸ்ரப்ரணவம்ஜபத்வாஶுத்தோபவதி||" என வருவது "சன்னியாசியும்ஒருவேளை பஸ்மதாரணஞ் செய்துகொள்ளத் தவறுவனேல் உபவாசமிருந்து பிரணவஜபம் பன்னீராயிரத்தால் அப்பாவ நீங்கிப் பரிசுத்தனுவன்" எனுமருத்தந் தருதல் காண்க. இத்திற மேம்பாடுடைய விபூதியை மதியாத வைணவ ருளொருவர் சென்னையிலுள்ள ஒரு விநாயகர் சன்னிதியி லளித்த திருநீற்ஸுறத் தமது கையில் வாங்கி அதை யாசனப்புறத்தில் தேய்த்துவிட்டுத் தம்வீடு சென்றவுடன் அத்தேய்ப்புண்டவிடத்தில் எப்படிப்பட்ட வைத்தியராலுங் குணப்படாத ஒரு பெருங்கட்டி கிளம்பி அதனல் மிகவும் வருந்தும்போது இது வந்தகாரணம் தமது அடாச் செய்கையேயாமெனத் தெளிந்து அன்றே யவ்விநாயக மூர்த்திக் கபிடேகஞ் செய்யும்படி செய்வித்து அக்கோவில் விபூதி தருவித்தணிந்தவுடன் சுகப்பட்டவிவரம் அச்சென்னை வைத்தியநாத முதலியார் வீதியில் விஷ்ணு பக்தராயுள்ள அரங்கநாத முதலியாரிடம் இஞ்ஞான்றுங் கேட்டறியலாமே. இவ்வாறு மாந்தர் பலருந் துன்புழக்கவும் இன்பிழக்கவுங் காரணமாயுள்ளவை அந்த அநியாய வைணவர் அஸ்தலிகிதங்களே யாகும். பார்த்த மட்டில் தனித்திரு நீறணிமேனி தவத்தழகாகப் பிரகா

சிப்பதும், பட்டைப் புண்டரமணிமேனி பயங்கரமாகத் தோன்றுவதும் அந்நியரு மறியவுள்ளனவேயாம். வைண வப் பெண்களும் அப்பட்டைப் புண்டரந் தரியா மைச்குக் காரணம் அதுவன்ருே. நிற்க. சைவரணியும் விபூதி வைதிகமானதுபோல நாமணியும் ஊர்த்துவ புண்டர மும் ஆகாதிருக்கிறதே யெனத் துக்கித்த இக்காலத்து வைணவர் அப்புண்டரங் கூறுவான் காத்தியாயனோப நிஷத்து உத்தரவராஹோபநிஷத்து என்பவற்றை யுண்டாக்கி அவற்றைக் காட்டவேலாது பொய்ப்பட்ட செய்தி பல் லோருமறிய வுள்ளதே. அச்சிடப்பட்ட கoஅ - உபநிஷத் துக்களிற் காத்தியாயநமொன்றுண்டா? ஐந்தத்தியாயமான வராஹோபநிஷத்தில் உத்தரமுண்டா? இல்லையே. இப்படிப் பட்டவர்க்கு முன்னிருந்த சில வைணவராற் பிரமாண்ட புராணத்துச் சில பிரதிகளிலும், நவீன பாத்மோத்தரத்திலும் அம்மண்ணணிகை கற்பிக்கப்பட்ட தென்பதை யறியாத சிலர் அவ்விரண்டிலுந்தான் அத்திருமண்ணணிதல் சொல் லப்பட்டதென்ப. வேறு சிலர் ஹாரீதஸ்மிருதியில் சுவேதத் தீவிலிருந்து வைநதேயர் கொடுவந்த மேலைக்கோட்டைத் திருநாராயணபுரத்து வெண்மண் சித்திரோர்த்துவ புண்டர தாரணத்திற்குச் சொல்லப்பட்டதென்ப. இந்த ஹாரீதவச னம், இத்தேய வைணவரிடமிருந்து கிடைத்த புத்தகங்களி லேயே யுண்டென்றும், காசி தேயத்தாரா லச்சிடப்பட்ட உo-மிருதிப் புத்தகங்களிலும் மூன்று தேயத்திலிருந்து வந்த ௩௬ - மூலஸ்மிருதியடங்கிய மூன்றேலைப் புத்தகங்களிலு மில்லையென்றும் பண்டிதர் - தொழுவூர் வேலாயுத முதலியார் மொழிபெயர்த்த மாதவிய வுரையில் ஊர்த்துவ புண்டரமெனு மிடத்தி லெழுதப்பட்டுள்ளது. அதனல் அவ்வசனமும் வைணவர் நுழைப்பாம். அந்நுழைப்பும் வேதத்திலில்லாத விடயத்தை வைதிகமாக்காது. வேறுசிலர், உடம்பிற் பூசிக் குளிப்பதற்காக நூல்களிலெங்கேனும் வெண்மண் சொல்லி யிருந்தால் அதனையும், பெரியோர் திருவடிச்சுவட்டு மண்ணைப்

பக்தர் பக்திமேலீட்டா லெடுத்து நெற்றியி லிட்டுக்கொள் வதுபோல இராமேசுரத்து வெண்மிருத்திகைபோ லுண் டாகுமண்ணை யாத்திரையிலுள்ளார் ஏகதேசந் தரிக்கும்படி யெங்கேனுஞ் சொல்லியிருந்தால் அதனையுஞ் சித்திரோத்துவ புண்டரத்திற்கு ஆதாரமென்னப் பார்க்கிறார். விவரமின்மை யின் ஏலாது. இவ்வித யோசனையெல்லாம் அப்புண்டரம் நூதனமென வொப்புக்கொள்கின்ற குருபரம்பரையாதி வைணவர் புத்தகங்களுக்கு விரோதப்படுதலு மன்றிப் பொய்யிற் புகுங் குற்றமுமாம். ஆதலால், எமது கொள்கை அவைதிகமாயினும் எம்முன்னோரா லாசரிக்கப்பட்ட படியே யெம்மாலும் ஆசரிக்கப்படுவதாயிற் றென்பதே இவ்விடயத்தில் இராமாநுஜ வமிசத்தார்க்கு மேன்மைத் தாகும். மற்றையர் இக்கொள்கைக் குடம்படல் பெரிய அநியாயமேயாகும். அந்த இராமேசுர மிருத்திகை போன்ற வெண்மிருத்திகை முதலியவற்றை விபூதிகிடையாதபோதும் அவ்விபூதி போலத் தரிக்கொணுதென்ப துணர்த்துதற்கே விஷ்ணு மூர்த்தியாற் சொல்லப்பட்ட கருட புராணத்திலும் "பஸ்மநைவப்ரகுர்வீதநகுர்யாந்ம்ருத்திகாதிபி:" எனும் வசனமுமெழுந்தது. இவ்வித விதி கடந்து செய்யப்படு கின்ற அம்மண் புண்டரமானதும், திருமாலினது கரிய மேனிக் கிசையக் கறுப்பாயிராமல் வெள்ளையாயிருக்கும் வழிப்பொருத்தமில தாகின்றது. அது கரிய புறப்பாதங் காட்டாது அகப்பாதங்காட்டுமென்னின், ஆழ்வார் "மூவுல களந்த சேவடியோயே" என்றபடி அகப்பாதஞ் செந்தா மரை போல்வதாகலின் அதற்கும் பொருந்தாதன்றே. பொருந்துமாறே துவித வைணவரான மத்துவ மதத்தினர் கறுப்புரேகை யிடுகின்றார் போலும். திருமாலடியைத் திரு மால் நெற்றியிலிடுவதுந் தகுதியன்று. அப்படியிடுதல் அநி யாயமென்றுணருமாறு, மணவாள முனிவரது தென்கலை நாமத்திற்கும் வேதாந்த தேசிகரது வடகலை நாமத்திற்கு முண்டாகும் கலகங்கள் குறித்து "விவேகபாநு"வெனும் பத்திரிகை, க-வது வால்யூம் உ௲ச-ம் பக்கத்தில் "தாம் நெற்றியிலிடப்பெற்றசின்னத்தைப் பெருமாள் நெற்றியிலும்

ஏற்றிவிட்டனர்" என்று வைணவரபிமானமுள்ள எஸ். ஆர். கிருஷ்ணமாசாரியார், பி. ஏ. எழுதியிருக்கின்றானன்றே? ஊர்த்துவ புண்டரம் வாசுதேவோபநிஷத்திற் கூறப்பட வில்லைகொலோ வெனின், அதில் மண்மஞ்சள் என்பவற்றை விடும்படி சொல்லப்படவில்லை. கோபிசந்தனத்தாலிட்டு அது கீழாகுமாறு மேலே திருநீறு தரித்தல் வேண்டுமென்று வாசுதேவரே நாரதருக்கு நவின்றுள்ளார். இவ்விடயம் அவ்வுபநிஷத் தொன்றே கூறுதலின் அதுவும் வியனிலையா காது. அவ்வூர்த்துவ புண்டரந் தனிப்படத் தரிக்கொண்ணு தென்பதை யுணர்த்துவதற்கே, பராசர புராணத்தில் "அப் ரௌதந்தூர்த்வபுண்ராதிநைவதிர்யக்த்ரிபுண்ட்ரகம்" எனும் வசனமெழுந்துள்ளது. இதனருத்தம் "வேதத்தில் ஊர்த் துவ புண்டரஞ் சொல்லப்படவில்லை. ஆகையால் குறுக்கே திரிபுண்டர மணிய வேண்டும்" என்றும். திருவிளை யாடற் புராணம் விருத்தகுமார பாலரான படலத்தில் "மண் மாசுபடப் பூசும் வடிவுடையார்" என வருவதி லுள்ள மண் இராமாநுஜருடைய சித்திரோர்த்துவ புண்டர மன்று. இராமாநுஜரின் முற்பட்டவராய்க் கௌதமர் முத லிய முனிவர்களிட்ட சாபத்திலகப்பட்டவரா யுள்ளவருட் சிலர் ஏற்றபடி பூசிக்கொள்ளு மண்ணும். அப்படலக் கூற்றின் முதற்பாதம் "உண் மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக் கேட்டும்" என்றுளதும் இங்குணரற் பாற்றே.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி நீணகிலமுந் தொடக்கத்துப் பத்தின் கூ-ம் பாட்டில், (2017) "கள்ளார் துழாயுங்கண்வலருங்கூவிளையு-முள்ளார்முளரியும் கண்டக் காற்-புள்ளாயோரேனமுமாய்ப்புக்கிடந்தான் பொன்னடிக் கென்-றுள்ளார்" எனவருதல் திருமாலருச்சனைக்குக் கூவிளை யெனும் வில்வமும்உதவுமென்பதை விளக்குகின்றது. இதற்கு விரோதமாக இப்போதுள்ள வைணவர் வில்வ நிந்தை செய்வ தும், திருவரங்க முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்களில் இயற்கை யுற்பத்தியாயிருக்கும் வில்வவிருஷங்களை வெட்டி வெட்டி யெறிவதும் அவை மீண்டு மீண்டு முளைத்தெழுதல் கண்டு

வயிற்றெரிவு கூர்வதும் என்னே? அப் பாட்டிற் குவளை யெனற்பாலது "கூவிளை" என நீண்டதெனலாமோ வெனின், அங்ஙனம் 'கூவளை' எனவிருக்கவேண்டும். இல்லாமையாலவ்வாறுகாது. இச் சந்தேகம் பற்றிப் பழையதும் புதுவதுமான நூ-பிரதிகளை யாஞ் சோதித்ததிலுங் கூவிளையெனவே யிருந்தமையாலும், "கூவிளம் வில்வமாலுரங் கூவிளை" எனப் பிங்கலநிகண்டுஞ் சேந்தன்திவாகரமுங் கூறுகின்றமையாலும் அது வில்வமேயாம். கு=பூமி. கூவென நீண்டது. கண்ணுருபு தொக்கது. விளையுமென்பதிலுள்ள உம்மை பெயரெச்சம் எனக்கொள்ளொணுதுகொவென்னினும், அங்ஙனம் "குவ்விளையும்" எனவே யிருக்கலாம். ஓசையுங் கெடாதாசலின் அப்படியுமொண்ணுதென்க. அத் திவாகரம் "பீடுகண்பாழி****பெருமை" எனுமாற்றுனே கண்வளருங் கூவிளையென்பது பெருமை மிகுந்த ˙வமெனவாம். காண்டற்கினியவென்றலுமாம். இதனுல் கண்டிகை தரிக்கும் விஷ்ணுமூர்த்தி சிவார்ச்சனைக் ˙ங் தரிப்பவரென்பது வெளியாயிற்று.

˙வது அதிகார முற்றிற்று.]

˙ அதிகாரம்

˙ளிளோநவரேயேன்
˙ான்பது.

˙புடையென்
˙லங்கண்
˙ஞ்சு நாங்
மற்படி நிதி
˙டில், "மூவரி
˙ாவினை" (2037)
˙-வது பாட்டில்,
வான்மூரிநீர்வண்
மேலதிகாரங்களிற்
மா விஷ்ணு உருத்திர

ரெனுமூவருளொருவராயுள்ளவரேநாராயணரென்றும், அவர் மற்றிருவரிலு மேலானவரென்றும், விளக்குவனவாயின. ஆகவே, மும்மூர்த்திகளின் மேலேயொருதெய்வமில்லை என்றல் ஆழ்வார் கருத்தென்பதுந் தாபனமாகும். ஆயின், அது பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் இந்திராதி தேவர்களும் பூதங்களோடு பிறக்கின்றார்கள், அவை யழியும்போதடங்குகின்றார்கள், ஆதலால் அவர்கள் காரணராகமாட்டார்கள். சம்பு சப்தவாச்சியனே சர்வ காரணனெனும் அருத்தந் தரத்தக்க "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தேஸம்ப்ரஸூயந்தேஸர்வாணிசேந்த்ரியாணிஸஹபூதைர்நகாரணம்காரணாநாம்த்யாதாகாரணந்த்யேயஸ்ஸர்வைச்வர்யஸம்பந்நஸ் ஸர்வேச்வரச்சம்புராகாசமத்யே" எனும் அதர்வசிகோபநிஷத் வசனத்திற்கும், "ஸ்வரூபதேஜோமயசாச்வதம்சிவம்" எனும் மஹோபநிஷத்தானது 'பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் எல்லாப் பூதங்களோடுஞ் சிவத்தாற் படைக்கப்படுகின்றனர். வடவைத் தீயால் ஜலம் நாசமாவதுபோல அப்பூதங்களோடு அவர்களும் லயமே யடைகிறார்கள்' எனும் பொருளில் "ப்ரஹ்மாவிஷ்ணுச்சருத்ரச்சஸர்வாவாபூதஜாதய:| நாசமேவாநுதாவந்திஸலிலாநீவபாடபம்|" என்றிசைத்தற்கும் முன்னதிகாரங்களிற் காட்டப்பட்ட சுருதியாதி பிரமாணங்கட்கும், இனிக் காட்டப்படும் அவ்வித பிரமாணங்கட்கும் அவ்வாழ்வார் கருத்து விரோதமாகும். அதனுலவர்கள் பாடல் "முடிவான திராவிட வேதம்" எனற்கியையாது, பிரம விஷ்ணுக்களுக்கு மேலானவரே யுருத்திரரெனற்கும், இம்மூவருக்கு மேலே பரமசிவமுண்டெனற்கும் முதலதிகாரத்திற்றானே சில பிரமாணங்கள் காட்டினோம். அவற்றிற்கும் ஆழ்வார் கருத்து விரோதமாம்.

சங்கை நிவர்த்தி

"நாராயணபரம்பரஹ்மதத்வந்நாராயண:பர:|" என்ற சுருதிப்படி விஷ்ணு மூர்த்தியைப் பிரமம் என்று வேதங் கூறும்வழி ஆழ்வார் பாடல் முடிவான திராவிட வேதமாகலாமெனின், 'பிரமம்' என்பது 'பெரிது' எனும் பொருட்டு. அது குடிசைக்கு மாளிகை பிரமம், மாளிகைக்கு

அரண்மனை பிரமமென ஒழுங்குக் காட்டும் வழியாகத்தானே வேதத்திலு நின்று அன்னத்தாலாகு முடம்புக்கு அந்நம் பிரமமெனப் பாசப்பொருளைத் தீர்மானித்து அதன்மேல் ஆன்மாவான பசுப்பொருளைப் பிரமமென்று காட்டுவான் தேவர்கட்கு இந்திரன் பிரமம், அவ்விந்திரற்குப் பிரமன் பிரமமென்று பேசும். இந்தப் பிரம ஸ்தோத்திரங்கள் முடிவான வேதமானல், அந்தப் பிரமாவுக்குப் பிரமமாகின்ற விஷ்ணு ஸ்தோத்திரங்களும் முடிவான வேதமாகலாம். இவ் விஷ்ணுவாவார் பசுவர்க்கத்திலுள்ளா ரென்பதற்கு "எல்லாத் தேவரும் பசுக்கள்" எனுமருத்தந் தரத்தக்க "ஸர்வே தேவாபசுதாமவாபு" என்ற பைப்பலாத சுருதி தானே "யேயாங் விஷ்ண்வாதிகாங்ஸுராங்" எனும் வசனத்தாலே விஷ்ணுமூர்த்தியுஞ்சுரர்களிலொருவரென்று வியக்தப்படுத்தலும், நிராலம்போபநிஷத்து "பிரஹ்மவிஷ்ண்வீசாநேந்த்ராதீநாம்நாமரூபத்வாராஸ்தூலோஹமித்யத்யாஸவசாஜ்ஜீவ:" எனும் வசனத்தால் பிரமவிஷ்ணு ருத்திரேந்திரர்கள் ஜீவர்களெனச் சாதித்தலும், ஆதித்யபுராணம் "ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா: பசவ:பரிகீர்த்திதா:|" எனும் வசனத்தால் பிரமவிஷ்ணு தேவேந்திராதியர் பசுக்களென முடிவுசெய்தலும், இன்னும் பல சுருதியாதி வசனங்களிவ்வாறு தீர்வையிடலுஞ் சான்ருகும். இப்படிப் பசுவான விஷ்ணுமூர்த்தி அஹங்கார ஸம்ஸார பந்தமுளா ரென்பதற்கு, ஜாபால் யுபநிஷத்தில் "அஹங்காராவிஷ்டஸ்ஸம்ஸாரிஜீவஸ்ஸஏவபசு:|" என வருதலே தக்க பிரமாணமாம். இப்படிப்பட்ட பசுவனைத் திற்கும் பதியாயுள்ளவர் பரமசிவனுரென்பது பின்வரு சுருதி முதலியவற்ருனுந் தாபனமாகும். அதனல் முக்குண மூர்த்திகளி லொருவரான விஷ்ணு மூர்த்தியை வேதம் பிரமமென்றதனுலே அவர்க்குப் பரத்துவஞ் சித்தியாது. பரத்துவம் இம்மூவரையும் உண்டுசெய் தொடுக்குந்தகையால் நான்காவதென்னுஞ் சதுர்த்த சப்தத்திற்கும் அத்வைத சப்தத்திற்கும் உரிய ஏக வஸ்துவாய்ச் சிவமெனும் பெயரால் விளங்குவதற்கே சித்தியாகும். இதனை "ப்ரத்யயஸாரம்ப்ரபஞ்சோபசமம்சாந்தம்சிவமத்வைதம்சதுர்த்தம்மங்யந்தே" எனத்

தசோபநிஷத்து ளொன்றெனப்படு மாண்டூக்கியோப நிஷத்தும், "ஏகாத்மப்ரத்யயஸாரம்ப்ரபஞ்சோபசமம்சிவம் சாந்தமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" என நாரத பரிவி ராஜகோபநிஷத்தின் அ-வது உபதேசமும், "சாந்தம் சிவமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" என இராம தபநோப நிஷத்தின் உத்தரதாபிநியும், "அத்வைதம் சதுர்த்தம்ப்ரஹ்ம விஷ்ணுருத்ராதீதமேகமாசாஸ்யம்பகவந்தச்சிவம்" என பஸ் மஜாபாலோபநிஷத்தும், பிறவுங் கூறுமாற்றுணர்க.

அந்த மாண்டூக்கியோபநிஷத் வசனத்திற்கு "ஞான மாத்ரகோசரமாய், சங்கர்ஷணபிரத்யும்நஅநிருத்தர்களுக்கு லயஸ்தானமாய், சாந்தமாய், மங்கள ஸ்வரூபமாய் தன்னோ டொத்த பொருளிலதா யிருக்கின்ற, வாஸுதேவமூர்த்தியை, நான்காவதாக நினைக்கின்றார்கள்" என்று வடமொழி இராமாநுஜபாஷியத்தில் அர்த்தமெழுதப்பட்டுள்ளது. இவ் வர்த்த முறுதியாதற்குப் பாஞ்சராத்திரத்திற் சொல்லப்பட்ட சங்கர்ஷணாதி மூர்த்த சப்தபந்தி மஹாநாராயணோபநிஷத்தில் "ஓம் தாமோதராய நம: |" என்றதற்பின் "ஓம் ஸங்கர் ஷணாய நம: ஓம் வாஸுதேவாய நம: | ஓம் பிரத்யும்நாய நம: | ஓம் அநிருத்தாய நம: |" என்று முறை பிறழ்ந்து வருதலால் அவை, நாராயணரொருவர்க்கே யுரியனவாமன் றித் தேவனொருவனுக்குஞ் சீவர் மூவர்க்குமுரியவாய் நிற்க வில்லையன்றோ? சிவம் என்றதற்கு மங்களமெனப் பொருள் கொண்ட அவர் வாஸுதேவ சப்தம் அங்ஙனங் கண்டாரா? இல்லையே. சிவமென்பதை மங்களமென வாக்கிவிட்டால் அந்த (நான்காவது) சதுர்த்த சப்தத்திற்குரிய தெய்வத்தை எப்பெயர் கொடு அச்சுருதி விளக்கிற்றெனலாம்? வழி யில்லையாகலின், அது சிவமெனும் பெயர்கொடே விளக்கிற் றென்பது வச்சிரலேபமாக நாட்டப்படும். சதுர்த்த சப்தங் காட்டுமிடந்தோறும் அப்பெயரே யன்றி, வாஸுதேவ நாராயண கோபால கேசவ ஹரியாதி பெயர்களில் யாதொன்று நிகழ்வதில்லை யென்பதை மேலுதகரித்த சுருதி வாக்கியங்களாற்றெளிக. நீலகண்ட சிவாசாரியர் அந்தச் சிவசப்தாதிகளின் பொருள் சிவபெருமானென்றே கொண்

டுள்ளார். அங்ஙனம் சங்கராசாரியார்பிரஹ்மஸ்வரூபமென்று அர்த்தஞ் செய்துள்ளார். பிர்மோபநிஷத்தில் "ஜாகரிதே ப்ரஹ்மாஸ்வப்நே விஷ்ணுஸ்ஸுஷுப்தௌருத்ரஸ்துரீயமக்ஷரம் |" என்றபடி பிரம விஷ்ணு ருத்திரரைக் கடந்த நான்காவது பொருள் அக்ஷரமெனும் பிரமம் என வருதலால் அது பொருந்தும். இதனாற் பிரஹ்மம் சிவமெனும் இரண்டும் ஒன்றுதானென்பதேற்பட்டது. அதனானே, வேதாந்த மஹா வாக்கியத்திலுள்ள பிரஹ்மசப்தமுஞ் சிவபரமாகவே பொருளாதல் திண்ணம். இது, பஞ்சப் பிரஹ்மோபநிஷத்தானது "துரீயம்ஸத்யசித்ஸுகம்ப்ரஹ்மவிஷ்ண்வாதிபிஸ்ஸேவ்யம்" எனவெழீ இச்சிவனுரே துரீயப்பிரஹ்மமென்றும், பிரமவிஷ்ணு முதலியோர் அவரைச்சேவிக்கிறவரென்றும்ஸ்தாபித்தலானும் பஞ்சப்பிரஹ்மவக்திரம், பஞ்சப்பிரஹ்மமந்திரம், பாசுபதப்பிரஹ்மோபநிஷத்துளனும் வசனங்கள் சிவபக்ஷமாயிருத்தலானும் உறுதியாகும். இந்தத்துரீயப்பிரஹ்மசப்தம்விஷ்ணுமூர்த்திபக்ஷமாகச் செல்லாது. மேல்விளக்கியவாறு சம்புசப்தத்தாலுஞ் சிவசப்தத்தாலும் பிரஹ்மசப்தத்தாலும் நான்காவது பொருள் வெளியிடப்பட்டிருப்ப, அச்சப்தங்களை நோக்காது வாசுதேவசப்தத்தை வருவித்ததும், மேலுதகரித்த பஸ்மஜாபாலோபநிஷத்வசனத்தில் அந்நான்காவது தெய்வம்பிரமவிஷ்ணுருத்திரர்கட்கு அதீதப்பட்ட சிவமென்று நன்கு விளக்கியிருப்பதையறியாமல் சங்கர்ஷணுதி மூன்றுசப்தங்களைக் கொண்டுவந்ததும் இராமாநுஜர் செய்கையாதலின் அவருண்மைகாணு மதாபிமான முடையாரென்றற் கையமில்லை. அவர் இம்மட்டோ செய்தார். கேநோபநிஷத்தில் "உமாம்ஹைமவதீ" என்பது ஹிமாசல புத்திரியான உமையவளென்று வியக்தமான அர்த்தந் தருவதற்கேற்பச் சங்கராசாரியர் பார்வதியென்றெழுதியதையுங் கருதாமே "புருஷாகார பூதையான உமையாய்த் தோன்றிய லக்ஷ்மி" என்றருத்தம் பண்ணி அவ்விலக்ஷ்மியால் விளக்கப்பட்ட பிரஹ்மம் யக்ஷனாய் வந்ததாகும். அவன் இலக்ஷ்மிகாந்தனென்னவுமெழுதி வைத்தார். இவ்விஷயத்தை விவரிக்கின்ற சூதசங்கிதை சாமசாகோபநிடத தாற்பரிய அத்தியாயத்தில், "நாரணன் முதலோர்

நேடியுங்காணு நாயகன்" என்றெழுஞ் செய்யுளில் "கார ணக் கடவுள் யாவன் மற்றெனக்குக் கணவனுகிய பிரான் யாவன் - ஆரணமுணரான் யாவன் மற்றவனேயாகிய வியக்கனுய் வந்தான்" என்று பரமசிவனது பரத்துவத்தைப் பார்வதி இந்திரனுக்கருளிச் செய்ததாக விருக்கின்றது. இப் பொருடரு வியாசவசனத்தையுஞ் சுருதிவாக்கியங்களையும் மீறி வலிந்து பொருள் கொண்டதன்றே அவ்வுரை. இப் படிப் பொருள் கொள்வதாயின் பிரமமே புல்லாயிற்று. அத னுள் பிரமமிருக்கிறதென்று புல்லுக்கும் பரத்துவந் தாபித் திடல் கூடுமே. இவ்விதம் அவர் செய்கை பலவுள. இவ ருரையை இவர்போன்ருரன்றி மற்றெந்த நியாய பண்டித ரொப்புவார்! இவரது பாஷியஞ் சிற்றறிவு கொண் டெழுதிய தென்றற்கு கூ-வது அதிகாரத்திற் காட்டுற்ற காரணமே சாலும். இவர் மதநிரூபண விஷயமாகத் திரு நீற்றுச் சோழபூபதி யழைத்தமைக் கஞ்சிக் கல்லாடை வரைஇ வெள்ளாடையுடீஇ மேனுட்டுவழி மறைந்து செல் லுங்கால் "சோழன் கிருமி கண்டனுய் நசிக்கும்படியாக அபிசாரம் பண்ணி" என்று இளையாழ்வார் வைபவ மியம்பு கின்ற அந்த நியாய அரசற்குச் சூனியகருமஞ் செய்தது மன்றி அவ்வைபவங் கூறுமாறு பலவருடங்கட்குப்பின் அவ்வரசன் மரணச் செய்தியைத் திருநாராயணபுரத்திற் கேள்விப்பட்டு மகிழ்ந்தவருமாகின்ருர். இச்செய்கைகள் தேகாபிமானமுஞ் சீவாபிமானமு மில்லாத் திருவருளாளர்க் குரியனவாமா? இவரை யதிராஜ ரென்றழைப்பதுந் தகுதித் தாமா? இந்நீரவரே கஉOO க்ஷபணர்க்கு ஆயிரம் பணு முக மண்டல முடையவரா யிருந்து பிரதியுத்தரஞ் சொன்னு ரென்று அவ்வைபவத்திற் புகழப்பட்டிருக்கிருர். அப்புகழ் மைக்கிவ ருரியவராவ தெப்படியோ? உரியவராயின், அவர், அன்றே அந்த இராஜசபை புக்கு நமது ஆதிசேஷ மகிமையைக் காட்டுவது முக்கிய காரியமென்று அவ்வாறு செய்திருப்பாரன்றே! செய்யின், அவர் பிரதம சீடர் கூரத் தாழ்வாரும் பெரிய நம்பியுங் கண்கள் பறிகொடுத்துச் செல்லவு நேரிடாதே. அச்செய்தியை யவர் திருநாராயண

புரத்திற் கேள்வியுற்று "ஐயோ! கண்ணபிரான்! அறையோ" என்று அவ்வைபவங் கூறுகின்றபடி சொல்லி அதிதுக்கங் கூர்ந்தழவு மிடமுண்டாகாதே. ஆயினமையால், அவ்வாயிரம் பணுமுக மண்டலச் செய்தியெவ்வாற்றுனு நம்பத்தகாததாம். மேலும் அவ்விராமாநுஜர், திருவரங்கத்திற் கூரத்தாழ்வார்க்குக் கண்ணுண்டாக்க வேண்டுமென்று கருதிப் பெருமாளைப் பிரார்த்திக்கும்படி யவ்வாழ்வார்க்குக் கட்டளை யிட்டவாறு அவருஞ்செய்து "சீட்டெழுதத் தெரியாதான் பாட்டெழுதப் புகுந்தான்" என்பதற்கிணங்க வையகந் தெரிகிலா அவர் எனக்கு வைகுந்தந் தெரிகின்ற தென்றது கேட்டுத் திருப்தியில்லாமே நீயிழந்த கண்களை யீயும்படி செய்வலென்று அவரோடு போந்து பெருமாளைப் பெரிதும் பிரார்த்தித்த விடத்தும் அக்கண்களை வாங்கிக் கொடுத்தாரல்லர். இதனுற் சிவத்துரோக புத்தியுடைய வைணவர் வேண்டுகோளைச் சிவனடியவராயுள்ள ஸ்ரீமந்நாராயணர் அங்கீகரித்தருள்வதில்லை யென்றதுஞ் சித்தித்தது. இவ் விராமாநுஜரையும் அவர் சீடரையும் ஈச்வரஸ்வரூபர்களென வியாசர் பிரமாண்ட புராணத்திற் பிரகாசப்படுத்தினரென்று வைணவர் மொழிப. இச்செய்தி நவீன சித்திரோர்த்துவ புண்டரத்தை யந்தப் புராணத்துச் சில பிரதிகளில் நுழைத்தவரா னுழைக்கப்பட்ட தென்பதே நியாயம். இன்னன ஏதுக்களால் அவ்விராமாநுஜரைச் சேஷாவதாரமூர்த்தி யென்பது அந்தச் சேஷனுக்கே யிழிவை யுண்டு பண்ணும். இப்படிப்பட்ட அவ்விராமாநுஜரைத் திக்கு விஜயஞ்செய்து வைணவந் தாபித்தவ ரென்று அவ்வைபவம் விளக்கியிடலுறுதியாமாறும் யாங்ஙனம்? அவர் மதத்திற்கு விரோதமாக முளைத்த இராமேசுரத்து இராமலிங்கமும், நூல்களும் ஏனே இன்னு மிருந்துகொண்டிருக்கின்றன. பிறவும் அன்ன. அச்சூனிய கருமஞ் சோழபூபதிக்கு அஞ்ஞான்றே பலித்ததென்னுஞ் செய்தி காணப்படாமையால் பின்னர்ப் பலித்ததென்றல் ஆகாசத் தாமரையாதல் வேண்டும்.

இனி, அந்நான்காவது தெய்வத்தைப் பிரஹ்மம் சிவமெனும் பெயர்களால் வேதம் விளக்கினமையின் அவ்

விரண்டி லொன்றே பிரதான தெய்வப் பெயராகக் கோடல் வேண்டும். அங்ஙனமாயின், மதம் - பிரஹ்மமதம் சிவமதம், ஆலயம் - பிரஹ்மாலயம் சிவாலய மென்ருதல் கூடுமன்றி, விஷ்ணுமதம் விஷ்ணு ஆலய மென்ருதல் கூடாது. கூடுமாறு வைணவர் மதமுங் கோவிலுமாகிவிட்டால், அவர் சிவமத தூஷணஞ் செய்யவாவது சிவசப்தம் செவிபி னுழைய லாகா தென்னவாவது இடமில்லையே. இந்தச் சிவசப்தம் போலவே மேற் காட்டுற்ற அதர்வசிகா வசனத்தில் மூவர் மேலாந் தெய்வப் பெயர் சம்புசப்தத்தாலுஞ் சர்வேசுவர சப்தத்தாலும் விளங்குகின்றது. இச் சப்தங்கள் சிவ பெருமானுக்கேயுரிய நாமமென்று யாவர்க்கும் பொதுவான அமரகோசாதிக ளறையும். இவையிற்றை விஷ்ணுமூர்த் திக் காக்கவோ அக்கோசாதிகளிடங்கொடா; வலிந்தாக்கி னும் அந்தச் சுருதிவாக்கியப்படி அந்தச் சிவசம்பு முதலிய நாமங்கள் சிரேஷ்டமாமேயன்றி விஷ்ணு நாராயணுதி நாமங்கள் சிரேஷ்டமாகா. அந்தச் சிரேஷ்ட நாமங்களை வைணவர் ஸ்மரியாமலும், தரியாமலு மிருத்தலால் அவை அவர்களாசரிப்பனவுமாகா. இப்படி யாசரியாதவற்றைப் பரத்துவ விஷயத்தின் மட்டுங் கையாட்சி பண்ண முயல் வது நறிதாகுமோ? அவையற்றை யெஞ்ஞான்றுங் கையாட்சி பண்ணல் சைவரது நறிய கொள்கை யெனற் குச் சிவனை வழிபடுவோர் சைவர், சம்புவை வழிபடுவோர் சாம்பவர், மஹேசுவரனை வழிபடுவோர் மஹேசுர ரெனக் காண்டலும், அவர் அப்பெயர்களைத் தரித்தலும், பிரம நாயக மெனப் பெயர் கோடலுஞ் சான்ருகும். சிவசத்தி சிவை, சம்பு சத்தி சாம்பவி, ஈசுர சத்தி ஈசுரி, பிரமசத்தி பிராமி யென்று உமையவளை யுணர்ந்துகொள்ள நூல் வழக் கும், விஷ்ணு கோவிலிருக்கு மிடத்திற் சிவாலயமுமிருந் தால் அவ்வாலயத்தை மட்டும் ஈசுரன் கோவிலெனக் கொள்ள அதனை யீசுரன் கோவிலென்று வைணவருங் கூறுமுலக வழக்கும், அவ்விதமே "ஈசற் கிசைந்துடம்பிலோர் கூறு தான் கொடுத்தான்" என்று திருமங்கையார் கூறிய செய் யுள் வழக்கும் அந்தச் சிவாதி நாமங்களைச் சைவபக்ஷ

மாகவே தாபிக்கும், "சம்புரீசஃபசுபதிச்சிவஃ" என்று அமர கோசங் கூறுதல் காண்க. இதனானே ஈசாவாஸியோபநிஷத்தில் எங்கும் வியாபித்துள்ள பொருள் ஈசுரனென்பதற்கு அருத்தஞ் சிவபெருமானே யென்க. இத்திறனறியா வொரு வைணவர் சனியைச் சனீசுர னென்றாற் போலச் சிவனை ஈசுரனென்பதுமாமென்றன ரென்றறிகின்றேம். அவர் சனியோடணை ஈசுரசப்தம் விசேடண மொழியென அறியாராகலின் அவர் கூற்று வரம்பின்றியோடுவதாம். இங்கே வைணவரிலும் ஈசுர நாமந் தரித்தவருண்டெனற்கு ஆளவந்தார் பிதா ஈசுர முனியெனவும், அவ்வீசுர முனி பிதாவுக்குப் பிதா ஈசுரபட்டரெனவு மிருந்தனரேயென்னின், அவரெல்லாம் இராமாநுஜர்க்கு முற்பட்டவராய் ஆழ்வார் பாடலிலுள்ள ஈசுர மொழியுணர்ந்து சைவ சம்பந்தமுமுடையரா யிருந்தாராகலின் அப்பெயர் கொண்டார். அது பெரு வழக்காகாது.

உடம்பில் ஹிருதயஸ்தானம் எப்படிப் பிரதானமோ அப்படியே அந்நான்காவது தெய்வப் பெயரிற் பெருவரவாகவுள்ள சிவசப்தமும் வேத ஹிருதயமாய்ப் பிரதானமாய் நிற்கின்றது. விவரம்: அதர்வணத்தை யுட்கொண்ட இருக்காதி மூன்றுமே புராதன வேதமென்று மநுஸ்மிருதி க-வது அத்தியாயங் கூறுமாறு அவற்றினடுவிலுள்ளது யஜுர்வேதம். அதன் எழு காண்டங்களினடுவிலுள்ளது ச-வது காண்டம். அதனடுவிலுள்ளது ரு-வது பிரச்நமாகிய ஸ்ரீருத்ரம். அதனடுவிலுள்ளது "நமஸ்ஸோமாயச" எனும் அநுவாகம். அதனடுவிலுள்ளது "நமச்சிவாயச" எனும் வாக்கியம். அதனடு நிற்பது "சிவ" என்பதாம். இத்திறத்தானே வேதமாகிய வுடம்பிற்கு உயிர் சிவமென்பதல்லால் நாராயணாதி நாமங்களு ளெதுவுமன்றென்பதுஞ் சித்தித்தது. இப்படி வேதவுயிராய் வேதாந்தக் கனியாயுள்ள சிவபெருமானைச் சிந்தித்துய்யும் பாக்கிய மிழந்து "சிவனுக்கு வேதமே கிடையாது" எனச் சொல்லித் திரியும் வைணவரும் குருபரம்பரை கூறுமாறு "சிவபஞ்சாக்ஷர முதலான க்ஷுத்ர மந்திரங்கள்" என்று சொன்னவரும்

ஏதுணர்ந்தவராவர்? இது கிடக்க, அந்தச் சிவசப்தஞ் சேர்ந்த ஐந்தெழுத்துமல்லவோ வைதிக சைவர்க்கு மோக்ஷ தாரக மந்திரமாயுள்ளன. அவற்று ளிரண்டெழுத்தை யேனும், "நாயோட்டு மந்திர நாதாந்த ஜோதி" என்று திரு மந்திர நூல் மறைத்துக் கூறுகின்ற மஹாமனுவெனும் ஓ ரெழுத்தையேனும் ஜபித்து மந்திர யோகின்வழி மனோலயங் கண்டு சிவசாக்ஷாத்கார மடைவர் பெரியோர். நாராயண சப்தமுள்ள அஷ்டாக்ஷரத்தில் இத்திற மகிமை காணுமா றுண்டோ? காளிகறுப்பன் முதலிய தேவமந்திரங்களில் ஓங்கார உயிர் சேர்க்கப்பட்ட தெப்படியோ அப்படியே அவ்வஷ்டாக்ஷர மென்பதிலும் அது சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வுயிரில்லையாயின் அக்காளியாதி மந்திரங்களியக்கமின் றிச் சடமாய்க் கிடக்குமாறு நாராயணமந்திரமும் ஏழெழுத் தாகிக் கிடக்கும். அவ்வாறு கிடவாமல் உயிராகவே யுளது ஐந்தெழுத்து மந்திர மெனற்கு அதனில் ஓங்கார மின்மையும், மேல்விளக்குற்ற இரண்டெழுத்து ஓரெழுத்து அநுபவமும், ஐந்தெழுத்தில் "நசி மசி" என மாறி யுச்சரிக்கப்படு மெழுத்துக்கள் ஓங்காரம் வேண்டாமலே விஷமுதலிய பிணி தீர்க்கின்ற அநுபவமுஞ் சான்றாகும். "அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்" என்றருளிச் செய்தபடி அந்த ஐந்தெழுத்தோடு ஓம் சேர்தல் ஐந் தெழுத்தி லாறெழுத்தாம். ஓம் ஆம் அவ்வும் சேர்தல் ஐந்தெழுத்தி லெட்டெழுத்தாம். சிவாய என்பதோடு ஓம் சேர்தல் ஐந்தெழுத்தி னாலெழுத்தாம். இவை அவ்வவ்வதி காரிக ணிமித்த மேற்பட்ட பேதமாம். அந்த ஓங்காரமான தாரகமந்திரம் பரமசிவனார்க்குச் சொந்த மெனவும், அதன் வியஷ்டியான அம் உம் மம் என்பவை அவராற் பிரமவிஷ்ணு ருத்திரர்கட்கு அவர் காரியார்த்தமாக அளிக்கப்பட்டன வெனவும், அவ்வழியவர்களையும் பிரணவரூபிகளென வேதம் விளம்புமெனவும் அறியவேண்டும். இதற்குப் பிரமாணம் பிரஹ்மவித்யோபநிஷத்தில் "த்ர்யக்ஷரஸ்பசிவஸ்யது" எனவும் "அகாரஸ்யசரீரந்துவ்யாக்யாதம்ப்ரஹ்மவாதிபி:|" எனவும், "விஷ்ணுச்சபகவாந்தேவ உகார: பரிகீர்த்திதः|" என,

வும், "ஈச்வரஃபரமோதேவோமகாரஃ பரிகீர்த்திதஃ|" எனவும் வருவன காண்க. "ஸதாசிவோம்" என்று தைத்திரியவேதஞ் சாற்றுதலு மிம்முடி பென்க. இச் சுருதி வசனங்களாலும் நான்காவது தெய்வம் ஓங்காரவாச்சியரான சிவபெருமானென்பதே சித்திக்கின்றது.

இத்தகைய சிவனரை, இராமதாபிநியுபநிஷத்திற் சொல்லப்பட்ட தசரதகுமாரரது நாமமாகிய 'ராம' தாரகத்தைக் காசியிலிறப்பவர்க்கு உபதேசிக்குங் குருவென இகழுங் குதர்க்க வைணவர் கூற்றைக் கேட்போர் பன்முறை நகையாரோ? ஐந்தெழுத்தில் சி-ஆகிய சிவனும் வ-ஆகிய சிவ சத்தியும் எய்ந்து 'சிவ' என நிற்றல் போல "ஹரா" எனுஞ் சிவநாமத்தின் ஈற்றெழுத்தும் மூன்று பிரணவங்கொண்ட "உமா" எனுஞ் சிவசக்தி நாமத்தின் ஈற்றெழுத்தும் எய்ந்து "ராமா" என நிற்கின்றன. இப்படிச் சிவ, சிவசக்திகளாயுள்ள ராமதாரகமாவது மேல் விளக்கிய பிரணவமான ஓங்கார தாரகமாவது பஞ்சாக்ஷர தாரகமாவது அவ்வப் பக்குவ ஆன்மாக்களுக்கு இசைய ஸ்ரீருத்ரபகவானு லுபதேசிக்கப்படு மென்பதே-மேற்படி யுபநிஷத் வாக்கியத்தாலும், "பிராணோக்கிரமண காலத்திற் காசியில் சர்வான்மாக்கட்குந் தாரகமெனும் பிரணவத்தை யுபதேசிக்கின்றுர்" எனுமருத்தந் தருவதாய் "அத்ரஹிஜந்தோஃப்ராணேஷ-த்க்ரமமாணேஷு-ருத்ரஸ்தாரகம்" என்றெழுவதாயுள்ள ஜாபாலோபநிஷத்வாக்கியத்தாலும், "காசியிற் பிராணோத்கிரமண காலத்தில் வேதவேதாந்த சாரமானதும் பிரணவமெனும் பிரஹ்மமாகிய எம்மை யர்த்தமாக வுடையதும் தாரகமானதும் ஆபாசத்தைக் கடந்ததுமாகிய எமது ரூபத்தைக் கிருபையாற் பிரசாதிக்கின்றே மென்று சிவனாருளிச் செய்தார்" எனு மருத்தந் தருவதாய் "தத்ரைவோத்க்ரமமாணஸ்ய" என்றெழுவதாயுள்ள பராசரபுராண வாக்கியத்தாலும் ஏற்படும். தசரதராமர்க்கு முன்னே பரசுராம ரொருவருண்டெனும் பிரஸ்தாபங் கேட்கப்படுதலால் ராமநாமந் தசரதராமர்க்கே யுரியதென்னவாவது அவ்வுபநிஷத்திலுள்ள ராமசப்தத்திற்கு

அத்தசரத ராமரே தெய்வமென்னவாவது ஏலாமையானும், அவ்விரண்டிராமருந் தங்களுற்பத்தி யறியாமல் தம்மில் இகலிச் சண்டையிட்டமையானும், இவ்விருவர்க்கு மூலமூர்த்தியான விஷ்ணு வென்பார் அந்தக்காசியின் தென்பக்கல் சிவனையுபாசித்துக் கொண்டிருக்கிறு ரென்று பஸ்மஜாபாலோபநிஷத்துப் பகர்தலின் ஐந்தெழுத்திற்கும் அவாது நாவே சிம்மாசனமா யிருக்கின்றமையானும், பாரதம் சபாபர்வம் "த்ஸ்யாம்ராஜர்ஷய" எனுமிடத்தில் "எமதர்மசபையில் எமதர்மராஜனை மாந்தாதா சோமன் இராமன் இலட்சுமணன் பிரதத்தன் முதலினோர் உபாஸித்துக் கொண்டிருக்கிறார்கள்" எனுஞ் செய்தி பெறப்படுகின்றமையானும், வைணவர் பாகவதப்படியேயும் "தசரதராமர்க்கு உகூ-ம் பாட்டனான அரிச்சந்திரன்" அந்தக் காசியடைந்து விசுவநாதரைப் பூஜித்ததும் சைவபுராண சனற் குமார சங்கிதை கூறுமாறு தாசரதிக்கு முற்பட்ட கிருதயுகத்தில் பிரதாபமகுடனெனு மரசனும் அவன் மூத்தகுமாரனும் அந்தக் காசியில் ஓங்கார சிவனைப் பூஜித்து முத்தியடைந்தது போல அனேகர் தாரகோபதேசகதி யடைந்ததும் பல்சரிதப் பிரசித்தமாயினமையானும், அந்தத் தாரகத்தா லுறுங்கதி விஷ்ணு சாரூப்யமல்லாத சிவ சாரூப்யமென்றல் வெளியாகின்றமையானும், அங்ஙனம் முன்னர்ச் சிவகதியுற்றுப் பின்னர் விஷ்ணுகதியுறுமெனற்கும் பிரமாணமில்லாமையானும், அவ்விராமதாபிநியும் மேற்றுலக்கியவாறு நான்காவது தெய்வத்தைச் சிவசப்தங் கொண்டு காட்டுகின்றமையானும் மேற்போந்த ராம சப்தம் யாம் விளக்கியபடி சிவனுடையதென்பதுறுதிப்படும். அச்சப்தம் சிவ சகஸ்திரநாமத்தினுமொன்று. அதனைச் சைவர் கையாட்சி செய்து வருவதற்குச் சிவராமன், வரதுங்கராமன், அதிவீரராமன், இராமன் என அன்னோர் புத்திரர் பெயர் விளங்குதல் சான்றாகும். அவ்விதமே அப்பெயர் தசரத குமாரர்க்கும் ஜமதக்கினி குமாரர்க்கும் பெரியோராலிடப்பட்ட தென்பதே யிவ்விடயத்திலமைவுடைத்து. முக்திகோபநிஷத்தில் வரும் ராம சப்தத்திற்கும் ஈண்டுரைத்ததே பொருளென்க. அவ்விராமதாபிநி

சொல்கின்றபடி இராமரை வணங்கினவர் பசுவர்க்கத்திற் படிக்கப்பட்ட க்ஷேத்திர பரிபாலன ருத்திராவர். அவர் அத்தாபிநி யுணர்த்துஞ் சிவமாகிய ஸ்ரீகண்டபரமசிவனுர்க்கு அடியவரான அந்த இராமர்க்குச் செய்த வணக்கம் ஓரவ தாரத்தது என்க. வேறு கூறல் பொருந்தாது. எண்ணிலா வுருத்திருளரெனும் விவரம் எமது சுப்பிரமணிய வியாசத்தி னறிக. இது நிற்க.

மேலே காட்டப்பட்ட சதுர்த்த வாக்கியங்களிலுள்ள 'சிவம்' என்பது நபுஞ்சகமாகவிருத்தலின், அது சிவனெனு மூர்த்திக்காவதெங்ஙனமெனின், அந்தச் சதுர்த்த சப்தந்தரு முபநிஷத்துக்களுளொன்றுன பஸ்மஜாபாலமே "கைலாஸ சிகராவாஸமோங்காரஸ்வரூபிணம் மஹாதேவமுமார்த்தக்ருத சேகரம்" எனக் கூறிக்கொண்டு அந்தச் சிவமென்பதை வெளியிடலால் அங்ஙனமாவதென்க. இதனை, "அசிந்த்ய மவ்யக்தமநந்தரூபம்சிவம்****உமாஸஹாயம்பரமேச்வரம்ப்ர பும்த்ரீலோசநம் நீலகண்டம்ப்ரசாந்தம்த்யாத்வாமு நிர்கச்சதி பூதயோநிக்ஸமஸ்தஸாக்ஷிம்தமச: பரஸ்தாத" எனவரு கைவல்யோபநிஷத்து மந்திரத்துள் 'சிவம்' என்பது உமா ஸஹாயத்வாதி அடையாளங்களோடு விளங்குதலு முறு திப்படுத்தும். தரிசநோபநிஷத்து "ஆகாசாம்சேமஹாப் ராஜ்ஞகாரயேத்துஸதாசிவம்" என் றுரைத்தலில் 'ஸதா சிவம்' எனவெழுந்ததும், அதர்வ சிகையில் திரிமூர்த்திகளை யுண்டாக்குந் தெய்வப்பெயர் 'சம்பு' எனவெழுந்ததும் அதனையே யுறுதிப்படுத்தும். இவ்வித பிரமாணம் பலவுள. இவற்றுல் 'சிவம்' 'சிவன்' எனுமிரண்டுக்கும் பொரு ளொன்றே. அஃதமூர்த்தமாகவும் மூர்த்தமாகவுமுள்ளதென் பதே யேற்படுகின்றது. அதனுன் மும்மூர்த்திகளையும் உண்டு செய்தொடுக்குகின்ற ஸ்ரீ கண்டபரமசிவனும் மஹேசுர மூர்த்தியும், மூர்த்தா மூர்த்த சிவலிங்க சதாசிவனும் அந் நான்காவது துரீய வஸ்துவே யாவர். இவ்வாறும் ஐந்து மூர்த்திகளும் ஒருவர்க்கொருவர் உயர்வுடையா ரென்றற்குப் பிரமாணம்:-யஜுர்வேத யோகதத்துவோபநிஷத்தில் "த்யா

யம்ச்சதுர்முகாகாரம்சதுர்வக்த்ரம்" "ப்ருதிவிஜயமாப்நுயாத்" என வருதலிற் பிரமாவை யுபாஸித்துப் பிருதிவியை ஜயித்தலும் "ஸ்மரந்நாராயணம்தேவம்" "ததோஜலாத்பயம் நாஸ்தி" என வருதலின் நாராயணரை யுபாஸித்து அப்புவை ஜயித்தலும், "த்ர்யக்ஷந்துவரதம்ருத்ரம்" "வஹ்நிநாஸௌ நதஹ்யதே" என வருதலின் உருத்திரரை யுபாஸித்து அக்கினியை ஜயித்தலும், "தாரயேத்தத்ரஸர்வஜ்ஞமீச்வரம்" "வாயுவத் வ்யோமகோபவேத், மரணம்நதுவாயோஸ்து" என வருதலின் மஹேசுவரரை யுபாசித்து வாயுவை ஜயித்தலும், "ஆகாசேவாயுமாரோப்யஹகாரோபரிசங்கரம்| பிந்துரூபம் மஹாதேவம்வ்யோமாகாரம்ஸதாசிவம்|" "ஸர்வகாரணகாரணம்" "யத்ரகுத்ரஸ்திதோவாபி ஸௌகமத்யந்தமச்நுதே|" என வருதலிற் சதாசிவமூர்த்தியை யுபாஸித்து ஆகாயத்தில் ஒரு கேடுமின்றி யுய்தலும் கேட்கப்படுதல் காண்க. இக்கிரமத்தையே, அந்த யஜுர்வேத யோகசிகோபநிஷத்து முதலத்தியாயத்தில் "அர்த்தசந்த்ராக்ருதிஜலம்விஷ்ணுஸ்தஸ்யாதிதேவதா| த்ரிகோணமண்டலம்வஹ்நீருத்ரஸ்தஸ்யாதிதேவதா| வாயோர்பிம்பந்துஷட்கோணமீச்வரோஸ்யாதிதேவதா| ஆகாசமண்டலம்வ்ருத்தம்தேவதாஸ்யஸதாசிவ:|" என வருவதுங் காட்டும். இவ் விவரம் தரிசநோபநிஷத்து அ-ம் காண்டத்திலுமுண்டு. பிருதிவியாதி ஐம்பூதத்திற்குமுரிய ஐந்து மூர்த்திகளுஞ் சிருஷ்டி திதி ஸம்ஹார திரோபாவாநுக்கிரக மெனும் ஐந்தொழிலாற்றுந ரென்பதை மேற்படி வேதத்துப் பஞ்சப்பிரமோபநிஷத்து "பஞ்சக்ருத்யநியம்தாரம்" என்று பிரஸ்தாபித்து நன்கு விளக்கும். இவ் வைந்து தொழிலும் பரமசிவத்திற்கே யுரியன வென்பதைச் சாமவேத ஜாபால்யுநிஷத்து "ஸர்வஜ்ஞா: பஞ்சக்ருத்யஸம்பந்நஸ்ஸர்வேச்வர ஈச: பசுபதி:|" எனும் வாக்கியங்களாலுணர்த்தும்.. சிலர், பஞ்சமூர்த்தி யென்பதும் பஞ்ச கிருத்திய மென்பதும் ஆகம பரிபாஷை யென்றும், வேதத்தில் மூன்று மூர்த்தியும் மூன்று

தொழிலுமே சொல்லப்பட்டன வென்றும் புலம்புப. அச் செய்தி வேத முணரா விழலரேயொப்பத்தக்கது. காட்டிய பிரமாணங்களாற் சிவாகமம் வேதமய மென்றும். தேகா தாரங்களிற் குய்யத்திற் பிரமனும், நாபியில் விஷ்ணும், இத யத்தில் உருத்திரனும், கண்டத்தின் மகேசுரனும், நெற்றியிற் சதாசிவனு முளரென்று சிவயோகசித்தரெல்லாங்கூறுதலின் அவர் மார்க்கமும் வேதமயமாம். இவ்வித பிரமாணங்களாற் குணருத்திரருக்குந் தாழ்ந்தவரா யிருக்கின்ற விஷ்ணுமூர்த் தியை வைணவர் மதாபிமானத்தா லேற்றபடி யுயர்த்தப் பார்ப்பது எத்துணையும் அடாத செய்கையாம்.

ஈண்டு, யமுனைத் துறைவர் செய்த தோத்திரத்தில் "யா வன் புண்டரீக நயனன், யாவன் புருடோத்தமன்" என் றெழுந்த செய்யுளை யுரை செய்த வேங்கடநாதர், யஜுர் வேதத்தில் உச-மந்திரங்கொண்ட புருஷசூக்தத்தை நாராயண பரமாக அருத்தஞ் செய்தனரே அதனலது நாராயணபரத்து வங் காட்டாதோ வென்னின், விளக்குதும். அந்தச் சூக்தத் தில் "உதாம்ருதத்வஸ்யேசாந:|" என்றதிலுள்ள ஈசாந: என்பது பஞ்ச ருத்ரோபநிஷத்துக்களி லொன்றான அதர்வ சிரசில் "தமீசாநம் புருஷம்" எனும் புருஷ சப்தத்தோடு சேர்ந்து வருதலானும், ஈசாநப் பெயர் நாராயணர்க்கின்மை யானும் புருஷ சப்தம் "தத்புருஷாய" என்றெழுஞ் சிவ காயத்திரியி லிருத்தல் போல விஷ்ணு காயத்திரியி லில்லாமை யானும், அந்தச் சூக்தத்தில் *"ஸஹஸ்ரசீர்ஷாபுருஷ:| ஸஹ ஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" என்றுள்ள பதங்களே மேலைப் பஞ்சருத்ரங்களி லொன்றான சுவேதாசுவதரத்தின் ௩-ம் அத்தியாயத்திற் சிவபரமாக வருதலானும், அது "அநந்த ரூபம் சிவம்" எனும் மேலை யுபநிஷத்துக்களி லொன்றான கைவல்யோபநிஷத் வாக்கியார்த்தத்தி லடங்குகின்றமையா னும், 'ஸஹஸ்ராக்ஷ:' என்பது சிவகாயத்திரி வாக்கியங் களோடு சேர்ந்துவருதலைப் "புருஷஸ்ய வித்மஸஹஸ்ராக்ஷஸ்ய

---

*ஆயிரஞ் சிரசன், ஆயிரங் கண்ணன், ஆயிரம் பாதன், வீரபத் திரர் முதலிய சிவமூர்த்திகளைத்தரு பரமனெனலாம்.

மஹாதேவஸ்யதீமஹி| தந்நோருத்ர: ப்ரசோதயாத்|" என்று தைத்திரீயாருணசாகை நாராயணம் காட்டுகின்றமையானும், அந்த சூக்தத்தில் "ஆதித்யவர்ணம்" என்றது சிவமேனிக்கன்றி நாரயணமேனிக் கமையாமையானும், அந்தச் சூக்தத்தில் "நாந்ய: பந்தா அயநாயவித்யதே|" என்றபடி மேலைய கைவல்யோபநிஷத்திலும் "நாந்ய: பந்தாவிமுக்தயே" என வெழுந்து (சிவஞானமன்றி) மோக்ஷமெய்த வழி வேறில்லையே யெனும் பொருளை விளக்குகின்றமையானும், அந்தச் சூக்தத்தில் நாராயண நாமமேதும் படிக்கப்படாமையானும், புருஷோத்தமனெனும் நாராயண நாமம் புருஷனென்பதற்கு வேறாதலானும், அந்தச் சூக்தத்தில் "ஹ்ரீ" என்பது ஹ்ரீயெனும் மந்திர முக்கியப் பொருளான சிவசக்தியென்றும் 'லக்ஷ்மீ' என்பது மஹேச்வரியென்றும் பொருளாதலானும், இப்பொருள் - பிரமவிஷ்ணுக்கள் செய்த சிவஸ்தோத்திரத்திலே, "இலக்ஷ்மிபதிநின்னைவணங்குவோம் ஹ்ரீபதிநின்னை வணங்குவோம்" என்றுவழுத்தினமை கூறும் வாமன புராண வசனங்களா லுறுதிப் படுதலானும், சுருதியாதி பிரமாணங்கள் நாராயணரைப் பசுவெனத் தீர்மானிக்கின்றமையானும் முத்திநெறி மொழியும் அந்தப் புருஷ சூக்தஞ் சிவபரமாமே யல்லால் நாராயணபரமாகா தென்பது தேற்றம். இச் சூக்தப் பொருள் பிரம விஷ்ணு ருத்திரரெனும் மூவருமாகார்: நான்காவது தெய்வமான சிவனொருவனே யாவன்: புருஷனென்பது பூரணனெனும் பொருளைத் தருஉமென்று ஸ்ரீ அப்பையதீக்ஷிதருஞ் சிவதத்துவ விவேகத்திற் கூறியுள்ளார். ஸ்ரீநிவாச தீக்ஷிதீய மெனும் புருட சூக்த பாஷியத்தில் அந்தச் சூக்த மந்திர மனைத்துஞ் சிவபரமாகவே யர்த்தஞ் செய்யப்பட்டன. அங்ஙனமே வேங்கடநாத ருரையும் மறுக்கப்பட்டது. அந்தச் சூக்தத்திற்கு இருடி நாராயணரும், தேவதை புருடனாகிய சிவனாரு மென்பது மூதறிஞர் தீர்வை.

அந்தச் சிவபெருமானார் தமது இடப்பாகத்தினின்றும் இரக்ஷகத்தின் பொருட்டு இந்த விஷ்ணுமூர்த்தியையும், வலப்பாகத்தினின்றும் சிருஷ்டியின் பொருட்டு பிரமதேவரையும்,

இதயத்தினின்றும் சங்காரத்தின்பொருட்டு உருத்திரமூர்த்தி யையுமுண்டாக்கினரென்று பாரதம்அநுசாஸநீகத்தில் "ஸோ ஸ்ருஜத்தக்ஷிணாதங்காத் - ப்ரம்ஹாணம்லோகஸம்பவம், வாம பார்ச்வாத்ததா விஷ்ணும் - லோகரக்ஷார்த்தமீச்வர:, யுகாந்தே சைவஸம்ப்ராப்தே-ருத்ரம்ப்ரபுரதாஸ்ருஜத்" என வருதலும், சைவபுராணம் வாயுசங்கிதை உஎ-வது அத்தியாயத்தில் (பிரம விஷ்ணுருத்திரரெனும்) "இம்மூவரும் முறையே சிவபெருமா னது வலம் இடம் இதயமென்னு மிடங்களி லுதித்தனர் என வருதலும், இலிங்க புராணம் பூர்வ காண்டம் ௩-ம் அத்தியா யத்தில் "வீவில்தாகி யெங்கும் விளங்கிய விலிங்கந்தன்னின் - மூவர் வந்துதிப்பர் மற்ற மூவரிலொருவன்றனே - தாவில் சீருலக மெல்லாந் தந்திடு மொருவன் காக்கு - மோவற வவற்றையெல்லா மொருவனின் றழிக்குமன்றே" எனவரு தலும் வேத சம்மதமாகி நான்காவது தெய்வம் சிவபெருமா னெனத் தாபிக்கின்றன. ஸ்காந்தம் உபதேச காண்டம் எச-ம் அத்தியாயம் சஎ - சஅ-ம் சுலோகங்களில் "சக்தி! உன்னாற் படைக்கப்பட்ட மூவுலகிலும் பிரம விஷ்ணு ருத்தி ரர்களையும் சரஸ்வதி இலச்குமி அம்பிகை யென்பார்களையு முண்டாக்குபு முறைப்படி தலைவன் தலைவியாகச் சேர்த்துச் சிருஷ்டியாதி முத்தொழிலுஞ் செய்வாயாக" என்று பரம சிவன் திரிபுரைக்குக் கட்டளையிட்டதாக வருதலும், சிவ ரகசியம் ௩-ம் அமிசம் உருத்திராத்தியாய வியாக்கியானச் சருக்கம் உசு - உஎ-ம் கவிகளில் "இயல்சேரிறைவனுட னுமையாள் * * * * நாரியொடு நாராயணனே நாவின் மக ளோடய னிந்த்ரன் - பாரியாகுஞ் சசியோடுஞ் சுவாகை யுடனே படர்சடையோன்" என்றெழு மொழிகளில் நாரா யணர் பிரமர் இந்திரர் சடையோனெனு முருத்திர ரென் பார்க்கு வேறாக உமைநாயக னிறைவனென வருதலும் அவ் வாறே தாபிக்கின்றன. இப்படியே சிவபுராணமெல்லாம் பிரம விஷ்ணு ருத்திரரெனும் மூவரையும் விளக்கி யவரைத் தமதாணை வழி நடாத்தும் பரமசிவனையும் விளக்குதலின் அந்தப் புராண சரிதைகட்குரிய மூர்த்தி நால்வரென்பது வெளிப்படை. இம் முடிபுக்கே "ஒருருவாயினை * * * *

படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" என வரு ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும், "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத் தழிக்கு மற்றை - மூவர்கோனுய் நின்ற முதல்வன் மூர்த்தி" எனவும், "மூவரு முப்பத்துமூவரு மற்ருெழிந்த - தேவருங் காணுச் சிவபெருமான்" எனவும் வரு திருவாசகமுஞ் சம் மதிக்கின்றன. இதனுல் தேவார திருவாசகங்கள் முடிவான தமிழ் வேதமாம். மேலைய தேவாரம் திருவெற்றியூர்த் திருப் பதிகத்தில் "ஆகம செல்வனுரையலர் தூற்றுதல்" எனவும், திருவாசகத்தில் "ஆகமமாகிநின் றண்ணிப்பான் ருள் வாழ்க" எனவுஞ் சிவாகமம் விதந்து கூறப்படுதலின் அவ் வாகமத்தில் வேதமொத்து விளக்கப்பட்ட பிரமாதி பஞ்ச கர்த்தாக்களையும் அந்தத் தேவார திருவாசகங்களொப்பி யுள்ளனவெனற்கு ஐயமில்லை. மூவருள்ளுஞ் சிவபெருமா ஞர் தமது சிருஷ்டி காரியாதி சக்திகளைப் பதியவைத்து அந் தரியாமியா யிருத்தல்பற்றி அவரை "மும்மூர்த்திகளாயினை" என்று விதந்த தென்க. அவர் மூவர் குணதோஷங்களை யடையார்: உப்பு நீரில் உப்பில்லா மீன்போலிருப்பரென்க. இங்ஙனம் விஷ்ணு புராணங்களுட் சில பிரம ருத்திரர்களை விளக்கி விஷ்ணு மூர்த்தியையும் விளக்குதலின் அந்தப் புராண சரிதைகட்குரிய மூர்த்தி மூவரென்பது வெளிப் படை. இம்முடிபுக்கே ஆழ்வாருஞ் சம்மதித்துள்ளார். இதனுல், ஆழ்வார் பாடல் விஷ்ணு புராண வெளிப்படை முடிபெனலும், சதுர்த்தவாச்சியமூர்த்தம் அவ் விஷ்ணு புரா ணங்களில் வெளிப்படையாயில்லை யெனலும், விஷ்ணு மூர்த்தி அந்த மூர்த்த முடையாரல்லரெனலும் அமை வுடைமையாம். மேலே காட்டப்பட்ட பாரதம் நான்கு மூர்த்திகளையும் விளக்கிச் சிவபரத்துவங் கூறுதலின் அதுவுஞ் சிவபரமான இதிகாசமாம். இதிற்ருனே ஸ்ரீ கண்ணன் சரிதையும் பகவத் கீதையு மிருத்தலால் இதனைச் சிலர், சைவம் வைணவ மிரண்டற்கும் பொதுவென நினைப்பது பொருந்தாது. அக்கண்ணன் சிவதீக்ஷை பெற்றுச் சிவோ பாஸனை செய்ததை அப் பாரதமே கூறுமென சூ-வது அதி

காரத்தில் விளக்கினேம். இப்படிப் புராணேதிகாசங்களி னுண்மை யுணராதார் சிவபுராணத்திற் சிவனுக்கும் விஷ்ணு புராணத்தில் விஷ்ணுவுக்கும் வியாசர் பரத்துவங் கூறிக் குழப்பிவைத்தா ரென்று கூறுப. அந்த வியாச பகவான் அந்தந்த மூர்த்தியை வழிபடுவார் திருப்திகாரணமாக வேத மெப்படிக் கூறுமோ அப்படியே அவரவர்க்குக் கீழ்ப்பட் டாரை நோக்கி மேற்பட்டாராக்குப் பரத்துவங் கூறுவாராயி னரென்பது பின்வரு நியாயங்களானு மினிது விளங்கும். அதனால், வியாச முனிவர்பாற் குற்றமேற்றுதல் விசார ணைக் குறைவேயாம். திருவருள் பெற்ற பின்பு அம் முனிவ ரர், "ச்ருதயச்சபுராணானி – பாரதாதீநிஸத்தம் - சிவமேவஸ தாஸாம்பம் - ஹ்ருதிக்ருத்வாப்ருவந்திஹி" - எனுஞ் சூதசங் கிதை வசனத்தில் "வேதம் புராணம் பாரதாதி இதிகாச மெல்லாஞ் சிவபரத்துவ போதகமே செய்கின்றன" எனும் பொருள் பெறப்படுமாறு கஅ-புராணங்களிலும் இதிகாசங் களிலு முடிவான சிவ பரத்துவமே ஸ்தாபித்தாரென்பது தேற்றம். விவரம்:–மேலே காட்டியவாறு சிவபுராணங்களும் பாரதாதி இதிகாசங்களுஞ் சிவபரமேயாயின: விண்டுபுராண நான்கனுள் பாகவதமெனுந் தேவிபாகவதம் நாராயணி பர மாய்ச் சிவபரத்துவங் காட்டும். நாரதீயத்திற் சிவ பரத்துவ போதகமுண்டு: மற்றைக்காருடம் வைணவமெனு மிரண் டும் மும்மூர்த்தி பிரஸ்தாபமே கூறும்வழி வேத முடிவி லுள்ள, ச-வது மூர்த்தியான பரமசிவனை யுள்ளடக்கிக் கிடப்பவையாயின: பிறவும் அன்ன. வைணவர் அந் நான் கோடு பாத்மம் வராகமெனு மிரண்டையுங் கூட்டுபு விஷ்ணு புராணம் ஆறென்ப. பாத்மம் சிவபரத்துவம் பகர்தலானும், வராகம் சிவபுராணம் பத்திலொன்றாதலானும் அவ்வாறு கூறல் பொருந்தாது. அவற்றி னுத்தர பாகம் பொருந்து மெனின் மாறு கோளாகு மென்று கூ-வது அதிகாரத்தி லேயே விளக்கினேம். பிரம புராணம், அக்கினி புராணம், சூரிய புராணம் எற்பட்டாங்கு விஷ்ணு புராணமும் எற் பட்டது. அந்தப் புராணப் பெயர் கொண்டே விஷ்ணு மூர்த்திக்கு முடிவான பரத்துவம் அவை கூறுமெனலுங்

கூடாது. இத்திற நியாயங்களாற் பண்டை வைதிக நூலெதுவும் விஷ்ணு பரத்துவத்திற் கில்லை யென்பதே யேற் படுகின்றது. பாஞ்சராத்திர தந்திரமோ வெனின், அது வேத வுடம்பாடல்லாதது. இச் செய்தி மேலே பல்லிடத் தும் பகர்ந்தாம்.

விளக்கிய வியாச ப்ரோக்தங்களிற் சிவ புராணங்களை வியாசமுனிவர் தாமத குணத்தோடிருந்து சொற்ற தாமதங் களென்றும், அவை சாத்துவிகமான விஷ்ணு புராணங்கள் போல மெய் சொல்லாமற் பொய் சொல்லுமென்றுஞ் சில வைணவர் சொல்லித் திரிவதற்கேற்பக் கூரேச விஜயத்துத் தக்கன் வேள்வி யழித்த கக்ஷியிலும் "நேயமொடுதமோ குணத்திற் புகல் காந்தத்து" எனவும் "தமோ வேளையிற் சொல்கின்ற மந்த புராணங்கள்" எனவும் எழுதப்பட் டுள்ளன. இச்செய்கையானது—அவர்களாற் சிவபுராண மென் றேற்புக்கொள்ளப்படுகிற ஸ்காந்தம், ஆக்கிநேயம், சைவம், கூர்மம், மச்சம், இலிங்கமெனும் புராணங்களானே விஷ்ணு மூர்த்திக்குப் பலநூறு பரிபவ வரலாறுஞ் சிவபரத் துவமுஞ் சித்திக்கின்றன வென்பதை மறுக்கும் வழி காணா மையாலேயே இப்படிச் சொல்லித் தொலைத்தா ரென் பதையே நிலைபெறுத்தும். இதுவேயு மன்றி, "முக்குண வயத்தான் முறை பிறழ்ந்தறைவரே" எனும் விதிப்படி அம்முனிவரை அவிவேகியாக்கி அவர் வசன மனைத்தையும் பொய்ப்படுத்தி அவர் மூலமூர்த்தியாய நாராயணர்க்கும் அக்குணபவநுங்களுண்டெனத்தாபிப்பதுமாயிற்று. சொற்ற வாறு அம்முனிவ ருற்பத்தி, மேற்படி கக்ஷி கூ-ம் கவியில் "மாயன் வண்கலையெனும் வியாதன்" என ஒப்புக்கொள் ளப்பட்டது மாயிற்று. அக்கக்ஷி ரு-ம் கவியில் "அவன் கலையெனவே சொல்லும் வியாதன்" என்றதற்கு "அந்தச் சிவனது அமிசமென்றே சொல்லப்படுகிற வேதவ்யாஸ பகவான்" என வுரை பண்ணப்பட்டது மேற்காட்டிய தற்கு மாறுகோளாம். இதற்குப் பிரமாணங் கண்டதில்லை. இப்படி யாற்றுவோர் சிவபரத்துவஞ் செப்பும் பாரதத்திற் கென்சொல்வாரோ? சுருதிகட் கென்சொல்வாரோ? சாங்

நோக்கியச் சுருதியிற் புராணமும் இதிகாசமும் ரு-வது வேதமெனும்படி "இதிஹாஸ புராணம் பஞ்சமம்" என வருதற் கென் சொல்வாரோ? மஹேதிகாசமாகிய சிவ ரகசியத்திற் கென்சொல்வாரோ? சிவ புராணம் பத்தி லொன்றுன அல்லது வைணவர் சம்மதப்படி இராஜத புரா ணம் ஆறிலொன்றுன பிரமாண்ட புராணத்தில் "சித்திர கூட மான்மியம்" சொல்லப்பட்டதாகவும், அது காந்த வுத் தரத்திலுள்ளதாகவு முரைத்து அது நன்றென்று அத்தல புராண மேற்படுத்தி அதை வைணவர் படித்து வருவதற் கென்சொல்வாரோ? சுருதி கூறும் வழியே கூறும் உபப் பிரஹ்மண புராணங்கள் பொய்யாதல் யாங்ஙனம்? என்பன வும் மத்தியஸ்தரான விவேகிகளே யூகிக்கவுள்ளன. இங் ஙனம் அவ் வைணவர், காணங்கண்டால் வாயைத் திறக்க வுங் கடிவாளங் கண்டால் வாயை மூடவுமான குதிரையை யொப்பார் போலும். ஐயோ பேதமையே! "செய்வன திருந்தச் செய்" என்றபடி அச் சித்திரகூட மான்மியத்தை விஷ்ணு புராணங்களி லொன்றி லுளதென்று எற்படுத்தி விடலாகாதா? அந்த இராஜ தமுமிழிவுடைத் தென்பதை "விலகா விராஜதத்தான் மிகுகாமமொடு துக்கம்" எனுஞ் சூதசங்கிதை வேதார்த்த அத்தியாயக் கூற்றுனு மறிய லாமே.

இனி, அந்த விஷ்ணு புராணங்களில் நாராயணபரத்துவ மில்லையாயினும் மஹோபநிஷத்தில் "ஏகோஹைவநாராயண: ஆஸீந்நப்ரஹ்மாநேசாந:" என்ற வசனம் அந்தப் பரத்து வத்தை விளக்காதோ வென்னின், விளக்காது. என்னை? பிரமதேவர் (குணருத்திரராகிய) ஈசானரெனு மிருவர்க்கும் விஷ்ணு மேலானவராகத் துதிக்கப்பட்டிருத்தலையே அவ் வசனம் விளக்குதலும், அவர் மூவர்க்கு மேலானவரென் றற்கு "நவிஷ்ணு" என்பது அதிலில்லா தொழிதலுங் காண் டலின், அன்றியும், அவ்வுபநிஷத்திற்றுனே மூவருந்துரீய சிவனாலுண்டாக்கப்பட் டழிகின்றவரென்பது "ப்ரஹமா விஷ்ணுச்ச ருத்ரச்ச" என்றெழு வசனத்தாலறியப்படுதல் மேலே விளக்கினேம். மூவருஞ் சிவவிபூதிகளாவா ரென்

பதை விளக்குகின்ற " ஸசிவஸ்ஸஹரிர்விதி :" எனும் அவ் வுபநிஷத்து வசனமும் அதனை நிலைபெறுத்தும். தசோப நிஷத்திற்கு வேறுன இம் மஹோபநிஷத்து முதலிய சில வுபநிஷத்துக்கள் வைணவத்திற் கநுகூலமெனக் கூரேச விஜயத்திலு முதகரிக்கப்பட்டன. அதனுல் தசோபநிஷத் தைதயே விரும்புகின்ற வைணவர் அவ்விஜய விரோதிகளா வது மன்றி வைணவ பஞ்சதபநோபநிடதப் பகைஞரும் வேதத்தைப் பழுதுகூறு பாவிகளுமாவர். வடமொழி வல் லுநராய வித்யாரண்யராற் பாஷியஞ் செய்யப்பட்டுள்ள கoஅ-உபநிஷத்தும் பிரமாணமாகு விவரம் எமது வேதவியா சத்தி னறிக. பெரும் பிரளய காலத்தில் ச-வது மூர்த்தியி னிடம் அடங்கியிருந்த மூவரும் மேலே விளக்கியவாறு தோன்றிய பின்பு உருத்திரர் மற்றிருவரையும், பிரமதேவர் மற்றிருவரையும் அந் நான்காவது மூர்த்தி யருளாற் படைத்தபடியே, விஷ்ணு மூர்த்தியும் மற்றிரு வரையும் படைத்திட்ட வுயர்வை அம்மஹோபநிஷத்து விளக்கிற்று. இவ்விடயத்தை யடியில்வரு சைவ புராணத்து வாயு சங்கிதைச் செய்யுள்கள் விளக்குவனவாயின.

"மறைநான் முகத்தோனெடு யாமுன் கேட்டேங்கேட்கவகுத்தபடி
யறைவா மழியாமகேச் சுரன் றனிடத்திலமரு மூவர்களு
முறையா யுதித்தாராங்கவர் கண்முன்னி யொருவர்தமை யொருவர்
நெறியாற் படைக்கவேண்டு மென்றேநிகழ்த்தற்கரியதவம்புரிந்தார்

புரியாவந்த மகேச்சுரன் றன்னருளாங் கடைந்து புகன்றவரு
ளெரிநேர்மேனி யுருத்திரனங்கிருவர் தமையும் படைத்தனனுல்
மருவார்மலரோனிருவரையும்படைத்தாெனருகான்மாயவனும் [ல்"
பரிவாலரனைநான் முகத்தோன் றன்னைெடாருகாற்படைத்தனனு

இப்படி யொரு காலத்தில் விஷ்ணு செய்த தவத்தைப் பூர்த்தி செய்வான் பரமேசுர ஆணை கடைப்பிடித்து அவ ருடைய சிருஷ்டியில் வெளிப்பட்ட குண ருத்திரரும் பிரம தேவரும் அவ்விஷ்ணுவை அக்காலம் மெச்சல் கூடுமன்றே. அம்மெச்சலும் விஷ்ணு மூர்த்தியி னுயர்வு மெக்காலு முண்

டெனல் கூடாது. இத் தீர்வையைப் "பரத்துக்குப் பரமாவார் பிரமா, அவருக்கு மேலாவார் ஹரி, அவருக்கு மேலாவார் ஈசனெனு மூருத்திரர்" என்று பொருள்படு "பராத்பரதரம்ப்ரஹ்மதத்பராத்பரதோஹரி: தத்பராத்பரதோஹீச:" எனுஞ் சரபோபநிஷத்வசனமும், மேலையயோக தத்துவ யோகசிகை முதலிய வுபநிஷத் வசனங்களு முறுதிப்படுத்தும். இந்த உருத்திர மூர்த்தியையே காலருத்திரர், பிரளயகாலாக்கினி ருத்திரர், ஸ்ரீகண்ட ருத்திரரென்று நூல்கணுவலும். இவருடைய தேவியார், உருத்திரி உருத்ராணி சுவாகை முதலிய பெயர்கள் பெற்றுள்ளார். இவரிருக்கை சப்த பாதளமுங் கடந்த அண்டகடாக வெளியிலுள்ள காலாக்கினி ருத்திரபுவனமாம். இவ்வுண்மையையும், திருவருணைக் கலம்பகத்தில் "ஒதருணை வித்தகரை மூவரிலொருத்தரென வோதியிடு மற்பமதியீர்" என்றதையு முணரமாட்டாதார் இவர் சம்பந்தமாய் வருசெய்திகளைத் துரீய மூர்த்தியான சிவனுருடையவாக வெண்ணி இயைபுகாணு து மயங்குப. அங்ஙனம் திக்குப்பாலகரி லொருவரான ஈசானமூர்த்தி விஷபத்தும் ஏகாதசருத்திரர் விஷயத்தும் அவ்வாறெண்ணி மயங்குப. அம்மயக்கங்களை ஸ்ரீ சுப்பிரமணிய வியாசத்தி லொழித்தோம். ஈண்டுங் குயிற்றினல் "பிட்டபேடணநியாயம்" ஆகுமன்றே.

இங்ஙனம், பரமசிவனுரைப் பிரமனுடைய புத்திரரென்றற்கு விஷ்ணு புராணம் முதலமிசத்து அ-வது அத்தியாயம் ஆதாரமெனின், உரைப்பம். அதனில் பிரமதேவன் நீலலோகிதனுன உருத்திரனைப் பெற்று அவனுக்கு உருத்திரனெனும் பெயரிட்ட பின்பு பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்கிரன், மகாதேவனெனும் பெயர்களைக் கொடுத்தானென்று வருஞ் செய்தியோடு "இந்த நாமங்களையுடைய அந்த ருத்திர மூர்த்திகளுக்கு வேறு வேறு ஸ்தானங்களையும் பத்தினிகளையும் புத்திரர்களையும் கொடுத்தான்" என்பதும் வருதலால், அந்த ஏழு நாமங்களையும் பெற்ற நீலலோகிதனுன ஒருவனுளனென்பதும், அவனுக்கு வேருன அப்பெயர்கட்குரிய ஏழு உருத்திருளரென்பதும்

ஏற்படுகின்றன. பெயர்த்தும் அதனில், "இந்தப்படி அஷ்ட மூர்த்தியாகிய் ருத்திரன் தக்ஷப்பிரஜாபதியின் புத்திரியான சதீதேவியைப் பாணிக்கிரகணம் பண்ணினுன்" என வருதல் அந்த எண்மர்க்குங் காரணனுய்ப் பிரமனுருருவிற்ருேன்ருத ஒருவனுளன் அவன் பரமருத்திரனென்று "ஸ்தூலாருந்ததிநியாய"மாகக் காட்டுகின்றது. அந்த எண்மருக்குஞ் சுவர்ச்சலையாதி எட்டுப் பத்தினிகள் கூறி அப்பத்தினிகட்கு வேருய் (ஒன்பதாவதான) சதீதேவியையும் அவ்வத்தியாயங் கூறுதலால் அந்தத் தேவியின் நாயகன் பரமருத்திரனென்பதேற்பட்டு எமது சித்தாந்த் முறுதிப்படுவதாயிற்று. சுவர்ச்சலை யென்பாரே நீலலோகித ருத்திர பத்தினி யாவார், இவ்வாறு கொள்ளோம், எண்மரு மொருவரே யவரன்றி வேறு பரமருத்திர ரில்லையெனக் கோடுமெனின், அவ்வத்தியாயக் கூற்றுக்கள் குழறுபாடாதலோடு சுருதிகட்கும் ஏனைய புராணேதிகாசங்கட்கும் விரோதமுமாகும். இவ்விஷ்ணு புராணம் 'விஷ்ணுசித்தீயம்' எனும் வியாக்கியான தாற்பரியங்களையுஞ் சேர்த்துத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகவு மிருக்கின்றது. மேன்மிழற்றிய ஸ்ரீ கண்ட ருத்தரரல்லாத ஸ்ரீகண்ட பரமசிவனுரெனும் ச-வது மூர்த்தி இந்தப் பரம ருத்திரராகலின் இவர், 'ருத்திரர்' எனவுஞ் சுருதியிற படிக்கப்படுவோராவர். அதனை, 'அந்த உருத்திரனுக்கு மேலான பதியுமில்லை, இரக்ஷகனுமில்லை, உற்பத்தித்தானமுமில்லை, அவனே காரணன், அவனே காரணுதிபதிகட்கு மதிபன், அவனைப் பிறப்பிக்கின்றவனும் அவனுக்கதிபனுமில்லை' என்று பொருள்படு "நதஸ்யகச்சித்பதிரஸ்திலோகே நசேசிதாநைவசதஸ்யலிங்கம்| ஸகாரணம்கரணுதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ்ஜநிதாநசாதிப:||" எனும் (பஞ்சருத்திரோபநிஷத்திலொன்ருன) சுவேதாசுவதரத்தானும் பிறவற்ருனுமறிக. இவ்வித பிரமாணங்களானே பரமசிவனுர் பிரமாவினுலுண்டாக்கப் படுவோரெனுங் கூற்று நெருப்பில் நீர்த்துளி போலாகுமென்க. 'ருத்ரன்' என்பது சமுசாரத் துன்பமெனுஞ் சாகரத்திற் கிடந்துழிதரு முயிர்களைத் திருவருளெனுந் தெப்பத்தினுலெடுத்து முத்திக்கரை சேர்ப்பவனென்று

பொருளாதலே "இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்குமாற்று - லுன்னரும் பரமமூர்த்தி யுருத்திரனெனும் பேர்பெற்றான்" என்று கந்தபுராணங் கழறுதல் கொண் டறிக. இனி, விஷ்ணுமூர்த்தியை வேதம் அந்தரியாமி யென்று கூறுதோ? அவ்வாற்றானவர்க்குப் பரத்துவஞ் சித்தியாதோவெனின், அவ்வாறு கூறினும் அது சித்தி யாது. என்னை? ஆன்ம வுடம்பினுள் பிரம ருத்திரரும் பல தேவமூர்த்திகளு முள்ளமைபோல அவ்விஷ்ணு மூர்த்தியும் ஆன்ம வுடம்பிற்குள்ளே ஆன்மாவிற்கு வெளியே யுண்மை யின் சருவாந்தரியாமித்துவம் சிவனார்க்கே யுண்மையாகும். இதனை அங்குஷ்டமாத்திரமாய் இருதய கமலத்தில் வசிக்கும் பரவஸ்துவினுடைய அடையாளங்கள் சிவபரமாக, "புத்தி குஹாயாம்ஸர்வாங்க ஸுந்தரம்புருஷரூபமந்தர்லக்ஷ்யமித்யபு ரே| சீர்ஷாந்தர்க்கதமண்டலமத்யகம்பஞ்சவக்த்ரமுமாஸஹா யம்நீலகண்டம்ப்ரசாந்தமந்தர்லக்ஷ்யமிதிகேசித்| அங்குஷ்ட மாத்ர: புருஷோந்தர்லக்ஷ்யமித்யேகே|" என்று விளக்கு கின்ற மண்டலப் பிராஹ்மணோப நிஷத்வசனங்களா லறிக. "ஈசாநம்பரமம்வித்யாத்ப்ரேரகம்புத்திஸாக்ஷிணம்|" எனும் பஞ்ச ப்ரஹ்மோபநிஷத்தானும் பிறவற்றானு முணர்க. அன் றியும் பரமசிவனாரது திருநாமமான "பசுபதி" என்பதே அவ ரைச் சர்வாந்தரியாமி யெனக் காட்டும். என்னை? ஆன் மாக்களாகிய பசுக்கட் கெல்லாம் அவர் பரமாத்மா வெனும் பதியாகி அவற்றின் உள்ளக் குகைதோறு மிருந்து நடாத்து தலின். அற்றாகலினன்றே அந்தக் குஹையிலிருக்குங் "குஹன்" எனுந் திருநாமத்திற்குரியோனாகி "தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி தந்நஷ்ஷண்முக: ப்ரசோத யாத்|" எனுங் காயத்திரி நாதனாகி எம்மை யாண்டருள்வோ னாகியுள்ள சுப்பிரமணியத்துக்கும் சிற்கந மேனியுள்ள அந்தப் பரமசிவத்துக்கும் சச்சிதானந்த லக்ஷணத்திற் பேதமின்மை சாதிக்கின்றன சாமவேத முதலிய பிரமாணங்கள். இப் பசுபதித்துவத்தாற் சிவத்திற்கு ஆன்மாவுடம்பாயிற் றென் பது பிருதிவியாதிபூதம்-ரு, சூரியன் சந்திரன் ஆன்மா வெனும்-ரு, ஆக அ-ம் அஷ்டமூர்த்தமாமெனுஞ் சுருதியா

லும் போதருமென்க. திரிமூர்த்திகளும் பிரமத்தின் சரீர மென்று மைத்திராயணி யுபநிஷத்துரைத்தலும் அதுவென்க. இங்குக் காட்டிய பசுபதி நாமம் சிவனார்க்கு இயற்கை யன்று: திரிபுரசம்மாரஞ் செய்திட வேண்டுமென்று தெரி வித்த தேவர்களை அவர் நோக்கி நான் பசுக்களுக்குப் பதி யாக நீவிர் வரமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட படி அவர்களுமவ் வரமளித்த பின்றை அவரால் அந்தச் சம் மாரஞ் செய்யப்பட்டமையால் அது ஆகந்துகமாம்: இச் செய்தி யஜுர் வேதத்து சூ-வது காண்டத்திலுண்டெனும் வைணவர் வாதத்தை இவ்வளவிற் காட்டப்பட்டனவும் இனிக் காட்டப்படுவனவுமாம் நியாய கட்கம் வெட்டி வீழ்த்துதலைச் சன்மார்க்கர் கண்டு சந்தோஷிப்பாராக. அந்தத் திரிபுரச் செய்தி கூறு சுருதியிற் சிவனார் பிடித்த வில்லுக்கு விஷ்ணு அம்பாகச் சமைந்தாரென்றல் உண்மை யின், அவ்விஷ்ணுவும் பிரமாதி தேவர்களான பசுக்களோ டொருவராய் நின்றாரென்பது துணிபு. இன்னோர் பசுக்க ளென்பதைச் சுருதி வாயிலாக மேலே விளக்கினோம். இவ ரோ சிவனார்க்கு அப்பெருவரமளிக்கும் ஆற்றலுடையாராவர்! திரிபுரமொழிக்குந் திறமிலாராகிச் சிவனாரை வேண்டி நிற் பது தானோ அத்தேவர்க்குச் சிறப்புடைமை!! திரிபுரத்தை சிரித்தெரிக்கும் பெருமையுடையரோ தமக்கொரு பெருமை வேண்டி அத்தேவரிடம் வரங்கேட்போராவர்!!! அசம்பா விதம். பிரம விஷ்ணுக்கள் சிவோபாசக ரென்பதையும், கேநோபநிஷத்துக் கிளத்துகின்றபடி சிவனார் யக்ஷனாக வந்து எறிந்த ஒரு துரும்பை இந்திராதி தேவர்கள் அசைக்க மாட்டாதவரானார்களென்பதையு முய்த்துணர்க. ஆயின், அந்தத் திரிபுர சம்மாரச் செய்திச் சுருதியில் 'வரம்வ்ரணை' என்றுள்ளது சிவனார் வரங்கேட்டதைக் காட்டாதோவெனின் காட்டும். அதன் பொருள்:-சிவனை மறந்தவழி நானெனப் படுபசுத்துவத்தையும், எனதெனப்படு உடல்பொருள்களையுஞ் சீடனிடமிருந்து ஞானாசிரியர் வாங்கிக் கோடல்போலத் தங்களைப் பதியென வெண்ணிக் கலாய்த்துத் திரியும் அந்தத் தேவர்கண்மீது வைத்த பெருங் கருணையாற்றானே சிவபிரா

ளுர் நுங்களை நீங்கள் பதியெனக் கொண்டிருத்தலே எமக்கு அர்ப்பணஞ் செய்துவிடுமின் என்றார் எனவாம். ஆகவே, அந்தச் சுருதிதானே (சிவ வசனமாக) "அஹமேவபசூநா மதிபதி" என்றபடி 'நானேபசுபதி' பசுக்களாகிய நீங்கள் அவ்விதஞ் செய்வீர்களாயின் திரிபுர சம்மாரமும் இரக்ஷிப்புங் கிடைக்குமென்று இதமாக அருளிச் செய்தாரென்ப தேற் படும். இதனை ஸ்காந்தம் தக்ஷகாண்டம் க-வது அத்தியா யத்து உகூ-ந௦-ரு க-ம் சுலோகங்களில் "பிரமையினாற் புத்தி பேதுற்று விஷ்ணு முதலிய வெங்களை சகதீசனுக்குச் சமான மாக எவனுரைக்கின்றானோ அம் மகா பாதகன் அருநரகே யனுபவிப்பான். எங்களை யந்தப் பரமேசுரனுக் கடியவ ரென்றே யுரைக்கின்ற ஏனையோர்பால் யாங்கள் பெரு நேயமே பாராட்டுகின்றோம். மகேசுவரனுன சம்புவேபதி, யாங்களே பசுக்கள்" என்றருத்தமாதலும் வலியுறுத்துகின் றது. இச்சுலோகங்கள் வேதோபப் பிருங்கணமாய் நிற் றல் காண்க. அன்றியும், மேலைய ஜாபால்யுபநிஷத் வசனத் தில் "ஸர்வேச்வராஈச : பசுபதி :" "தத்பதித்வாத்பசுபதி :" எனவும், நாதபிந்துபநிஷத்தில் "ருத்ரம்பசூநாஞ்சபதிம்ததா" எனவும், பஸ்மஜாபாலத்தில் "பசுபாசவிமோசக : பச வச்சாமாநவாந்தம்" எனவும், அதர்வ சிரசில் "தஸ்மாத்வ்ர தமேதத்பாசுபதம்| பசுபாசவிமோக்ஷாய" எனவும், ஸ்கந் தோபநிஷத்தில் "பாசபத்தஸ்ததாஜீவ : பாசமுக்தஸ்ததா சிவ :|" எனவும் வருபவை சிவனாது பதித்துவத்தைச் சாதிப்பனவாயின. இன்னன பிரமாணம் பலவுள. இச் சுருதிகளானும் புராணங்களானும் பதிபசுபாசமெனும் மூன் றும் வெளிப்பட்டனவாகலின் அம்மூன்றும் ஆகமபரிபாஷை யென்பார் மாற்றம் மறுக்கப்படுதலும் அவ்வாகமம் வேத மயமாதலுங் காண்க. சிவனாது வில்லுக்கு விஷ்ணுமூர்த்தி அம்பாகக் சமைந்ததை ஒரு பெரிதாகப் பேசும் வைணவர் "தாமக்நிமநீகஸோமம்சல்யம்விஷ்ணுந்தேஜநமிதி" என்றோ விடுஞ் சுருதிப்படி அந்த அம்பினடிப்புறம் அக்கினி தேவ னும், மேற்புறஞ் சோமதேவனும், நுனி விஷ்ணு மூர்த்தியு மாக வமைந்தமையின் அவ் விஷ்ணுமூர்த்தி முழு அம்பாகவு

மமைய வலியிலாராயினு ரென்பதையும், "எய்தவனை விட்டு அம்பை யேசுவதி லென்ன பயன்" எனும் பழமொழியை யும் பிறநியாயங்களையும் ஆய்ந்துறுதி தேர்தல் நறிதாம். இந்த விஷ்ணு முதலினோர் சிவனாரைச் சேவிக்கின்றவர், சிவனார் சேவியர். அருத்தம் - அவர்களாற் சேவிக்கப்படுவோரென்பது - பஞ்சப்பிரஹ்மோபநிஷத்திற் பெறப்படுதல் மேலே காட்டினோம். அதுபற்றி ஈண்டுஞ் சில காட்டுவாம்.

வைணவத்தை அறக்களைகின்ற அதர்வசிகையில் "த்யாத ருத்ர:" என்பதற்கு முன் வசனமாக "த்யாநம்விஷ்ணு:" எனவருதல் போலத் தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும் "நாராயணபரோத்தியாதாத் த்யாநந்நாராயண: பர:" என வருகின்றது. தியாதா - தியானிப்போன். விவரம் - மேலானவனைத்தியானிக்குங் கீழானவனென்றும். இவ் வசனம் வருமுன் வந்த "நாராயணபரம்ப்ரஹ்மதத்வம்" எனும் வசன விசேடமும் இதனு லொழிந்தது. இங்ஙனம், குணருத்திரரும் விஷ்ணுமூர்த்தியுந் தியாதாவாதல் காண்க.

அந்த அதர்வசிகையில் "காரணந்துத்யேயச்சம்பு:" "த்யாயீதேசாநம்" "சிவஏகோத்யேய:" என வருகின்றன. தியேய: = தியானிக்கப்படுவோன். விவரம் - கீழானவனால் தியானிக்கப்படு மேலானவனென்றும். இங்ஙனம், சிவபெருமானார் அந்தத் தியாதாக்களால் தியானிக்கப்படு தியேயராதல் காண்க. இவரைத் தியானித்து நிற்போராய திரிமூர்த்திகளையும் இந்திராதி தேவர்களையும் இந்தச் சுருதி "நகாரணம்" என விலக்கிச் சம்புவாகிய சிவனாரைக் காரணராக நிறுவலானும், இதுகாறுஞ் செய்த விசாரத்தானும் சிவனார்க்குப் பசுபதித்துவம் ஆகந்துகமல்லாத இயற்கையே யெனல் சித்தித்தது. "ஸ்வதச்சிவ: பசுபதி:" "ஸ்வயம் பசுபதி:" எனும் பாசுபதப் பிரமோபநிஷத் வசனங்களும் அதனை நிலைபெறுத்தும். பசுபதி யென்பது நரர்களில் தன்னையு மொருவனெனக் காட்டுகின்ற நரபதி போலாது புவனபதி போல்வதாம். "ஸர்வஸ்யப்ரபுமீசாநம்" எனுந் தைத்திரீயச் சுருதியையும் இங்ஙனங் கருதிக்கொள்க. விஷ்ணுமூர்த்தியைப் பசுபதியென்றுவது, திரிமூர்த்திகளும் வணங்

குந் தியேயரென்றுவது வேதம் விளக்கக் கண்டிலம். இன்னன நியாயங்களால் விஷ்ணுமூர்த்தி பதியாகாமே பசுவேயாகின்றூர். அவர்க்குத் தலைநோயுண்டா யிருந்தமையும் அவரது பசுத்துவத்தை விளக்கும். இவ்வுண்மையை "தக்கனுஞ் சுரத்தினை யுடலிற் ருங்கினன் - தொக்கிடத் தலைவலி யரியுந் துக்கிதன்" எனுஞ் சிவதருமோத்தரத் திருக்கூற்றூனும், புரட்டாசி மாதங்களில் விஷ்ணு கோயில்களில் நடக்கும் ஆசாரத்தானும் பெறுதும்.

ஆயின், சிவசத்தி மூர்த்தம் நான்கனில் நாராயண மூர்த்தமு மொன்றென்பது எவ்வாறு கூடுமென்னின், கூறுதும். உமாகாந்தனது இடப்புறமான சத்தி பாகத்திலிருந்து அம்மூர்த்தி வெளிப்பட்டமையானும், சிவசத்தி பிரணவமான உகாரம் அம்மூர்த்தியிற் பதிந்து திதி செய்கின்றமையானும் பிரகிருதிரூப நாராயண மூர்த்தஞ் சத்தி மூர்த்தமாம். அதில், யாதொரு ஜீவன்மாட்டு இராஜத தாமதங்களுஞ் சாத்துவிகமும், வௌவாலுருவிற் பறவை வடிவும் விலங்கு வடிவும், பேய்பிடித்தா னுருவிற் பேயும் பிடிபட்டவுயிரும் உள்ளமை போலச் சத்தியும் பசுவாகிய ஆன்மாவுமுண்டு. ஞானக் கண்ணைப் பூதஇருள் பீடியாததுபோல அச்சத்தியை அவ்வான்ம பாசமும் பீடியாது. இவ்விரண்டு தன்மையு முண்டென்பது கொண்டே நாராயணர்க்கு உள்ளே தாமதமும், வெளியே சாத்துவிகமு முளவென்று முந்து நூல்கண்மொழிகின்றன. சிவனிடமிருந்து சீதரர் வெளிப்பட்ட முறைக்குச் சீதரரிடமிருந்து மதுகைடவர் வெளிப்பட்டமையு முதாரணமாகலாம். சிவசத்திபதிதல் கொண்டே திரிமூர்த்திகளுஞ் சிவாமிச மாவரென்று வேதஞ் சிறுபான்மை தெரிக்குமென்க. இராமமூர்த்தி விபீஷணர்க்குச் சிரஞ்சீவி கொடுத்தமையும், கண்ணமூர்த்தி விசுவரூபங் கொண்டமையும் விஷ்ணு பரத்துவங் காட்டாவோ வென்னின், காட்டா. என்னை? ஜமதக்கினி முனிவரும் பரசுராமர்க்குச் சிரஞ்சீவி யளித்தார்: வீரபாகுதேவரும் விசுவரூபங் கொண்டார்: ஹனுமருங் கொண்டாராகலின். இவ்வுருவங்களினு மேம்பட்டது பாரமேச்வரரூபமென்பதை, ஸ்காந்தம் சம்பவகாண்டம்

௩௧-ம் அத்தியாயம் ௨௦-ம் சுலோகத்தில் "பின்பு விஷ்ணு முதலிய சர்வதேவோத்தமரும் கந்தஸ்வாமி யாகிய அந்தப் பரமாத்துமாவின் அளவற்ற தேஜசில் ஆயிரத்திலோ ரமிச மட்டும் அறிந்தனா" என்றருத்த மாதலாற்றெளிக. இங்ஙனம் திரிவிக்கிரமாது வீக்கமென்னுகும்! கண்ணமூர்த்தி யினது விசுவரூபமுஞ் சிவோஹம்பாவனுத் தியானத்தி னுண்டானதாகும். அஞ்ஞான்று "நானே யெல்லாம்" என்றெழுந்த வசனமானது யாதொரு தேவதை ஆவேசித்த யாதோரான்மாவின் நாவிலெழும் வசனம் அந்தத் தேவதை யுடையதாகவாதல் போலச் சிவபிரானுடையதேயாம். இவ்வித வசனம் வாமதேவ முனிவாதி பல்லோரிடத்து மெழுந்தமை பெருநூற்பிரசித்தம். இம்முடிவைப் பகவற்கீதையில் பிரமம் யாது எனுமருத்தந் தோன்ற "கிம்தத்பிரஹ்மம்" என்று அருச்சுனன் கேட்ட கேள்விக்கு அக்கண்ண மூர்த்தி நானே பிரமமெனு மருத்தந்தோன்ற "அஹமேவபரம் பிரஹ்ம" என்று விடைகொடாமல் அழியாதது யாதோ அதுவே பிரமமெனு மருத்தந் தரத்தக்க "அக்ஷரம்பிரஹ்ம பரமம்" என்று (தமது ஜீவநிலைநின்று) சொன்னமையும், கண்ணுவராதி இருடிகளை பூஜித்தமையும், சால்வராஜன் விடுத்த ஆயுதத்திற் காற்றுது மூர்ச்சித்து வீழ்ந்தமையும் அந்த இராஜன் கொடுவந்து வெட்டிய மாயா வசுதேவர் செய்தியைச் சிலரறிவிக்குங்காறுந் தம்முடைய தந்தை வெட்டுண்டாரேயென வருந்தினமையும், அந்தியகால விஷயங் களும் ஆதரிக்கின்றன. கீதை விஷயந் தவிர மற்றவை வைணவர் பாகவதத்தும் உள. குழவிப் பருவத்திற் பானு கோபன் சூரியனைப் பற்றியதையும் அவன் தம்பி அக்கினி முகன் சந்திரனைப் பற்றியதையும் ஜலந்தரன் பிரமாவினது தாடியை வெய்தெனப் பற்றியதையும், அகஸ்தியனார் கடலினை அங்கையில் வாங்கி ஆசமனஞ் செய்ததையும், அவர் விந்தகிரியைப் பூமியிலமிழ்த்தியதையும் பிறவற்றையும் ஞாபகஞ் செய்வார்க்குக் கண்ணமூர்த்தி செய்கைகள் வியப்பாகத்தோன்று. நிற்க, (நாராயணரைப் பரமம் - பிரமம் - விஷ்ணு - பிரணவ ரூபி - அந்தரியாமி யென்பனவாதிய சொற்களான் வேதம்

7

விளக்கினும்) அத்வைதத்தோடுங் கூடிய சதுர்த்த சப்தத்தி லேனுந் திரிமூர்த்திகட்கு மேலெனுந் துரீய சப்தத்திலேனும் நாராயணர் நாமம் பொருந்த அவ்வேதம் விளக்காமையால் அவர்க்கு முடிவான பரத்துவ இன்மையே முன்னிற்ப தாயிற்று. அவ்வுண்மை முன்னிற்க வேண்டுமாயின், அவர் பெயர் அந்நான்காவது சிவத்திற்குமேலாக ஐந்தாவதாகவும், யோகதத்துவ முதலிய வுபநிடதங்கள் சொல்கின்ற ஐந்தாவது சதாசிவத்திற்கு மேலாக ஆறுவதாகவும் படிக்கப்படவேண் டும். அப்படி யெச்சுருதி படிக்கும்! எதுவும் படியாது. இங்ஙனம் சரபோபநிஷத்திற் பைப்பலாத மஹரிஷியானவர் பிரமதேவரைப் பார்த்துத் திரிமூர்த்திபரன் யாவன் ? என்று கேட்டபோது அவர் பரமசிவனே யென்று நனிவிளக்கி யிருத் தலையுங் கருதிக்கொள்க. எல்லா வுபநிஷத்திலுஞ் சிவனுரே நுழைந்திருக்கின்றூர். "நாஸ்திநாராயணஸமம்" என்பதாதி சொற்களுக்குரிய பொருளை அடுத்துவரு அதிகாரத்துழை விளக்குதும். இதுகாறுஞ் செய்த விசாரத்தானே ஆழ்வார் பெருந்தெய்வமென வுள்கிய விஷ்ணுமூர்த்தி, மூவரிலொருவ ராய்ச் சீவனுய்ச் சிவத்தைத் தியானித்துய்ப்பவரா யுள்ளா ரென்றல் வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதிற் புலப்படுவ தாயிற்று.

ஈண்டு, அந்தத் திருமங்கையாழ்வார் (2672 - 34) " அறமுதனுன்கவையாகி, மூர்த்திமூன்று, யிருவகைப்பயனு யொன்றுய் விரிந்து, நின்றனை" என்றுரைத்தது விஷ்ணு மூர்த்தி நான்காவது தெய்வமென்பதை விளக்காதோ வென் னின், விளக்காது. என்னை ? இவ்வதிகார ஆரம்பத்திலுத கரிக்கப்பட்ட அவருடைய பாடல்களில் "மூவரிலெங்கண் மூர்த்தியிவன்" "மூவரிலொருவனுய வொருவனை" என்பவை கட்கு விரோதப்படுமாகலின். ஆவதேல் அதன் பொரு ளென்னை யெனின், விஷ்ணுவாகிய நீயே மற்றிருவராகி மூன்று மூர்த்தியென நின்றனையெனவாம். உருத்திரன், பிரமன், இந்திரனெனு மூவருமாய் நின்றனை எனலுமாம். இப்பொருளே,—நம்மாழ்வார் திருவாய்மொழி அறுக்கு மெனுந் தொடக்கத்துப்பத்தின் கூ-ல் " மூவர் முதல்வனெரு

மூவுலகாளி" (3642) என வருதற்கும், வளவேழெனுந் தொடக்கத்துப் பத்தின் ௬-ல் "தானேருருவே தனிவித்தாய்த் தன்னின் மூவர் முதலாய - வானோர் பலரு முனிவரு மற்று முற்றுமாய்த் - தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி யதனுட் கண்வளரும்" (2722) என வருதற்கும் இவை போன்ற பிறவற்றிற்குங் கொள்க.

மேற்படி திருவாய்மொழி கண்களென்றெழும் பத்தின் ௬-ல் "தானுஞ் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதலை" (3527) என்றும், தேவிமாரென்றெழும் பத்தின் ௧௧-ல் "பெரியவப்பனைப் பிரமனப்பனை யுருத்திரனப்பனை" (3457) என்றும் வருவனவற்றால் மூவரிலொருவராகவே விஷ்ணு மூர்த்தியுளா ரென்பதூஉம்;

இவையுமென்றெழும் பத்தின் ரு-ல் "நக்கபிரானோ டயனுமிந்திரனு முதலாக - வொக்கவுந் தோற்றிய வீசன் மாயன்" (2767) என்றும்,

மேற்படி ௧௦-ல் "கண்ணபிரானைத் தொழுவோ - ரொற் றைப் பிறையணிந்தானு நான்முகனு மிந்திரனு - மற்றை யமரரும்" (2772) என்றும்,

பொலிகவென்றெழும் பத்தின் ௧௦-ல் "நக்கபிரானோ டயனுமிந்திரனு முதலாகத் - தொக்கவமரர் குழாங்கள்" (3137) என்றும்,

வருவனவற்றால் மூவரிலொருவராகவே விஷ்ணுமூர்த்தி யுளாரென்பதோடு இந்திரனுக்கு வேறாக "மற்றையமரரும்" என்றதனால் இந்திரனையுமொரு மூர்த்தியாக்கி அம்மூர்த்தி யோடு பிரமருத்திரரெனும் இருமூர்த்திகளையுங் கூட்டி மூவ ரெனக் கொள்ளலாமென்பதூஉம் ஏற்பட்டு யாம் மேல்விரித்த பொருளையே யுறுதிப்படுத்துதல் காண்க. இப்பாடல்களில் அரனுக்கு அரியுயர்ந்தவரென்ன வருதல் பொருத்தமற்ற தென்பதை மேலே சுருதி முதலியவற்றால் யாம் பெரிதும் பிரகாசப்படுத்தியது கொண்டுணர்க. இவ்விதம் மும்மூர்த்தி களிலொருவரே விஷ்ணுவென வொப்புக்கொண்ட ஆழ்வார், தந்தெய்வம் அருவமாகவு மெங்குமாகவு மிருப்பதென்னத் திருவாய்மொழி - சீலமிலென்றெழும் பத்தின் ௬-ல் "என்

னுடைய ஆக்கையுள்ளு மாவியுள்ளுமல்ல புறத்தினுள்ளு - நீக்கமின்றி யெங்குமாய் நின்றாய்'' (3078) எனவும், அந்தாம வென்றெழும்பத்தின் ௧௦-ல் "ஆணல்லன் பெண்ணல்லனல்லா வலியுமல்லன் '' (2838) எனவும், கூறியபடி யென்னை யெனின், உலகை விண்டுமூர்த்தி விழுங்குபவரென நூல்கள் கூறுதல் கண்டும் அவருருவிலுள்ள சைதன்யம் ஆண் பெண் அலியெனு மடையாள மிலாதிருத்தல் கருதியும் அப்படிக் கூறினரென்க. இதனைத் திண்ணனென்றெழும் பத்தின் ௧-ல் "மண்ணும் விண்ணு மெல்லாமுட னுண்டநங்-கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே '' (2796) என்றது மாத ரிக்கும். இப்பொருளேயுமன்றித் தெய்வம் அருவமாக எங்கு முள்ள தென்றல் பன்னூற் பிரசித்தமாகலின் அது கண்டு மூவரிலொருவராய்த் தந்தெய்வமாயுள்ள நாராயணரை அவ் வருவப் பொருளாகவுந் துதித்தாரென்று பொருள் கோடற் கும், அத்திருவாய்மொழி மாயாவென்றெழும் பத்தின் ௧௦-ல் " தொல்லை நன்னூலிற் சொன்ன வுருவுமருவு நீயே'' (3423) என்றது ஆதாரவாய் நிற்கின்றது. துதிவாதமான இது போன்ற வாக்கியங்கள் குணவாதமாய் நின்று பரத்துவந் தாபிக்கமாட்டா. தாபிக்குமெனின் மேலே காட்டுற்ற சுருதி கட்கும் பாட்டுகட்கும் முரணுகும். அன்றியும், கம்பர் சரஸ்வதியே பெரிய தெய்வமென்று சரஸ்வதி யந்தாதியில்,

" தேவருந் தெய்வப்பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவராகி யுள்ளோரு முனிவாரும்
யாவரு மேனைய வெல்லாவுயிரு மிதழ்வெளுத்த
பூவருமாதி னருள்கொண்டு ஞானம் புரிகின்றதே "

என்றுரைத்ததையும் பிறதெய்வத் துதிகளையு மொப்ப நேரிடும். அங்ஙனமாயின் ஆழ்வார் தெய்வமும் கீழாய்விடுமே. இப்படிப் பஃறுதி செய்த கம்பர் இராமாயணம் பாடியது கொண்டு அவரைக் " கம்பநாட்டாழ்வார் '' என்றுரைக்கும் புத்துரை பொருந்துமாறு யாங்ஙனம் ? அவ்வுரை - பொதுப் புலவரும் மதந்தழீஇய புலவரும் நாராயண சம்பந்த சரிதை களை நாமெழுதினும் பாடினும் நம்மையும் ஆழ்வாரென்பது

தொடருமென்றஞ்சி யொதுங்கிடவே யேற்பட்டதாயிற்று. இது கிடக்க, அவ்வாழ்வாருடைய அருவமொழியை விண்டு மூர்த்திக்காக்குதலாலும் அது வைணவ சாதகமாகாது. என்னை ? சுருதியில் ௬-வது தெய்வ வசனங்களில் சைவ சாதகமாகச் சிவம்-சதாசிவம்-சம்பு-மஹேச்வரன் என்பன வாதிசப்தங்கள் அருவும் அருவுருவும் உருவுங் காட்ட வருதல் போல வாசுதேவம்-விஷ்ணு-நாராயணன்-ஹரி என வரவில்லை யாகலின். விண்டுவானவர் உலகை விழுங்குதல் இத்தன்மைத் தென்பதை வருமதிகாரத்தில் விளக்குதும். ஈண்டு, நாராய ணரை மும்மூர்த்திகளிலொருவரென்றே யொப்பியுள்ள ஆழ்வார் சிவபிரானை முற்போந்த அதிகாரங்களில் விவரித்த படி துதித்தது நான்காவது தெய்வமென்றெண்ணியோ ? நாராயணரினுந் தாழ்ந்தவரென் றெண்ணியோவெனின், அவ் விடயத்தில் அவர்க்கு ஐயமுண்டென்பதை ௩-௫-ம் அதிகாரங் களில் துலக்கியுள்ளாம். பொச்சாந்து விடாது கருதுக.

ஆழ்வார் தீர்வை யிவ்வாறிருப்ப, மேலுதகரித்த சுருதி முதலியவற்றால் விஷ்ணு மூர்த்திக்கு விளைகின்ற இழிவுகளைக் கண்ணுற்ற இக்காலத்து வைணவரிற் சிலர் அவற்றினின்றுந் தந்தெய்வத்தை விலக்கிக் கொள்பாக்கு மூவரிலொருவரான விஷ்ணு :—காரிய விஷ்ணுவென்றும் அவர்க்கு மேலானவர் காரண விஷ்ணு அவர் பர வாசுதேவரென்றுங் கூறிக் கொள் கின்றனர். மண்ணுங் குடமும்போலக் காரணமுங் காரியமு மொன்றாகும் வழிக் காரிய மூர்த்திக் குறுமிழிவு காரண மூர்த்திக்கு மாமெனு நியாயத்தாலும், ௬-வது அதிகாரத்தில் விளக்கிய "ததோங்லபச்யத்கிரிசஸ்யவாமே" எனும் பாரத வசனப்படி கண்ணமூர்த்தியாகிய காரியவிஷ்ணுவும் சங்க சக்கரதாரரான காரணவிஷ்ணுவுஞ் சிவபிரானைத் தோத் திரித்து நின்றதனாலும், அத்தோத்திர விஷ்ணுவையுங் காரியவிஷ்ணுவெனக் கோடற்கு அக்கண்ணகற்கியரோடு முடிகின்ற அவதாரம் பத்தென்பதழிந்து பதினொன்றென வாமாற்றான் ஏலாததனாலும், காரணவிஷ்ணுவின் இடம் வைகுண்டமும் தேவி இலக்குமியுமாயின் காரிய விஷ்ணு வின் இடம் யாது ? தேவி பெயரென்னை ? பத்தவதாரத்

திற்கும் பிறப்பிட மேற்பட்டபடி மூவரிலொருவரான விஷ்ணு வுக்குப் பிறப்பிடம் யாது? என்று கடாவுநர்க்கு விடையிறுக்கும் வழியில்லாததனுலும் அக்கூற்றுற் பயனென்று மில்லை. அன்றியும் பிரமன் விஷ்ணு உருத்திரனெனு மூவர் வழிபடுகின்ற விஷ்ணுவென விளக்காத ஆழ்வார் பாடலுக்கும், வேத முதலிய பிரமாணங்கட்கும் அவ்வைணவர் முயற்சி முரணுகும். கேநோபநிஷத் துவிதீய கண்டப் பிராரம்பத்தில் "பிரமருத்ராதிகளிடத்தில் அந்தப் பிரமமிருக்கிறதென்று நினைப்பாயேயானல் அதுவும் அல்பந்தான்" எனும் பொருடோன்ற இராமாநுஜர் பாஷியஞ் செய்திருப்பதும், கூரேச விஜயம் வியாசர் புயத்தம்பக் கக்ஷியில் "பிரமருத்திரேந்திராதி தேவர்களில் ஸ்ரீமந்நாராயணன் பரனென்று அறியவேண்டியது" எனவெழுதியிருப்பதும் நாராயணரை மூவரிலொருவரென்றும், அவரே வைணவ மத தெய்வமென்றுங் காட்டுகின்றன. இவற்றிற்கும் அப்புது வைணவர் செய்கை முரண்படுகின்றது. "மறை மூலகமாகா துலகின் மருவு பாஞ்சராத்திர நூல்" என்று சூத சங்கிதை சொல்கின்றபடி அவைதிகமான பாஞ்சராத்திரத்தில் விளக்கப்படும் வாசுதேவ சங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தர்களும் விஷ்ணு மூர்த்தியாகவே முடிதலாற் காரியமென்பதிலுங் காரணமென்பதிலும் அவர் காணும் பயனென்றுமின்று. இப் புது வைணவர் புகுஞ் சந்துபொந்தெல்லாம் இவ்விதம் அடைபடுதலாலும், வைணவபரமான புத்தகங்கள் பலவாறு கேடுறுதலாலும் இனி, கூரத்தாழ்வார் விழி பறியுண்ட செய்தி கூரேச விஜயத்திலில்லாமற் செய்ததுபோல அல்லது, சூ-ம் அதிகாரத்திற் காட்டப்பட்ட சபேடிகையிற் சைவனுகிய சோழ ராஜனைப் பார்த்த கண்கள் ஆகாவென்று அவ்வாழ்வார் தங்கண்ணைத் தாமே பிடுங்கி யெறிந்து விட்டாரெனும் புரட்டுச் செய்தி தோன்ற "சிவனையுஞ் சைவனையும் புத்தி பூர்வமாகக் கண்ட கண்களைப் பிடுங்கிப் புகடுகை" என்றெழுதியதுபோல அத்திறவழுக்களொழியவுந் தங்கருத்துத் தாபனமாகவும் அவர் அப்புத்தகங்களைத் திருத்திக் கொள்வார் போலும். அன்னணந்திருத்தினும் வேதத்தைத் திருத்துதல்

அசாத்தியமாதலால், வேத முதலிய எல்லா நூல்களையும் விலக்கி வேறு புது நூல்களுண்டாக்கிக்கோடலே அவர்க்கு நன்மார்க்கமாமென்று நடுநிலைநிற்பாரெவருந் தீர்மானிப்பர். நிற்க.

தென் மொழியிலேற்பட்ட நாலாயிரப் பிரபந்தத்தை மட்டும் படிப்பவரே தென்கலை வைணவரெனப்பட்டார். இவர், தமக்கு "உபயவேதாந்தப் பிரவர்த்தகர்" எனும் பட்டம் வைத்துக்கொண்டு சமயத்துக்குத் தக்கபடி வடமொழி வேதத்தினுழைதல் அமைவுடைமையாகாது. ஆகவேண்டுமாயின், வடகலையாரென்பாருந் தென்கலையாரென்பாரும் இடும் அவைதிகத் திருமண் புண்டரமிரண்டும் பொருந்தத் தமது நெற்றியினடியிற் பாதிப் பாதமே யெழுதிக்கொண்டு அவ்விரண்டு நூல்களையும் படனஞ் செய்துவரல் வேண்டும். அங்ஙனம், வேதமானது பூர்வம் உத்தரமெனவேற்பட்டு உத்தரமே வேதாந்தமெனவிருத்தல்போல ஆழ்வார் பாடற்கும் அவ்விரண்டு பாகமுமிருத்தல் வேண்டும். இல்லையெனின் உபய வேதாந்தப் பிரவர்த்தகம் உலைந்துபோம். அன்றியும் இந்நூலில் பிரகாசப்படுத்திய பிரமாண வாயிலாக அந்நாலாயிரப் பிரபந்தம் முடிவான திராவிட வேதமாகாது நிற்றலானே அந்தப் பிரவர்த்தக பட்டம் பேதிப்பே கொள்ளும். வடகலை வைணவரென்பார் காரியம் இத்துணை விபரீதத்திற் கிடங்கொடாது அவர் வேதமோதி யுண்மை யுணர்பவராயுமிருக்கின்றார். இதுகாறும் உதகரிக்கப்பட்ட ஆழ்வார் பாடல்களானே அவ்வாழ்வார், கேசவார்த்தம்—அர்த்தநாரீசுரம்—மூர்த்தித் திரயமெனுஞ் சிவமூர்த்தங்களையும் உருத்திர பிரமேந்திரர்களையுந் துதித்ததூஉம், முடிவில் 'அர' சப்தஞ் சொல்லிக் கதியடைந்ததூஉம், விஷ்ணுமூர்த்தி பரமசிவனை நாயகனாகக்கொண்டு, பிரமாவைப் பெற்றதூஉம், விஷ்ணுமூர்த்தியு மவரடியவருஞ் சிவசின்னதாரண ரென்பதூஉம், விஷ்ணுமூர்த்தி மும்மூர்த்திகளிலொருவ ரென்பதூஉம், பிறவும் வெளிப்பட்டன. வைணவர் இவைகளை நோக்கியே தங்களுக்குள் "கூரத்தாழ்வார் குடியைக் கெடுத்தார்" என்பதோடு "நம்மாழ்வார் நம்மைக் கெடுத்தார்" என்று ஆழ்வா

ரனேவரையும் வைகின்றூர்போலும். பாவம்! ஓ சதாசார சைவ மரபு விளக்கவந்த தகையுடையீர்! "சிவனுக்கு வேதம் பரத்துவஞ் சொல்லாது" என்று நீயிருங் காண எழீஇவந்து எம்மை வாதுக்கழைத்துப் பின்னர் வாளா விருந்துவிட்ட தென்கலை வைணவரெவரோ அவரது விசாரணையெற்றென்ப'தை யீண்டோர்மின்! அடுத்த அதிகாரமும் அறையக் கேண்மின்!

ஏழாவது அதிகார முற்றிற்று.

(அ) இழிப்புரை மறுப்பு

ஆழ்வார், உண்மையுணராது சில புத்தகவுரை பிடித்துப் பாடும் பாடலிற் சிவபிரானை யிழித்துக் கூறுஞ் செய்தி எழு வகைப்படும். அவைகளுட் சில, பல செய்யுளகத்துங் காணப் படினும், அவற்றுள் ஒரோவொன்றே யீண்டெடுத்துக் காட்டி யுரிய நியாயம் விளக்குவாம்.

[க-வது] நம்மாழ்வார் திருவாய்மொழி—சன்மமெனத் தொடங்கும் பத்தின் கூ-ம் செய்யுளில்,

" நக்கபிரானே டயன்முதலாக வெல்லாருமெவை யுந்தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லானை " (3004)

எனவருவது, நக்கபிரானுகிய சிவனேயும் மற்றயன் முதலிய அனைவரையும் ஏனைஅசேதனப் பொருள்களையும் பிரளய காலத்தில் விழுங்கும் பெரியோன் விஷ்ணுமூர்த்தி யெனும் பொருள் தருகின்றது. இப்படியெல்லாம் விழுங்கிக் கொண்ட விஷ்ணுவென்பார் "மஹாஜலார்ணவத்தில் மகாரவாச்சியார்த்த ஆதிசேஷஸ்வரூப வடபத்திரத்தினிடமாக அருந்தெய்வச் சிறு குழவியைப்போலச் சயனித்து" உறங்குவரென்பது வைண வர் பாகவதம் தசமஸ்கந்தம் அஎ-ம் அத்தியாயம். அங்ஙன மாயின், ஜலமும் ஆதிசேஷ வடபத்திரமும் வெளியேபிரா, இராவிடின் படுத்துறங்குதலுங்கூடாது. ஜலமிருத்தலினால்

அது கிடக்குந் தரையும் அங்ஙனமிருக்கவே வேண்டும். இந்த ஏதுக்களால் விஷ்ணுவானவரினும் ஜல முதலியன வியாபகப் பொருள்களாகி அவரையே யுள்ளடக்கிக் கொண்டன வென்பதும் பெறப்படுதல் காண்க. இங்கே, சருவமுஞ் சங்காரமாகும்படி உள்நினைவு கோடலே யெவையும் விழுங்குதலாகும் : அவை மீட்டுமுண்டாகும்படி வெளிநினைவு கோடலே யுமிழ்தலாகும் : இத்திறங்கொண்டே "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வன்" (872) என்றார் தொண்டரடிப்பொடியாழ்வாருமென்று சமாதானங் கூறிக்கொள்ளலாமெனினும் ஏலாது. என்னை ? அவ்வுள் நினைவுப்படி யாவுஞ் சங்காரமாகாமல் ஜல முதலியனவிருத்தலின். இங்ஙனம் திருமங்கையாழ்வார் நில்லாத வென்றெழுஞ் செய்யுளில் "எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சிற்றேவர்" (2003) என்றதும், கூரேச விஜயம் யமசம்ஹார கட்சியில் "நாராயணனுக்குப் பிரளயகால ருத்திரன் கறியமுது ஊறுகாய் ஸ்தானமாகிறான்" என்றெழுதியதும் வெற்றுரையும் வெறுங்கீறலுமேயாகும். இனி, அவ்விழுங்குதலின் அருத்தந்தானென்னையெனின், பிருதிவியாகிய மண்ணைப் பிரளய ஜலம் மூடிக்கொண்டது என்றுமென்க. இந்த அருத்தத்தையே அந்த அஎ-ம் அத்தியாயத்தில் "மஹாஜலப் பிரளயத்தில் சர்வாண்டங்களையும்" எனும் வசனமும் ஒப்புக் கொள்கின்றது. இந்த ஜலத்தைக் கிரகிப்பது அக்கினி : அதனை யடக்குவது வாயு : அதனை யொடுக்குவது ஆகாயமெனும் விவரம் வேதப் பிரதிபாதிதமென்றுணர்ந்தோர் அந்த ஜலப் பிரளயத்தைப் பெரும் பிரளயமென்னார். சிவபரத்துவத்தைக் குறைக்குஞ் சுருதி யெங்கேனுங் கிட்டாதாவெனுஞ் சிந்தையுடைக் கூரேச விஜயத்தார் "யஸ்யப்ரஹ்மசக்ஷத்ரஞ் சோபேபவதவோதந :" எனுஞ் சுருதி காட்டி நாராயணனுக்குப் பிரமனுந் தாமதகுணக்ஷாத்ரம் வகித்த சிவனும் அன்னமாகின்றனரென்றும், "ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம்" எனுஞ் சுருதி காட்டி மிருத்யுவாகிய பிரளயகால ருத்திரன் நாராயணனுக்குக் கறியமுது ஊறுகாயாகின்றனனென்றுங் கூறுவர். "விஷ்ணுர்வைக்ஷத்ரிய :" எனுஞ் சுருதிப்படி அந்த 'க்ஷத்ரஞ்ச' என்றதற்கு க்ஷத்திரியத் தன்மை அல்லது க்ஷாத்ரம்

வகித்த விஷ்ணுமூர்த்தி யெனப் பொருள்கொள்வுழி அம் மூர்த்தியும் பிரமாவும் உருத்திரனுக்கு அன்னமாகின்றன ரென்பதும், 'ம்ருத்யு' என்றது சிவனெனவாகாது சுருதி சொல்கின்றபடி மிருத்யும்ஜயனெனும் பெயரிய சிவனே அந்த மிருத்யுவையுண் டேப்ப மிடுபவன், விஷ்ணுவை மறந்தும் மிருத்யும் ஜயனென வேதங் கூறினதில்லை யென்பதும் பொருத்தமுள்ளன. நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" (3047) என்றதில் "மன்னரை" என்றுளதும் விஷ்ணு மூர்த்தி க்ஷத்திரியனெனல் விளக்கிற்று. ருக்வேதாரணப் பிரதம பிரச்நத்தில் "தஸ்யேந்த்ரோவம்ரிரூபேண தநூர் ஜ்யாமச்சிநத் ஸ்வயம்|" என்று தொடங்கிச் செல்லும் வசனங்களை யவ்விஜயத்தார் காட்டித் தேவர்கள்செய்த யாகத் திலுண்டான ஒருவில்லைச் சிவன் பற்றிக்கொண்டு தேவர்களை வென்று அதனைத் தனது மோவாய்க்கட்டையின் கீழுற வூன் றிக்கொண்டு சோகித்திருந்தபோது, இந்திரன் கறையானாகி யவ்வின்னாரியை யறுத்தனன்: உடனே வின்னிமிர்ந்து சிவன் சென்னியைத் துண்டித்துவிட்டது: அச்சென்னி யாகத் திற்குப் பிரவர்க்கிய பாத்திரமாய் விட்டதென்பர். இச்செய்தி யேலாது. அங்ஙனமுள்ள 'ருத்ர' சப்தம் யாகத்திற்குரிய அக்கினியாகும். அது "ஆருணகேதுகாக்நி" என்றும் பிர வர்க்கியம் இற்றென்றும் ஸாயணீயமெனும் வேதபாஷியத்தி லினிது விளக்கப்பட்டிருத்தலு முணர்க. இந் நியாயமே "சர்வகர்த்தாவான வுருத்திரனொருவனே யுளன்: இரண்டா மவனுளனென யாரும் ஒருப்படுகின்றிலர்: அவனே நியமன சக்திகளால் உலகங்களை நடாத்துநன்: ஒவ்வோருயிருள்ளு முறைகின்றவனு மிவனே: முடிவில் யாவற்றையுந் தன்னு ளொடுக்கிக்கொண்டு காப்பவனு மிவனே." எனும் பொரு ளைத்தரூவும் "ஏகஏவருத்ரோநத்விதீயாயதஸ்துர்யஇமால்லோ காநீசதஈசிநீபி:| ப்ரத்யஞ்ஜநாம்ஸ்திஷ்டதிஸஞ்சுகோசாந்த காலேஸம்ஸ்ருஜ்யவிச்வாபுவநாநிகோபா:||" என்ற சுவேதா சுவதரச்சுருதிக்கும் ஏனையவற்றிற்கும் ஏற்புடைத்து. அந்த ஜலதத்துவ தேவதையான விஷ்ணுமூர்த்தி சர்வசங்கார கர்த்

தாவாகிய சிவனாருளால் சிவனாது அஷ்டமூர்த்தத்தி லோன்றாய ஜலத்தைப் பெருகும்படி செய்து பிருதிவிதத்துவ தேவதையாகிய பிரம தேவரையும் அவரிற் கீழ்ப்பட்ட ஜீவகோடிகளையும் அந்தப் பிருதிவியண்டங்களையும் அப்பெருவெள்ளத்தினடங்கச் செய்து அதன்மீ தமர்ந்த ஆலிலைமேற் கிடப்பர் என்பதொன்றே ஈண்டைக் கியைபுடைத்து. அக்கினி தத்துவ தேவதையாகிய உருத்திர மூர்த்தியையும் அக்கினி யண்டங்களையும் மற்றுமேலுள்ள அண்டங்களையும் கர்த்தாக்களையும் அந்த ஜலத்தின்டங்கச் செய்வாரென்றல் இயைபுடைத்தன்று. நாராயணி யருளின், நாரமெனுஞ்சலத்திற் கிடந்து வெளிப்படுதல் பற்றியே விஷ்ணுவானவர்க்கு நாராயண நாமமுண்டாயிற்று. அந்த நாமத்தை ஜபித்தலா லுண்டாகு பலனும் அந்தச் சலத்தினளவாமேயன்றி யதிகமாகாதென்றலு மமைவுடைமையன்றே. இப்படிச் சலசாயியாய்ப் பிரகிருதிசம்பந்தப் பிருதிவியிலடங்கியவெல்லாம் வியாப்பியமாக அப்புவாய் வியாபித்திடும் விஷ்ணுவாவார் தமது வியாபகவளவிற் சமமின்றி யிருத்தல் பற்றியே "நாஸ்திநாராயணஸமம்" "அந்தர்ப்பஹிச்சதத்ஸர்வம்வ்யாப்யநாராயணஸ்தித:" எனுஞ் சுருதி வசனங்களு முண்டாயிருக்கின்றன. ஈது, உலகாளும் அரசனாட்சிக்குட்பட்ட ஓரூரிற் சிறப்பாயிருப்பானொருவனைக் குறித்து அவ்வூரிலவனுக்குச் சமானமாவா ரில்லையென்று உலகர் பேசிக்கொள்வதொக்கும். சுபாலோபநிஷத்து முதலியவற்றிற் சொல்லப்படு நாராயண விசேடமெல்லாம் மேற்சொற்ற வியாபகக்கண்ணே யடங்கும். பகவானாகிய சிவனே சர்வவியாபி யெங்கும் நிறைந்தவனென்பதை "ஸர்வவ்யாபீஸ பகவாந் தஸ்மாத் ஸர்வகதச்சிவ: |" எனுஞ் சுவேதாசுவதரச் சுருதியானறிக. நாராயணமூர்த்தத்திலுள்ள ஆன்மாவும் அப்புதத்துவந்தானோ வென்னின், அற்றன்று. அத் தத்துவம் வரையுமே அவரது அதிகாரமென்றும், பிரகிருதி மாயா சரீர ஜீவகோடிகளின் சைதன்யம் தத்துவாதீதமாய்ச் சாதமாயிருத்தல்போல அவரது மூர்த்தத்திலுள்ள ஆன்மாவு மிருக்கின்றதென்றும் அறிதல் வேண்டும். மேலைப் பாகவதத்தில் "மகாா

வாச்சியார்த்த ஆதிசேஷன்" என்றுளது,—அவ்வாச்சியார்த் தன் உருத்திரனெனுஞ் சுருதிக்கு முரணாகும்.

இப்படி யருத்தங்கொள்ளாது நாராயணனே சருவ சங் காரஞ் செய்து விஞ்சியிருப்பவனெனக் கொள்ளும் வைணவர் கூற்றெல்லாம், ஈண்டும் இதன்முன்னரும் பின்னரும் உதகரிக் கப்பட்ட உதகரிக்கப்படுஞ் சுருதியாதி பிரமாணங்கட்கும் யுக்தி யனுபவங்கட்கும் விரோதமாமென மறுக்க. "விஷ்ணுச்சஸ்திதௌ | ருத்ரச்சநாசே |" என்று யோக சூடா மணியெனுஞ் சுருதி சொல்கின்றபடி நாசகிருத்திய கர்த்தனு யுள்ள உருத்திர மூர்த்தியை நாசத்தொழிலுடைய தமோ தேவதை யென்றிகழ்ந்தும், நாராயணரை ரக்ஷகத்தொழி லுடைய சாத்துவிக தேவதையென்று புகழ்ந்துந் திரிதரு வைணவர்,—நாராயணர்க்குப் பரத்துவம் பகருநிமித்தம் அவ ருக்குச் சருவநாசத் தொழிலுண்டென வொப்புவது என்ன மதியோ! என் செய்வார் பாவம் வேறு வழியில்லை!! அவரொப்பு மாறு அக்கினி தத்துவ சங்கார மூர்த்தியே யுயர்ந்தவனென லும், தண்ணீர்த் தத்துவ இரக்ஷக மூர்த்தியே தாழ்ந்தவனென லும் ஏற்பட்டன. இவை யுண்மையே. நாரணர் கோவில் களில் தண்ணீரளிக்கும் வழக்கமும் நாரணர் தண்ணீர்க்கடவு ளென்பதைக் காட்டும். விஷ்ணு புராணம் முதலமிசம் உ-வது அத்தியாயத்தில் "பிரளய காலத்தில் தாமசகுணப் பிரதானனை ருத்ரரூபியாயிருந்து அதிபயங்கரனாய்ச் சரா சரங்களான அகில பூதங்களையும் விழுங்கி" என்றும், வைணவர் பாகவதம் உ-வது ஸ்கந்தம் ௧௦-வது அத்தியாயத் தில் (நாராயணன்) "காலக்கினி ருத்ரரூபத்தாற் பிரளய காலத்திலே மேகமண்டலத்தைப் பெருங் காற்றடித்தது போலச் சங்காரஞ் செய்கிறான்" என்றும் வருபவை ஏனைச் சுருதியாதி நூல்கள் தீர்மானிக்குமாறு சங்கார கிருத்தியம் உருத்திரனார் சொந்தமென்றும், அவரது சத்திகொண்டே நாராயணர் ஜலமாய்ப் பெருகித் தம்முட் பட்டனவெல்லாம் விழுங்குநரென்றும் நனி தீர்மானிக்கின்றன. இந் நாராயணர் தமது பிரளயம் உண்டாதற்கிடையில் அடையும் யாதொரு விசேட வெற்றிப்பாடும் உருத்திர சத்தியினதே யாகும்.

இதனை, சிவ ரகசியம் கூ-ம் அமிச முதற்காண்டத்தின் கஉ-ம் சருக்கத்தில் நாராயணர் வாக்கியமாகக் "கன்னிதன் னருளால் வென்றேன் கயிடவன் மதுவைக் கண்டீர்" எனவருதலானு மறிக. வான்மீக ராமாயணத்தில் "இராமர் உருத்திராமிசந்தாங்கி யிராவணனைச் சங்கரித்தார்" எனவருதலுமிதனை வலியுறுத்திற்று. அமிசம்அநுக்கிரகமென்றும். இப்படிப்பட்ட நாராயணர்க்கு நாசஞ்செய்பவனெனும் பொருள் தரத்தக்க "ஹரி" எனும் பெயரேற்பட்ட தென்கொலென்னின், விஷ்ணு புராணம் ௩-ம் அமிசம் க-வது அத்தியாயத்தில் "தாமசமனுவந்தரத்திலே ஹரியையென்கிறவள் கருப்பத்திலே ஹரிகள் என்கிற தேவர்களோடு கூடி ஹரியென்கிற திருநாமமுடையவரா யவதரித்தார்" என வருகிறபடி அஃது தஞ்ஞான்றேற் பட்டதாகும். ஹரியென்பது யமன், சூரியன், சந்திரன், இந்திரன், மாயன் என்பார்க்கும், கிரணம், வாயு, சிங்கம், குதிரை, குரங்கு, கிளி, தவளை, சர்ப்பமென்பவற்றிற்கும் பெயராகுமென்று அமரநிகண்டுவும்; ஜலம், வர்ஷபேதமாமென்று விசுவப் பிரகாசமும் விளக்குதலின் அது நாராயணர்க்கே சிறந்து நிற்ப தொன்றன்றாம். அவரது நாச கிருத்தியமும் இவ்வளவிற்றென மேலே விளக்கினேம். இங்ஙனம் பிரம விஷ்ணுக்களை ஹரிப்பவனெனும் அர்த்தத்தில் "ஹரன்" எனும் பெயரே சிறந்து நிற்பதொன்றாம். புராணேதிகாசங்களில் யாதோர் யுத்தகளத்தி னிகரற்று நிற்கும் மகாவீரன் பிரளய கால ருத்திரன்போலானனென வருவழக்கன்றிப் பிரளய கால விஷ்ணுபோலானனென வருவழக்கின்மையானும் உருத்திரனது சங்காரமே சிறந்த தென்றுமறியலாம். பிரமதேவர் நித்திரைசெய் பிரளயம், நாராயணர் நித்திரைசெய் பிரளயம், குணருத்திரர் செய் பிரளயம், பரமருத்திரர் செய் பிரளயமென்பவை ஒன்றற்கொன் றுயர்வுடைமையாகும். பிரளயமென்பது பெரிய லயமென்றாம். இப்பெரிய லயஞ்செய்பவன்றானே பெயர்த்துஞ் சிருஷ்டி செய்யத்தக்கோனாகலின் அவனே பஞ்ச கிருத்திய கருத்தாவென்பது பசுமரத்தாணி யறைந்தாற் போலாம். இம்முடிவு பைப்பலாத சுருதியினு முண்டு. இவ்வுண்மை சாமானியமாயுறங்கி விழிப்

பாரிடத்தும், விசேடமாய்த் தத்துவமொடுங்கத் தூங்கி அவை தோன்ற விழிக்கும் யோகிகளிடத்துங் காணலாம். தத்துவ லயமே ஞானேதய சுகபூரணமாக நிற்றலால் அந்தப் பூரணம் விழைவா ரனைவரும் அந்த லயாதிகார பரம ருத்திராகிய சிவபெருமானையே சிந்திக்க வேண்டுமென்று முதன்மை நூலெலாங் கண்டா கோஷமாக முழங்குகின்றன. சிவ தூஷணஞ் செய்யாது வேதவுடம்பாடாகப் பிரமதேவரை வழிபடுவோரும், நாராயணரை வழிபடுவோரும், குணருத்திரரை வழிபடுவோரும், முறையே யுயர்வுள்ள அவர்களின் சாலோக சாமீப சாரூபமெனும் பதகதிகளைப் பெறுவார்கள். அக்கதியினர் புண்ணியந் தீர்ந்த பின்பு பூமியின் மீண்டும் பிறப்பரென்றும், இக்கதிகளின் மேலொரு சதாசிவ சாரூப கதியும், ஞானத்தாலுறுஞ் சிவசாயுஜ்யமும் உண்டென்றும், இச் சாயுஜ்யம் பிறப்பிறப்பிலாப் பரகதி யென்றுஞ் சூதசங்கிதை முத்திநிலை யுரைத்த அத்தியாயம் இனிது விளக்குதலும் இம் முடிபன்றோ. அற்றாகலினன்றே "சிவநிஷ்டை" "சிவஞானம்" "சிவாநுபவம்" எனும் பிரயோகங்கள் வழுவறு நூல்களில் மலிந்து கிடக்கக் காண்கின்றனம். விஷ்ணுநிஷ்டை, விஷ்ணு ஞானம், விஷ்ணு அனுபவம் எனும் பிரயோகங்கள் கண்டிலம். நிற்க,

பரமசிவனே சர்வசங்கார கர்த்தாவென்பதைச் சரபோபநிஷத்து "யோந்தகாலேஸர்வலோகாந்ஜஹாரஸ ஏகச்ரேஷ்டச்சஸர்வ" எனவெழுந்து ஸ்தாபிக்கின்றது. மற்றொரு சுருதி "யஸ்ஸர்வோபரமகாலேஸர்வாநாத்மந்யுபஸம்ஹ்ருத்யஸ்வாத்மாநந்தேஸ—கேமோததேப்ரகா ச தே வா ஸ தேவ: |" எனவெழுந்து எவர் பரம காலத்திலே யாவையுந் தம்மிடத்திலேயே உபசங்காரம் பண்ணித் தமதான்மானந்த சுகத்திற் சந்தோஷித்துக்கொண்டிருக்கிறாரோ, எவர் தமக்குத் தாமே பிரகாசித்துக்கொண் டிருக்கிறாரோ, அவரே தேவரென்று தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபரஞ்சோதியை விதந்து பேசுகின்றது. இவ்விஷயத்தைப் பஞ்சப் பிரஹ்மோபநிஷத்து முதலியவைகளும் வலியுறுத்தும். பிரம விஷ்ணுக்கள் சிவனாற் படைக்கப்பட்டழிபவரென்று சுருதிகள் சொல்லுதற்

கேற்ப வாயுசங்கிதை உருத்திரோற்பத்தி யத்தியாயத்தில் "முன்னமிறந்தமால் பிரமன்றலேகண் மூவாயிரகோடி" என்றும், திருநாவுக்கரசுகளார் தேவாரத்தில் "நூறு கோடி பிரமர் கணொழிந்தினர்—ஆறு கோடி நாராயண ரங்ஙனே—யேறு கங்கை மணலெண்ணி லிந்திரர்—ஈறி லாதவ னீச னொருவனே" என்றும் முழங்குவன காண்க. ஆயின், அழியாதவனெனும் பொருடாரத்தக்க "அச்சுதன்" எனும் பெயர் நாரணர்க்கேற்பட்டதென்னை யெனின், அது பிரளயத்தில் மரணமாகுந் தேவர்க்கு மரணமிலாரெனும் பொருடாரத்தக்க "அமரர்" எனும் பெயரேற்பட்டாங்கு ஏற்பட்டதென்க. இங்ஙனம் குணருத்திரர் விஷயம் இற்றென்பதைச் சைவபுராண ஞான சங்கிதை எஎ-வது அத்தியாயத்தில் "சங்காரகாலத்தே அரிபிரமர்போல உருத்திரன் மரணமடையாமல் சதாசிவனிடஞ் சேர்வன்" என வருதல்கொண் டறிக. இவ்வுண்மையை அந் நாராயணரே யுணராமல் தமதுந்தியிலுதித்த ஒரு பிரமதேவன் காலஞ்சென்றபோது விசுவரூபந்தாங்கிக் கடன் மேற்கிடந்து எல்லாம் நாமேயெனுஞ் செருக்குக்கொண்டு உறங்கினு ரென்பதும், அச் செருக்கை முருக்கியருள்வான் சிவனர் திருவுள்ளத் தெண்ணி யெல்லா அண்டங்களுந் தமது திருமேனிக்குத் திருவாபரணங்களாத் தேகரோமந் தோறு நின்றிலகப் பாரமேச்வர ரூபத்தைக் கொண்டன ரென்பதும், "முண்டக னொருவன்றுஞ்ச முராரி பேருருவாய் நேமிக் - கண்டுயி லகந்தை நீங்கக் கண்ணுதற் பகவனெல்லா - அண்டமு மணிப்பூணுரமாகவே யாங்கோர் மேனி - கொண்டனனென்னுந் தன்மை குமானின் வடிவிற் கண்டேம்" என்னுங் கந்தபுராணச் செய்யுளானும் பிறவற்றானும் பெறப்படுமாயின் அவரது இருக்கையை விழையும் ஆழ்வார்க்கு அவரது பிரளயஞ் சிவனுரையும் விழுங்கத்தக்க பிரளயமாகப் பாடுமயக்கமுண்டாதல் அரியதாமோ? இம்மயக்கத்திற்கு மேலே காட்டிய பாகவதக் கூற்றுங் காரணமாம்.

விஷ்ணு சிவனே விழுங்குவதென்றல், பிரளயஜலஞ் சிவாலயங்களைப் பற்றிக் கோட லென்றாகாதோ வென்னின், அவ்வித பிரளயத்துஞ் சிவஸ்தலமாகிய சீகாழிப்பதி யழியாது

தோணிபோல மிதந்தது காரணமாகத் "தோணிபுரம்" எனும் பெயர் பெற்றதென்றும், காஞ்சி முதலிய சிவக்ஷேத்திரங்களும் அங்ஙனமழியாதிருந்தன : அஞ்ஞான்று காஞ்சியில் நாராயணர் குமாரதரிசனமுஞ் சிவதரிசனமுஞ் செய்தாரென்றும் அவ்வம்மான்மியங்க ளறையுமாற்றான் அவ்வாறுமாறுங் கூடாதென்க. ஆண்டுச் சிவனாரை நாராயணர் உள்ளே தியானித்தல் கூடும். அதுவே யவரை விழுங்குதலென்பதொன்று ஈண்டியையபலாம்.

[உ-வது] திருமழிசையாழ்வார் இயற்பா கூ-ல்

" குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து * * * *
கறைகொண்ட - கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான் -
அண்டத்தான் சேவடியை யாங்கு." (2390)

என வருவது, பிரமதேவர் கறையெனும் விஷத்தைத் தரித்த கழுத்துடைச் சிவனாரது தலைமேலே படியும்படி வாமனவதார விஷ்ணுவென்பாரது சேவடியில் தமது கமண்டல ஜலத்தைப் பெய்து கழுவினாரெனும் பொருள் தருகின்றது. சிவபிரானணிந்த கங்கை திரிவிக்கிரமரது கால்கழுவிய நீரென்பது கருத்து. இவ்விஷயம் வைணவர் பாகவதம் கூ-வது ஸ்கந்தம் பிடித்துக் கூறப்பட்டது. ரு-வது ஸ்கந்தத்தில் திரிவிக்கிரமரது இடக்காற் பெருவிரனகத்தாற் பிளப்புண்ட அண்டப் பித்திகைத் துவாரத்தின் வழியாக வந்த *விஷ்ணுபதியெனும் ஆகாய கங்கை பிரமாவினுடைய கிருகத்திலிறங்கி நான்கு பாகமாகிப் பல மலைகளினுச்சியில் வீழ்ந்தது: அவற்றொரு பாகங் கிழக்குச் சமுத்திரத்திலும், ஒருபாகம் வடக்கு இலவண சமுத்திரத்திலும், ஒரு பாகம் மேற்கு இலவண சமுத்திரத்திலும், ஒரு பாகந் தெற்குச் சமுத்திரத்திலுமாகப் பிரவேசிக்கின்றன வென்றெழுதி யிருத்தலாலும், அக்கழுவல் நீர்தான் சிவனார் சென்னியிலுள தென்பது சுருதியாதல் மிருதியாதல் வியாசவசனமாதல் கூறுதலொன் றுதலாலும், அது, வாமன முதலிய விஷ்ணு அவதாரங்களை வாட்

*விஷ்ணுபதம்=ஆகாசம், விஷ்ணு=வியாபகம்.

டிப் பீடித்திரக்ஷிப்பவர் சிவனு ரென்பதை விளக்கும். "வாமநமாதிதேவஃ விவிக்லபம்பீட்யமாநம்" எனும் பிரபல சுருதிக்கும் ஆனுவின்ப அருட்பெருஞ் சோதியாய்த் திரிமூர்த்தி தொழுந் தேவனு யிருப்பான் சிவனென்னுஞ் சுருதியாதி பிரபல பிரமாணங்கட்கும் விரோதமாதலாலும், அந்த கூ-வது ஸ்கந்தக் கூற்றும் ஆழ்வார் கூற்று மவலக் கூற்றென மறுக்க. முன்னுக்குப் பின் முரணக் கூறுதலின், அப்பாகவதம் பாக வதமாதலேயுங் கல்வி மக்கள் கருதுக. அந்த அவலத்தை மெய்யென நம்பி அவ்வித படமெழுதி வீட்டிற்றாங்கவைத்தவரும் அன்னணஞ் சுவர்களிற் சித்திரித்தவருமான சிவநிந்தை வைணவர் பலவிதத் துன்பு கூர்ந்தொழிந்தமை பல்லோரு மறிந்த விடயமே. அந்தோ நாயகத் துரோக நனி கொடிது! நனி கொடிது!! இனி, சிவனுர் தரித்த கங்கைதான் யாதெனின், கந்தபுராணங் கழறுகின்றபடி பிரானுகிய பரமசிவனுடைய கண்களைப் பிராட்டியாகிய உமையவள் கரங்களாற் புதைத்தபோது கர விரல்களிலுண்டான வியர்வைகள் பெரு வெள்ளமாகி யுலகங்களை யழிக்கத் தொடங்குதல் கண்ட உம்பர்கள் அஞ்சி யிவ்வெள்ளத்தை யடக்கி யருளவேண்டு மென்றதற்கு இரங்கிய இறைவனது திருவுள்ளப்படி அவனது ஜடாமகுடத்தில் ஒரு துளியென வடங்கியது அக்கங்கை யென்க. திருமால் முதலிய தேவர்கள் வேண்டுகோட்படி பிரானுலே அதினின்று மளிக்கப்பட்ட திவலைகளே விஷ்ணுலோகத்தில் விரஜாநதியாயும், பிரமலோகத்தில் மானத தீர்த்தமாயும், இந்திரலோகத்தில் தேவதீர்த்தமாயும் பெருகின. அம்மானத தீர்த்தமும் பகீரதன் வேண்டுகோள் பற்றி அவ்விடம் விட்டு வருங்கால் சிவனது ஜடாமகுடத்தில் அவ்வாறடங்கிப் பூமியிலிறங்கிற்றென்க. ஹிமவானுடைய புத்திரி குடிலேயும் நதிரூபமாகி மானத தீர்த்தத்திற் கூடியிருந்தனளென்க.

[ரு-வது] திருமழிசையாழ்வார் இயற்பா க-ல்,

"நான்முகனை நாராயணன் படைத்தானுன் முகனுந்
தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" (2382)

எனவருவது, நாராயணர் பிரமதேவரை யுண்டாக்கினர் : அவர் சங்கரனை யுண்டாக்கினரென்னும் பொருள் தருகின்றது. இச்செய்தியும் அவ்வைணவர் பாகவதம் ௩-ம் ஸ்காதம் ௧௨-வது அத்தியாயத்தது. இது விஷ்ணு புராணத்திலும் வந்து எமது சித்தாந்தப் பொருள் பயந்து நிற்பதை எ-வது அதிகாரத்துழைப் பிரகாசப்படுத்தி யுள்ளாம். அந்தப் பாகவதம் ரு-ம் ஸ்கந்தம் ௨ரு-ம் அத்தியாயத்தில் அநந்தனெனும் பாம்பின் " புருவங்களின் மத்தியிற் சங்கர்ஷண னென்கிற ருத்திரனுனவர், ஏகாதச ருத்திர ரூபமுடையவராய் மூன்று சிகைச் சூலத்தை யுயரவெடுத்துக் கொண்டு கிளம்பினர் " எனுமொரு புரட்டுச் செய்தியுமுளது. இப்படி முரண்படுகின்ற இச் செய்தியின் நைஜம்—வாயு சங்கிதையில் " மாயவனை—விழைவால் விழுங்கிப் புருவநடுவதனிலீன்று விட்டனனல் " என்று வருமாறு பிரமதேவரது புருவ மத்தியில் விஷ்ணுமூர்த்தி தோன்றினது போல அந்தப் புருவமத்தியில் " நீல லோகிதனென்னு மண்ணலன்னேன்—குனித்த சிலைப் புருவ நடுநுதல் கிழித்துக் குலவிட முன்றேன்றினனே " எனும் இலிங்க புராணக் கூற்றுப்படி நீலலோகித ருத்திரர் தோன்றும் ஏகதேச விஷயம், அது பரமசிவ தோற்றமாகா தென்றும். ஆகுமென்னின். ஆண்டுக் காட்டப்பட்ட சுருதி முதலியவற்றிற்கும், பரமேசுவரனது அங்கத்திலிருந்து நானும் ஹரியும் இந்திராதி தேவர்களும் உண்டானேம், அவனே யெல்லாருமடையத் தக்கவனென்று பிரமதேவர் சொன்னரெனும் பொருளூற " தேனைவலப்யஃ பரமேஶ்வரோஸௌயஸ்யாங்கஜோஹம்ஹரிரிந்த்ரமுக்யா ஃ ॥ " என்றுவரு பைப்பலாத சுருதிக்கும், விசுவாதிகனும் மஹாரிஷியுந் தேவர்க்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமானவனும் ஆதியில் ஹிரண்யகர்ப்பனைத் தோற்றுவித்தவனுமான உருத்திரன் நமக்கு நல்லறிவை யூட்டுவானுக வெனும் பொருளூற, " யோதேவாநாம்ப்ரபவஶ்சோத்பவஶ்சவிஶ்வாதிகோருத்ரோ மஹாரிஷிஃ। ஹிரண்யகர்பஞ்ஜநயாமாஸபூர்வக்ஸநோபுத்யாஶுபயாஸம்யுநக்து॥" என்று வரு சுவேதாசுவதரச் சுருதிக்கும் ஏனையவைக்கும் விரோதமாமென மறுக்க. பிரமா

பிறப்பதற்கு முன்னேயே சிவனிருக்கிருனெனும் பொருளினிது தோன்றப் "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து" (1186) என்று திருமங்கையாழ்வார் மொழிந்ததற்கும் அது முரணுகுமென மறுக்க. விரிபொருள் உ-வது அதிகாரத்திற் காண்க.

[ச-வது] நம்மாழ்வார் திருவாய்மொழி ஒன்றுமெனத் தொடங்கும் பத்தின் ச-ல்.

"பேச நின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே கபால நன்மோக்கத்திற் கண்டு கொண்மின்" (3109)

எனவருவது, பிரமன்றலையைக் கிள்ளி யெடுத்த சிவனர் பிரமஹத்தியாற் பீடிக்கப்பட்டுக் கபால மேந்தித் திரிந்தார்: அக்கபாலங் கைவிட்டு விலகும்படி செய்தவர் நாராயணர்: அதனுல் நாராயணரே நாயகனெனும் பொருள் தருகின்றது. இது வெகு விந்தையே. பிரமன் பிராமணனேயாயினும் அனேக பிரமரைக் கொன்று அவர் தலைகளை மாலையாகக் கொண்டபோது அந்த அகோர பைரவரை யடையாத பிரமஹத்தி நான்கு தலையோடு திரியுமாறு அவனதொரு தலையைப் பறித்ததனுலே பீடித்ததென்பது எங்ஙனே தலைப்படுமென்றும், கொன்றுலன்றே பிரமஹத்தியுண்டாகு மென்றும் அந்த ஹத்திக் கூற்றை மறுக்க. பிரபதப்பிராமணமெனுஞ் சாமவேதப் பிராமணமானது தேவர்களில் உருத்திரன் பிராமணன், விஷ்ணு க்ஷத்திரியன் பிரமன் வைசியன் எனுமாறு "த்வம்தேவேஷுப்ராஹ்மணோஸி அஹம்மநுஷ்யேஷுப்ராஹ்மணோஹிப்ராஹ்மணமுபதாவதி உபத்வாதாவாமி" என்றும், "விஷ்ணுர்வைக்ஷத்ரியோப்ரஹ்மாவைச்யஇதி" என்றுஞ் சாற்றுமாற்றுன் வைசியனுயுள்ள பிரமதேவனைக் கோறல் புரியினும் பிரமஹத்தியாகாதே யென்றும் அக்கூற்றை மறுக்க. ஆயின் அக்கபாலதாரணமென்கொலென்னின் உரைப்பம். நான் பிரமம், நான் பிரமமென்று சண்டை செய்துகொண்ட அரியயனெனு மிருவரில் அயனது உச்சித்தலை பரமசிவனை யிகழ்ந்தது. உடனே

அந்தச் சிவனது திருவுள்ளப்படி சிக்கெனப் பற்றும் உக்கிர சொரூபத்தோடு பைரவமூர்த்தி வெளிப்பட்டார். அவரை யந்தச் சிவன்நோக்குபு, நீ நம்மை யிகழ்ந்த தலையைக் கொய்து கரத்திலேந்திக் காத்து, கர்வித்திராநின்ற முனிவர் தேவ ரிருக்கைதோறும் போந்து, அன்னவர் இரத்தமெல்லாம் பிக்ஷையாக வாங்கி, இறந்தாலுயிர் கொடுத்து, அவரகங்கார மொழித்துப் பிரமாண்ட முகட்டடைந்து, ஆங்குச் சீவகாருண்ய மான காவல் கொண்டிருப்பாயாக வென்று அருளிய கட்டளை கடைப்பிடித்த அம்மூர்த்தி, பிரமதேவரது உச்சித்தலையை இடக்கை நகங்கொடு கொய்து வெளிப்பட்ட உதிரப் பிர வாகத்தை நெற்றிக்கண்ணால் வாளும்படி செய்து காத்தார். உடனே அந்தப் பிரமதேவர் அம்மூர்த்தியை வணங்கி எளி யேனது குற்றம் பொறுத்தருள்க: தீய இத்தலை சுத்தமுறவும் இதனைக் காணுந்தோறு மென்னை மாயை சேராதிருக்கவுமாக இதனைத் திருக்கரத்தில் வைத்தருள்க வென்று பிரார்த்தித்தார். அவருமவ்விதமாகுக வென்று சிவனருளித்த கணங்களோடு முனிவர் தேவரிருக்கைதோறுஞ் சென்று செய்யவேண் டியதைச் செய்து வைகுந்தம் புக்கார். அங்கே யெதிர்த்த விஷ்ணுகணத் தலைவனான விஷ்வக்ஸேனனை யவர் கன்னத்தி லடித்துச் சூலத்திற் குத்தி யேந்தி வருதலைக் கண்ட விஷ்ணு வாவார் அவரை வணங்கி அவர் கேட்டபடி சூலத்தாற் குத்த நெற்றியைக் கொடுத்து இரத்தஞ் சொரிந்தார். அவ்விரத்தங் கொள்கபாலம் பாதிநிறையுமுன் விஷ்ணு வுயிர் சோர்ந்து வீழ்ந்தார். அது கண்ட மலர்மகளு நிலமகளுந் துயருழந் தார்கள். உடனே அந்தப் பைரவமூர்த்தி அஞ்சன்மினென் றுயிருதவ விஷ்ணுவு மெழுந்தார். அவர் வேண்டுகோளங் கீகரித்துச் சூலத்திற் கிடக்குஞ் சேனைத்தலைவனை யம்மூர்த்தி யிழிறக்கி யுயிரளித்தேகினர். இவ்வுண்மையை "ருரோத தாநிகணபோவிஷ்வக்ஸேநோதிநிஷ்டுர꞉| தமேநம்பைரவஶ் ஶீக்ரம்ஸந்தாட்யசகபோலயோ|| ப்ரோதயித்வாஸ்வஶூலேவா க்ரேவிஷ்ணோரப்யாஶமாயயௌ| ததாஸஸம்ப்ரமம்விஷ்ணுர் போகஶாயீமஹாபயாத்||" எனுந் தக்ஷகாண்ட கக-ம் அத்தி யாயச் சுலோகங்களானும்,

"பாதியு நிறைந்தது மில்லை பாணியின்
மீதுறு பலிக்கலன் மிக்க வன்மைபோய்ச்
சீதரன் சோர்தலுந் திருவு ளாலமுங்
காதல னிலைமையைக் கண்டிரங்கினர்"

"கண்ட கங்கொள் கபால்கொடு காசினி
விண்ட கந்தொறும் வெம்பலிக் குற்றது
முண்ட கன்முதலோர் தமை யெம்பிரான்
தண்ட கஞ்செய் தலையளி யாகுமால்"

எனுங் கந்தபுராணச் செய்யுள்களானு மறிக. இவ்விடயத்தைத் திருமழிசை யாழ்வாரும் "வேறிசைந்த செக்கர்மேனி நீறணிந்த புன்சடைக் கீறுதிங்கள் வைத்தவன் கைவைத்தவன் கபான் மிசை - யூறு செங்குருதியா னிறைந்த காரணந்தனை - யேறு சென்றடர்த்த வீசபேசு கூசமின்றியே" (793) எனுஞ் செய்யுளால் ஒப்புக்கொண்டுளார். பொய்கை யாழ்வார் இயற்பா சகூ-ல் "புண்புரிந்த வாகத்தான்" (2127) என்றதூஉம் அது. "பேசு கூசமின்றியே" என்றதனால் இரத்தம் வடித்த விஷயத்தில் விஷ்ணுமூர்த்தியை ஆழ்வார் பரிகாசஞ் செய்தவருமாகின்றார். வன்கபால்=வலியகபாலம். "ஏறு சென்றடர்த்த வீச" என்றது எருதாகவந்த அரிஷ்டாசுரனைக் கொன்ற கண்ணனே. யென்றும். அக் கபாலம் பைரவர் கரவிசேடத்தாற் பரிசுத்தமுற்றது. அது வைக்கப்பட்ட இடமே "பிரம கபாலம்" எனுந். திவ்யக்ஷேத்திரமாய் ஸ்ரீகேதாரத்திற்கு அணித்தாயிருக்கின்றது. இத்திற நியாய வாயிலாக நாராயணரது நாயகத் தன்மையைக் "கபாலமோக்கத்திற் கண்டு கொண்மின்" என்னும் ஆழ்வார் கூற்று வாளா போயிற்றென்க. அக்கூற்றுச் சுருதியாதி பிரமாணங்கட்கும் விரோதமென்க. சில வைணவர்கள் அக் கபாலமூர்த்தி வாங்குமிரத்தம் அவர் குடிப்பதற்கென்று சொல்ல முயல்கின்றார்கள். அவர்கள், மற்றைப் புராணங்களில் வருதல்போல வைணவர் பாகவதம் எ-ம் ஸ்கந்தம் அ-வது அத்தியாயத்திலும் "அந்த இரத்தத்தை யுரிஞ்சும் இரத்த பிந்துகளினலே நனைந்துஞ் சிவந்துமிருக்கிற பிடர் மயிர்களையு

முகத்தையு முடையராயும்" என்று வருஞ் செய்திப்படி இரணியனுடைய இரத்தங்குடித்த நரசிங்கரும் பேய் முலைப் பாலுண்ட கிருஷ்ணரும் நந்தெய்வமே யென்பதைச் சற்று யோசிப்பாராயின் அவ்விதஞ் சொல்ல முயல்வரோ? முயலார். இது கிடக்க. எலும்பு முதலியவற்றைச் சிவனார் ஏனணிந்துகொண்டிருக்கிறார்? அடையாளத்துக் கென்றாலும் பொருந்துமோ? என்றுஞ் சில வைணவர் வினவுகின்றனர். வைணவர் தெய்வம் பஞ்சஜநர்சுரனைக் கொன்று அவனது எலும்பைப் பாஞ்சஜந்யம் எனும் சங்காக்கித் தரித்திருப் பதையும், மேலைய ௪-வது அத்தியாயத்திலுள்ளபடி தைத்தியனாய இரணியனை வதைத்து அவன் வயிற்றி லிருந்த ஆபாசப் பச்சைக்குடலை மாலையாக அணிந்து கொண்டதையும், பிருந்தை சரீரமெரிந்த சுடுகாட்டுச் சாம் பரின் முளைத்த துளசித் தழையை யணிந்திருப்பதையும், மது வெனுந் தைத்தியனைக் கொன்று மதுசூதநன் எனும் பெயர் தாங்கி யிருப்பதையும், அப்பெயர் வைணவக் கிரியைகளில் மந்திரமாய் நிற்பதையும் அவர் எண்ணுவாராயின் ஏங்கியிருப் பார் போலும். பாவம். எலும்பு விவரம் ௧-வது அதிகாரத்திற் கூறியுள்ளாம். அவ்வெலும்பு முதலியன வணியு மூர்த்தி அனேக சிவ பராக்கிரம மூர்த்திகளி லொருவரெனவு முணர்க. சிவன் "ஸர்வைஸ்வர்யஸம்பந் நன்" என்னுஞ் சுருதியையும் இங்ஙனம் உய்த்துணர்க. விவ ரம் எமது வேதவியாசத்திற் காண்க. பாஞ்சஜந்யோற்பத்தி யைச் சூடிக்கொடுத்த நாச்சியார் "கடலிற் பிறந்து கருதாது பஞ்சசனன் – உடலில் வளர்ந் துபோ யூழியான் கைத் தலத்துத் – திடரிற் குடியேறித் தீயவசுரர் – நடலைப்படமுழங் குந்தோற்றத்தாய் நற்சங்கே" என்று கூறியதுகொண்டுமறிக.

[ரு-வது] நம்மாழ்வார் திருவாய்மொழி அணைவவெனத் தொடங்கும் பத்தின் கூ-ல்,

"தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்
சேர்த்தி யவையேசிவன் முடிமேற் றான்கண்டு
பார்த்தன் றெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை" (2869)

என வருவது, அருச்சுனராஜன் கண்ணமூர்த்தியின் காலைச் சிவலிங்கமாகப் பாவித்து அதிற்சாத்திய பூமாலைகளைக் கைலாயத்திற் சிவனது சிரசிலிருக்கக்கண்டு சிவனினுங் கண்ணனே பெருமையுடையனெனு முண்மை யுணர்ந்தனனெனும் பொருள் தருகின்றது. இச்செய்தி பாகவதத்திலுண்டென்று கூரேச விஜய தசாவதாரக் கட்சியிலெழுதப்பட்டது. பாகவத யோக்கியதையை முன்னர்ப் பல்லிடத்தும் பகர்ந்தாம். வியாசரது வடமொழிப் பாரதத்தில் இச்செய்தி யில்லை. மற்றைப் புத்தகத்துண்டெனின், அது காட்டாகாதென மறுக்க கூ—எ-ம் அதிகாரங்களில் விவரித்தபடி அக் கண்ண மூர்த்தியும் அவர் மூல புருஷரெனும் விஷ்ணு மூர்த்தியுஞ் சிவபூஜகராயிருத்தலையும் விஷ்ணு மூர்த்தி சிவனாரது இடத் திருவடியில் தமது கண்ணாகிய கமலஞ்சார்த்தி வழிபட்டுச் சக்ராயுதம் பெற்றனரென்னச் சரபோபநிஷத்து "யோவாமபாதார்ச்சித விஷ்ணுநேத்ரஸ்தஸ்மைததௌசக்ரமதீவஹ்ருஷ்ட: | தஸ்மைருத்ராயநமோஅஸ்து ‖" என்றியம்புதலையும்; இவ்வாறு பாரதம் சௌப்திகபர்வம் வாமன புராண முதலியவை சொல்லுதலையும், ஏனைச் சிவபரத்துவபோதகச் சுருதி முதலியவற்றையும் அறியாதாரே அந்த ஆழ்வார் கூற்றையும் அது போல்வதையுமொப்புவார்.

[கூ-வது] திருமழிசையாழ்வார் இயற்பா,

"ஆலநிழற்கீ ழறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞால
மளந்தானை யாழிக் கிடந்தானை யான்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு." (2398)

என்பது, கல்லால விருக்ஷத்தினடியில் தக்ஷிணாமூர்த்தியாயெழுந்தருளிய சிவனார் சனகாதி முனிவர் நால்வர்க்கும் நாராயணரை வணங்கு ஞானமே போதித்தாரெனும் பொருள் பயக்கின்றது. இது, அந்தத் தக்ஷிணாமூர்த்தியே பரம்பொருளென்றும், "தத்பரமரஹஸ்யசிவதத்வஜ்ஞாநம்" என்றெழுந்து அப்பொருளை யறியு ஞானமே சிவதத்வ ஞானமென்

றுந் தாபிக்குந் தக்ஷிணமூர்த்தி யுபநிஷத்திற்கும் மற்றைப் பிரபல பிரமாணங்கட்கும் விரோதமென மறுக்க.

[எ-வது] நம்மாழ்வார் திருவாய்மொழி சன்மமெனத் தொடங்கும் பத்தின் சு-ல்,

"பரிவின்றி வாணனைக் காத்து மென்றன்று
படையொடும் வந்தெதிர்ந்த—திரிபுரஞ்செற்றவனு
மகனும் பின்னு மங்கியும் போர்தொலையப்—
பொருசிறைப் புள்ளைக் கடாவிய மாயனை" (2999)

என வருவது, கிருஷ்ணர் தொடுத்த சண்டையில் வாணசுர னைக் காக்கவென்று வந்த சிவனாரும் அவருடைய புத்திரரும் மற்றையரும் வலியிழந்தோடி விட்டனரெனும் பொருள் தருகின்றது. இதற்கு மூலம் விஷ்ணு புராணமும் வைண வர் பாகவதமுமாம். திருவரங்கக் கலம்பகத்தாரும் "மோடி யோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன் முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத் தேடியோட" என்று பொறித்திருக்கின்றனர். இவ்வாறு சிவனோடினரென் பது :—

ஸ்காந்தத்துச் சங்கர சங்கிதை கழறுகின்றபடி சிவவரப் பிரசாதியாய் அனேக பிரமாண்டாதிபதியாயிருந்த சூரபதும னுடையதம்பி தாரகாசுரனோடு சக்கிரபாணியானவர் பொருது அவனது கழுத்தில் தனது சக்கராயுதம் விழுந்து ஆபரணம் போலமைந்து கிடக்க அதனைக் கடுவேகமா யெறிந்துவிட் டோடியது போன்றதா? இரணியாக்ஷன் மகனெனும் அந்த காசுரனோடு அரியானவர் போர் தொடுத்து ஆற்றாதோடியது போன்றதா? சிவபெருமானது சீற்றக் கனலிற்றோன்றிய ஜலந்தராசுரனோடு விஷ்ணுமூர்த்தி போர்விளைத்துப் புறங் காட்டி யோடியது போன்றதா? அசுரரை வதைப்பான் இந்தி ரன் விரும்பியபடி சத்த இருடியரால் ஊக்கமின்றியுஞற்றப் பட்ட யாக குண்டத்திற் றோன்றின இரக்தாசுரன், இரக்தபீ ஜாக்ஷன், பஞ்சராவணரெனும் ஏழசுரரொடும் வைகுண்ட வாசுதேவர் சண்டை செய்து ஜயம் பெறாது உபாலம்பனமுற்

ரோடியது போன்றதா? ஸ்ரீ கமலக்கண்ணர் கஜாசுரனை யெதிர்த்து அவனை வெல்லும் விறலில்லாமல் விரைந்தோடியதுபோன்றதா? இலிங்கமியம்புகின்றபடி தக்ஷப்பிரஜாபதி யாகத்தில் யாகமூர்த்தியாயமர்ந்த நாராயண அமிசம், ஆயிரஞ் சிரமும் இரண்டாயிரங் கரமுமுள்ள அகோர வீரபத்திரமூர்த்தியால் தலை திருகப்பட்டுச் சாவதற்கு முன் மானுருவெடுத்து ஓட்டம் பிடித்தது போன்றதா? சிவரகசியம் ஈ-ம் அமிசம் க-வது காண்டம் "விண்டுவோடயனு மெண்டிசையின் மேவு மெவரும் * * * * மண்டியோ டினர் கரந்துருவ மாறினர்கள ளால்" எனுமாற்றான் தாருகாசுரனுக்கு நாராயணர் நனி பயந்து கடலின் மீனாகி யொளிப்பதற்காக ஓடினது போன்றதா? சைவ புராணத்துத் தரும சங்கிதை சாற்றுகின்றபடி திரிபுரவாசிகளோடு திருமாலானவர் பெருஞ் சண்டை புரிந்து ஆற்றாமே மேருகிரியிலொளித்துய்ய ஓட்டம் பிடித்தது போன்றதா? காஞ்சிப் புராணம் இருபத்தெண்டளிப் படலமியம்புகின்றபடி பிரமதேவனிடம் வரம்பெற்ற தாருணாசுரனாகிய சுரலோசனனது பார்வைக் கஞ்சிய காஞ்சிக் கமலலோசனர் கருணாநிதியாகிய சிவபெருமானைச் சரணடைந்துய்ய ஓடியது போன்றதா? பாரதம் பகருமாறு வைணவர் பாகவதமும் "(கிருஷ்ணர்) ஏழையைப் போல வாயுவேக மனோவேகமாக ஓடத்தொடங்குவார்" என்றபடி காலயவனன் மதுராபுரியைச் சேனையுடன் வளைந்துகொண்ட போது கிருஷ்ணர் அந்தப் புரியுள்ளாரனைவரையும் இரகசியமாகத் துவாரகைக் கனுப்பிவிட்டு முசுகுந்தச் சக்கரவர்த்தி விழி முகிழ்த்துறங்கு மலைக்குகையி லொளித்துக்கொள்ள ஓட்டம்பிடித்தது போன்றதா? என்று பரியாலோசனை செய்வார்க்கு நிஜம் வெளிப்படாது போமா? அதனை, அந்தக் கிருஷ்ணர் சிவதீக்ஷை பெற்றுச் சிவ தொண்டராகி நிற்றற்கேற்ப வாணாசுர யுத்தத்திற் சிவரூபமாக வந்த மூர்த்தியைத் தியானித்துத் தேவாதி தேவ! நீயே நின்னடிமையோடு எதிர்த்தா லடிமைக் கெவ்வாறு உய்தியுண்டாகும்? இவ்வாணன் நினது தயவைப் பெற்றவனே யாயினும் இவன் துஷ்டனாகலின் எளியேற்கே வெற்றி கொடுத்தருளுமாறு நீ மறைந்துவிட வேண்டுமென்று

சிந்தித்தவளவில் அந்தமூர்த்தியும் இவ்வாணனுக்கு நாமளித்த வாக்குப்படி காலமுங் குறுகிற்றென்றுள்கி அக்காலங்காறும் பொறுத்து இனி இக் கிருஷ்ணனே வெற்றி யடைகவென்று மறைந்தன ரென்றறிக. இச்செய்தியை ஸ்காந்தசனற் குமார சங்கிதையைச் சேர்ந்த காஞ்சிப் புராண வாணீசப் படலத்திற் கிருஷ்ண வாக்கியமாக "இமையவர்க்கே யருள் சுரந்து-காத் தருளுங் கடனுடையாய் கண்ணேடா வவுணர்குலத்-தீத் தொழிலான்றனை வெல்லத் திருவருள் செயெனக்கென்ருன்" என்றும், "வடிவாளி விடையேறு மனைவியென நினக்கு றுப்பா-மடியேனை யெதிர்ப்பது நின்னருட் பெருமைக் கொல் லுவதோ-குடியோடுமெனை யடிமை கொண்டாயின் றெனக் கிரங்காய்-கடியாழி விடமயின்ற கண்டா நின்னடி போற்றி" என்றும் வருதல்கொண்டு முணர்க. மேற்படி படலத்தில் "எம்பிரான் முப்பதாமுறையி னென்ஞேடெற்-றும்பாரார் கணத்தொடு மோடியுய்ந்துளான்-அம்பகமுள ரியா னமருக்காற்றலான்" எனும் வாணன் வாக்கியப்படி அவ் வாணனேடு முப்பது முறை போர் தொடுத்தும் வெற்றி பெருது தேவர்களோடோடி யொளித்த திருமாலின் அவதார கண்ணர் அவனை வெல்லவல்லா ரல்லராகலின் அவரது வெற்றி சிவகிருபையே யென்பது தெள்ளி தென்க.

இவ்வாறன்றெனுங் கூற்றெழுமாயின், அது காண்டல் கருதல் உரையெனு மூன்றற்கும் முரணுமென மறுக்க. கிருஷ்ணர்க்கு மூலரான விஷ்ணு மூர்த்தியின் அகந்தை யடங்கும்படி அவரைச் சிவபராக்கிரம மூர்த்திகளிளொருவ ரான வீரபத்திரர் தக்ஷயாக நாசத்திற் பாசத்தாற் கட்டியுருட்டி ஞரென்பதை, பைப்பலாதம், "யோதக்ஷயஜ்ஞேஸுரஸம் காந்விஜித்யவிஷ்ணும்பபந்தோருபாசேநவீர: |" எனவெ ழுந்து தாபிப்பதை நோக்குநர் சிவனுரைக் கிருஷ்ணர் வெல் லாரென்றற்கு வேறு பிரமாணமும் வேண்டுவாரா? இந்தச் சுரு திக்கு விரோதமாக அந்தப்பாகவதமானது தக்ஷயாகத்திற்கு விஷ்ணுமூர்த்தி போகாதிருந்து விட்டாரென்பதுபோலப் புலம்பும். அன்றியும் ஏனைய சுருதி விரோதமாகச் சிவனுரை ஆங்காங்கு இழித்துரைக்கும். இதனையே வைணவர் பெரும்

பாக்கியமெனக் கொண்டுள்ளார். இப்புத்தகத்தையும், இதையே ஆழ்வார் பெரிதுந் தழுவிப் பாடியுள்ள சிவ நிந்தைச் செய்யுள்களையும், இவை போன்ற பிறவற்றை யும் மெய்யென விழைந்து படிப்போரும், படிப்பிப் போரும், கேட்போரும், மறையிருந்த வூரிலுங் குடி யிருந்தறியா மந்தரென ஒதுக்கப்பட்டவராகி யிகபரசுக மிழந்து அநுபவிக்கு நரகம் நனிபெரிதாமெனற்கு ஆசங்கை யில்லை. பிரமாணம் சு-வது அதிகாரத்தில் வந்துள்ளன. அங்ஙனங் கூரத்தாழ்வாரும் பெரியநம்பியுங் கண்களிழந் தொழிந்தமை தக்க சாட்சியாம். நாராயண தோத்திரம் விரும்புவோர் சூடிக்கொடுத்த நாச்சியார் பாடலைப் போன்ற பாடல்களைப் பாடலாம். அதிற் சிவனை யிகழ்தலும் புகழ்தலு மில்லை. சிவனை யிழித்துரைத்த ஆழ்வார்கட்கு நாராயணர் அநுகூலரா யிருந்தாரென்று குருபரம்பராப் பிரபாவங் கூறுத லென்னெனின், அப் புத்தக யோக்கியதையிற்றென இந்நூற் கட் பல்லிடத்தும் பகர்ந்தாம். ஆழ்வார்கள் பாடலிலும் அவ் வித பிரத்தியக்ஷாநுகூலங்கள் கூறப்படவில்லை. கூறினுங் கூறுவிடினும் "ஸ்ரீ விஷ்ணு பகவான் தமது திருமேனியி லிருந்து ஒரு மாயாமோகனை யுண்டாக்கி * * * * இந்த மாயா மோகன் அந்தத் தைத்தியரை மோஹிக்கும்படி செய்வான். அதனாலேயவர்கள் வேத மார்க்கத்திற்குப் புறத்தவர்களாய் உங் களாலே கொல்லத்தக்கவர்களாவார்கள் (என வியம்பினன்)" என்று விஷ்ணு புராணம் ௩-ம் அமிசம் மொழி வழியேயும் ஜைன பௌத்த மத விருத்திகட்குக் காரணரான கமலக்கண் ணர் யாதொரு யோசனையால் ஆழ்வார் விஷயத்திலும் இசை தல் கூடுமெனவிடுக. இதனை, திருவாய்மொழி நிச்சித்திருந்தே னென்றெழுஞ் செய்யுளில் "கைச்சக்கரத் தண்ணல் கள்வம் பெரிதுடையன்—மெச்சப்பட்டான் பிறர்க்கும் மெய்போலும் பொய்வல்லன்" (3704) என வருவதும் வலியுறுத்துகின்றது. "பொருத்தமுடைய நம்பியைப் புறம்போலுள்ளுங்கரியானை" (643) என்று சூடிக்கொடுத்த நாய்ச்சியார் சொற்றதும் அது வாமென்க. சிலர் பரமசிவனையும் விஷ்ணு மூர்த்தியையுஞ் சமமாகக் கொள்ளப் பார்க்கிறார். அவரெல்லாம் அலக்கணுறு

பவரே யாவர். பிரமாணம்,—சூதசங்கிதை பரம விஞ்ஞான அத்தியாயத்தில் "ஆற்றல்சே ருருத்திரப்பிராற் கரியை யயனை யொப்பதிகமென் றுரைப்போர்—பாற்றரிதாய கொடுசிரயத் துப் பற்பனுண் மூழ்குவ ருண்மை" என்றும், வேதார்த்த அத்தியத்தில் "மாசில் வேந்தனைத் தாசனு மதிக்கின் வாழ்வுண்டோ" என்றும், தக்ஷக்ண்டம் ௧-வது அத்தியாயத்தில் "விஷ்ணு முதலிய எங்களைச் சகதீச னுக்குச் சமானமாக எவனுரைக்கின்றானோ அம் மகா பாதகன் அருநரகே யனுபவிப்பான்," என்றும் இரட்டையர் பாடலில் "மூவா முதலா முதல்வனையு மூவுலகிற்—சாவார் பிறப்பார் தங்களையுந்—தேவாக—ஒக்கநி னைவாருக்கல்லவோ வோரேழு—மிக்கநரகம் விதித்தது" என்றும் வருவன காண்க. முற்செய்யுளிற் காட்டப்பட்ட வுருத்திரர் மூவரிலொருவர். இவர்க்கே அரியயனென்பாரை யொப்பாகவுரைப்போர் நரகாழ் வார் என்றக்கால் நான்காவது தெய்வத்தையப்படி யுரைப்போர் கதி யெற்றென்போம். இப்படிச் சமப்படுத்தொண்ணு தென்பது கருதியே ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் பெரும் பாலும் ௯-ம் பாட்டுத்தோறும் அரியும் அயனுந் தேடியறி யாத் தேவன் சிவபெருமானென அருளிச் செய்துள்ளார். சுவாமிகள் ௧௦-ம் பாட்டுகள் தோறும் புத்தர் சமணர் வஞ் சனைகளை விளக்கி அவற்றோடு அந்த ௯-ம் பாட்டுச் செய்தியை யிணைத்து வைத்துள்ள நுட்பம் நுண்ணறிவுடையாரேயறியத் தக்கது. "சென்று நாஞ்சிறு தெய்வஞ் சேர்வோமல்லோஞ் சிவபெருமான் றிருவடியே சேரப்பெற்றோம்" என்று மறு மாற்றத்தாண்டகத்தில் ஆளுடைய அரசுகள் அருளிச் செய் ததுமது. 'சாவார் பிறப்பார்' என்றதற்குக் கிருஷ்ணர் சரிதையே தகுசான்றாகும். தசரதராமர் தாய் வயிற்றிற் கிடந்து பிறந்தனரென்பதைச் சில வைணவர் யாதானுமொரு கதை காட்டி மறைக்க முயல்வதுண்டு. அது "மன்னுபுகழ் கௌசலை தன் மணி வயிறு வாய்த்தவனே" (719) என்னுங் குலசேகர ஆழ்வார் கூற்றுக்கு முரணாகுமென்க. திருவாய் மொழியில் "பிறப்பில் பல்பிறவிப் பெருமானை" (2879) என்றதூஉம் பழுதே. பிறப்பெனப்படுவது கர்ப்பஜநநாசௌ

சத்திற்குரிய தொன்றென்க. ஈண்டு ஆளுடைய அரசுகள் "செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று—பத்தி செய் மனப்பாறைகட் கேறுமோ" என்றதூஉம், தாயுமானுர் "அல்லலாந்தொழில் படைத்தே படிக்கடி யுருவெடுத்தே—மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் கடவுளென்னின்—தொல்லையாம் பிறவி' வேலை தொலைந்திடா திருணீங்காது—நல்லது மாயைதானு நானென வந்து நிற்கும்" என்றதூஉமுணரத் தக்கன. அரன் அரி அயனென்பாரைச் சமமாகத் தியானிக்க வேண்டுமென்றல் சில நூல்களில் ஏகதேசமாக வரும். அவை கேசவார்த்தம், மூர்த்தித்திரய மென்பவற்றிற் குரியனவாமன்றி எண்ணிலா மூர்த்தங்கட்கு மூல வஸ்துவாயுள்ள சிவபெருமாற்கும், அரியயனுர்க்கு முரியனவாகாவென்றல் அமைவுடைமையாம். நிராகாரத்தியானத்தில் யாண்டுஞ் சிவனெருவனே யெனக் கோடல் வேண்டுமென்றலுமாம்.

மேலே, ஆழ்வார் 'மகனும்' என்றதற்கிணங்க அக் கலம்பகத்தார் முருகனுேட என்றெழுதி வைத்தாரே. முருகனை, கிருட்டினர்க்கு மூல புருடனுன மாவிட்டுணுவென்பாரே திரியங்க, ஷடங்க, சாஷ்டாங்க வந்தனங்களோடு வழிபட்டுய்ந்ததையும் அம் முருகனுகிய எம்பிரானைச் சுமக்குந் தோகை மயில் அவ்விட்டுணு வென்பாரால் வணங்கப்படுமாண்பெய்தியதையும் எமது சுப்பிரமணிய வியாசத்திற் பிரமாண பூர்வமாக அவரினத்தவர் கண்டு உண்மையுணர்வாராக. கிருட்டிணர்க்குச் சிவனுர் ஆற்றுதோடிய துண்மையாயின் அதோளி மரணமாகாது நின்ற வாணுசுரன் வைகுண்ட பதவியையன்றோ அடைதல் வேண்டும். இன்றிக் கைலாச பதியை யடைந்து குடமுழா முழக்குநனுகி யிருப்பதனுல் யாம் மேல் விளக்கிய நியாயமே சால்புடைத்தாம். நிற்க.

குரு பரம்பரை—திருமழிசையாழ்வார் வைபவத்தில் திருவல்லிக்கேணியிற் கிழிந்த துணியைத் தைத்துக் கொண்டிருந்த திருமழிசையாழ்வாரைச் சிவனுரும் உமாதேவியுங் கண்ட காலத்தில் தம்மை மதியாதிருந்த அவ்வாழ்வாரைச் சிவனுர் முனிந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாரென்றும், அஞ்ஞான்று ஆழ்வார் தமது வலக்காற் பெருவிரலில் ஒரு

கண்ணைத் திறந்தாரென்றும், அக்கட்சுவாலை சிவனாது நெற்றிக் கண்ணெருப்பை யடக்கி அவரையும் வெதுப்பியபோது அது சிவனுரேவிய பிரளயகால மேகங்களாலொழிந்ததென்றும், அம்மேகவர்ஷங்கட்கு மாழ்வார் அஞ்சாதிருத்தலைச் சிவனார் காணூஉச் சிரக்கம்பனம் பண்ணி யிருப்பிடமடைந்தாரென்றும் பொருளாமாறு எழுதியிருத்தல் காண்கின்றனம். இவ்வெழுத்து உறுதியாதற்குச் சுருதியா? ஆகமமா? மிருதியா? புராணமா? இதிகாசமா அப்புத்தகம்? அவற்றொன்றுமல்லாத வைணவரெழுத்தாகலின் அஃதுறுதியாகாதென மறுக்க. பின்னுண்டான செய்தியென்னின், “யோவிஸ்புலிங்கேநலலாடஜேநஸர்வம்ஜகத்பஸ்மஸாத்வைகரோதி|” எனும் பைப்பலாத சுருதியாதி பிரமாண விரோதமென மறுக்க. இந்நூலை யுணரும் விவேகிகள் அவ்வெழுத்தை எட்டுணையேனும் மதிப்பரோ? மதியார். ‘விரற்கண்ணிலொன்றை’ என்றெழுதினவர் மயிர்க்கண்ணையுயர்வுளதென்றொழித்தார் போலும். சிவனாரும் அவர் தேவியாரும் வரும்பொழுது அந்த ஆழ்வார் அசுத்தமுடைய சிவன் நிழல் தம்மேற்படாதொதுங்கினரென்பதை அவ்வைபவத்தில் “ஆழ்வாரும் அவர்களைக் கண்டு அவன் நிழல் தம்மேற் படாமல் ஒதுங்க” என்றுள்ள வெழுத்துக்கள் காட்டுகின்றன. மேற்படி பிரபாவம் நம் பிள்ளை வைபவத்தில் “சத்வகுணாத்யந்த விரோதியான (உருத்திரன்) தாமோகுணப் பிரசுரனுகையாலே நித்யாதிகளைப்போல ஆலயங்களிலும் பகவத் ப்ரகாரபுத்தியா உபாஸிக்கலாகாது” என்று நம்பிள்ளை சொன்னதாக எழுதியிருப்பதும் அதனை யுறுதிப்படுத்துகின்றது. அங்ஙனம், அக்கினி யிந்திராதி தேவதைகளை யுபாசிக்கலாமென்று அப்பிள்ளை சொன்னரென்பது மெழுதப்பட்டுளது. அந்தோ! திரிமூர்த்திகளும் வணங்கும் பரமபதியைப் பசுவர்க்கத்திலுள்ள உருத்திரனுகவெண்ணியும் பலவாறிகழ்ந்தும், உபதேசகாண்டம். சூஅ-ம் அத்தியாய மறையும் வண்ணஞ் சிவ வரப்பிரசாத வலியுற்ற பிரமதேவாது அபானத்துவார வழியாகத் தோன்றுதலும், சுருதி பிருகஜ்ஜாபாலஞ் சொல்லும் வண்ணங் கௌதமதாரமோஹதாதுகலித பாவத்

திற்குப் பரிகாரந் தேடுதலுமுள்ள அகில பசுத்துவ அந்தஸ் தமோ தேவதையான விஷ்ணுமூர்த்தியைப் புகழ்ந் தும் உழிதரு வைணவரடையுங்கதி கொடிதிற் கொடிதா மென்று மெய்யுணர்ந்தார் விளம்பற்பாலதொன்றே. அதனால் அவ்வைபவமெல்லாம் வைபவமாகாமற் சிவனே வை பவமே யாகும். ஆழ்வார் பாடல்களில் மூவரினுந் தாழ்ந்துளோ னிந்திரனென்பதுணர்த்துவான் அத்தேவன் பெயரை மூவர் பெயர்க்குங் கடையிற் பெரும்பான்மை நிறுத்தியிருத்தலே யும், தேற்றேகாரங்கொடுத்து "முதலாவார் மூவரே"(2096) என்று தெரித்திருத்தலேயும், "தேவர்க்கெல்லாம்—மூத்த நம்பி முக்கணம்பியென்று முனிவர் தொழுதேத்து நம்பியெம் பெருமான்" (1063) என்று திருமங்கையாழ்வார் கூறியதை யுஞ் சிறிதுமெண்ணுமே இந்திரன் முதலிய தேவதைகளினுஞ் சிவனிழிந்தவனெனப் பிதற்றும் அநியாய வைணவரைக் கண்டவர்க்குங் கழுவாயில்லாக் கஞடமுண்டாமே. அவரிருந்த விடத்திற்குஞ் சாணியிடவேண்டுமே. தத்புருஷ சிவனே யறிவோம்; மஹாதேவனைத் தியானஞ் செய்யக் கடவோம்; நமதெண்ணத்தை யுருத்திரன் நிறைவேற்றியருள்க. எனும் பொருள் தரத்தக்கதும், வைணவர் பலரும் விரும்பிப் படிக் குந் தைத்திரீயநாராயணவல்லியிலுள்ளதுமான "தத்புரு ஷாயவித்மஹே| மஹாதேவாயதீமஹி | தந்நோருத்ர: ப்ரசோ தயாத்||" எனுமந்திரத்தையேனும், "யோதேவாநாம்ப்ரத மம்புரஸ்தாத்விச்வாதிகோருத்ரோமஹர்ஷி: |" என்பதை யேனும், தேஜோபிந்தூபநிஷத்து "ஸர்வ ஸங்கல்பரஹிதஸ் ஸர்வாநந்தமயச்சிவ: |" என்பதையேனுமுணர்ந்தனரா? அவ்வைபவங் கூறுமாறு அந்த நம்பிள்ளை யென்பார் நோயால் வருந்திக் கிடந்தமை சிவ நிந்தையின் பலனே யெனலாம். காயத்திரி வல்லபனுகிய சிவபிரானுக்கு அசுத்தமுரைப்பதே பேரசுத்தமெனும் ஆறு இந்நூற்கட் பெரிதும் பிரகாசப் படுத்தியுள்ளாம். முகத்தையும் அகத்தையுஞ் சுகத்தையுங் கெடுத்துக்கொண்ட இவ்வசுத்த வைணவரினத்தவர் சிவனடி யாருறையும் வீடுகளிற் சென்றிரந்து வாய்த்ததை வாங்கியனு பவிப்பதென்னே? விஷ்ணு ஆலயங்கட்குச் சிவனடியார்

கொடுப்பவைகளை ஏற்று உபயோகித்திடுதலென்னை? சிவ னடியாரது நிழல் மேலேபடவிருப்பதென்னை? சிவ க்ஷேத் திரங்களில் வசிப்பதென்னை? இவைகளில்மட்டும் அவ்வசுத்த மில்லைபோலும்! சுத்தரை அசுத்தம் பற்றுதென்னின், சிவ நிழல் மேலே படாமல் திருமழிசையாழ்வாரொதுங்கினரென் பதென்னை? அவருஞ் சுத்தரல்லரே. அவரோ தெய்வத் திறமறியும் மதுகையுளராவர்? நன்று நன்று. இவர் தெய்வ மாம் தசரத ராமர் வான்மீக யுத்த காண்டஞ் சொல்கின்றபடி இராவண சம்ஹார காலத்திற் சிவனடியாராகிய அகஸ்திய மாமுனிவரைக் கும்பிட்டு அவரிடம் ஆதித்யஹிருதய மெனும் மந்திரோபதேசம் பெற்றதும், பாரத முதலியன பகர்கின்ற படி கிருஷ்ணர் சைவ இருடியராய துர்வாச முனிவரைக் கும்பிட்டிருந்ததும், உபமந்யு முனிவரிடஞ் சிவதீக்ஷை பெற் றதும், பிற வழிபாடுகளுஞ் சுத்தமோ? அசுத்தமோ? கூர்த்த புத்தி கொண்டுணர்க. இந்த அசுத்த வைணவர் செய்கைகளே அனேகரை யசுத்தப்படுத்துதற்கு ஏதுவாயின. அன்பராயுள்ளார் சிவ நைவேத்தியம் புசிக்கொணுதெனும் விதி யிருத்தலை நோக்கிச் சிவன் அசுத்தனென்றலமையுங்கொ லென்னின், உரைப்பம். அக்கினி சுத்த வஸ்துவாயினும் அதனைச் சாமானியர் தீண்டுதல் கூடாது. தீண்டுந் திறலுடை யர் தீண்டலாம். இப்படியே சிவநிர்மாலிய விஷயமுமென் றெண்ணுக. சிவபுராணத்தில், "ஶம்போர்நிர்மால்யகம்ஶுத் தம்பும்ஜிய்யாத்ஸர்வதாத்விஜா: | அந்யதேவஸ்யநைவேத் யம்புக்த்வாசாந்த்ராயணம்சரேத் ‖" எனவருவசனம் "சம்பு வின் நிர்மாலியம் பரிசுத்தமுள்ளது. ஆதலினதைத் தகுதி யுள்ள எல்லாப் பிராமணருமுண்ணலாம். அந்நிய தேவர் களின் நைவேத்தியங்களை யுண்டக்காற் சாந்திராயண விரதா சரணை செய்யவேண்டும்" என்று பொருளாதலின் யாம் மேல் விளக்கியதே நியாயமென்க.

பார்க்கவ முனிபத்தினி கர்ப்பத்திலிருந்து வெளிப் பட்டுப் பிரப்பந்தூரிற்கிடந்து திருவாளன் வீட்டில் வளர்ந் தவரெனப்படும் அத் திருமழிசையாழ்வார் முன்னர்ச் சிவ வாக்கியமெனும் பாடல் பாடிச் சிவவாக்கியரெனுஞ் சைவரா

யிருந்தார். பின்னருண்மை யுணர்ந்து வைணவராகிச் சில பாடல்கள் பாடினுரென்று வைணவர்களும், அவர் முன்னர் வைணவராயிருந்தார், பின்னருண்மை யுணர்ந்து சைவராகிச் சிவவாக்கியம் பாடினுரென்று சில சைவர்களுஞ் சொல்லு கிறுர்கள். அவ்விருவகைப் பாடல்களிலும் அவ்வித விவர மின்மையானும் அவர் வைபவத்தில் அவர் சிவவாக்கியம் பாடினுரென்பதும் அவரது முற்பெயர் சிவவாக்கியரென்ப தும் விளக்கப்படாமையானும் அச்செய்தி பொருந்துமா றில்லை. அவ்வாழ்வார் சகூ-ம் விருத்தத்தில் "நாதனூர் **** அரங்கமே" (800) என்றதனுல் க்ஷேத்திரமூர்த்தி தரிசனம் விரும்புபவராயுள்ளார். இதனே, அவர் வைபவம் "கச்சி வெஃகாவில் துயிலமர்ந்த தேவைச்சேவித்து"(2064) என்பத னுலும், குடந்தைக் கோவிலுக்குச் சென்று வழிபட்டாரெனு மாற்றுனு மொப்புக்கொள்கின்றது. சிவவாக்கியர் "தீர்த்த லிங்கமூர்த்தி யென்று தேடியோடுமாந்தரே—தீர்த்தலிங்க முள்ளினின்ற சீவனேத் தெரியுமோ" என்றுரைத்து, க்ஷேத் திரமூர்த்தி தரிசனங் கடந்து நின்று "மின்னெழும்பி விண்ணகத்தின் மின்னெடுங்குமாறுபோ—லென்னகத்துளீச னேடியானு மல்லதில்லையே" என்றுரைத்தபடி பல செய்யுட் கண்ணுந் தமது சுவாநுபவ சமாதியை வெளிப்படுத்தியுள்ளார். இத்துணைப் பெரியர் கீழ்நிலையான அந்த க்ஷேத்திர தரிச னத்தை விரும்பாராகலின் அவ்வாழ்வார் சிவவாக்கியரல்ல ரென்பதே பேறப்படுகிறது. எமது கருத்துமிதுவே. இதனே, "என்றுமறந்தறியே னென்னெஞ்சத்தே வைத்து—நின்று மிருந்து நெடுமாலை—யென்றுந்—திருவிருந்த மார்பிற் சிரீதர னுக்காளாய்க்—கருவிருந்த நாண்முதலாக் காப்பு" (2473) என்னும் அவ்வாழ்வார் இயற்பாவும் வலியுறுத்திற்று. இப் பாவில் ஆழ்வார்க் கருவிருந்த காலமுத லெக்கால முந்திருமா லானவரை மறந்தறி யேனென்றதனுற் சைவராயிருந்து வைணவரானதில்லை யென்க. 'என்றும் மறந்தறியேன்' என்பதை நன்கு கவனிக்க. அவர், "இனியறிந்தேனீசற்கு நான்முகற்குந் தெய்வ—மினியறிந்தேனெம்பெருமானுன்னே" (2477) என்றது சைவராயிருந்து வைணவரானதைக் காட்

டாதோவென்னிற் காட்டாது. ஏனென்னின், மேலைப்பா விரோதிக்குமாகலின். "மற்றுத் தொழுவாரொருவரையும் யானின்மை—கற்றைச் சடையான் கரி" (2407) என்பதூஉம் அதனை வியக்தப்படுத்தாது. அன்றியும், அந்த 'இனியறிந் தேன்' எனும்பா முதற்பாவாயிருப்பின் ஒருவாறு அவ்வித யோசனைக் கிடங்கொடுக்கும். அஃதந்தாதிக் கடைப்பாவா யிருத்தலால் அதற்கிடங் கொடாது. ஆயின், அஃதென் கொடு சொற்றதென்னின், விஷ்ணு மதத்திலுள்ள நான் இரணியகர்ப்ப மதம் சிவமத மென்பவற்றையும் இப்பொழு தாராய்ந்து வைணமே சிரேஷ்டமென்பதை ஐயமற வறிந்தே னெனல் கொடுசொற்ற தென்க. இதனை, "சாக்கியங் கற்றோஞ் சமண் கற்றோஞ் சங்கரனு—ராக்கியவாகமநூ லாராய்ந்தோம்—பாக்கியத்தால்—செங்கட் கரியானைச் சேர்ந் தோமே தீதிலமே—யெங்கட்கரிய தொன்றில்" என்று அவ் வாழ்வார் சொன்னதாக அவர் வைபவத்தில் தீட்டியிருப்பது முறுதிப் படுத்துகின்றது. சிவனும் இந்த ஆழ்வாருங் கண் திறந்து சினவிக் கொண்டாரெனுஞ் செய்தி ஆழ்வார் பாடலில் எப்படி யில்லையோ அப்படியே யிந்தவெண்பாவும் நாலாயிரப் பிரபந்தத்திலில்லை. இப்படிச் சில செய்யுள்கள் அதனினுள. 'ஆகமநூ லாராய்ந்தோம்' என்றதனுல் வேத மறியா ரென்பது வெளிப்படை. இவர் அந்தாதி கூ-ம் பாட்டில் "சிறியார் சிவப்பட்டார்" (2387) என்றார். அதனுலிவரே யுண்மை யுணராச் சிறியராயினர்.

திருமங்கையாழ்வார் வைபவத்தில், ஆலிநாட்டிற் கரச னன மிலேச்ச வமிசத்துத் திருமங்கையாழ்வார், சீகாழித் திருஞானசம்பந்தர் பாடிய யாதொரு பாட்டைக் கேட்டு இது நன்றாகவில்லை யென்று தூஷித்ததாகவும், அங்ஙனம் அந்தச்சம்பந்தர் ஆனால் நீரொரு குறள் சொல்லுமென்ற வுடன் "ஒருகுறளா யிருநிலம்" என்கிற திருமொழியை யருளிச்செய்து "தம்பெருமைதோற்ற ஆலிநாடனருண் மாரியரட்ட முக்கியடையார் சீயங்கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன் கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன சங்க முத்தமிழ்மாலை என்ன" (1187) என்று எழுதியிருக்கிறவாறாக

ஆழ்வாருஞ் சொன்னார். அதனைக்கேட்ட சம்பந்தர் அவரைப் புகழ்ந்து அவர்க்குச் சமானமிலராகிக் கும்பிட்டுப் போனா ரென்பதாகவு மெழுதியிருத்தல் காண்கின்றனம். திருமழிசை யாழ்வார் வைபவத்திற் சைவநாயகனாகிய சிவனை யிகழ்ந்தபடி இவ் வைபவத்திற் சைவாசாரிய சிரேஷ்டரையு மிகழ்வோ மென்று கங்கணங்கட்டி இவ்விடமெழுதிய தாகும். யோசிப் பாம். இத்திருமங்கையாழ்வார் பாடல்கள் சாமானியப் புல வர் பாடல் போலுள்ளன. அந்தச் சம்பந்தமூர்த்தி பாடல்கள் யமகம், மொழிமாற்று, மாலைமாற்று, ஏகபாதம் முதலிய சிறப்புடைச் செய்யுட் பதிகங்களோடும் விளங்கியுள்ளன. இனைய சிறப்புடைச் செய்யுளொன்றேனும் அந்த ஆழ்வார் பாடவில்லையாகலின், ஆழ்வார் அவரைக் கவியின் வென்றன ரென்பது பிழையில் புலவர்க்குப் பெருஞ் சிரிப்பையே யுண்டு செய்வதாகும். மற்றைப் பதினோராழ்வார் பாடல்களிலேனும் அச் சிறப்புடைச் செய்யுளொன்றுண்டா? இல்லை. அவற் றுட் சிலவன்றி மற்றவை சீர்கண் மிக்குந் தொக்குநிற்கு மாற் றான் ஓசைநயமுங் கெட்டுள்ளன. நிற்க. தேவார திருப்பதி கங்களிற் பலபதிகம் ஒவ்வோ ரற்புதஞ் செய்துள்ளன. அவ் வழி அவை யற்புத அருட்பாடல்களாம். நாலாயிரப் பிரபந்தப் பதிகங்களி லொன்றேனும் அப்படிச் செய்ததில்லை. அவ்வழி அவை சாதாரணப் புலவர் பாடல்கள் ஒக்கும். இங்ஙனம் ஆழ்வாரற்புதம் விரும்பவில்லையெனின், திருமழிசை யாழ் வார் கிழவியைக் குமரியாக்கினா ரென்றும், இராமாநுஜர் ஒரு பெண்ணுக்குப் பேயோட்டிப் பிணி தீர்த்தாரென்றும் அன்ன வர் சரிதங் கூறுவதென்னை? அவர்கள் வைகுண்டம் விட்டுப் பூமியிற் பிறந்ததென்ப தெற்றுக்கு? அற்புதமின்றி வீணே யரற்றுவானேன்? என மறுக்க. மோக்ஷமடையத் துதித் தார்களென்னின், நீயிர், அவர் வைகுண்டமிருந்து உலகரைத் திருத்தவந்தாரெனலும், வைகுண்டகதி பிறப்பிறப்பற்ற தெனலு முண்மையாகாவென மறுக்க. கிழவியைக் குமரி யாக்கின அற்புதம் போதாதோவெனின், அஃதவர் பாடலால் நடந்ததாகவில்லை, அவர் பாடலிலுமில்லை, சரித்திரப் புத்தக மோ பலபடியானு நம்பொண்ணாததா யிருக்கின்ற தென்க.

அற்புதங்களில் இறந்தாரை யெழுப்புவதே யுயர்வுடைத்து அற்றாகலினன்றே ஒருவரது மகிமை பேசுங்கால் "அவ ரென்னே? செத்தாரை யெழுப்புவாரோ?" எனுஞ் சொல்லு முலகிலுண்டா யிருக்கின்றது. அஃதருளின்றிச் செயற்பால தன்று. அதனாற் பழைய வெலும்பைப் பெண்ணாகும்படி பாடியருளிய அந்தச் சம்பந்தமூர்த்தி பேரருளாள ராவர். அவரை யாதோரற்புதமுமில் பாட்டுப் பாடுந் திருமங்கையார் வென்று அவரது கும்பிடும் பெற்றனரென்பதை முமுக்ஷுக்க ளொப்பார். மிலேச்சரை வேதியர் கும்பிடுதல் வைணவக் கோட்பாடுபோலும். மேலே காட்டுற்ற வைபவ வசனத்தில் தம் பெருமை தோன்றவெனும் பொருள் தரும்படி "தம்பெருமை தோற்ற ஆலிநாடன்" எனுஞ் சொற்களெழுதப்பட்டன. அவை, தம்பெருமை யெல்லாந் தோற்றுவிட்ட திருமங்கை யாழ்வாரெனும் பொருள்தர அமைந்தவாறு மறிக.

இந்த ஆழ்வார்விக்கிரகம் கையிலொரு சார்த்துவேலோடு சீகாழிப்பதிக்கு அணித்தான திருநகரியெனுமொரு சிற்றூரி லிருக்கின்றது. அவ்வேல் அந்தத் திருஞானசம்பந்தர் கையி லிருந்து பறித்துக்கொண்டு வந்ததென்று சிலவைணவர் சொல் லிக்கொள்கின்றனர். இதற்குப் பிரமாணம் மேல்வந்த "ஒரு குறளா யிருநிலம்" என்றெழுங் காழிச்சீராம விண்ணகர்ப் பதிகத்தின் கடைக் கவியில் "மங்கை வேந்தன், கொற்றவேற் பரகாலன்" என்றிருப்பதைக் காட்டுகின்றனர். இதனைப் பாடிய திருமங்கையார் இச் சீகாழிப் பதிகந் தொடங்கி அவ்வேற் பிரஸ்தாபங் கூறினாரென்பதின்றி இதற்குப் பல பதிகங்களின் முற்பட்ட திருவிடந்தைப் பதிகத்தில் "மங்கையர் தலைவன் மானவேற் கலியன்" என்றும், திரு வயிந்திரபுரப் பதிகத்தில் "வேல் வலவன் கலிகன்றி" என் றுந் தம்மைப் பிரஸ்தாபித்துக் கொண்டதுபோற் பல்லிடத் தும் பிரஸ்தாபித்துள்ளார். இக்காட்டுகளால் அது காட் டாகாதென மறுக்க. திருஞானசம்பந்தர்க்கு வேலுண் டெனுஞ் செய்தி அவர் புராணத்திலில்லாதது போலத் திரு மங்கையார் வேல் பறித்தாரெனுஞ் செய்தியும் அக்குரு பரம் பரை வைபவத்திலில்லை யென்றும், பறிக்கும் ஆற்றலு மவர்க்

கிருந்ததில்லை யென்றும் மறுக்க. அற்றேல், அவ்வேற் பிரஸ்தாபந்தா னென்னையெனின், அரசரை வேலேந்துகையரெனும் வழக்கிருத்தல் கொண்டு அவர், ஆலிநாட்டரசனாகிய தம்மையும் அவ்வாறு கூறிக்கொண்டன ரென்க. உதாரணம் :— அவ்விதங் கூறிய ஆழ்வாரே அவ்வயிந்திரபுரப் பதிகத்தின் கூ-ல் "வேல் கொள் கைத்தலத்தரசர் வெம்போரினில் விசயனுக்காய்" (1156) என்றதும், குலசேகர ஆழ்வார் "கூரார்ந்த வேல் வலவன் கோழியர்கோன் குடைக்குலசேகரன் சொற் செய்த" (740) என்பதனானே கொல்லிநகர்க் கரசனான் தமக்கு வேலுண்டெனக் கூறிக்கொண்டதுமாம். இந்நியாயங் கொண்டே ஒரு வேல் அவ் விக்கிரகத்திற் சார்த்தப்பட்டதென்பதை யறியாரே அப் பரிபவப் பொய்யிற் புகுந்தார். இவர், திருமங்கையார் வைகுந்த விண்ணகரப் பதிகத்தில் "வாள்வீசும் பரகாலன்" (1237) என்றதிலுள்ள வாள் எவரிடம் பறித்துக்கொண்ட தென்பரோ? வாளும் அரசர் பற்றற் குரியதன்றே. ததியோதனமும் புளியோரையும் விழைவோ ரித்திறமுணர்தல் கஷ்டந்தான். இது கிடக்க.

சிவரகசியம் ரு-ம் அமிசம் சாம்பவவிரதச் சருக்கஞ் சாற்றுகின்றபடி சிவ பூஜகனான பிரசண்ட சூரனுக்கு விஷ்ணுவானவர் பயந்தொளித்ததுமன்றி அவனது சிவபூஜையிலுண்டான அக்கினியால் வெதுப்பப்பட்டு மரணமூர்ச்சையுமடைந்தார். அதுகண்ட சேடனும் வைணவர் பெரிய திருவடியெனுங் கருடனும், இலக்குமி தேவியும் அழுதழுது வருந்தினர்கள். பின்பு கபிலர் சொற்படி அந்த இலக்குமி தேவி சாம்பவ விரத மநுஷ்டித்த பலத்தால் விஷ்ணு வுயிர்த்தெழுந்தார். இலிங்க புராணம்—பூருவ காண்டம்—ரு௪—ரு௫-ம் அத்தியாயங்களறைகின்றபடி அம்புயத்தயன் றும்மலிற் றோன்றி வச்சிராயுதந் தாங்கி யுலகாண்ட சுபனென்னுமரசன் ததீசி முனிவரிடந் தன்னை யுயர்த்திப் பேசியது பற்றி அம் முனிவர் கோபித்தவுடன் வச்சிரத்தால் அவரதுடம்பைப் பிளந்தான். அவர் சுக்கிரபகவா னநுக்கிரகத்தாற் சிவகிருபையால் வச்சிரதேகம் பெற்றுவந்து அவனது முடியிலுதைத்த போது அவனெறிந்த வச்சிராயுதம் அவருடம்பிற் பட்டுக் கூர்

மழுங்கி வீழ்ந்தது. அதுகண்ட அவன் வைகுண்ட நாதரை நோக்கித் தவம் புரிந்தான். ஆங்குப் பிரசன்னரான அந் நாதர் அவன் வேண்டுகோள்கேட்டு நீ அம்முனிபக்கல் சேறி, யானும் வருவலென்று ஒரு மறையவ னுருக்கொண்டு அவ ரைக் கண்டு கிருபை செய்கவென்று நின்றார். முனிவரும் விஷ்ணுவென அறிந்தார். பின்பு திருமால் தமது நிஜ வுருவைக் காட்டிச் சிவனடியவரை யாவர் வெல்வர், ஆயி னுந் தேவர் சபையில் இவனுக்கு நாம் அஞ்சினேமென்று நீர் சொல்லவேண்டு மென்றனர். அதற்கியையாத முனிவர்மீது அவர் சக்கரத்தை யெறிந்தார். அது பயன்படாது போன வுடனே அவர் தேவர்களோடு வந்து பலப்பல தேவாஸ்திரங் களைப் பிரயோகித்திடுதல் பார்த்த முனிவர் சிவசிந்தனை செய்து தருப்பைப் புல்லையே அஸ்திரமென வேவினர். அதற்கவ் விஷ்ணுமூர்த்தி நீங்கலாக மற்றையரஞ்சி யோடிவிட்டனர். மறித்தும் அம்மாயனு ருண்டுசெய் தேவிய எல்லாம் முனிவரது முனிவால் தகிக்கப்பட்டன. பெயர்த்தும் இருவரும் பற்பல மாயா வித்தைகள் காட்டினர். அஞ்ஞான்று முனிவர் அவை யிற்றைக் காணச் சிவஞானக்கண் கொடுத்தேன் காண்க வென் றார். அவ்வழி அவைகளைக் கண்ட திருமால் கருத்துக் கலங்கி நிற்கும்போது—

“ மலருற்றுறை யந்தணன் வாசகங்கேட்டு மாயோன்
கலைமுற்றுணர் வேதியன் றாளிணை கைகள் கூப்பி
யலைதுற்றிய பாற்கடற் பள்ளியினுங்கு மேவக்
கொலைபற்றிய வேற்சுபனுள்ளங் குழைந்து சென்றான் ”

என்றபடி பிரமதேவர் வந்து போர்வேண்டாவென்றதைக் கேட்ட விஷ்ணுவாவார் அந்தத் ததீசமுனிவர் திருவடி இரண் டையுங் கரங்கூப்பி வணங்கி யிருப்பிடமெய்தினர். சுபனும் மனவருத்தத்தோடு தன்னகர் வழியைச் சென்றான். சுப னைக் குபனென்றுங் கூறுப. இவ்விதஞ் சிவோபாசகர்க ளோடு வைகுண்ட வாசுதேவ ரெதிர்த்து ஆற்றலிழந்தோட் டம் பிடித்த சரிதைகளுட் சில முன்னருங் காட்டப்பட்ட னவே. இப்படி விஷ்ணுமூர்த்தியே சிவனடியாரை வெல்

லாது கும்பிட்டுப் போவாராயின், அவருடைய அடியவ ரெனும் ஆழ்வாரோ சிவனுரையுஞ் சிவப்பேரருளாளரையும் வெல்லுநராவர்? ஆகார். ஆகார்.

"ஈங்கிவ ரோராயிர வருக்கன்பா லின்புறு
பூசனை யாற்றுந்
தீங்கறு பலத்தின் மிகுபலனெய்துஞ் சில்லரிச்
சிலம்பணி மலர்த்தாட்
பூங்குழ லுமையாளோர் புறத்தமர்ந்த புரிசடை
யண்ணலை வணங்கி
யோங்கியே யுறையு மொருவனுக் கன்பாற்
பூசனை புரிந்திடி னுவந்தே."

எனும் இலிங்கபுராணத் திருவிருத்தம்—விஷ்ணுவினடியவர் ஆயிரவர்க்குச் செய்யும் பூஜாபலத்தினும் சிவனடியவரொரு வருக்குச் செய்யும் பூஜாபல முயர்ந்ததாகு மெனும் பொருள் பயக்கின்றது. பயக்கவே ஒருசிவனடியார்க்கு ஓராயிரவிஷ்ணு வடியார் சமானராகா ரென்றலுஞ் சித்தித்தது. அற்றுகலி னன்றே தேவார திருவாசகத் திருவாசிரியர்கள் பல்பே ரற்புதம் புரிகுநராகவும், நாலாயிரப் பிரபந்த ஆழ்வார்கள் அத்திறவற்புதம் புரியாராகவு மிருந்துள்ளார். மேற்செய்யுட் கண் வந்த விஷ்ணுவடியார் சங்குசக்ரக் குறிச் சூடுண்டவரு மல்லர். சித்திரோர்த்துவ புண்டர முடையருமல்லர். இப் புண்டர முடையாருருக்களும் அது தரித்துள்ள விக்கிரகங் களும் படங்களும் வேதபாகிய பாடண்ட மாகலிற் பூஜிக்கத் தக்கனவல்ல. பூஜிக்கினும் பலனில்லை. பிரமாணம்—சூதசங்கிதை ஐதரேய வுபநிடத தாற்பரிய வத்தியாயத்தில் "ஆரணபாகிய மார்க்க—நெஞ்சம் விரும்பி யுலகளந்த நெடு மால் பூசை புரிவாரும்" "சங்கநேமி முதலாகச் சாற்று நிற்கு மங்கிதங்க—ளங்கம் புனைந்து திரிவாரு மறையுஞ்சுருதி மிருதிசொலுந்—துங்க வாசாரத்தை யநுட்டியாத தோட முடையாரும்—பங்கமாரு மிவரெல்லாம் பாடண்டிகளாகு வர் மன்னே" என்றும், மநுஸ்மிருதி ௧௨-ம் அத்தியாயத்தில்

"வேதத்திற்கு வேருன சாஸ்திரங்களை யநுசரிக்கின்றவர்களுக்குப் பலனுமில்லை." என்றும் வருவன காண்க. இன்னும் பலவுள. சிலர் தேவாதிதேவஞன சிவபிரானை நிந்தித்து நீளமணுளராய விஷ்ணுமூர்த்தியைப் பெருந்தெய்வமாக் கொளற்காய யாதொரு மதம், தக்ஷயாகத்திற்ரு னுண்டாயிற்றென்று முடிவுசெய்யலாம். இதனைக் கந்தபுராணத்தில் ததீசி முனிவர் சாபவாக்கியமாகப் "பாசமதனிடைப் பட்டு மறையுரையா நெறியதனிற் படுதிரென்ருன்" என்பதனுனுமறிக. சூதசங்கிதையில் சில மறையோர்க்குச் சிவபத்தியிலாமைக் கேதுவுரைத்த அத்தியாயத்திலுள்ளபடி கௌதம முனிவர் "சீவர்கள்போற் பிறந்திறந்து திரிகின்ற மாயன் முதற் சிறியதேவர்—பாவமறுத் தன்பரை யாள் பரமசிவனி னதிகரெனப் பற்றிமாயுந்—தாவரிய மயக்க நுமக்குண்டாக" என்றும், இன்னும் பலபடியாகவுஞ் சபித்த சாபத்திலகப்பட்டவரும் துர்வாசர் பிருகு முதலிய மஹரிஷிகள் சாபத்திலகப்பட்டபலரும் அந்த மதத்தரே யாவர். இவர் வைகுந்த கதியுமடையார். சாப அநுபவம்—"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்" (3128) என்று திருவாய் மொழியிலு மொப்புக் கொள்ளப்பட்டது, திருவாய் மொழி மாலையென்றெழுவதில் "சரணமாகுந்தன தாளடைந்தார்க் கெலாம்—மரணமாஞல் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" (3660) என்றபடி நல்ல விஷ்ணு பக்தர் மரணத்தின் மேலடையும் அக்கதியும் மாயா சம்பந்தமாய் அநித்தியமேயாம். இதனை, திருமங்கையாழ்வார் திருவெழு கூற்றிருக்கையில் "முக்குணத் திரண்டவை யகற்றி யொன்றினி லொன்றி நின்று"(2672-18) என்றும், குலசேகர ஆழ்வார் வைபவத்தில் "சர்வேச்வரன் தன் நிர்ஹேதுக்கிருபையாலே இவர் ராஜஸ தாமஸ ரஹிதராய்ச் சத்வகுணப் பிரசுராம்படி கடாக்ஷித்தருளி" என்று மிருத்தலும், சத்துவ குணமும் மாயையேயென வைதிக சாஸ்திரங்கள் வழங்குதலும் வற்புறுத்துமே. குணம் கடந்ததே மாயாதீதம். அதுவே பிரம மென்பதை "மாயாதீதம்குணதீதம்பிரஹ்ம!" எனும் மஹாநாராயணேபநிஷத் வாக்கியத்தானும் "த்ரிகுணரஹிதம்"

எனுஞ் சுகரஹஸ்யோபநிஷத் வாக்கியத்தானும் அறியலாம். இப்படிப் பிரகிருதி சம்பந்தமாயுள்ள ஒரு நாட்டினை அப் பிராகிருத வைகுண்டமென்று வைணவர் சொல்லிக் கொள் வது பயனிலதேயாகும். இதனை யன்றிப் பிறிதுயர்ந்தகதி யுண்டென்று அவர் சொல்லவு மாட்டார். சொல்லின் வைகுண்டத்தில் நித்திய சூரிகளா யிருப்பதே பரமபதகதி யென்னும் வைணவர் தீர்வைக்கு அது மாறுவதோடு ஆழ் வார் பாடலுக்கும் விரோதமாம். நம்மாழ்வார் நங்களெனும் பத்தில் "அடையும் வைகுந்தமும் பாற்கடலு மஞ்சன வெற்புமவை நணிய—கடையறப் பாசங்கள் விட்ட பின்னை யன்றியவனவை காண்கொடானே" (3465) என்றும், ஓரா யிரவெனும் பத்தில் "மாக வைகுந்தங் காண்பதற்கென் மனம்—ஏக மெண்ணுமிராப்பக லின்றியே" (3585) என் றும், திருமழிசை யாழ்வார் "வல்லவா சிந்தித்திருப்பேற்கு வைகுந்தத்தில்லையோ சொல்லீரிடம்" (2446) என்றுங் கூறினமை காண்க. இத்திற விசாரத்தால் நாராயணரும் அவர் நாடெனும் வைகுந்தமும் மாயாகுண சம்பந்தமாயினமை வியக்தமன்றோ. முக்குணமுநீத் தடைவதன்றோ சிவசாயுஞ் யம். இதனை ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாளச் சத்தியில் "முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள் வாய் மூடா வூடா நாலந்தக்கரணமு மொரு நெறியாய்ச்— சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள் சேர் வார்" என்றருளிய அமுதவுரை யானுமறிக. ஸ்ரீ மார்க்கண் டேயம் தருமபக்ஷி ஜைனிசம்வாதம், ௬௦-வது அத்தி யாயத்திலே, "சாத்துவிக இராஜத தாமச மாயா குணங்களில் லாத பரபதமான பிரமத்தையடைகின்றேன்" என்று பொரு ளாதலும் அவ்வுரை முடிபன்றோ. இம்முடிபோர்ந்தார் "அரும்பவிழ் மலரோன் மாயனாதியர் வாழ்வெலாமோர்— துரும்பெனநினைக்கத்தக்கசுகவயிராகமுண்டாம்-விரும்புமற்ற தனாற் சுத்தமெய்ச்சிவஞான முண்டாம்" என்று சூதசங்கிதை சொல்லுமாறு அவ்வைகுந்தத்தைச் சுரர்வாழ் சுவர்க்க நாடு களிலொன்றென நினைப்பரே யன்றிப் பரிபூரண சுவாநுபூதி யான அந்தச் சாயுஜ்யமென நினைக்கமாட்டார். ௯-வது அதி

காரத்திற் காட்டப்பட்ட " தவச்ரியேமருதோ " எனும் ருக் சங்கிதா வசனத்திலே சமஸ்த தேவர்களுஞ் சிவலிங்காரா தனத்தால் எல்லா ஐசுவரியமு மடைந்தார்கள். இலக்ஷுமி சமேதராகிய விஷ்ணுமூர்த்தியும் பரமபத வாழ்வடைந்தா ரெனும் பொருள் காணுமாற்ருன் அவ்வைகுந்தமும் நாரா யணர்க்குச் சிவபிரானுற் கொடுக்கப்பட்டதேயாம். சூத சங்கிதை பிரசாதக்கிரம அத்தியாயம் " நம்பி நான்முகன்சத் தியவுலக நண்ணியதும்—வெம்புநேமியான் வைகுந்தநகரமே வியது—மும்பர்மற்றையோர் தத்தமதுறையுள் வாழ்வதுவுந் – தம்பிரான் பிரசாதமென்றே மறைசாற்றும் " என்பதூஉம் அது. இன்னன சுருதியாதி பிரமாணங்களை யறியாச் சில வைணவர், வஞ்சக வைணவ ரெழுதிய புத்தகங்களைப் படித் துக்கொண்டு சிவனுக்குக் கைலாச வாழ்வு கொடுத்தவர் விஷ்ணுவென்றும், சிவன் கொடுத்த வரமெல்லாம் விஷ்ணு விஞல் அழிக்கப்பட்டன வென்றும், இராமர் சிவலிங்க பூஜை செய்யவில்லை யென்றுங் கூறுப. அவர் கூற்று இங்ஙன முறுதியற்ருெழியு மாலோ. ராமாஷ்டோத்தர சதநாமஸ்தோத் திரத்தில் " சிவலிங்கப்ரதிஷ்டாதாஸர்வாவகுணவர்ஜித : " என்றுளதையும் ஈண்டுக் கருதிக்கொள்க. அவ் வைகுந்தம் பிரமதேவரிருக்கைக்கு மேலே சிவலோகத்திற்குக் கீழே யுள்ளது. இதனை, " ஆங்கதன்மேற் பிரமபத மூன்று கோடி யதன்மேன் மாயவனுலக மூன்றுகோடி—ஓங்கு மதன் மேற் புனிற்றுத்திங்கள்வேணியும்பர் பிரானுறையுலக நான் குகோடி " என்னுங் காசி காண்டச் செய்யுளானும் பிற வற்ருனுமறிக. தார்க்கையாலுங் குண்டோதராலுங் கொல் லப்படுவோராய் மேலே சொல்லப்பட்ட இரக்தாசுரன் முத லிய பெயருடையோராயிருந்த ஏழசுரரும் அவ் வைகுந்த நகரிலுள்ள வைணவ கணங்களையும் வளங்களையும் அதஞ் செய்து அதனையுஞ் சுயாதீனப் படுத்திக்கொண்டன ரென்பது பழநூற் பிரசித்தம். இவ்வித சரிதம் பலவுள. வைகுண்ட அந்தர்த்தானமாம் ஏழாவது பிராகார வாயில் காத்துநின்ற

ஜயவிஜய ரெனுமிருவர் அங்கு வந்த *சனகாதி முனிவர் சாபத்திலகப்பட்டுப் பூமியில் திதி யென்பவளின் கருப்பத்தை யடைந்தார்களெனும் வைணவர் பாகவதம் ஒ-வது ஸ்கந்த மும். இப்படிப்பட்ட வுலகை யடைதலோ பரமதத்துவ கதியாகும்? ஆகாத கீழ்நிலை யெனற்கு ஈண்டுதகரிக்குஞ் சுருதிகளையுங் கவனிக்க. பல பதவிகளைச் சொல்லவந்த நாத பிந்துபநிஷத்தில் "ஸப்தம்யாம்வைஷ்ணவம்பதம்—அஷ் டம்யாம்வ்ரஜதேருத்ரம்பசூநாம்சபதிம்ததா!" எனவரு வச னங்கள், ஏழாவது வைணவபதம் அதன்மேல் எட்டாவது பசுபதியாகிய உருத்திரனுர்பத மெனும் பொருள் தருகின் றன. மண்டலப் பிராஹ்மணோபநிஷத்தில் "தந்மநோவில யம்யாதிதத்விஷ்ணோ: பரமம்பதம் | தல்லயாச்சுத்தாத்வைத ஸித்தி: | பேதாபாவாத் | ஏததேவபரமதத்வம் |" எனவரு வசனங்கள், மனோலயமுண்டாய போது விஷ்ணு பரமபத மெய்தும்: அப்பதம் லயமாயபோது சுத்தாத்வைதசித்தி யுண்டாம்: பேதமில்லாமையே பரமதத்துவம் எனும் பொருள் தருகின்றன. சுத்தாத்வைத மென்றதனுல் விபரீத வைணவ விசிஷ்டாத்வைதமும் ஒழிந்தவாறுணர்க. சுத்தாத் வைதமே சைவசித்தாந்தம். இச்சுத்தாத்வைத சப்தம் வேத படிதம் அன்றென்பார் மாற்றமெல்லாம் ஈண்டோட்டம் பிடித்தவாறு முணர்க. "விசிஷ்டாத்வைதசப்தம்" வேதத் திலில்லை. தேவர்கட்கு அகந்தை மீக்கொண்டபோது அவர் களின் செல்வங்களைப் பற்றக் கடவுளாணையினுண்டாவோர் பலராவரென்பதும் ஈண்டோர்க. சிவகணங்களைப் பூதங்க ளென்று வைணவ ரிகழ்வதுண்டு. பூதங்களின் பிரபாவம் அவரறிகுநரல்லர். நம்மாழ்வார் பொலிக வெனும் பத்தில் "வைகுந்தன் பூதங்களேயாய் மாயத்தினுலெங்கு மன்னி" என்றும் "பூதங்களேயாய்க்—கிடந்துமிருந்துமெழுந்துங்கீதம் பலபலபாடி—நடந்தும் பரந்துங்குனித்து நாடகஞ் செய்கின் றனவே" என்றுங் கூறியிருத்தலை அவருணராதவருமாவர்.

---

* "துருவாசமுனிவன்" என்னும் வில்லிபுத்தூரார் பாரதம் இராசசூயச் சருக்கம்.

இங்கே, நாராயணன் இலக்ஷ்மிகாந்தனுதலால் அவனது செல்வமே பெருஞ் செல்வம், அஃ்தவனடியவர்க்கே யுண்டாக வேண்டுமென்னின், அந்த இலக்ஷ்மியமுத விடயமும் மேலே வந்துளது ; அத்தேவி தக்ஷயாகத்தி லவமான முற்ற செய்தியு நூல்களிலுண்டு : சீதாதேவி புகுந்தவிடமும் இருந்தவிடமுஞ் சிறப்பிழந்தன : வைணவரனேகர் பெருந் தரித்திராகவுஞ் சைவரனேகர் பெருஞ் செல்வராகவு மிருத்தல் இவ்வுலகிலும் பிரத்தியக்ஷமாகலின் அது பொருந்தா தென்க. சிவனடியவராய்ச் சிவாலயங்களையேவிளக்கிக்கொண்டு வருகின்ற தேவகோட்டைத் தனபதிகளும், மற்றை மாண் பரும் இதற்குத் தகுசாக்ஷியாதல் காண்க. சிவதோழனெனப் படு குபேரனது பெருஞ்சம்பத்தும், விஷ்ணுமூர்த்தியாதி ஏனைத்தேவர் சம்பத்துஞ் சிவா நுக்கிரகமென்பது மோர்க. அந்த இலக்ஷ்மிக்கும் இலக்ஷ்மியாய்ச் சர்வமங்களையா யிருக்குந்தேவி உமாதேவியே. அதனுல் உமாகாந்தனடிய வர்க்கே சர்வமங்களமு முண்டாகு மென்மனு ருயர்ந்தோர். அமரகோசத்தில் பார்வதி திருநாமம் “ஸர்வமங்களா” என வருதலுங் காண்க.

இதுகாறும் சைவச் சிறப்பிற்கு வைணவச் சிறப்புத் தாழ்ந்துள தென்பதைப் பலபடியானுங் காட்டினேம். இன்னுங் காட்டுதும். சிவாலயம் ஆயிரத்தெட்டு. விஷ்ணு ஆலயம் நூற்றெட்டு. சிவகுமாரரான கணேசப் பெருமாற்குங் கந்தசுவாமிக்குங் கோவிலும் மஹோற்சவங் களுமுண்டு. விஷ்ணுகுமாரர்களான பிரமாவுக்கும் மன் மதனுக்கும் கோவில்களும் மஹோற்சவங்களுமில்லை. அமர நிகண்டுவில் சிவன் பெயர்—ருஉ. விஷ்ணு பெயர்—சங. தைத்திரீயாருணசாகை நாராயணத்தில் உருத்திரபரமும் உருத்திர சம்பந்த பரமுமான காயத்திரி—சு. விஷ்ணு பரமும் விஷ்ணுசம்பந்த பரமுமான காயத்திரி-ங. வைதிக சைவாகமம் காமிகமுதல் வாதுளமீருக இருபத் தெட்டு. அவைதிக வைணவாகமம் பாஞ்சராத்திரம் வைகாநச மென இரண்டு. சைவசமயகுரவர் தேவாரப் பதிகம் எகூசு-க் கும் பாடல் அசககூ-ம், திருவாசகப் பாடல் சுநிஎ-ம்,

திருக்கோவை ௪00-ம் ஆம். ஆழ்வார் பாடல் ௪000 ஆம். நாயன்மார் அறுபத்து மூவர். ஆழ்வார் பன்னிருவர். ஈண்டு, கட்கடையிற் கூட்ட மதிகம், பாற்கடையிற் கூட்ட மதிக மில்லையென்று வைணவர் கூறின், காத்தவராயன் கூட்டம் வைணவமதக் கூட்டத்தினுங் குறைந்ததாகலின் அஃதுயர்ந்த பாற்கடைக் கூட்டமாக வேண்டுமென்க. சிவன் கோவில் ஆயிரத்தெட் டென்பதற்கு விஷ்ணுகோவில் அதிக மாமாறு நவகோடி நாராயண க்ஷேத்திரமென்று வைண வர் சுவடிகளில் வரைந்திருத்தலின் அது புளித்த கட்கடைக் கூட்டங்கொலோ வென்றுங் கடாவுக. நாராயண க்ஷேத்திரம் நவகோடியாம்போது சிவக்ஷேத்திரஞ் சகச்சிர கோடியா மென்க. தெற்கே இராமேசுவரமும் வடக்கே காசியும் மஹா சிவ க்ஷேத்திரங்களாய் இராமேசுவர யாத்திரை காசி யாத்திரை யெனும் பிரபல யாத்திரைகட் குரியனவாய் அநேகஜன ஸமூ ஹங்களால் அநவரதந் தரிசிக்கப் படுவனவா யுள்ளன. மேற்கே துவாரகையும் கிழக்கே ஜகந்நாதமும் விஷ்ணு க்ஷேத்திரங்ளில் விசேஷமெனப்படும். இவை அந்தக் காசி இராமேசுவரம் போல உலகங் கொண்டாடப் படுவன வல்ல. ஆங்கில நாட்டாரும் விரும்பிப் பார்க்கத்தக்க இராமேசுவரத்துப் பெருங்கோயிலையும், திருவாலவாய் முதலிய சிவக்ஷேத்திராலயங்களையும், தங்கந் திகழத் தங்க மயமாய் இயற்கையுறுதியுடையதாய்ச் சிவனடியவர் கழுத்திற்றயங்கும் உருத்திராக்ஷத்தையும் வைணவர் காண்டொறுங் காண் டொறும் இப்படி நமக்கொரு கோயிலுமில்லையே: துளசிமணி இவ்வுருத்திராக்ஷம்போலாது செய்திரட்சியா யுறுதியற்ற தாயன்றோ விருக்கின்ற தென்று வியசனிப்பது உடனிருப்பா ருணரற் பாற்றே. நம்மாழ்வார் மண்ணையெனும் பத்தில் "திரு வுடை மன்னரைக்காணிற் றிருமாலைக் கண்டேனே யென் னும்" (3047) என்றபடி, நாராயணர் அவனிச் செல்வ அர சரைப் போலுள்ளார். சிவனுர் அருட்செல்வ மகரிஷியைப் போலுள்ளார். அரசர்கள் இருடிகளை வணங்குவார்கள். இருடிகள் அரசரை வணங்கார்கள். இத்தருமமன்றோ அரி யரனென்பார் கண்ணுமுள. வைகுண்டராஜர் பிருகுரிஷியை

வணங்கினமையும், அரசராயிருந்த தசரத ராமருங் கிருஷ்ணரும் இருடிகளை வணங்கினமையும், இருடிகள் அவர்களை வணங்காமையும் இதற்கு நற்சான்ருகும். தேவரிஷியாதி எல்லா இருடிகளும் வழிபடு தெய்வஞ் சிவனாகலின் அவர் மகரிஷியாயுளார். நீலகண்டனை பிரசாந்தனைத் தியானித்து முனிவராடைவரெனும் பொருள் தரத்தக்க "நீலகண்டம்ப்ரஶாந்தம்,த்யாத் வாமுநிர்கச்சதி" எனுஞ் சுருதியானும் இது பெறுதும். இந்நூல் 115-ம் பக்கத்திலுதகரிக்கப்பட்ட "த்வம் தேவேஷு ப்ராஹ்மணோஸி" என்றற் றொடக்கத்துச் சுருதி "உருத்திரனாகிய நீ தேவர்களுட் பிராமணன் : நான் மனிதர்களுள் (பிராமணன்): பிராமணன் பிராமணனைத்தான் வழிபடுவான் : ஆதலால் உன்னை யான் வழிபடுவேன்" எனும் பொருளைத் தருதலு மதுவன்றோ? நரர்க்கும் விஷ்ணு முதலிய சுரர்க்கும் பிறர்க்கும் முகத்திலிரண்டு கண்ணேயிருப்பச் சிவனார்க்கு அவற்றோடு நெற்றிக் கண்ணொன்று விளங்குதலென்னை? "நயநம்பிரதாநம்" என்றதென்னை? அமுதகிரண சந்திரனும் மஹாகங்கையும் அவரது லீலாவிக்கிரக ஜடாமகுடத்திலடங்கி யிருத்தலென்னை? பன்னூல்கள் பகருமாறு வைணவர் பாகவதமும் "அரக்ஷமாணுச்சரணம் ஸதாசிவம்" என்று பிரஸ்தாபித்துத் தேவர்களெல்லாங் காளகூட விஷத்தினின்றுந் தங்களை இரக்ஷிப்பாரின்றிச் சதாசிவப் பொருளைச் சரணமடைந்தார்க ளென்கிறபடி அப்பொருள் அவ்விஷத்தை வாங்கிக் கீழ்மேற் செல்லவொட்டாது கண்டத்தினிறுத்திய கருணைத்திற மென்னை யென்று விசாரித்துணரினுஞ் சிவனே மஹாதேவனென்றல் சித்திக்கும். நிற்க.

சைவஞானிகள் விஷ்ணுமூர்த்தி முதலிய தேவர்களானும் பூஜிக்கத் தக்கோரா யுள்ளார். பிரமாணம் :—சூத சங்கிதை சாமசாகோப நிடத தாற்பரிய வத்தியாயம் "பரமவத்துவித சைவமெய்ஞ்ஞானி பாரளந்தவன் முதலோரால்--வரமுறப் பூசைபுரிந்திடத் தக்கோன்" என்று கூறுதல் காண்க. அன்றியும், அவ்விஷ்ணு முதலிய சுரர்கள் பலவரிசையோடு உபசரித்தழைக்க எழுந்தருள்வோர் சிவனடியார். பிரமாணம் :—

சிவரகசியம் உ-ம் காண்டம் சஎ-ம் சருக்கம் "சிவ டுண்டிதவ யோகன்றுன் * * * * உடலை விடுத்தான் * * * * கண்ணுதலார் விமானம்விட வதனிலேறி, அனப்பிரமன்விண்டுவே முதல தேவரதிகவரிசைகள் செய்தேயருகுசூழ" என்றும், தேவாரம் "இந்திரன்மால் பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்—வந்தெதிர்கொள்ள வென்னை மத்தயானை யருள்புரிந்து—மந்திரமா முனிவரிவனுரென்ன வெம்பெருமா--னந்தமரூர னென்றுனைடித்தான் மலையுத்தமனே" என்றுங் கூறுதல் காண்க. இத்திருச் செய்யுளினுள்ள செய்தி ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் ஸ்ரீகைலைக் கெழுந்தருளினபோது நேரிலறிந்துரைத்ததாகும். இச்சுவாமிகள் தமது அருட்பாடல்களில் திருமாலானவர்க்குப் பரத்துவ மின்மையுஞ் சிவனுர்க்கே அஃதுண்மையும் பலதிறஞ் சாதித்திருத்தலையு மறியலாம். அச்சாதிப்புத் தவறுயின் அத்திருமால் அவரை எதிர்கொண்டழைக்க வரமாட்டார். வந்தமையால் அவ்வாறு யாவருஞ் சாதிக்கலா மென்பதும், அது விஷ்ணு நிந்தையாகாத வுண்மையென்பது மோர்க.

காந்தங் கழறுகின்றபடி விஷ்ணு முதலிய தேவர்கள் நடுநடுங்கி வருந்துமாறு துன்பு செய்த குரண்டாசுரனைக் கொன்று அவர்களைக் காத்தவரும், விஷ்ணு முதலிய சுரர்களால் வெல்லப்படாத பத்துத் தலைகளையுடைய ஐந்தசுரர்களைக் கோறல் புரிந்தருளினவரும், சிவவரப் பிரசாதியாயிருந்த கஜமுகாசுரனைக் கணேசமூர்த்தியாற் கொல்லுவித்து அவ்வசுரனுக்கு நாராயணர் முதலியோர் செய்து வந்த நெற்றியிற் குட்டுதலையுங் காதுபிடித்துக் குனிந்தெழுதலையும் அக்கணேசமூர்த்தியைக் கொள்ளும்படிசெய் திரக்ஷித்தவரும், முன்னொரு கற்பத்தில் தம்மைச் சர்வேசுரனென வெண்ணி அகங்கரித்திருந்த நாராயணரை, சூதசங்கிதை "அவனகந்தை குறித்துநக்கு—நிலவேழையாம் வண்ணங்கொண்ட பெருஞ் சேட்டையெலா நீற்றினுனே" என்றபடி ஒரு கோபாட்டகாசச் சிரிப்பாற் கிடுகிடென நடுங்கச்செய்து அவ்வகந்தை தீர்த்தருளினவரும், பிரம சிருஷ்டியிற் றோன்றி நாராயணாதி சர்வ தேவர்களையும் அடக்கியாண்ட மகிஷாசுரனை உமாதேவி

யிடந் தோன்றிய துர்க்கையைக் கொண்டு தொலைத்தருளின வரும், இலிங்க மியம்புகின்றபடி பிரமதேவர்பால் வரம் பெற்ற தாருகாசுரனை மஹாகாளியை யுண்டாக்கி அவளாற் கொல்லுவித்துத் திருமாலாதி தேவர்களை இரக்ஷித்தவரும், ஸ்ரீ மார்க்கண்டேயர் நான் சிவோபாசனையால் நித்திய தத்து வத்தை யடைந்தேனென்று சௌநகாதி பெரியோரை நேர்க் கிச் சாற்றினுரென யஜுர்வேத தக்ஷிணாமூர்த்தி யுபநிஷத் துரைக்கின்றபடி யவ்வுபாசனைக் கிரங்கிக் காலனைக் கடிந்தருளி னவரும் அந்தப் பரமசிவனுரே.

மேலேசொன்ன அந்தகாசுரன் தேவர்களை யெல்லாம் போரில் வென்று நீவிரெல்லீரும் பெண்கண் மானத் தோல்வி யடைந்தமையால் இன்று முதல் பெண்களின் நடைநொடி பாவனையோடு மிருக்கவேண்டும் : பெண்களுடுத்து முடையே யுடுக்க வேண்டும் : பெண்களணியுமணியே யணிய வேண்டு மென்று தீர்மானித்தபடி அவர்களுஞ் செய்துவந்தார்கள். அவ்விதமே நாராயணப் பெருமாளுஞ் செய்துவந்தனர். இவ்வித ஏழைமையை யொழிப்பான் வைரவ மூர்த்தியைக் கொண்டு அவ்வசுரனை யடக்கிச் சிவகணத் தலைவனுக்கி யரு ளினவரும் அந்தச் சிவனுரே. சங்கர சங்கிதை "ருத்ரவோம மதேவேந்த்ரஹரிப்ரஹ்மாதயஸ்ஸுரா : ||" என்று பிரஸ்தா பித்துரைக்குமாறு மன்மதனை யெறித்த சாம்பற் பூழியில் உமாதேவியாலமைக்கப்பட்ட ஓருருவம் பண்டாசுர னென எழுந்து நின்று சிவபெருமானிடம் பெற்ற வரவலியால் தேவர்களிருதயத்தின் மறைந்திருந்து அன்னவ ரிந்திரிய மெல்லாம் அபகரித்துப் புசிக்கும்போது வைகுந்த நாதரு மிந்திரிய மிழந்து வன்மைகுன்றி யிருந்தார். அத்து துன் பொழிப்பான் திரிபுரையெனுஞ் சத்தியை வெளிப்படுத்தி அச் சத்தியைக் கொண்டு அவ்வசுரனை யதஞ்செய் தளித்த வரும் அந்தச் சிவனுரே. இன்னன மாண்புடைச் சிவபெரு மானை விட்டு விட்டுணுமூர்த்தியாதி தேவர்களை விரும்புதல் கனி யிகந்து காய் கவர்த லொக்கும். தாருகா வனத் திருடிகளிட்ட சாபம் சிவனுர்க்குப் பலியாதொழிந்தமை போலப் பிருகுமுனி விஷ்ணுமூர்த்திக்கிட்ட சாப மொழியா

மல் அவரைப் பீடித்துப் பிறப்புக் குட்படுத்திற்றென்று காந்தங் கூறுதற்கேற்ப, மனிதனாகப் பிறந்து மனைவியை யிழந்து வருந்தும்படி அம்முனி அரியைச் சபித்தாரென்று வான்மீக உத்தர காண்டம் ருக-வது சருக்கமும் அறைகின்ற தனாலும், பார்வதியம்மை யிட்ட சாபத்தாற் பதுமநாபர் அனந்தனெனும் பாம்பாகி ஆலம் பொந்திலிருந்து தவம் பண்ணி விநாயகர் தரிசனமானவுடன் அச்சாப நீங்கி "விண்ணுமம் புகல்கின்ற திங்கடன்னின் மிக்க மதிதனிலாரும் பக்க மாகு—மிந்நாளில் யானுன்னை யருச்சித்திட்ட வியற்கை போல் யாருமினி யீறிலாவுன்—பொன்னரு மலரடியே புக லென்றுன்னிப் பூசை புரிந்திடவு மவர் புண்கணெல்லாம்—அந்நாளே யகற்றிநீ யுலவாச் செல்வ மளித்திடவும் வேண்டுமிஃதருள்க வென்றான்." எனுங் கந்த புராணத் திருவிருத்தப்படி அவ்விநாயகரை யருச்சித்து வரம்பெற் றிருப்பிடமெய்தினமையாலும், விஷ்ணு புராணம் ரு-ம் அமிசம் ௩௭-வது அத்தியாயஞ் சொல்கின்றபடி துர்வாசர் முதலிய இருடிகளிட்ட சாபமும், பாரதம் பகர்கின்றபடி திருதராட்டிர பத்தினி காந்தாரி யிட்ட சாபமுங் கண்ணமூர்த்திக்குப் பலித்தமையாலும், பரசுராம ரென்பார் கார்த்தவீரியன் முதலியோரை முருக்கிய பாவந் தீரும்படி தீர்த்த யாத்திரை செய்ததனாலும், இச்செய்தி வைணவர் பாகவதத்து முள்ளதனாலும், வாயுசங்கிதை பிரம விட்டுணு உற்பத்தி யத்தியாயத்தில் விஷ்ணுவாவார் மேன்மை விழைந்து மேகவுருக்கொண்டு அரனை ஆயிர வருடஞ் சுமந்து திரிந்தாரென்பதூஉம், அக்காலமே மேகவாகன கற்ப மென்பதூஉம் பெறப்படுதலாலும், சிருஷ்டிகர்த்தாவுஞ் சிதாமூர்த்தியின் பிரதம புத்திரனுமான பிரமதேவன் சிவதண்டனையினொரு தலையிழந்த அன்றுமுதலின்றுவரையும் அத்தலையை அத்தேவனேனும் அம்மூர்த்தியேனும் உண்டு செய்யும் ஆற்றல் பெறப்படாமையாலும், விட்டுணு வியூகமூர்த்திகளிற் பிரத்யும்ந மூர்த்தியும் விண்டுவின் இளைய புத்திரனுமான மன்மதன் சிவதண்டனையி னுருவிழந்த அன்றுதொட் டின்றுகாறும் அவ்வுருவை அவனேனும் அவன் தமையனேனும் அவன் தந்தையேனும் உண்டு

செயும் ஊக்கம் பெறப்படாமையாலும் அந்த நாராயணமூர்த்தி முழுமுதற் கடவுளாகாரென்றல் வெள்ளறிவினருமுணரவுள்ளதே. அம்மூர்த்தி வழிபாடுடையோரும் பிரதோஷ வேளையாகிய அந்திப்போதில் நாராயண ஸ்துதியாவது தரிசனமாவது வணக்கமாவது செய்யாதிருக்க வேண்டும். செய்யின் நரகஞ் சித்திக்கும். இதனை, பிரதோஷ வேளையில் வைகுண்டத்தில் விஷ்ணு மூர்த்தியானவர் இலக்குமியைப் புணர்ந்து கொண்டிருந்தாரென்றும், அப்பொழுதங்குச் செல்லமுயன்ற பிருகு முனிவர் தம்மை தடுத்த கருடனைச் சாம்பராக்கி யுண்ணுழைந்தாரென்றும், அவர் வரவுகண்ட அவ்விஷ்ணுமூர்த்தி புணர்ச்சியி ,லிருந்தபடியே அவரை வராது நிற்கவென்று கைகாட்டித் தடுத்தாரென்றும், உடனே "எந்நாளுமினிய வந்திவேளை தன்னி லேந்திழையைப் புணர்வரோ வுனக்கிப் புத்தி—சொன்னூரா ருன்மத்த முண்டோவென்று தூயமாதவன்றன் மாதவனை நோக்கிப்—பன்னாளும் பிரதோடந்தனிலுன்னுமம் பகர்ந்துளோர் தரிசித்தோர் பரவல் செய்தோர்—துன்னுத நிரயத்திற் புகுவாரென்று சூழ்கோபத்தாற் சாபஞ் சொல்லிப் போனான்" என்றபடி முனிந்து சபித்துச் சென்ற அம்முனிவர் தமக்கஞ்ஞான்று விஷ்ணுவைப் பார்த்ததானேர்ந்த பாவத்தைக் காசியம்பதி யெய்தித் தீர்த்துக் கொண்டா ரென்றும், பின்பொரு பிரதோஷ காலத்தில் ஹரி பஜனை செய்தவொரு கந்தருவன் கானக யானையாகப் பிறந்தானென்றும் சிவ ரகசியம் ௩-ம் அமிசம் உ-ம் காண்டம் ௬௭-ம் சருக்கம் நவிலு மாற்றானறிக. இங்கியாயத்தாலன்றே பிரதோஷ வேளையில் விஷ்ணு கோவில்களில் ஆராதனை யேற்படவில்லை. இந்நூற்கண்ணு தகரிக்கப்பட்ட தமிழ் செய்யுள்களையுட்கொண்ட சிவ ரகசியம் ௩-ம் அமிசமானது திருவாரூர் ஒப்பிலாமணி தேசிகரால் வடமொழியினின்று மொழிபெயர்க்கப்பட்டுத் தஞ்சைச் சரபோஜி மகாராஜர் சபையிலரங்கேற்றப்பட்டுள்ளது.

வாரீர் சதாசார சைவர் குடிப் பிறந்த தகையுடையவரே இவ்வாறு விஷ்ணு மூர்த்தியின் பசுத்துவ சரித்திரம் பண்டை நூல்களிற் பலவுள. அவையிற்றை யெல்லாம் பிரகாசப்

படுத்தற்கு இச்சிறு நூலிடங் கொடுத்திலது. ஆயினும் நிரல் சான்ற பிரமாணங்களு நியாயங்களும் வந்துள்ளன. கல்லைக்கல்லால் தகர்ப்பதுபோல வைணவர் புத்தகங்களைக் கொண்டே அவர் முடிவை முருக்கிச் சத்திய சைவசிந்தாந்தத்தை நிறுவினு மென்பதும் அந்த நியாயங்களிலுள்ள தன்றோ? சுருதி "சிவோமேஅஸ்துஸதாசிவோம்" எனவும், "ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் எனவுஞ் சொல்லியவைகளே வைதிகம். "ஹரிரோஹரி" என்றதிற் பிரணவங்கூடியது அவைதிகமென வறிந்தும் உழிதரு வைணவரும், மாத்வரும் நித்திரை விட்டெழும்போது "ஹரிரோஹரி: ஹரிரோஹரி : ஹரிரோஹரி:" என்று சொல்லுமாறு சொல்லிக்கொள்வோராயுள்ள சில சிமார்த்தர் திருநீறணிவோராயிருந்துஞ் சிவ பக்தியிலாத் தன்மையால் விஷ்ணுவே பெருந் தெய்வமெனக் கொள்ளுமாறு போதிப்பதுண்டு. இனி, அதுவு நுங்கள் செவிகட் கினிமையா யிராதன்றோ? இவ்வளவு முணர்ந்த நீயிர் "பிறிதொடுபடாஅன் தன்மதங் கொளலே" எனும் விதிப்படி வைணவம் புகாது சைவத்திருந் துய்வீர்களென்றும் வைணவருள்ளும் நல்லூழுள்ளார் சைவராய் வாழ்வார் இவறல் மீக்கொளா ரென்றும் எண்ணுகின்றேம். ஐயமுளதேல், அதனை யின்னுமொரு பெருநூல் வாயிலாகவு மொழிக்க நினைந்துள்ளேம். மேலே காட்டப்பட்ட நூல்களன்றிச் சிவகர்ணாமிர்தம்—சிவதத்வ விவேகம்—பிரஹ்மதர்க்கஸ்தவம்—ராமாநுஜ சிருங்கபங்கம்—ரத்நத்ரயபரீக்ஷா—ஹரிஹரதாரதம்யம்—விஷ்ணுதத்வ ரஹஸ்ய கண்டனம்—சிவோத்கர்ஷ தீபிகை—சிவஞான சித்தியார் பரபக்கம்—தத்துவப் பிரகாசம்—சித்தாந்த வசனபூஷணத்திற் பாஞ்சராத்திரி வினுவிடை, பாஞ்சராத்திரி மதமறுப்பு முதலியவை வைணவ மத தும்ஸமும், சைவ சமயஸ்தாபனமுமாக வுள்ளன. சோழநாட்டின் கண்ணதாய கஞ்சனூரிலிருந்த மதுசூதனசாரி முதலிய வைணவ ரனேகர் அரதத்தாச்சாரிய சுவாமிகட்குச் சுதரிசனசாரி யெனும் பெயரிட்டு வைணவக் கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கும்போது ஐந்துவயதுள்ள அச்சுவாமிகள் அவற்றை மறுத்து நான் அரனுக்குத் தத்தனுகி விட்டேனென் றியம்பி

அவ்வூர் வரதராஜப் பெருமாள் சன்னிதியில் தீயிற் காய்ச்சிய இருப்பு முக்காலியிலேறி நின்று மாறுபட்ட வைணவர் கடாக்களுக்கெல்லாம் விடை யிறுத்துச் சிவமத ஸ்தாபனஞ் செய்து அரதத்த சகச்சிரமெனுங் கிரந்தமு மியற்றிப் பல அற்புதங்களுங் காட்டிக் கலியுகம் ௩அஎகூ-ல் திவ்விய ரதமேறித் திருக்கைலையை யடைந்துள்ளார். திருவையாற்றிற்கு அண்மையான மாங்குடியில் கலியுகம் சஅஅஅ-ல் மறையவர் குலத்துதித்துச் சிவகிருபைபெறீஇ மஹாவித்வ சிரோமணியாய் விளங்கியிருந்த மணிய சிவனுரோடு ஸ்ரீரங்கத்து வைணவர்களும் மற்ற வைணவர்களு மெதிர்த்துத் தோல்வித்தான மெய்தினர். வைணவ ரனேகர் வைதிக சைவ மதோத்தாரணர்களோடு வாதித்து வலியிழந்த சரித முதலியன சைவபூஷண சந்திரிகையிற் காணலாம். பாத்மத்தில் "விஹாயஸாம்பமீசாநம்யஜந்தேதேவதாந்தரம் |" என்பதனுனும், "விஷ்ணுதர்சநமாத்ரேணசிவத்ரோஹப்ரஜாயதே |" என்பதனுனும், சிவத்துரோகிகளாய் விஷ்ணுவை மட்டுமுபாஸிக்கிறவர்கள் நற்கதியடையார்கள், துர்க்கதியே யடைவார்களென்றும், சிவரகசியம் பற்மாவதிச் சருக்கத்தில் "வினவிட வெய்யோன் சொல்வான் விளங்கிழாய் விமலன் பூசை * * * நினைவிலா மூடர் நீப்ப ரவர்களே மரநிகர்ப்பர்" என்பதனுல் சிவபூஜையை மூடர்கள் தள்ளி விடுவார்கள்; அவர்களேயறிவற்ற மரம் போல்வார்கள் என்றும் பெறப்படுதல் காண்க. இவ்வித நியாயமெல்லாம் அந்நிய மதத்திலிருந்த விவேகிகளு முணர்ந்து வைதிக சைவத்தைப் புகழ்ந்துகொள்வோரே யாவர். என்னை? குணங்குடிமஸ்தானெனும் ஒரு மகானுனவர் தம்முடைய பாடல்களில் "ஆதியந்தங் கடந்த வுமையாடன் பாதமகண்ட பரிபூரணமா மையர் பாதஞ்—சோதி யந்தங் கடந்த கணபதியின் பாதந்தொழுதிறைஞ்சிக் கரங்குவித்துப் போற்றல் செய்து" என்று கூறி "நந்தீசுரக் கண்ணி" "மனோன்மணிக் கண்ணி" பல பாடியுள்ளார். கிறிஸ்து மதகுரவராய், ஆங்கிலம் தமிழ் முதலிய பாஷாவிற்பந்நராய், மிக்க புகழுடையவராயிருந்த (Reverend G. U. Pope D. D.) ரேவரேண்டு ஜி. யூ. போப்பு.

டி. டி. என்பவர் வைணவமத புத்தகங்களுள் எதையு மெடாமல் ஸ்ரீமந் மாணிக்கவாசகனுர் திருவாசகத்தை யெடுத்து ஆங்கில பாடையில் விரிந்த உரையெழுதி நூலாசிரியரையுஞ் சைவத்தையும் விதந்து விதந்து கூறியுள்ளார். இவ்வாறு கொள்ளுங் கொள்கை, அத்தக் கூரேஜ விஜயம் குருபரம்பரையாதி வைணவ லிகிதங்க ளெழுதினுர்க்கும், சுருதி நியாயமறியா அவர்களாற் சைவத்திற்கு வேதமேயில்லை யென்று போதிக்கப்பட்ட இரும் புள்ளுவத்திலகப்பட்டுக் கும்பலிற் கோவிந்தம் போடுவார்க்குமே யில்லா தொழிந்தது.

வாரீர் மெய்யி னிலைஇய தலையன்புடையோரே! நீயிரெல்லீரும் தெய்வ சமய ரத்தினமாகிய சைவசமயமுத்தி நேடி நிற்பதில், சிவயோக சமாதி நிஷ்டா நுபவமெய்து மட்டுஞ் சற்சாத்திர தோத்திரங்களை விடாதவர்களாய்க் குரு லிங்க சங்கம பத்தியின் மேம்பட்டவர்களா யிருத்தல் வேண்டும். மேலைய சிவ ரகசியயம் முதற்காண்டம் உகூ-வது சருக்கம் "மன்னுமவன் மனையிற் சிவலிங்க சித்ரமேனுமொன்று லகுத்ததில்லை—அன்ன தனுலவ்வாறு செறிமனைகள் புலைச்சேரி சுடுகாடாகும்—பன்னு சிவபூஜையில்லார், மனைபுகுதிற் சலபானம் பண்ணிலன்னோர்—அன்னமருந்திடி லவர்கள் புலையராய் நரகமெல்லா மடைவான்றே." என்றியம்புமாறு சிவபெருமானை மறவாதிருக்கு நிமித்தம் உங்கள் வீடுகளிற் சிவமூர்த்த படங்களை யழகுபெற வைத்திடுவீர்களாக. அவ்விதச் சித்திரங்களைச் சுவர்களிலெழுதும்படி செய்வீர்களாக. அவையில்லாத வீடுகள் புலையர்சேரியையுஞ் சுடுகாட்டினையு மொக்கு மெனவும், சிவபூஜை யிலாதார் வீடுகளிற் புகுவோரும் அங்குச் சலபானஞ் செய்வோரும் அன்ன மருந்துவோரும் புலையர் தன்மை யடைந்து எல்லா நரகமு மநுபவிப்பார்களெனவும் அறிவீர்களாக. வைணவர் பாகவதம் கக-ம் ஸ்கந்தம் கக-ம் அத்தியாயம் ௩கூ-ம் சுலோகத்தில் "அபி தீபாவலோகம்மேநோபயுஞ்ஜ்யாந்நிவேதிதம் ‖ "என வருவது "எனக்குச் சமர்ப்பித்த வஸ்துக்களில் தீபமேனும் (பிறர்) உபயோகித்தல் கூடாது. அதாவது எந்த வஸ்துவையுங் கிரகிக்கொண்ணு தென்று கிருஷ்ணமூர்த்தி கூறினுர்"

எனும் பொருள் பயக்கின்றது. பயக்கவே விஷ்ணுமூர்த்திக்கு நிவேதித்த அன்னமும் உண்ணலாகா தென்றலேற்படுவதாயிற்று. இந்நியாயம்—இந்நூல் 128-ம் பக்கத்தில் உதகரிக்கப்பட்ட சிவபுராணச் சுலோகத்தில் "சம்புவின் நைவேத்தியமல்லாத அந்நிய தேவர்களின் நைவேத்தியங்களையுண்டக்காற் சாந்திராயண விரதாசரணை செய்யவேண்டும்" எனும் பொருட்கு ஒத்ததாயு மிருக்கின்றது. இவ்விதியினைச் சிவத்துவேஷ சித்திரோர்த்துவ புண்டரதாரிக ளங்கீகரித்து நடக்கக் கண்டிலம். நடந்தால் விஷ்ணுகோயில்களில் ததியோதனமும் புளியோரையும் விரும்பிக் கூடுஞ் சாமானிய ஜனக்கூட்டமு மில்லா தொழியுமென்பது அவர் கருத்துப்போலும். அதனால் விஷ்ணுமூர்த்திக்குச் சமர்ப்பித்த எதனையுமுபயோகியா திருத்தலே நறிதென்பதை யறியாதார் நட்பினையும் நீங்கள் விரும்பாதிருத்தலே நன்றெனவுணர்வீர்களாக. அந்தச் சிவரகசியம் உ-ம் காண்டம் சச-ம் சருக்கம் உகூ-வது செய்யுளில் "இறைவன் பூசனை கற்பினதிகமாமே" என்று வருதலாற் கற்புறு மகளிருஞ் சிவபூஜை செய்யவேண்டு மென்பதுஞ் செய்யாவிடின் இகசுகங் குன்றுவதோடு ஆன்மலாபமான திருவருள் விலாசப் பேரின்பமுமில்லா தொழியு மென்பதும் அறிதிர். ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகட்குத் திருவருட்பெருஞ் செல்வந் தந்தருளிய எம்பெருமானது திருவருளிருந்தவாறு எம்மாற் சிவபுண்ய போதகமாகச் சொல்லப்பட்ட இந்நூலும், இதனைப் படிப்போரும், கேட்போரும், இந்தப் புண்ணிய முண்டாக முயற்சித்தோரும் நீடு வாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

சிவார்ப்பணமஸ்து.

எட்டாவது அதிகார முற்றிற்று.

நாலாயிரப் பிரபந்த விசார முற்றிற்று.

குமரகுருபரன் திருவடி வாழ்க.

கலியுகம் ருOOகூ-ல் நிகழும் விசுவாவசு.